இளங்குமரனார்

# தமிழ்வளம்

30

1. அண்ணல் ஆபிரகாம்
2. அறவோர் அமைதிப் பணிகள்
3. உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்

*ஆசிரியர் :*

*முது முனைவர்* **இரா.இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

*சென்னை - 600 017.*

நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் - தமிழ்வளம் 30** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| பதிப்பு | : 2010 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 16 + 240 = 256 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **240/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : செவன்த்சென்ஸ் கம்யூனிகேசன்ஸ் |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் **அய்யா இளங்குமரனார்** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

இப்பெருந்தமிழ் அறிஞர் எழுதிய படைப்புகளை 20 தொகுதிகளாக (1 முதல் 20 வரை) அவரின் 81-ஆம் ஆண்டு நிறைவையொட்டி கடந்த 2009 ஆம் ஆண்டில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தோம். பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அவர் தம் அறிவு விளைச்சலை **21 முதல் 40 வரை** 20 தொகுதிகளை 83-ஆம் ஆண்டு (2012) நிறைவையொட்டி தமிழுலகம் பயன்கொண்டு செழிக்கும் வகையில் வெளியிடுகிறோம். அவர் தம் அருந்தமிழ்ப் பணியை வணங்கி மகிழ்கிறோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ

*அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.*

*தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ் மொழிக்காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ்நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்ச் சான்றோராக விளங்கும்* ***ஐயா இளங்குமரனார்*** *வாழும் காலத்திலேயே அவர் எழுதிய நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.*

**“ சலுகை போனால் போகட்டும் - என்**
**அலுவல் போனால் போகட்டும்**
**தலைமுறை ஒருகோடி கண்ட - என்**
**தமிழ் விடுதலை ஆகட்டும்.”**

*பாவேந்தர் வரிகளை நினைவில் கொள்வோம்.*

***- பதிப்பாளர்.***

# பெறும் பேறு

**வளம்** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* **உளம்** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். **(உரி.7)** உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது **(25:33-34)***

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.*** *ஆனால்,*

வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!

பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன! **பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!**

புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

என்னும் **நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!**

என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.

பிறந்தநாள் : **30.01.1930**

ஆசிரியப் பணி ஏற்ற நாள்: **08.04.1946**

கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால் **1949, 1950, 1951** ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ **43**

ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன். பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ.சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

“அன்பும் அறிவும்” என்னும் நூல் தொடங்கிச் ‘செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம்’ எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது.

அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம் அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பதே, **"இளங்குமரனார் தமிழ்வளம்"** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பலபல; தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். "நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா" என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

*இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!*

*“நெல்லுக்கு உமியுண்டு”*

*“நீருக்கு நுரையுண்டு”*

*“புல்லிதழ் பூவுக்கும் உண்டு”*

*“குறைகளைந்து நிறை பெய்து”*

*“கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை”*

*இன்ப அன்புடன்,*

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்

பதிப்புரை ................................................ iii
பெறும் பேறு ................................................ vi

## நூல்

### அண்ணல் ஆபிரகாம்

1. அவன் யார்? ................................................ 7
2. பிழைப்புக்கு வழி உழைப்பே ................................................ 15
3. ஆதரவு வளர்ந்தது ஆபிரகாமும் வளர்ந்தார் ................................................ 22
4. ஒழுங்குள்ள ஆபே ................................................ 32
5. மேரிக்கு எக்களிப்பு மேதைக்குத் தத்தளிப்பு ................................................ 43
6. வெள்ளை மாளிகையில் அமைதி ................................................ 51
7. வாழ்க வில்கி பூத் ................................................ 61
8. பொற்சிலைப் புனிதன் ................................................ 66

### அறவோர் அமைதிப் பணிகள்

1. அமைதிப் பணி ................................................ 81
2. அறவோர் உள்ளம் ................................................ 89
3. வள்ளுவர் வழி ................................................ 95
4. சங்கச் சான்றோர் I ................................................ 103
5. சங்கச் சான்றோர் II ................................................ 111

6. சமயச் சான்றோர் I புத்தர் பெருமான் ........ 120

7. சமயச் சான்றோர் II இயேசு பெருமான் ........ 129

8. சமயச் சான்றோர் III நபிகள் நாயகம் ........ 137

9. அருட் பெரு மக்கள் ........ 147

10. அரசியல் அறிஞர்கள் ........ 154

## உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்

முன்னுரை ........ 165

ஓர் அன்பின் உறவு ........ 167

சுற்றுலா ........ 172

அண்ணல் ஆபிரகாம்

# பதிப்புரை

பண்டை நாட்களில் வாழ்ந்த அருந்தவச் செல்வர்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்துகொள்வது தனிப் பட்டவர்களின் வாழ்க்கை நெறிகளைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கும் உயர்ந்ததொரு குறிக்கோளை மனத்திற் கொண்டு எண்ணத்தில் திண்மை பெற்று எண்ணியாங் கெய்துவதற்கும் பயன்படும் என்பது உண்மை. உற்றோர், மற்றோர் என்று வேறுபாடு கருதாது வீட்டினர், நாட்டினர் என்று மாறுபாடு பாராது நாட்டுக்கு உழைத்திட்ட நல்லவர்கள் பலர். அவர்கள் வாழ்ந்த முறையை வகைப்படுத்திக் கூறும் வாழ்க்கை வரலாற்று நூல்களைக் கழகம் பல்லாண்டுகளாக வெளியிட்டு வருகின்றது.

அவ்வரிசையில் அடிமைத்தளையகற்றிய அண்ணல் ஆபிரகாம் லிங்கனைப் பற்றிய இந்நூல் வெளியாகின்றது. லிங்கன் குடிசையில் பிறந்தவர். குடியரசுத்தலைவராக இறந்தவர். அடிமை களுக்குக் கண்கண்ட தெய்வம். அமெரிக்கருக்கு அவர் ஒரு காந்தி. மக்களை மாக்களாக்கிய மாக்களை, மக்களாக்கிய மனிதகுலத் தோன்றல். மக்களால், மக்களைக் கொண்டு மக்களுக்காக அமைக்கப்பட்ட அரசாட்சி என்றுமே அழியாது என்றுரைத்த அரசியலறிஞர். அடியவர்க் கெளியராய் விளங்கிய அவர்க்குக் கொடியவன் அளித்த பரிசு குண்டு. அதுவே நன்மைக்குத் தீமையளித்த பரிசு. அத்தகையோரின் வாழ்க்கையை அறிந்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு வருடைய கடமையாகும்.

இந் நூலைச் செம்மையாகவும், சுருக்கமாகவும் எழுதித் தந்த திரு. இரா. இளங்குமரன் அவர்கட்குக் கழகம் தன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இதுபோன்ற நூற்களைச் சிறியோரும் பெரியோரும் நன்கு கற்றுப் பயனடைவார்களென நம்புகிறோம்.

# முன்னுரை

நல்வாழ்வு வாழ விரும்புவார்க்கு 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த' பெருமக்கள் வரலாறுபோல் அமையும் வழிகாட்டி எதுவும் இல்லை. இக்கருத்தால் அனைத்துஅதிகாரங்களும் தம் கையகத்தே குவிந்திருந்தும் அவற்றை அறவழிக்கு அன்றிப் பிற வழிக்குப் பயன்படுத்தாத அமெரிக்கப் பெருந்தலைவர் 'அண்ணல் ஆபிரகாம்' லிங்கன் வரலாற்றை எழுதினேன். இவ்வரலாறு கற்பவர் நெஞ்சினில் நிலைத்து நற்பயன் விளைக்கும் என்பது என் கருத்து.


என் பிஞ்சு நெஞ்சின் ஊற்றமும் உணர்வும் கொண்டு முகிழ்த்த முதல் வரலாற்று நூலாம் இதனை, ஆயிரத்தின் மேலும் அருந்தமிழ் நூல்கள் வெளியிட்டுச் சீரிய பணிபுரிந்து வரும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி. கழக உறுப்பினர் கட்கும், ஒல்லும் வகையால் உயர் கடனாற்றும் கழக ஆட்சிப் பொறுப்பாளர் உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும் என் உழுவலன்புடன் கூடிய கெழுதகை நன்றி உரித்தாகுக.

*தமிழ் வெல்க!*


*மதுரை*

*15-2-1965*


**இரா. இளங்குமரன்**



1863-ம் ஆண்டில் ‘கெட்டிஸ் பெர்கில்’ நடைபெற்ற
உள்நாட்டுப் போரின்போது ‘லிங்கன்’ பேசுதல்



**ஆபிரகாம் லிங்கன் நினைவுச் சின்னம்**



தம் குடும்பத்தினருடன் ‘லிங்கன்’



இளமைப் பருவத்தில் 'லிங்கன்'

# 1. அவன் யார்?

"10 டாலர்"

"20 டாலர்"

"40 டாலர்"

"உடல் கொழு கொழு வென்றிருக்கிறது. நன்றாக உழைக்கத் தக்க பருவம். எங்கெங்கே தேடினாலும் இப்படியொன்று கிடைக்கவே கிடைக்காது. கூட்டிக் கேள்"

"75 டாலர்"

"ஒரு தரம்; கேட்பவர் இல்லையா? இரண்டுதரம்"

"80 டாலர்"

"ஐயோ! என்னிடம் எழுபத்தைந்து டாலர்கள் தாமே இருக்கின்றன. கூட்டிக் கேட்டு விட்டானே அவன்."

"கெடுத்துக் கொண்டாய் நீ! இப்படி யொரு நல்ல கூலி கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கில்லை. இரண்டு ஆண்களுக்குப் பதில் இவள் ஒருத்தியே போதும். இப்படி முறுக்கேறிய நீக்ரோக் கூலி நிச்சயம் கிடைக்கமாட்டாள்."

"பணத்தைக் குறைத்துக் கொண்டுவந்து பாழ்படுத்திக் கொண்டேன்."

இவ்வாறு கூட்டத்தினர் பேசிக் கொள்வதற்குள் ஏலம் போடுபவன் "மூன்றுதரம்" என்றான். முடித்து விட்டான்!

ஆடு மாடுகளை ஏலம் போடுவது போல - அங்காடிகளிலே துணி மணிகளை ஏலம்போடுவது போல - அடிமையாக்கப்பட்ட நீக்ரோப் பெண் ஏலம் போடப்பட்டாள், அமெரிக்க நியூயார்லி யன்சிலே! சுதந்திர மக்கட் பிறப்பெய்திய அவள் சாகுமட்டும் அடிமை! விலைக்கு வாங்கியவன் விலங்கிடுகின்றான்; மாட்டுக் கொட்டிலுக்கு "மட மட" வென இழுத்துச் செல்கின்றான்.

*இதனைக் கண்டு கொண்டு நிற்கின்றான் ஓர் அருளாளன். "மனிதர் நோக மனிதர் பார்க்கும் வழக்கமா?" என்று தன்முகத்திலே சப்பிக்கொண்டு கண்ணீர்த் துளிகளைச் சொரிகின்றான். அக் கண்ணீர்த் துளிகளையே கறுப்பு மையாகக் கொண்டு இதய ஏட்டிலே எழுதிக் கொள்கின்றான். "என்றேனும் ஒருநாள் இந்த அடிமை முறையை ஒழித்துக் கட்டியே தீருவேன். அடிமைமுறை தகர்க்கப்படாவிடில் யான் பிறந்ததால் இவ்வையகத்திற்குத் துளியளவாவது பயனுண்டா? அடிமை முறையை அகற்றுவதே என் இலட்சியம்!" என்று முழங்கிக் கொண்டே அடிமை விற்பனைக் கிடங்கை விட்டு அகல்கின்றான் அந்த இளைஞன்!*

**அடிமை வேட்டை**

*ஆப்பிரிக்கக் காடுகளிலே சதந்திரமாகச் சுற்றியலைந்து கொண்டிருந்த நீக்ரோக்களை விலங்குகள் போலாக வேட்டையாடி, கைக்கும் காலுக்கும் விலங்கிட்டுப் பண்ணைகளிலே பணிபுரியும் நிரந்தர அடிமைகளாக ஆக்கி வந்தனர் அமெரிக்கர். நீக்ரோக் களைப் பிடிப்பதற்காகவே எத்தனையோ சங்கங்கள் ஏற்பட்டன! அடிமை விற்பனைக் காகவே வியாபாரக் கிடங்குகள் அநகேம் கிளைத்தன! வளைத்துப் பிடித்துவரும் வலியவனுக்குப் பரிசும் பாராட்டும் வழங்கினர் பண்ணையாளர்! அரசாங்கமோ அடிமைப் பண்டங்களைக் குவிப்பதற்கு வழிவகைகள் செய்து கொண்டிருந்தது. வெள்ளையர் கூட்டம் ஒன்று வெளிப்படுகின்றது என்றால் குலைபதறித் தப்பியோட முயல்வான் நீக்ரோ! துப்பாக்கிக்குத் தப்பிச் செல்ல வழியின்றித் தலைகுனிவான்! மானம் உண்டு; வீரமும் உண்டு, நீக்ரோவினிடம்! ஆனால் கனல் கக்கும் குண்டுக்கு முன் அவன் என்ன செய்யமுடியும்?*

*அடிமை முறை அமெரிக்கா முழுவதிலும் கைக்கொள்ளப் படவில்லை. தென்னாட்டிலே அடிமையர் கட்டுப்பாடு; வடநாட்டிலே அடிமையர்க்குச் சுதந்திரம். ஒரே நாட்டிலேயே இரு வேறு கொள்கைகள்! தென்னாட்டிலேயிருந்து நாள்தோறும் அடிமையர் வடநாட்டிற்கு ஓடிய வண்ணமாக இருந்தனர். இப்படியே ஓடிக் கொண்டிருந்தால் பண்ணைகள் என்னாவது? பண்ணையையே நம்பி வாழும் பண்ணையாளர் என்னாவது? பண்ணையாளர் வாழ வழி வகுக்கும் அரசாங்கம் தான் என்னாவது? தன் வயிற்றில் தானே மண்ணடித்துக் கொள்ள விரும்புமா அரசு! அதற்கும் ஒரு சட்டம் செய்து கொண்டது!*

"வடநாட்டில் அடிமை முறை இல்லாதது குறித்து மகிழ்ச்சி! ஆனால், தென்னாட்டிலிருந்து அடிமையர் வடநாட்டிற்குள் ஓடிவந்தால் அனுமதிக்கக் கூடாது, வடநாட்டு அரசாங்கம். எந்த அடிமையாவது வடநாட்டிற்குள் திரிவதாகத் தெரிந்தால் அந்த அடிமையைப் பிடித்துக் கொடுக்க வேண்டியது வடநாட்டின் கடமை. பிடித்துத் தந்தவருக்குப் பரிசு வழங்கிப் பாராட்டுவது தென்னாட்டின் கடமை" என்று ஒப்பந்தம் செய்துகொண்டது. வடநாட்டில் அடிமை முறை வழக்கில் இல்லாதிருந்தபோதிலும் அடிமையரால் வந்துகொண்டிருந்த வருமானத்திற்கு மட்டும் குறைவில்லை. தென்னாட்டினின்று தப்பி வந்த அடிமையாயினும் சரி, ஆப்பிரிக்கக் காடுகளிலிருந்து புதிதாக வந்தவராயினும் சரி, அவர்களைப் பிடித்துத் தந்து பரிசு பெற வேண்டியதே வடவர் குறிக்கோளாகப் போய் விட்டது.

"நான் எவருக்கும் அடிமையாக இருந்ததில்லை" என்று எந்த நீக்ரோவேனும் சொல்வானேயானால் அதை விசாரித்து முடிவு கட்ட வேண்டிய உரிமையும் தென்னாட்டவர்க்கே இருந்தது. அந்தோ! திருடுபவனே தீர்ப்பளிப்பவனாகவும் இருந்தால் நீதி கிடைக்குமா?

நீக்ரோவரில் பழையவராயினும் சரி, புதியவராயினும் சரி, அடிமைப் படுகுழியிலே வீழ்ந்து பரிதவித்துக் கொண்டிருந்தனர். தென் நாட்டினரோ வயலும் வளமும் பெருக்கி உடலும் உரமும் பெற்றுத்தலைநிமிர்ந்தனர். விளைவு தந்தவன் விலங்குக் கொட்டிலிலே கிடக்கின்றான்; விலாநிமிர உண்பவன் பஞ்சுக் கட்டிலிலே புரள்கின்றான். கொடுமைக் காட்சிகள்!

**தென்னாடும் வடநாடும்**

தென்னாட்டவர் கொண்டிருந்த அடிமைக்கட்டுப் பாட்டை வடநாட்டவர் ஏன் கொண்டிருக்கவில்லை? "ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே" என்னும் அருள்வழி கண்டனரா? "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் அறவழி நின்றனரா? "கருணைப் பிழம்பாகிக் "கசிந்து கண்ணீர் மல்கி" அடாத செயல் என்று ஒதுக்கினரா? "ஆடு மாடா இந்த அடிமைகள்" என்று அறிவொளி குத்திக் காட்டியதா? "சே! சே! உழைக்க ஒருவன் அதைக்கொண்டு பிழைக்க ஒருவன்; கூடாது கூடாது!" என்ற கொள்கைச் சுடர் கொப்புளித்து எழுந்ததா? "தன்கையே தனக்குதவி" என்னும் தறுகண்மை தலைதூக்கியதா? இல்லை!

இல்லை! இவையெல்லாம் காரணங்களாக அமையவில்லை. காரணமாக இருந்ததெல்லாம் வடநாட்டின் குளிர்.

கொடும் வெப்பத்திலே வளர்ந்து திரிந்த நீக்ரோவருக்கு வடநாட்டின் குளிர் ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் புண்ணும் பொரிச்சலும் கிளம்பும்; இரத்தமும் நீரும் ஒழுகும்; உடனடியாகவே உலக வாழ்வை நீத்து ஒழிவார். அரும்பாடுபட்டுப் பிடித்த அடிமை - பொன்னும் பொருளும் கொடுத்து வாங்கிய அடிமை - செத்துக்கொண்டே இருந்தார் இழப்பு யாருக்கு? வடநாட்ட வருக்குத் தானே! இந்த இழப்பை அகற்றி வருமானத்தைப் பெருக்க வாய்ப்பாக இருந்த ஒரே ஒரு வழி அடிமைக் கட்டுப்பாடு நீக்கம்!

**அடிமைத் துயர்**

பருத்தி எடுப்பவன் நீக்ரோ; பாறையுடைப்பவன் நீக்ரோ; குளம் தொட்டு வளம் பெருக்குபவன் நீக்ரோ; கல்லையும் முள்ளையும் அகற்றி, கணக்கிலா வளம் தரும் நிலமாக்குபவன் நீக்ரோ; பாலையைச் சோலையாக்கினான். பகலெல்லாம் உழைத்ததன்றி இரவும் உழைத்தான். உடலிலே களைப்பிருக்கும்; உள்ளத்திலே சோர்விருக்கும் - வெளிக்குக் காட்டிக் கொள்ளக் கூடாது. நோயிருக்கும்; நொம்பலமிருக்கும் - வாய் விட்டுரைக்க உரிமையில்லை. கண்ணிருந்தும் குருடன்; காதிருந்தும் செவிடன்; வாயிருந்தும் ஊமை; மனிதனாய்ப் பிறந்தும் அடிமை; ஆறறிவு பெற்றிருந்தும் அறிவிலாப் பிண்டம்; விலையிடற் கேற்ற பண்டம்!

அடிமையின் வேலைக்குக் காலஎல்லை கிடையாது; அவனை ஆட்டிப் படைக்கும் ஆண்டைக்கோ இரக்கத் தன்மை கிடையாது. உழைத்து உழைத்து ஓடாய் ஒடுங்குவான். தப்பித்தவறி ஓய்ந்து நிற்பதைக் கண்காணியோ முதலாளியோ கண்டால் போதும்! கசையடிக்குக் கணக்கில்லை; உதிரம் சொட்டச் சொட்ட அடி கிடைக்கும். உதிரத்தை நக்கிச் சுவைக்க நாய்களும் தயாராக இருப்பதுண்டு. கம்பத்திலே கட்டி வைத்து அடிப்பர்! உதிரம் கொட்டும்! உயிர் போகாதவாறு பார்த்துக் கொள்ள மருத்துவரையும் உடன் வைத்திருப்பர். ஏன்? கருணையாலா? கட்டிவைத்து அடிக்கும்போது உடலில் ஒரு பக்கம்தானே அடி பட்டிருக்கும்? மீண்டும் உயிர் இருந்தால் திருப்பிக் கட்டி வைத்தும் அடிக்கலாமல்லவா! அந்தக் கருணையால் தான்!

நீக்ரோ ஒருவன் அலறுவதைக் காணுவதிலே பண்ணை யாளர்களுக்கு அகமகிழ்ச்சி; கண்ணீர்த் துளி கொட்டுவதிலே களிப்பு; இரத்தம் சொட்டுவதிலே கொக்கரிப்பு. பற்பல சமயங்களில் நீக்ரோவை அடிப்பவன் நீக்ரோவாகவே இருப்ப துண்டு; தன்னைப் போல் அடிமையாகவிருக்கும் அவனை அடிமை ஒருவனே அடிப்பான் பண்ணையாளரின் கண்டிப்புக்காக! அடிக்க முன்வராவிட்டால் தன்னைப் பலியிட்டு விட்டுத்தான் அவன் அடிக்கப்படுவான் என்பது அவனுக்குத் தெரியும். அதனால் அவன் கண்ணீர் விட்டுக் கொண்டே அடிப்பான்; கதறிக்கொண்டும் அடிப்பான். அடிக்கும்போது அவனுக்கே தெரியும், அடிமையர் மீது அடிமையர் இரக்கம் காட்டுவதோ அன்பு. பாராட்டுவதோ மன்னிக்க முடியாத குற்றம் - கொலைத் தண்டனைக்குக் கூட வழிகாட்டிச் செல்லும் குற்றம் - என்பது. கருணை ஒருபக்கம் வாட்டும்; கண்டிப்பு ஒருபக்கம் ஓட்டும். இரண்டுக்கும் இடையே கண்காணி நீக்ரோ தத்தளித்துத் தன்னையே பலியிட்டுக் கொள்வதும் உண்டு.

**பரம்பரை அடிமை**

நீக்ரோவன் ஒருவனை அடிமையாக்கிவிட்டால் போதும்! அவனுக்கு உரிமை எதுவும் இல்லை என்ற உறுதி முதலாவதாக நடை முறைக்கு வரும். இரண்டாவதாக, அவனை உணர்ச்சியற்ற வனாக்கவும் கட்டளை பிறப்பிக்கப்படும். ஆணடிமை பெண்ணடி மையினிடம் உறவாடக்கூடாது. அப்படியே உறவாடினாலும் திருமணம் செய்து கொள்ளவே கூடாது. ஒருவேளை அடிமை நீக்ரோவுக்குக் குழந்தை பிறந்து விட்டாலும் அவர்கள் அடிமையாக இருக்கும் பண்ணைக்கு அக்குழந்தையும் அடிமை! பண்ணை யாளர்க்கு எதிர்பாராது கிடைக்கும் சொத்து! ஆம்! அடிமையரே அடிமையரை மறைமுகமாக உண்டாக்கிக் கொண்டிருந்தனர். தங்கள் பரம்பரைக்குத் தாங்களே அடிமைத் தளை பூட்டிக் கொண்டிருந்தனர்.

**பண்ட மாற்றல்**

நீக்ரோ ஒருவன், ஒருவனிடம் அடிமையாக்கப்பட்டு விட்டான் என்றால் அவன் அவனிடமே சாகுமளவிற்கும் இருக்கப் போவ தில்லை. எந்த விநாடியும் மாற்றம் வரலாம், எவனாவது விலை கூட்டிக் கேட்டு விட்டால். தாய் அடிமை ஒருவனுக்கு விற்கப் படலாம்; பிள்ளையடிமை பிறிதொரு வனுக்கு விற்கப்படலாம்.

இந்தஅவலக் காட்சியைக் கண்கொண்டு பார்க்க முடியாது. குரங்குப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு குழந்தையைத் தரமறுக்கும், அந்தப் பெற்ற மனம். அதற்காக விட்டுவிடுவார்களா? பால்மணம்மாறாப் பச்சிளம் குழந்தை பறித்தெடுக்கப்பட்டு விலைக்கிடங்கிற்குக் கொண்டு போகப்படும். "அம்மா! அம்மா!!" என்று கதறும் குழந்தை! அலறியடித்துக் கொண்டு புரளும். மணிவயிற்றிலே அணைத்துக் காத்துவந்த மாசில்லாக் குழந்தைக்கு மாதாவின் முன்னிலையிலே விலங்கிடப்படும்.

"ஐயோ! மகனே, உலகுக்கு வந்ததும் வராதது மாய் என்னடா தீங்கு புரிந்துவிட்டாய், என்னைப் பிரிந்து செல்ல! பிள்ளைக் கனியமுதே! நீ என்னடா பிழை செய்திருக்க முடியும், இக் கொடுமைக்கு ஆளாக! கள்ளம் கபடம் அறியாப் பருவத்துச் செல்வமே, உள்ளத்தைப் பிரித்தாரடா; உறவைப் பிரித்தாரடா; உயிரைப் பிரித்தாரடா" உறவைப் பிரித்தாரடா; உயிரைப் பிரித்தாரடா" என்று ஓல மிடுவாள் தாய். "என் குல விளக்கைக் கெடுத்தவள் நான்தான், நான் தான்" என்று பெற்ற வயிற்றிலே அறைபோட்டுக் கொள்வாள். முட்டி மோதிக் கொள்வாள். விலங்கேந்திய கரத்தோடு குழந்தை வீரிட்டழும். இந் நிலைமையிலே குழந்தை இழுத்துச் செல்லப்படும். மற்றொரு பக்கத்தே கலங்கிய கண்ணோடும், நடுங்கிய நெஞ்சோடும் நின்று கொண்டிருப்பான் நீக்ரோ ஆண் மகன். கண்ணீர் விடக் கருணை இருக்கிறது அவனிடம்; கண்டித்துக் கேட்க உரிமை இல்லை.

**நீதிக்குச் சிறை**

பண்ணையாளரைக் கண்டித்துக் கேட்கவே உரிமையற்ற அவன் நீதி மன்றம்செல்வது முடியாத காரியம். நீதி மன்றம் செல்லும் எண்ணமே நீக்ரோவுக்கு வருவது இல்லை. அப்படியே எண்ணம் வந்து விட்டாலும்அவன் எழுத்து மூலமாக முறையிட்டுக் கொள்ள, எழுதப் படிக்கத் தெரியாது. எழுதவும் படிக்கவும் எப்படியோ அறிந்து கொண்டிருந்தாலும் கூட வழக்காடப் பணம் கிடையாது. இவ்வளவும் எவருதவியாலோ கிடைத்து விட்டது என்றாலும்கூட, கொடுத்த மனு கொடுத்த போதே தள்ளுபடியாக் கப்பட்டுக் குப்பைத் தொட்டிக்குப் போய்ச் சேரும். அடிமையின் சுதந்திர வேட்கையை அவன் பண்ணையாளர் அறிந்துவிட்டாலோ கடும் வேலை; கசையடி; ஏச்சு பழிப்பு எல்லாம் கிடைக்கும். விற்று விடுவதும்உண்டு வேறொருவருக்கு.

*அடிமையை விலை கூறி விட்டால் போதும்; தோளில் குத்திப் பார்ப்பார்கள் பலம்இருக்கிறதா என்றறிய; சுமை ஏற்றிப் பார்ப்பார்கள் உரம் இருக்கிறதா என்று தெளிய; ஓடச்சொல்லி விரட்டியடிப்பார்கள் கால் கதியை அளவிட; பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள் பாடுபடுவானா பல காலம், மாடு போலாக என்பதைத் தெரிந்து கொள்ள; உற்றுப் பார்ப்பார்; உறுத்துப் பார்ப்பார்; உதைத்துப் பார்ப்பார் - பொறுமையாக இருக்கிறானா என்று முடிவுகட்ட; இவ்வளவு சோதனை களிலும்வெற்றியுற்ற பின்னரே விலைப் பேச்சு; ஏல ஏற்பாடு! அந்தோ அடிமையே!*

**அருளாளர் தோன்றுதல்**

*அடிமை வாழ்வை எண்ணி ஏங்கும் அருளாளர் அங்கொரு வரும் இங்கொருவருமாகத் தலை காட்டாமலும் இல்லை. அவர்கள் "அடிமையாக்குவது அடாதது" என்று அருட்பாணியிலே குரலெடுத்தனர். அந்த அந்த இடங்களிலே அவர்களுக்கு வாயாப்புக் கிடைத்தது; பொல்லாங்கு ஏற்றப்பட்டது. போன போன பக்க மெல்லாம் வசைமாரி பொழியப் பட்டது.*

*"அடிமை கூடாது என்கிறான் அறிவற்றவன்! அனைவரும் சமம் என்கிறான் அகம்பாவி! அறம் பார்க்கிறானாம் அறம்! ஆழக் குழி தோண்டிப் புதைக்கப் படவேண்டியவன் ஆடியலைந்து இன்னும் நடமாடித் திரிகின்றான்! தனக்குத் தான் எழுதுவதற்குத் தெரியும் என்று கிறுக்குகின்றான்; பேசுவதற்குத் தெரியும் என்று பொரிகின்றான். படைவெள்ளம் திரண்டு விட்டால் அவன் பாடு என்னாகும்? எச்சரிக்கை!" என்று எக்காளமிட்டனர். அதற்கும் மிஞ்சினால் நையப் புடைத்தனர்; மேலும் கிளர்ச்சி ஏற்பட்டால் நரம்பு நரம்பாகப் பிரித்து எடுத்தனர்; தோலை உரித்துத் தொங்கப் போட்டனர்; எழுதிய கையை நறுக்கினர்; எழுதப்பட்ட தாளை எரித்தனர்; அலுவலகங்களைச் சூறையிட்டு எரி நெருப்புக் கிரையாக்கினர். இவ்வளவும் இடைவிடாது ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், இடையிடையே அருளாளர் உள்ளத்தே அடிமை நீக்க வெள்ளம் பெருக்கெடுத்துக் கொண்டே இருந்தது. "அணு அணுவாகச் சிதைத்தாலும் தவற்றைத்தவறென்றே கூறுவேன்" என்று தலைதூக்கிக் கொண்டிருந்தனர்.*

*"ஏட்டை எரிக்கலாம்; எழுத்தை எரிக்கலாம்; இதயத்தே படிந்துள்ள கருத்தை எரிக்க முடியுமா?" என்ற எழுச்சியுள்ளம் வலுத்துக் கொண்டிருந்தது. வல்லாளர் பலரிடம். அவர்கள் வழிவழி வந்து, அமெரிக்காவிலே கப்பிக் கொண்டிருந்த அடிமைக் காரிருளை அகற்ற எழுந்த விடிவெள்ளி தான் நாம் முன்னர்க் கூறிய இளைஞன்! இளம் வயதிலேயே எண்ணத் தொடங்கி விட்டான்; இன்னல் வாழ்வையும் ஏற்கத் தொடங்கி விட்டான். புனித அமெரிக்காவிலே "பொல்லாத கறை" படிந்து விடக் கூடாது என்று புத்துணச்ச்சியோடு எண்ணினான். அவன் யார்? அவனா? அந்தச் சிறுவயதுப் பெரியவர் - அண்ணல் ஆபிரகாம் லிங்கன்!*

# 2. பிழைப்புக்கு வழி உழைப்பே

**பிறப்பும் வளர்ப்பும்**

கெண்டகி மாகாணத்தைச் சேர்ந்த ஹார்டின் பிரதேசத்து நான்கிரீக் என்னும் ஊரில் அண்ணல் ஆபிரகாம் 1809 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமையன்று தோன்றினார். தந்தை தாமஸ் லிங்கன்! தாய் நான்ஸி கேங்ஸ்.

அமெரிக்க நாட்டு அடிமை முறையை ஒழித்துக் கட்டு வதற்காகவே பிறந்தஅருளின் செல்வர் ஆபிரகாம் காட்டுக் குடிசை ஒன்றிலே பிறந்தார்; கரடித் தோலே அவர் படுக்கை; காட்டு வெளியே கலையரங்கம்!

**தாய் தந்தையர்**

தந்தை தாமஸ் லிங்கன் எழுத்தறி வற்றவர். தாய் மட்டும் சிறிது படித்திருந்தாள். கணவனைப் படிக்கவைத்துவிட வேண்டும் என்ற ஆசை நான்ஸிக்கு இருந்தது. அதனால் தாமஸ் சிறிதளவு படிப்பறிவு பெற்றுக்கொண்டார்.

தாமஸ் லிங்கன் தச்சு வேலை செய்வதிலே திறம் பெற்று இருந்தார். மரம் வெட்டுவார்; அறுப்பார்; பலகை யாக்குவார்; பெட்டி செய்வார். அவர் செய்த பெட்டி என்றால் அந்த வட்டாரத்திலே பெருங்கிராக்கியோடு செல்லும். பெட்டி என்ன பெட்டி? சவப் பெட்டி! ஆம்! உலகத்தவர் உடலை அடக்கம் செய்யப்பெட்டி செய்து கொண்டிருந்த ஏழைத் தச்சன் குடிசையிலே, உலகினர் உள்ளத்தை யெல்லாம் அடக்கம் செய்ய இருக்கும் அருளாளர் வளர்ந்து வந்தார்!

தாமஸ் லிங்கனுக்கு மீன் பிடிப்பதிலே பற்று அதிகம். அதனால் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் தூண்டிலும் கையுமாகச் சென்று மீன் பிடித்து வருவார். சிற்சில சமயங்களில் துப்பாக்கி கொண்டு விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி வருவதும் உண்டு. இத்தகைய பொழுதுகளில் இளைஞர் ஆபிரகாம் தந்தையோடு சேர்ந்து காட்டுக்குச் சென்று

தந்தையின் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பார். ஐந்து ஆறு வயது ஆகக் கூடிய காலத்தில் தந்தைக்கு வேண்டிய சிற்று தவிகளைச் செய்யவும் முன்வந்தார்.

வேலை முடித்து வீட்டுக்கு வந்தவுடனே தாமஸ் லிங்கன் ஆபிரகாமையும் அவர் உடன்பிறந்த சாராவையும் அழைத்துப் பக்கத்தே வைத்துக் கொண்டு விளையாட ஆரம்பிப்பார். குழந்தை களுக்கு மகிழ்ச்சி அதிகமாகும். விளையாட்டு முடிந்த வுடனே தந்தையைக் கதை சொல்லும்படி வற்புறுத்துவர். தந்தையும் வேட்டையாடல், மீன் பிடித்தல், மரம் வெட்டல் ஆகிய வேலை களிடையே தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துரைப்பார். சுவையான கதைகளாகவும் கூறிக் கொள்வ துண்டு. வீட்டுவேலை முடிந்து விட்டது என்றால்''தந்தை மக்கள் விளையாட்டிலே'' தாயும் கலந்து கொண்டு பாட்டுப் பாடுவாள்; பைபிள் (திருமறை) கதை கூறுவாள். பிள்ளைகளின் படிப்பறிவு இவ்வாறு கேள்வி வழியாகத் தொடங்க லாயிற்று.

**பழங்கதை ஒன்று**

''செவ்விந்தியர்கள் வெள்ளையர்களைத் தாக்கி, பொருள் களைச் சூறையாடிக் கொண்டு போவதோடு எதிர்த்தவர்களைக் கொன்றுவிட்டு அவர்கள் குழந்தைகளையும் கூடத் தூக்கிக் கொண்டு ஓடி விடுவது உண்டு'' என்று ஒருநாள் தாமஸ் விவரித்துக் கொண்டிருந்தார். அந்நேரம் அவர் தம்மை அறியாதே உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணீர் விட்டுக் கொண்டே, ''ஆபிரகாம்! வர்சீனியாவிலே ஒரு தந்தை தம் குழந்தைகளோடு உல்லாசமாகப் பொழுது போக்கிக் கொண்டு இருந்தார். அவர் இருந்த இடம் காட்டுப் பகுதி. திடீரென்று சலசலப்புச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்க்கும்போது ஒன்றும் தெரியவில்லை. ஆனால் ஒரு கண நேரத்துக் குள்ளாக ''டப்'' என்று குண்டுச் சத்தம் ஒன்று கேட்டது. அந்தக் குண்டும் எங்கேயோ தாக்கிவிட வில்லை. அருமைக் குழந்தைகளுடன், அன்பாகப் பேசிக் கொண்டிருந்த தந்தையின் மார்பிலே பாய்ந்தது. மண்ணிலே உருண்டு விட்டார் தந்தை! இந்நேரம் துப்பாக்கிக் கையோடு வந்த செவ்விந்தியன், அழுது கொண்டு நின்ற சிறுவனைத் தூக்கிக் கொண்டு செல்லத் தொடங்கினான். தந்தையைச் சுட்டுக் கொன்ற கொடியவனைப் பழிவாங்க வேண்டும் என்ற படபடப்பிலே ஓடிவந்த மூத்த குமாரன் ஒரே குண்டால் செவ்விந்தியனை உருட்டி விட்டான். பழிக்குப்பழி வாங்கி விட்டாலும்கூட, அப்பா மறைந்த இழப்பை

ஈடுசெய்ய முடியாது தத்தளித்துக் கொண்டிருந்தனர் ஆதரவற்ற அந்தப் பிள்ளைகள்! அதற்குப் பின்னரும் செவ்விந்தியர் தொல்லை அடிக்கடி தோன்றிக் கொண்டிருப்பதை அறிந்து வர்சீனியாப் பகுதியில் இருந்த தங்கள் குடிசையை இந்தக் கெண்டகிப்பகுதிக்கு மாற்றிக் கொண்டு விட்டனர், என்று கதறிக்கொண்டே கன்னத்தே கோடிட்டுக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் தாமஸ். அழுதே விட்டார் ஆபிரகாம்!

"அத் தந்தைதான் தம் தந்தை" என்றும், "தூக்கிச் செல்ல விருந்த பையனே தாம்" என்றும் தாமஸ் கூறக் கூடிய நேரம் துயரத்தின் உச்சத்தை அடைந்து விட்டார் லிங்கன். தம் தந்தைக்கும் அவர் தந்தைக்கும் ஏற்பட்ட ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற ஏக்கம் வேறு கப்பிக் கொள்ளத் தொடங்கி விட்டது. "காலம் மாறி விட்டது; இனிமேல் செவ்விந்தியர் காலடி வைக்க முடியாது" என்று உரமூட்டினார் தாமஸ்! ஆனாலும் லிங்கன் உள்ளத்தே இந்த நிகழ்ச்சி நிலையான வடு வொன்றை ஏற்படுத்திவிட்டது.

**இளமைக் கல்வி**

லிங்கன் நான்கிரீக்கில் இருந்த பள்ளிக்குச் சில நாட்கள் சென்றார். அங்குச் சரியான கல்வி கிடைக்காத காரணத்தால் தாம் குடியிருந்த இடத்திலிருந்து நான்கு கல் தூரம் சென்று கல்வி கற்க ஆரம்பித்தார். படிப்பின் மேல் தீராப்பசி லிங்கனுக்கு இருந்ததால் அவர் எத்தனை கல் தூரமானாலும் போய்வர அலுத்துக் கொண்டதில்லை. படித்துவிட்டு வீட்டுக்கு வந்தபின் ஓய்ந்து ஒழிந்து இருக்க மாட்டார். படித்துக் கொண்டிருப்பார்; படித்ததைத் தரையிலோ மரப்பலகையிலோ எழுதிக் கொண்டி ருப்பார். படிக்கும் நூல் களிலிருந்து குறிப்பெடுத்து வைத்துக் கொள்ள அவர் தவறுவது இல்லை.

**கல்லறையில் கண்ணீர்**

தாமஸ் லிங்கன் வருமானக் குறைவின் காரணமாக வேறோர் ஊருக்குச் செல்ல எண்ணினார். தம் குடும்பத்தோடு சென்றார். அங்குப்போய்ச் சேர்ந்த சிறிது காலத்திற்குள்ளாக இவர்கள் வாழ்க்கையில் புயல் ஒன்று கொடிய உருவில் கிளம்பலாயிற்று. பெற்றெடுத்த அன்னை, பேரறிவுடைய ஆசிரியை, கண்ணாகக் குடும்பத்தைக் காத்து வந்த கருணைப் பிழம்பு - நான்ஸி - நோய்வாய்ப் பட்டாள். நோயை நீக்குதற்குத் தாமஸ் தம்மாலானவரை முயன்றார்! ஆனால், மருத்துவர் கைவிட்டார்!

நான்ஸியின் மலர் விழி மூடியது. மூடிய விழி மீண்டும் திறக்கப் படாமலே போய் விட்டது. இல்லாளாக வந்து, கற்பிக்கும் நல்லாளாகவும் இருந்த நான்ஸியின் மறைவால்தாமஸ் கொண்ட துயரத்திற்கு அளவில்லை. இளைஞர் ஆபிரகாம் புத்தகத்தை எவ்வளவு சிக்கெனப் பிடித்துக் கொண்டிருந்தாரோ அவ்வளவுக்கு அதிகமாகத் தாயின் கல்லறையைப் பிடித்துக் கொண்டிருந்தார். கல்லறைக்குச் சென்று சென்று கண்ணீர் சொரிந்து வந்த நாட்களோ ஏராளம்.

நான்ஸியை அடக்கம் செய்தற்கான பெட்டியைத் தாமஸ் லிங்கனே அளவிட்டுச் செய்தார். உடனிருந்து பணியாற்றினார் லிங்கன். பன்னீர் தெளிக்க வேண்டிய சவப் பெட்டியில் ஏழை லிங்கனால் கண்ணீர் தெளித்துக் கொண்டிருக்கவே முடிந்தது. கிறித்தவச் சடங்கு முறைமையின்படி பாதிரியார் ஒருவரை அழைத்து அன்னையின் இறுதிக்கடனை முடித்தற்குக்கூட முடியாத வறுமை நிலைமையில் லிங்கன் இருந்தார்.

**தாய்க்குரிய கடப்பாடு**

இதனால், தம் அன்னைக்குச் செய்ய வேண்டிய தொண்டு ஒன்றைச் செய்யத் தாம் தவறி விட்டதாகக் கருதினார். தாம் அறிந்திருந்த பாதிரியார் ஒருவருக்கு, அன்னைக்குச் செய்ய வேண்டிய இறுதிச் கடன்களைச் செய்து உதவுமாறு மன்றாடிக் கடிதம் எழுதினார். பாதிரியார், லிங்கனுக்கத்தாய்மேல் இருந்த பற்றையும், எழுத்து வன்மையையும் பாராட்டி இறுதிக் கடன் களை நன்முறையில் செய்துதவினார். அவ்வளவோடு நில்லாது லிங்கன் மீது அவர் கொண்ட அன்பினால் இவர் படிப்புக்குத் தம்மாலான உதவிகளைச் செய்யவும் முன்வந்தார். அன்னையால் தொடங்கப்பட்ட கல்வி, அன்னையின் கடிதம் காரணமாகவே வளர்க்கப்பட்டது விந்தையே!

**வளருங் கல்வி**

லிங்கனுக்கு ஈசாப்புக் கதைகளிலே ஈடுபாடு பெருகியது. இடைவிடாது படித்துக் கொண்டே இருந்தார். அமெரிக்காவின் பெருமைக்குரிய முதல் மகன் வாசிங்டன் வரலாற்றை இராம்சே என்பவர் எழுதியிருந்தார். அந்நூல் லிங்கன் கைக்குக் கிடைத்தது. சிக்கெனப் பிடித்துக் கொண்டார். தமக்கு முன்மாதிரியாகக் கொண்டிருந்த பெரியவர்களுள் ஒருவராக வாசிங்டனைக் கொண்டார்.

*வயல் வெளிக்குத் தந்தையோடு செல்லும் லிங்கன், வேலை பார்த்துக் கொண்டே படிப்பார்; வேலையின் இடையேயும் படிப்பார். தரையிலே எழுதிக் கொண்டிருப்பார். தம்மை நெருங்கி வந்தவர்களிடமெல்லாம் படித்ததை எடுத்துக் கூறத் தயங்க மாட்டார். தாமஸ் லிங்கன், ஆபிரகாம் இவ்வாறு படிப்பையே முழு மூச்சாகக் கொண்டிருப்பதை வெறுத்தார். எத்தனையோ முறைகளாக அரற்றியும் வெருட்டியும் பார்த்தார். படிப்பாவலைப் பறித்தெடுக்க முடியாது என்ற காரணத்தால் தான் கண்டிப்பதை விட்டு ஒதுங்கினார்.*

*ஆபிரகாமின் கொழுந்து விட்டெரியும் ஆசைக்கு இந்த நூல்கள் இரையாகப் போதவில்லை. படிப்பறிவுள்ள கொல்லர் ஒருவரின் உலைக் கூடத்திற்குப் போய்த் துருத்தி ஊதிக் கொண்டும் துணை வேலைகள் புரிந்து கொண்டும் “கொல்லர்” கூறக் கூடிய கதைகளைக் கேட்டுவந்தார். அறிவு கிடைக்க ஏதேனும் வழிவகை இருந்ததென்றால் எந்தத் தொல்லைப் படவும் ஆபிரகாம் தயங்க மாட்டார்.*

*தாமஸ் லிங்கன் ஒரு வாரம் வேறோரிடம் போயிருந்தார். லிங்கனும் சாராவும் வீட்டில் இருந்தனர். தன்னந் தனியாக இருக்கும் இவ்வேளையில் தாயின் நினைப்பு வந்து இவர்களுக்குத் தத்தளிப் பூட்டியது. லிங்கன் சாராவினிடம், தாய் இல்லாமையால் தந்தையாருக்கும், தங்களுக்கும் ஏற்பட்ட சங்கட வாழ்க்கையை விவரித்துக் கொண்டிருந்தார். இந்நேரம் லிங்கனுக்குப் பேரிடி வீழ்வது போன்ற உணர்ச்சி ஒன்று ஏற்பட்டது. தந்தை மறுமணம் முடித்துக் கொண்டால் தங்கள் நிலைமை..................................?*

**சிற்றன்னை**

*சிற்றன்னையர் கொடுமையைக் கேள்விப்பட்டிருந்த லிங்கன் ஆறாத் துயரத்திற்கு ஆட்பட்டார். இரவெல்லாம் தூக்கம் பிடிக்க வில்லை; பகல் வந்தது; குதிரை வண்டியொன்று வீட்டின் பக்கத்தே வந்து நின்றது. தாமஸ் லிங்கன் முதலாவதாக இறங்கினார். அதற்குப் பின் ஒரு பெண்மணியும் இறங்கினார். ஆபிரகாம் கண்கள் சுழல ஆரம்பித்தன. சிற்றன்னையின் கொடுமைக் காட்சிகள் மாறிமாறி வந்து கொண்டிருந்தன. இந்நேரம், அந்தப் பெண்மணிதான் சிற்றன்னை என்று லிங்கனுக்குத் தந்தையார் அறிமுகப்படுத்தி வைத்தார்.*

**மீண்டும் பள்ளி வாழ்வு**

இப்பொழுது ஆபிரகாம் "கிராபோர்டு" பள்ளியில் படித்து வருகின்றார். இதுகால், கையெழுத்துத் திறத்தைப் பாராட்டிய ஆசிரியர்கள் பலர்; கட்டுரை வன்மையைப் புகழ்ந்தவர்கள் சிலர்; பேச்சின் பெருமையைப் புரிந்து கொண்டிருந்தவர்கள் ஒரு சிலர்; இவ்வாறாக ஆசிரியர்களின் சீராட்டும் பாராட்டும் ஆபிரகாமை வெகுவாக வழி நடத்திச் சென்றன. தமக்கு நல்லதோர் எதிர்காலம் நாடிவர இருக்கின்றது என்ற நம்பிக்கைச் சுடர், நாடி நரம்பு களிலெல்லாம் ஓட ஆரம்பித்தது. அந்த எழுச்சியால், தாம் அமெரிக்க நாட்டின் வருங்காலத் தலைவர் என்று தோழர்களிடம் துணிவுடன் கூற ஆரம்பித்தார். அவ்வளவு நம்பிக்கை அப்பொழுதே ஏற்பட்டிருந்தது.

**இரவல் புத்தகம்**

வீம்ஸ் என்னும் பெரியார் வாசிங்டன் வரலாற்றைச் சிறப்பாக எழுதியிருப்பதாகவும், அது ஜோசியா என்பவரிடம் இருப்பதாகவும் நண்பர்கள் பேசிக் கொண்டனர். இதனைக் கேள்விப்பட்ட லிங்கன் ஜோசியாவைக் கண்டு சில நாட்களில் திருப்பித் தருவதாக வாக்களித்து வாசிங்டன் வரலாற்றை வாங்கிக் கொண்டுவந்தார். லிங்கன் குடியிருந்த இடத்திற்கும் ஜோசியா குடியிருந்த இடத்திற்கும் வண்டி வாகன வாய்ப்புக்கள் இல்லை. இருந்தாலும், ஆபிரகாம் கையில் பணம் இல்லை. நடந்தே போய் வாங்கி வந்தார் - நாற்பத்து நான்கு கல்!

**ஒரு தண்டனை**

வாசிங்டன் வரலாறு வரி வரியாக வாசிக்கப் பட்டது லிங்கனால். மீண்டும் மீண்டும் படித்தார். மனப்பாடமும் செய்தார். ஒரு நாள், வீட்டுச் சுவர்மேல் புத்தகத்தை வைத்து விட்டு வேலைக்குப் போய்விட்டார். அன்றடித்த மழையிலே புத்தகம் நனைந்து பல பக்கங்கள் சேதமாயின. இந்தத் துயரமான நிகழ்ச்சியைத் தாங்க மாட்டாத லிங்கன் ஜோசியாவினிடம் மன்னிப்புக் கேட்டதுடன் அவர் தரும் தண்டனையை அனுபவிக்கவும் ஒப்புக் கொண்டார். ஜோசியாவின் காட்டிலே சில நாட்கள் வேலை செய்யவேண்டும் என்ற தண்டனை லிங்கனுக்குக் கிடைத்தது. ஆயினும் வேலைத் துயரத்தைப் பார்க்கிலும் லிங்கனுக்கு வேறொரு மகிழ்ச்சி இருந்தது. குறிப்பிட்ட வேலையை முடித்துவிட்டுச் சிதைந்த புத்தகத்தை லிங்கனே எடுத்துக் கொள்ளலாம் என்றும், தம் நூலகத்தில் இருந்த

புத்தகங்களில் வேண்டியதை வேலை செய்யும் வரைக்கும் எடுத்துப் படித்துக் கொள்ளலாம் என்றும் ஜோசியா கூறியிருந்தார். ஜோசியாவின் மனைவி உயர் பண்பினர். லிங்கனைப் பிள்ளை போலாகக் கருதி வந்தார். ஓய்ந்திருக்கும் வேளைகளில் லிங்கனை உடனழைத்து வைத்துக் கொண்டு உரை யாடுவார்.

**தகுதியுணர்ந்த தாய்**

ஒருநாள் லிங்கன் உரத்துச் சத்தம்போட்டுப் பேச, திருவாட்டி ஜோசியா "ஏன் இவ்வளவு கத்திப் பேசுகின்றாய்?" என்றார். லிங்கனோ தயங்காது **நான் அமெரிக்க நாட்டின் தலைவனாகக் கூடியகாலத்து, பெரும் பெருங் கூட்டங்களிலே பேசவேண்டு மல்லவா! அதற்காக இப்பொழுதிருந்தே தயாரிக்கின்றேன்** என்றார்.

"புத்தகம் ஒன்றுக்காகப்புல்வெட்டிக் காடு திருத்தும் இவன் போகப் போகின்றானாம் அமெரிக்கத் தலைவனாக" என்று பொரிந்து வெடிக்க வில்லை, திருவாட்டி ஜோசியா! அதற்குப் பதிலாக ஆபிரகாம் பண்பையும் அறிவையும் அறிந்திருந்த அந்த அம்மையார், தங்களுக்குக் கிடைத்த பெரும் பேற்றையே நினைந்து பெருமிதம் கொண்டார்.

இந்த நிலைமையிலே லிங்கன் படிப்பு நடந்து கொண்டிருந் தாலும் வறுமை ஒருபக்கம் வாட்டிக் கொண்டிருந்தது. தந்தையார் உழைப்பால் மட்டும் பிழைப்பு நடத்த முடியாதென்று அறிந்த பதினாறு வயது லிங்கன் தாமும் உழைப்பிலே புக முன்வந்தார்.

# 3. ஆதரவு வளர்ந்தது; ஆபிரகாமும் வளர்ந்தார்

"எந்தத் தொழில் செய்வதும் இழுக்கல்ல" என்ற எண்ணம் இளமைமுதலே ஆபிரகாமினிடம் அரும்பியிருந்தது. ஒரு தொழில் இல்லாவிட்டாலும் ஒரு தொழில் செய்து பிழைக்கும் படியாகப் பற்பல தொழில்களில் பயிற்சி பெற்றிருந்தார். எந்தப் புது வேலையையும் எளிதில் அறிந்து கொள்ளும் திறமை இருந்ததனால் அவருக்கு எப்படியாவது வேலை கிடைத்துக் கொண்டிருந்தது.

**படகோட்டி**

முதலாவதாகக் கூலிக்குப் படகோட்டும் தொழிலைத் தொடங்கினார். பின்னர்ப் பண்ணை ஒன்றிலே பணியாளாக அமர்ந்தார். செல்வர் ஒருவரின் வீட்டிலே ஏவல்கேட்கும் எடுபிடி யாளாகப் பணிபுரிந்தார். "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்" லிங்கன் மனம்இருந்தது புத்தகத்தில் தான். படுத்துக் காலாட்டிக் கொண்டே மணிக் கணக்காகப் படிப்பார்; நடந்து கொண்டும் படிப்பார்; வயல் வெளிகளிலும் மரத்தடிகளிலும் உட்கார்ந்து பலபேரைக் கூட்டி வைத்து விகடங்கள் கூறுவார்; தருக்கம் செய்வார். இவற்றை நயந்தவர்கள் பலர்; பொறாமையும் போட்டியும் கொண்ட வர்கள் சிலர்; அடுத்தவர் புகழ்வதைப் பற்றியோ பழிப்பதைப் பற்றியோ நினைக்காத நெஞ்சம் லிங்கனிடம் இருந்ததால் பாடுபடவும் செய்தார்; பாடுபட்டுக் கொண்டே படிக்கவும் செய்தார்.

**வணிகக் கூலி**

ஜோன்ஸ் என்பவர் ஒரு வணிகர். அவருக்குப் பலதுறை வணிகங்கள் உண்டு. புத்தக வணிகமும் புரிந்து வந்தார். இதனை அறிந்திருந்த லிங்கன் ஜோன்ஸ் கடையிலே சிப்பந்தியாகச் சேர்ந்து கொண்டார். பலதொழில் அனுபவம் உடைய லிங்கனை வேலைக்கு வைத்துக் கொள்வதிலே ஜோன்ஸ் மகிழ்ச்சியுற்றார். லிங்கன், கடைக்கு வருபவர்களிடம் புன் முறுவலோடு பேசுவார்; பணிவோடு

நடந்து கொள்வார். இதனால் வாடிக்கைக்காரருக்கு லிங்கன் மேல் பற்று ஏற்பட்டுக் கொண்டு வந்தது. கடையில் இருந்துகொண்டே லிங்கன் 'பிராங்ளின் சரிதம்,' ஹென்றிகிளேர் வரலாறு, முதலானவற்றைப் படித்துக் கொண்டதுடன் செய்தித் தாளும் படித்து அரசியல் விவகாரங்களைத் தெரியவும் விவாதிக்கவும் திறம் பெற்றார். இதனால் ஜோன்ஸ் கடையிலே வாடிக்கைக்காரர் பெருகிக் கொண்டு வந்தனர். அவர்கள் ஆபிரகாமுடன் விவாதித்து அறிவைப் பெருக்கிக் கொள்ள ஆசைப்பட்டனர். வியாபார நிலையம்விரிவுரை நிலையமாக மாறிவிட்டது.

வியாபார வருமானமும் பெருகி, ஜோன்ஸ் புகழும் பெருகிக் கொண்டு வந்ததால் ஆபிரகாம் காரியத்தில் ஜோன்ஸ் தலையிட வில்லை. அதனாலேதான் கடையிலிருந்து விலகிய பின்னருங் கூடத் தம் நண்பர்களைச் சந்தித்துத் தருக்கம் செய்யும் இடமாக ஜோன்ஸ் மளிகைக் கடையைப் பயன்படுத்தி வந்தார்லிங்கன். *யானையால் யானையைப் பிடித்துக் கொள்ளும் சாதுரியம்போல ஒரு செயலைச் செய்யும் போதே அச் செயலால் மற்றொரு செயலைச் செய்து முடித்துக் கொள்ளும் திறம் லிங்கனிடம் இருந்தது. இதுவே அவர்வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குத் தலையாய காரணமாக இருந்தது என்பதற்கு ஐயமில்லை.

**காலநிலைக்கேற்ற கட்டுரை**

செய்தித்தாள் படித்து வந்த லிங்கனுக்குச் செய்தித் தாளுக்குக் கட்டுரை எழுத வேண்டுமென்ற ஆவல் கிளம்பியது. அதனால் அந்த வட்டாரத்திலே தொற்று நோய் போல் பெருகிக் கிடந்த குடிப்பழக்கத்தை வெறுத்துக் கட்டுரை எழுதத் தொடங்கினார். தம் தாய் நான்ஸி குடியைக் கெட்டபழக்கமாகக் கருதியிருந்தாள் என்பதைத் தெளிவாக அறிந்திருந்த லிங்கன், குடிவழக்கத்தை ஒழிப்பதைப்பற்றி எழுதுவதும் பேசவதும் அன்னைக்குச் செய்யும் காணிக்கையாகக் கருதினார். அதனால் செய்தித் தாளில் குடிப்ப தன் குறைவைத் தெள்ளத் தெளிய எடுத்துக்காட்டினார்.

"மதியை மயக்கி மானத்தைப் போக்கி வரும் குடியைக் கொண்டவர் குடியே கெடும்" என்று எச்சரித்தார். *"பொன்னையும் பொருளையும் அள்ளி வீசி, பேதையையும் புத்தியின்மையையுமா

* வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று (குறள் 678)

வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று அறிவுறுத்தினார். இவர் எழுத்தைப் பாராட்டிக் கூறுவோர் பலர் இருந்த படியால் மக்களுக்கு அரசியலறிவையும் பெருக்கும் ஆர்வம் கொண்டு அரசியல் கட்டுரைகளும் தொடர்ந்து எழுதிவர ஆரம்பித்தார்.

**புதிய படகு**

இந்தச் சூழலிலேதான் பொருள் வருவாய்க்காகத் தம் கையாலேயே சிறியபடகு ஒன்றைக் கட்டினார்; ஆற்றிலே மிதக்க விட்டார். ஆற்றிலே மிதந்த அந்தச் சின்னஞ் சிறுபடகு மரக்கட்டைப் படகாக லிங்கனுக்குத் தெரியவில்லை. வானக் கடலிலே வாலொளி வீசிச் செல்லும் வெள்ளி யோடமாகக் காட்சிவழங்கியது. அழகுக்காகவோ செய்தார் படகை? அரிக்கும் வறுமை நோயை அழிக்கும் கருவியாக அல்லவா செய்தார்! நெடுநேரம் வரைக்கும் எவரும் தம்படகை நாடி வரவில்லை. இமை கொட்டாது பார்த்துக் கொண்டும் ஏங்கிக் கொண்டும் இருந்தார்.

இரண்டு சீமான்கள் பெட்டியும் சுமையுமாய் ஓடி வந்தனர். அவர்கள் "விரைவாகச் சென்று கப்பலைப் பிடிக்க வேண்டும்! உன்னால் முடியுமா?" என்றனர். முடியும் என்ற தலையசைப்போடு கூலியும் பேசாது படகைச் செலுத்தினார் விடுதலைப்படகு செலுத்த வந்த வெற்றி வீரர்! கப்பல் கிடைத்தது கனவான்களுக்கு! கண்களிலே ஒற்றி ஒற்றிக் களியாட்டம் ஆடும்படி லிங்கனுக்குக் கிடைத்தது ஒரு டாலர்! அப்பப்பா! வாழ்விலே முதல் வருவாய்; பெருத்த வருவாய்! இப்படியேகிடைத்துக் கொண்டிருந் திருந்தால்? **அகிலம் அருளாளர் ஒருவரை இழந்திருக்கும்! வாழ்க வறுமை!**

"முதல் முதல் சம்பாதித்த அந்த வெண் பொற்காசு தந்த மகிழ்ச்சியை இந்த வெள்ளை மாளிகையால் தரமுடியவில்லை" என்று தலைவரான பின்னும் ஆபிரகாம் கூறிக் கொண்டார் என்றால் அந்தப் பஞ்சை நிலையிலே அவர் பாடிய பாடல்கள் எத்தனையோ?

**சட்டப் படிப்பு**

எதிர்பாரா முறையில் லிங்கனுக்குச் செல்வர் ஒருவரின் உறவு கிடைத்தது. அவரிடம் சட்டப் புத்தகம் ஒன்று இருப்பதாக

* கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். (குறள் 925)

*அறிந்தார். லிங்கனுக்கு அன்றிர வெல்லாம் தூக்கம் வரவில்லை. "சட்டப் புத்தகம் திருப்பப் படுகின்றது; மன்றத்திலே வாதம் தொடங்கப் படுகின்றது; பொருளும் புகழும் வானளாவப் பெருகு கின்றது". எல்லாம் எண்ணக் குவியலிலே! சட்டப் புத்தகத்தை வாங்கிப் பார்க்கு முன் ஒவ்வொரு கணமும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. "அசைந்து செல்லும் இவ்விரவு அழிந்து தொலையாதா" என்று அலுத்துக் கொண்டார். விடிந்தது; சட்டப் புத்தகத்திலிருந்து என்றும் அகற்ற முடியாது என்று இறுமாந் திருந்த சில எழுத்துக் களை இருந்த இடம் தெரியாமல் நெடுங் கோடிட்டழிக்க வந்த நீதியாளன் கரங்களிடையே தவழ்கின்றது இரவல் சட்டப் புத்தகம். செல்வருக்கு நன்றி கூறுமுன்னரே சட்டப் புத்தகத்திற்குக் கிடைத்தது முத்தம். இனிப் படகுக்கு என்னவேலை?* ***ஆற்றின் கரையிலே கிடந்தது அது. ஆபிரகாம் சிந்தையும் செயலும் சட்டப் புத்தகத்தின் அடித்தளத்தில் பதிந்து விட்டன.***

**தணியாத ஆவல்**

*ஒருநாள் செய்தித்தாள் புரட்டிக் கொண்டு இருந்தார் லிங்கன். அத்தாளிலே இருந்த சில வரிகள் அவரைக் கவர்ந்தன. அவர் இருக்கும் இடத்திற்கு 32 ஆவது கல்லில் இருந்த பூனவல்லியில் ஒரு கொலை வழக்கு விசாரிக்கப்பட இருப்ப தாகவும், அந்நாளில் பெயர் பெற்றிருந்த வழக்கறிஞர் பிரெக்கன்ரிட்ஜ் வாதாடப் போவதாகவும் குறிப்பிடப் பட்டிருந்தது.*

*"சட்டத்தைப் படித்தால் மட்டும் போதாது; முறையோடு வாதாடுவதையும் அறிய வேண்டும்" என்ற ஆசை உந்தியதால் ஆபிரகாம், மறுநாளே விசாரிக்க இருந்த அந்த வழக்கிற்குக் கால்நடையில் பயணப்பட்டார்.*

*பிரெக்கன் ரிட்ஜ், கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்த குற்றவாளியைத் தமது வாதத்திறமையால் எப்படி வேறுவிதமாக மாற்றிக் கொண்டு விட்டார் என்ற வியப்புக்கடலிலே நீந்தினார் லிங்கன். ஒவ்வொரு சொல்லையும், அது சொல்லப்பட்ட பாணியையும், அதன் பொருத்தத்தையும் அறிந்த லிங்கன் பிரெக் கனுக்கு நன்றி பாராட்டும்உள்ளத்தோடு நெருங்கி, கைகுலுக்க முயன்றார். அழுக்கு ஆடையும் அசங்கியமும் கொண்டிருந்த ஆபிரகாமை ஏற இறங்க ஒருபார்வை பார்த்து விட்டு அலட்சியமாக நடந்தார் வாதாட்ட வல்லுநர். ஏமாற்றமுற்ற*

*ஆபிரகாம் "உங்கள் வாதத்திறமையைப் பாராட்டு கின்றேன்" என்று தலை தாழ்த்திக் கூறினார். அந்த ஏழையின் நல்லுரையை ஏற்கக் கூடிய அளவில் அவர் செவி இல்லை! அவ்வளவு தூரம்மரத்துப் போயிருந்தது, அந்த மேதை நீதியாளனின் செவி. ஆபிரகாம் வாதத்தைக் கேட்டுப் பயன் பெற்றார். அதற்கு நன்றி செலுத்தினார். நன்றியுரையை ஏற்றுக் கொள்ளாததைப் பற்றித் தமக்குக் கவலை இல்லை என்று எண்ணிக் கொண்டார்.*

**நினைவு இருக்கிறதா?**

*பிரெக்கன் ரிட்ஜை மீண்டும் ஒருமுறை ஆபிரகாம் சந்திக் கின்றார் - வெள்ளை மாளிகையிலே! "இதற்கு முன் என்னை எங்கேனும் சந்தித்ததாக நினைவிருக்கிறதா?" என்ற வினா எழுப்பு கின்றார் லிங்கன். "நினைவில்லை" என்கிறார் நெஞ்சமுத்த நீதிபதி. "நீங்கள் பூனவல்லியில் வாதாடும்போது கேட்டுக் கிறுகிறுத்து நன்றி தெரிவித்தவர்களில் நானும் ஒருவன். நான் முன்னுக்குவரக் காரணமாக இருந்தவர்களுள் தாங்களும் ஒருவர்" என்கின்றார் பதவிப்பெருமை இல்லாத பண்புப் பெருந்தகை! இப்பொழுதாவது அவர் கேட்டுக் கிறுகிறுத் திருக்கத் தானே வேண்டும்!*

**சொற் போர்க் கழகம்**

*பூனவல்லி நீதி மன்றத்திலிருந்து புறப்பட்ட லிங்கனுக்குச் "சொற் போர்க் கழகம்" ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. "காலம் கரை கடந்த வெள்ளம் போல் செல்வது; கருத்தின்றி வீண் பொழுது போக்குபவன் கைக்குக் காலம் எட்டக் கூடியதன்று" என்பதை ஆழ்ந்தறிந் திருந்த ஆபிரகாம் ஊர்போய்ச் சேர்ந்தவுடனே சொற்போர்க் கழகத்தைத் தொடங்கி விட்டார். நண்பர்களிடம் வாதங்களும் எதிர்வாதங்களும் தொடங்கின. அனைவரும் பேச்சத் திறமையை வளர்த்தனர். வாதத்தில் வளர்ந்தனர்! ஆபிரகாம் வழக்கறிஞராக முடியும் என்பதைச் சொற்போர்க் கழகம் தெளிவாக எடுத்துக் காட்டிற்று. ஆயினும் பேச்சில் மட்டும் போய்க் கொண்டிருந்தால் பிழைப்புக்கு வழி?*

**நியூ ஆர்லியன்சுக்குப் பயணம்**

*நியூ ஆர்லியன்சில் வியாபார வாடிக்கை வைத்திருந்த உள்ளூர் வணிகர் ஒருவர் ஆபிரகாமை அறிந்திருந்தார். உடல் உரமும் உள்ள ஒழுங்கும் உடைய ஆபிரகாமை வெகுவாக அவருக்குப் பிடித்திருந்தது. லிங்கன் ஏழை யென்றாலும் கூட*

அவர் உயர்பண்பிலே ஆட்பட்டவணிகர் நெருங்கிப் பழகினார். தம் குமாரனும் ஆபிரகாமுடன் நெருங்கிப் பழக வாய்ப்புத் தந்தார். லிங்கன் வழியாகத் தம்குமாரனுக்கு அன்பும் அறிவும் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கை வணிகருக்கு ஏற்பட்டிருந்தது.

ஒரு சமயம் ஆர்லியன்சிற்கு லிங்கனும் வணிகர் மைந்தனும் சரக்குகளோடு கப்பலில் பயணமாயினர். படகோட்டித் திரிந்த பஞ்சை லிங்கனுக்குக் கடற் பயணம் அளவிறந்த களிப்பூட்டியது. அந்தக் களிப்பிலே சிக்கிக் கூத்தாடாது கப்பல் இயங்கும் முறை, கருவி அமைப்பு ஆகியனவற்றை ஆராய்ந்து கொண்டே போனார். ஒருவாறு தம் மனத்தே கப்பலின் அமைப்பு முறையைப் படமாகப் பிடித்து வைத்துக் கொண்டார்.

**கொள்ளைக் கூட்டம்**

கப்பலோட்டி கப்பலை ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தினார். அத்துறையிலே போய்த் தங்கள் காரியங்களைக் கவனித்து வர வேண்டிய சிலர் இறங்கிச் சென்றார்கள். அந்நேரம்; கரிய நிறம்; கனத்த உதடு; உப்பிய கன்னம்; ஓங்கார ஒலி; சுருண்ட மயிர்; மிரண்ட விழி - இவற்றை யுடைய கொள்ளைக் கூட்ட மொன்று திடுமெனக் கப்பலுக்குள் புகுந்தது.

கப்பலோட்டியைத் தாக்கினர் சிலர்; பயணக் காரரைப் பதம் பார்த்தனர் சிலர். ஆற்றலுடையவர் குபீரென எழுந்தனர்; அச்சம் உடையவர் பதுங்கினர்; இரண்டும் கெட்டவர் படபடத்தனர்! ஆபிரகாம் எதிர்ப்பு அணித் தலைமை ஏற்றார். கொள்ளைக் கூட்டம்லிங்கனின் கொடிய தாக்குதலைச் சமாளிக்க முடியாது திணறியது. வெற்றிகரமாகப் பின்வாங்கத் தொடங்கியது கொள்ளைக் கூட்டம்! லிங்கனின் மென்மை யுள்ளத்திலே அமைந்து கிடந்த வன்மையைக் கண்டு ஆச்சரியம் கொண்டான் வணிகர் மைந்தன். "உயிரைக் காத்த உத்தமன்" என்று மற்றவர்கள் புகழ்ந்து கொண்டார்கள்.

**அதுவேறு; இதுவேறு**

தந்தையின் துப்பாக்கியால் படபடத்து விழுந்த பறவையைக் கண்டு பரிதாபப்பட்ட லிங்கன் - "ஆயிரமாயிரம் பேர் அடிமையாக இருப்பதா? அந்தோ கொடுமையே!" என்று கண்ணீர்விட இருந்த லிங்கன் - எந்த நீக்ரோவருக்கு விடுதலை தர இருந்தாரோ அவர்களில் சிலரைக் கடலுக்கு இரையாக்கி விட்டார்! "உரிமை

வேறு; உருட்டுத்தனம் வேறு;" என்பதை நீக்ரோவர் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்குப் பாடம் கற்பித்தார் ஆபிரகாம்.

அனைவரும் ஆர்லியன்சு போய்ச் சேர்ந்தனர். ஆபிரகாம் வணிகக் காரியங்களைக் கவனித்து விட்டு, கடைத் தெரு வழியே ஒரு நாள் மாலைப் பொழுதில் உலாவி வந்தார். அங்கேதான் ஆறாகக் கண்ணீர் வடித்து அடிமைச் சந்தையைக் கண்டார். அன்று ஏற்பட்ட கொதிக்கும் உள்ளத்தின் குறிக்கோளே நீக்ரோ அடிமையர்க்கு விடுதலைதந்ததும், லிங்கனுக்கு அருளாளர் என்ற பெருமை தந்ததும் ஆகும்! தோற்றுவாய் காட்டும் ஏலக்குரல், ஆர்லியன்சு தந்த அவலக் குரல்.

**நியூ சேலம் செல்லல்**

தாமஸ் லிங்கனுக்குத் தம் குடியிருப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதனால் அவர் இருந்த இடத்திலிருந்து 200 கல்களுக்கு அப்பால் உள்ள நியூ சேலம் செல்ல நினைந்தார். இப்பயணத்திற்குச் சாலைவசதியோ போக்கு வரவு வசதியோ இல்லாத நிலைமையில் இருந்தது. காட்டாறுகள் பல குறுக்கிட்டன. திடீர்த் திடீர் என்று வெள்ளம் வரவும் செய்தது. காட்டாற்று வெள்ளம் ஒன்றைக் கடந்து அனைவரும் எதிர்க்கரை அடைந்தனர். அப்பொழுது வண்டிக்குப் பின்னாக ஓடிவந்த தங்கள் நாய் காணப்பட வில்லை. அது மறுகரையில் நின்று தத்தளித்துக் கொண்டிருந்தது. மீண்டும் வெள்ளத்தில் இறங்கி, மறு கரைக்குப் போய் அந்த நாயைக் கொண்டுவர மற்றவர்கள் விரும்பவில்லை. ஆபிரகாமோ அடியெடுத்து வைக்க ஒரு சிறிதும் மனமில்லாதவராய் ஆற்று வெள்ளத்தைத் தாண்டினார். தம் வருகைக்காக வாலாட்டிக் கொண்டிருந்த நாயைத் தோள்மீது போட்டுக் கொண்டு வண்டிக்குப் போய்ச் சேர்ந்தார்.

நியூ சேலத்தில் ஆபட் என்னும் வணிகர் கடை ஒன்று இருந்தது. அதில் லிங்கனுக்கு வேலை கிடைத்தது. நீக்ரோ வருக்கும் லிங்கனுக்கும் ஏற்பட்ட போராட்டச் செயலைக் கேள்விப் பட்டிருந்த ஆபட், நியூ சேலத்திலே தமக்கும் மற்றவர்களுக்கும் ஓயாத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த தருக்கர் கூட்டத்திற்கு வகையான பாடம் கற்பிக்க லிங்கனைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணினார். அதனால் அத்தருக்கர் கூட்டத்தினிடம் ஆபிரகாமைப் பற்றி ஆபட் ஒரு நாள் எடுத்துக்கூறினார். அவர்களோ

ஆபிரகாமைப் பழித்ததோடு, தங்களுடன் மற்போருக்கு வருமாறும் மார் தட்டி அழைத்தனர்.

வலுச் சண்டைக்கு இழுக்கும் இக்கூட்டத்தை அடக்கிவிட எண்ணிய லிங்கன் காலமும் இடமும் குறித்து, மற்போர் செய்ய முன்வந்தார். தருக்கர் கூட்டத் தலைவன் தளராது போர் செய்தாலும் இறுதி வெற்றி லிங்கனுக்கே இருந்தது. தருக்கர் தலைவன் தலை வணங்கினான். மான வீரத்திற்கு முன் மண்டியிட்டான். ஆபிரகாம் இவ் வெற்றியிலே இறுமாந்து விடாது தருக்கர் தலைவனையும், தருக்கர்களையும் அன்பினால் அணைத்துக் கொண்டார். இப்பொழுது ஆபிரகாமே அக்கூட்டத்தின் ஒப்புயர்வற்ற தலைவர்.

**தலைவர் ஆபிரகாம்**

உத்தரவிடும் தலைவர் ஆபிரகாம்; உடனே முடித்து வைக்கும் தொண்டர்கள் தருக்கர்கள்! குதிரைப் பந்தயமும் சேவற் போரும் நடத்துபவர்கள் தொண்டர்கள். தலைமையாக இருந்து நீதி வழங்குபவர் லிங்கன். இத்தலைமையும், நீதி வழங்கும் செயலும் லிங்கனின் எதிர்கால வாழ்வைத்தெளிவாக எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன.

லிங்கனுடைய வீரமும் புகழும் நியூ சேலமெல்லாம் பரவியது. தொண்டர்கள் தம் தலைவன் பெருமைக்காக அரும்பாடுபட்டனர். இந்தச் சூழலுக்கிடையேயும் லிங்கன் ஆபட் கடையில் சிப்பந்தியாக இருந்து கொண்டுதான் வந்தார். நேர்மைக்காகப் பாடுபட்டுக் கொண்டுதான் இருந்தார். *சரக்கு வாங்குவோரின் பொருளை அதிகமாக எடுத்துக் கொள்ளாது தாம் கொடுக்க வேண்டிய அளவிலும் குறைத்துக் கொடுக்காது வாணிகச் செம்மையைக் காத்து வந்தார் லிங்கன். வாங்க வேண்டிய அளவினும் எவரிடமேனும் பொருள் அதிகமாகப் பெற்றிருந்தால் மீண்டும் கொண்டுபோய்க் கொடுத்திருக் கின்றார். எவருக் கேனும் கொடுக்க வேண்டிய அளவில் குறைத்துக் கொடுத்திருந்தால் அந்தக் குறைவைத் தாமே போய் நிறைவு செய்து வந்திருக்கிறார். இவ்வளவு காரியங்களிலும் ஆபட் தடையாக இருந்ததில்லை.

---

* "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்" (குறள் 120)

"கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது" (பட்டினப்பாலை)

**நீராவிப்படகு செய்தல்**

நியூ ஆர்லியன்ஸ் கடற் பயணத்தின் போது ஆராய்ந்தறிந்த கப்பலாராய்ச்சியை வைத்து ஆபிரகாம் தாமே நீராவிப் படகொன்றை உண்டாக்கிக் கொண்டார். அந்தப் படகின் மூலம் வருமானம் வரத்தொடங்கியது. அன்பர்கள் பலர் பெருகியதால் அவர் தொழில் வருமானமும் பெருகலாயிற்று.

**போர் வீரர்**

இந்நிலைமையில் அமெரிக்காவில் பயங்கரமான போராட்டம் ஒன்று தொடங்கியது. மக்கள் அல்லல் பட்டு ஆற்றாது அலறினார். ஆனால் ஆபிரகாமோ அவர்களுக்கு ஆறுதல் மொழி கூறினார். ஆறுதல் மொழியோடு மட்டும் நில்லாது தம் குழுவினர் அனைவரையும் கூட்டி ஆயுதம் தாங்கச் செய்து அவர்கள் விருப்பத்தின்படி தாமே படைத்தலைமையும் ஏற்றார். வீரர்களுக்கு அரிய பயிற்சி தந்தார். எழுச்சியை ஏற்படுத்தினார். இடை இடையே விகடமும் பேசிக் கொண்டார். ஆபிரகாம் தலைமையில் அமர்ந்து பணியாற்றும் பெருமை கிடைத்தற்காக வீரர்கள் மகிழ்ந்தனர். அச்சமூட்டும் போராட்டத்தைத் துச்சமாக மதித்து மகிழ்ச்சியோடு பொழுது போக்கினர். போராட்டக் கலையில் பேராற்றல் லிங்கனுக்கு இருந்ததால் எத்தகைய பெருஞ்சேதமும் இன்றிச் சமாளித்தார். அதனால், துப்பாக்கியைத் தோளிலே தாங்கிக் கொண்டிருக்கும் பதவி கிடைத்திருந்தாலும் தமக்குச் சுடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது போனதற்காக லிங்கன் பிற்காலத்தே பெருமகிழ்ச்சி அடைந்திருக்கின்றார்.

**நில அளவையாளர்**

போர் வெறியகன்று நாட்டில் அமைதி ஏற்பட்டவுடனே நில அளவையாளராகப் (சர்வேயராகப்) பணியாற்றத் தொடங்கினார். வியாபாரத்தில் லிங்கன் கொண்டிருந்த நேர்மைக்கு மதிப்புக் கொடுத்து வந்த மக்கள், நில அளவையிலே அவர் கடைப்பிடித்த செம்மையைக் கண்டு பெரிதும் பாராட்டினர். அதனால் "பொய்மை நீங்கிய புனிதன்" "கள்ளம் அகன்ற கண்ணியன்" என்ற பெருமைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரலாயின.

**அஞ்சலகத் தலைவர்**

*ஊருக்கு வெளிப்பகுதிகளிலே நிலமளந்து வந்த லிங்கன் ஊருக்குள்ளே இருந்த அஞ்சலகத் தலைவராக (போஸ்ட் மாஸ்டர்) மாறினார். தம் அறிவைப் பெருக்கிக் கொள்வதற் காகவே வலியக் கிடைத்த வாய்ப்பாக இத்தொழிலைக் கருதிய லிங்கன் தொப்பியையே அஞ்சல் பையாக வைத்துக் கொண்டு நடைபாதை யெல்லாம் படிக்க ஆரம்பித்தார். பத்திரிகைகளில் பலப் பல வகையானவை அவ்வூருக்கு வந்து கொண்டிருந்ததால், அவற்றை யெல்லாம் படிப்பார். படித்த பின்னர்த்தான் கொண்டு போய்ச் சேர்ப்பார்: இதனால் உலகியல் அறிவு உச்சமடைந்தது.* ***அமெரிக்கச் செய்தித் துறையொன்று நியூசேலம் அஞ்சலகத் திலே 6 அடி 4 அங்குல உயரமுடைய ஒரு மனிதரின் மண்டை யோட்டுக்குள்ளே நிறுவனம் செய்யப்பட்டுச் செம்மையாக நடந்து வந்தது*** *என்று சுருங்கக் கூறிவிடலாம். 'நடமாடும் சுவடிச் சாலை'யாம் லிங்கனால்நியூசேல மக்களின் அரசியலறிவு வளர்ந்தது; வளர்த்தார் ஆபிரகாம். மக்கள் ஆதரவும் வளர்ந்தது; ஆபிரகாமும் வளர்ந்தார். அதன் விளைவுதான் லிங்கனைச் சட்ட சபைக்குப் பிடித்துத் தள்ளியது.*

# 4. ஒழுங்குள்ள ஆபே

**சட்டசபைத் தேர்வு**

போர்க்களத்தலைமை ஏற்றபோது லிங்கனது புகழ் நியூசேலத்திற்கு அப்பாலும் படர்ந்திருந்தது. அதனால் போர் முடிந்தவுடனே மக்கள் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கும்படி வற்புறுத்தினர். லிங்கனுக்கு அப்பொழுது சட்ட சபைக்கு நிற்க விருப்பமில்லை. ஆயினும் நண்பர்களின் வற்புறுத்தலுக்காகவே நின்றார். அத்தேர்தலில் லிங்கனுக்குத் தோல்வியே கிடைத்தது. அதனால் சோர்வுற்றார். நண்பர்களும் மக்களும் விட்டுவிட வில்லை. மீண்டும் வற்புறுத்தி இல்லினாய்ஸ் பகுதிக்குச் சட்ட சபை உறுப்பினராக நிறுத்தி வைத்தனர். அன்பர்கள் எதிர் பார்த்தது வீண் போகவில்லை. ஆபிரகாம் வெற்றி பெற்றார். சட்டசபை உறுப்பினரான ஆண்டு 1834-லிங்கனின் அப்போதைய வயது 25.

சட்ட சபைக்குச் செல்ல விருந்த லிங்கனுக்குக் கிழிந்த கோட்டும், அழுக்கேறிய உடையும் நைந்தும் நசிந்தும் இருந்த பட்டுத் தொப்பியுமே சொத்தாக இருந்தன. அதனால் இதுவரை உள்ளத்தையும் உணர்வையுமே கவனித்து வந்த லிங்கனுக்கு உடையையும் கவனிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தலையைக் கோதுவதற்குள்ளாகவும், காலணியைச் சீராக்குவதற் குள்ளாகவும் எவ்வளவோ படித்து விடலாம் என்னும் கற்பனையுலக லிங்கன் இதனை விரும்பவில்லையாயினும் புத்துடையும், புதுச்சோடும் தேவைப்பட்டன; தேவையைச் சட்டமன்றம் தந்தது; வழிவகையை அது தரவில்லை!

**பன்முறை தேர்வு**

லிங்கன், பழக்கப்பட்டிருந்த நண்பர் ஒருவரிடம் 200 டாலர் கடன் பெற்றுத் தமக்கு வேண்டிய உடைகளையும் உபயோகப் பொருள்களையும் வாங்கிக் கொண்டார். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இவை இல்லாதிருந்தால் கூட உள்ளச்

செம்மையும், உரையில் தூய்மையும், உழைப்பில் நேர்மையும் இருந்தால் போதும், தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்னும் அமெரிக்காவின் தேர்தல் சிறப்புக்கு ஆபிரகாம் எடுத்துக் காட்டாகத் துலங்கினார். அங்கு, தேர்தலுக்குப் பணம்வேண்டாம்; பதவி வேண்டாம்; வேண்டுவது பண்பு! இது ஆபிரகாமினிடம் அளவிறந்திருந்தது. அதனால் சட்ட மன்ற உறுப்பினராகப் பன்முறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**செயல் வீரர்**

சட்ட சபைக்குச் சென்ற தொடக்கத்திலே ஆபிரகாம் அவ்வளவாக எந்த வாதத்திலும் கலந்து கொண்டதாகத் தெரிய வில்லை. சட்ட சபையின் சமாதானத்திற்காகவும் நற்செயலுக் காகவும் பாடுபட்டார். பிணக்குக் கொண்டு இருப்பவர்களை நன்னெறி காட்டி ஒன்று சேர்த்தார். அரசியல் காரியங்களைக் கவனிப்பதற்காக ஏற்பட்ட குழுக்கள் பலவற்றில் உறுப்பினராக அமைந்து செயல் வீரராகப் பணியாற்றினார்.

**நல்லார் ஒருவர் துணை**

இந்த அளவோடு நிற்க விரும்பாத லிங்கன் வழக்கறிஞர் ஸ்டூவர்ட் என்பவருடைய உறவைத் தேடிக் கொண்டார். ஸ்டூவர்ட் தம்மைப் போல் பிறரும் முன்னேற வேண்டும் என்ற பெருங் குணம் கொண்டவர். அதனால் ஆபிரகாமைச் சந்திக்கக் கூடிய நேரங்களிலெல்லாம் சட்டத்துறை சம்பந்தப்பட்ட நுணுக்கங்கள் பலவற்றை எடுத்துக் கூறியதோடு தம்மிடம் இருந்த சட்டப் புத்தகங்களை லிங்கன் விரும்பும் போதெல்லாம் எடுத்துப் படித்துக் கொள்ள உரிமை தந்தார். ஸ்டூவர்ட் லிங்கனுக்கு உயிர் நண்பராகவும், உயர்ந்த ஆசானாகவும் திகழ்ந்தார். அதனால் சட்டசபை அலுவல் இல்லாத நேரமெல்லாம் சட்டப் படிப்பில் ஈடுபட்டார் லிங்கன். அவர் கனவு வீணாகி விடவில்லை. இதற்குள்ளாக மீண்டும் சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். ஆயினும் வழக்குத் துறையிலே நாட்டம் மிகுந்திருந்தது. அதன் காரணத்தால் 1837 ஆம் ஆண்டு ஸ்பிரிங் பீல்டு சென்று தம்மை ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். இப்பொழுது லிங்கனுக்கு இரண்டு பதவிகள். ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்; இரண்டு வழக்கறிஞர்.

**வழக்கறிஞர்**

வழக்கறிஞராக லிங்கன் ஸ்பிரிங் பீல்டு செல்லக் கூடிய காலத்தில் கையில் இருந்தது ஏழே ஏழு டாலர்கள் தாம். வாடகைக்கு அறை எடுத்துத் தங்கிக் கொள்வதற்கான பணம்கூடக் கையில் இல்லை. லிங்கனின் ஏழ்மை நிலையைக் கண்ட நண்பர் ஒருவர் இனாமாகத் தங்குவதற்கு இடம் தந்ததுடன், தம் படுக்கையின் ஒரு பகுதியில் படுத்துக் கொள்ளவும் உரிமை தந்தார். அதேபடுக்கையில் லிங்கன் மாதக்கணக்காகப் படுத்திருந்திருக்கிறார்; உணவுக்கும் அந்த நண்பரும் பிறிதொருவரும் வகை செய்தார்கள். லிங்கனுக்கு ஏதேனும் பணம் கிடைக்குமானால் கிடைத்ததைக் கொண்டு போய் நண்பர்களிடம் கொடுத்து விடுவார்.

**அலைந்த பிழைப்பு**

இப்போதைய நீதிமன்றங்கள் போல் அக்காலம் அமெரிக்காவில் நீதிமன்றங்கள் இல்லை. ஊர் ஊராக வழக்கறிஞர்கள் சென்று அங்கங்கே உள்ள சத்திரம் சாவடிகளில் தங்கி நீதி வழங்கி வந்தனர். அதனால் வழக்கறிஞர்லிங்கன் பிழைப்பு, அலைந்த பிழைப்பாகப் போய்விட்டது.

வழக்கறிஞர்களில் பலர் குதிரைகளிலும் வண்டிகளிலும் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று வந்தனர். ஆனால் லிங்கனோ எத்தனை கல்களானாலும்நடந்தே போனார். சக்தியும் சேறும் நிறைந்த சாலைகளிலும், அளறு படிந்த ஆறுகளிலும் நடந்து நடந்து உடையெல்லாம்அழுக்கேறிப் போய்விடும். "புகை போக்கி போன்று நீண்டு அழுக்கேறிய கால்சட்டை" என்று வழக்காள நண்பர்கள் நையாண்டி செய்யும் பொருளாக நம் லிங்கன் விளங்கியிருக்கிறார். ஆனால், அதனையும் மகிழ்வாக ஏற்றிருக்கிறார் பிறர் மகிழ்வுக்காக!

**தொண்டர் ஆபிரகாம்**

வண்டியில் நண்பர்களோடு சென்றாலும் ஒழுங்கற்ற பாதைகளில் வண்டிக்கு வழிகாட்டுவதும், வழியிலே ஏதேனும் தடையிருந்தால் நீக்கி வைப்பதும் லிங்கன்தான். தாம் எவ்விதக் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானாலும் குற்றமில்லை. மற்றவர்களாவது அதைக் கொண்டு மகிழ்ச்சியடையட்டும் என்ற பேரெண்ணப் பெரியராக லிங்கன் இருந்தார் அல்லவா?

**ஆ! ஆ!! அருள்தான் உருவம்!**

பன்றியொன்று சேற்றுள் மாட்டிக் கொண்டு திண்டாடியது. காலுறையைக் கழற்றிச் சென்று உதவி செய்ய முடியாதபடி அவசரவேலை இருந்ததால் லிங்கன் பன்றி நின்ற இடத்தினின்று நெடுந்தொலைவு நடந்து சென்றுவிட்டார். அதற்குப் பின்னும் அவர் மனம் விட்டு வைக்கவில்லை.

“அழியப் போகும் உயிரைக் காப்பதினும் என்ன அவசரம் இருக்கமுடியும்” என்று இதயம் இடித்துக் கேட்டது. மீண்டும் திரும்பினார். சோடுகளையும், உறையையும்கழற்றிவிட்டு, சேற்றுள் இறங்கிப் பன்றிக்கு விடுதலை தந்தார். இப்பரிவுடைமையைப் போற்ற முன் வரவில்லை பிற வழக்கறிஞர்கள்! கிண்டலுக்கு மேலுமொரு வாய்ப்புக் கிடைத்து விட்டதாகக் கொக்கரித்தார்கள்.

**இப்படியும் பொறுமையுண்டா?**

லிங்கன் ஓரிடத்தே நின்று கொண்டிருந்தார். கையிலே சட்டப் புத்தகம் இருக்கின்றது. சரேலென முன்வந்த ஒருவன் தலைதாழ்த்தி வணங்கிக் கொண்டே, “ஐயா, தங்கள் உடைமை ஒன்று என்னிடம் நெடுங்காலமாக இருக்கின்றது. அதைச் சேர்ப்பிக்கவே வந்தேன்” என்று கத்தி யொன்றை நீட்டினான். லிங்கனும் வாங்கிக் கொண்டே காரணம் கேட்டார். வணக்க மிட்ட அவன், ஒரு பெரியவர் பல ஆண்டுகளுக்கு முன்னாக என்னிடம் இக் கத்தியைத் தந்து நீ பார்ப்பவர்களில் எவன் அசங்கிய மானவனாக இருக்கின்றானோ அவனிடம் இக் கத்தியைக் கொடுத்து விடு என்றார். அதற்கு உரிமைப் பட்டவர்களை இது வரை தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. தாங்கள் தாம் கத்தியின் உடைமைக்காரர் என்பதை இப்பொழுது தான் கண்டு பிடித்தேன்” என்று பேசிவிட்டு நடக்க ஆரம்பித்தான்.

கோபப்படுவதற்குப் பதிலாகக் குறுஞ் சிரிப்புச் சிரித்துக் கொண்டே “என் பொருளை இதுவரை காத்துத் தந்ததற்காக நன்றி செலுத்திக் கொள்கின்றேன்” என்றார் ஆபிரகாம். இவ்வாறு வண்டியோட்டும் ஒருவனே நையாண்டி பண்ணும் அளவுக்கு லிங்கன் நடையுடை இருந்தது. ஆயினும் வாதத் திறமையிலே சிக்கி வயமிழந்தவர் பலராவர்.

**வழக்காடுவதற்கோர் துணைவர்**

தம்மைச் சட்டத் துறையில் புகுத்திய ஸ்டூவர்ட் டோடு சேர்ந்து வழக்கு நடத்திக் கொண்டு வந்தார்லிங்கன். ஸ்டூவர்ட்

பெரும்பாலும் தம் காரியாலயத்திற்கு வருவதோ வழக்குகளைப் பற்றி ஆராய்வதோ கிடையா. அவர் அப்பொழுது அரசியலிலே தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அதனால் காரியாலயப்பணியும் வழக்காடும் பொறுப்பும் லிங்கனுக்கே இருந்தன. நன்றியுடைமை காரணமாக லிங்கனே அத்தனை தொழில்களையும் பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் கென்டன் என்பவரையும் பங்காளியாகச் சேர்த்துக் கொண்டு வழக்காடினார். தாம் வெள்ளைமாளிகைக்குப் போகுமளவும் லிங்கன் கென்டனுடன் சேர்ந்துதான் வழக்காடி வந்தார்.

**வழக்குக்கு வழக்கு**

லிங்கன் எந்த வழக்கையும் எளிதில் எடுத்துக் கொள்ள மாட்டார். நன்றாக விசாரித்தறிந்து நீதிக்கு முரண்படாததாய் வெற்றி தருவதாய் இருக்கும் வழக்குகளையே எடுத்துக் கொள்வார். எத்தனையோ நீதியான வழக்குகளை, எவரும் தம்மை நாடிவராத நிலைமையில்கூடப் பயன்எதிர்பாராது எடுத்து நடத்தி வெற்றி தந்திருக்கிறார். லிங்கன் தம்மிடம் வரும் வழக்கின் பெறுமானத்தைக் கொண்டு பணம் வாங்க மாட்டார். வாதாடுவதற்கு ஆகும் நேரத்தைக் கொண்டே தொகை வாங்குவார். அவர் வாங்கிய தொகை உடன் வழக்கறிஞருக்கும், மற்ற வழக்கறிஞர்களுக்கும், வெறுப்பூட்டுவதாக இருந்தது. லிங்கன் தம் தரத்தைக் குறைத்துக் கொள்வதாகக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர்.

**நிறமன்று; நீதி**

நீக்ரோவர் ஏதேனும் வழக்குக் கொண்டுவரின் அவ்வழக்கை ஏற்று நடத்துவது இழுக்கு என்பது. வழக்கறிஞர்களின் ஒருமித்த கோட்பாடாக இருந்தது. லிங்கனோ, "நீதி எவன் பக்கம் இருந்தாலும் அவன் பக்கத்தே நின்றுவாதாடுவதே வழக்கறிஞன் தொழில். நம் கண்களுக்கு ஆண்டானும் அடிமையுமாகத் தோன்றுவது போல நீதியின் கண்களுக்கும் தோன்றுவதில்லை. எனக்குத் தேவையான தெல்லாம் வழக்குக் கொண்டு வருபவனின் நிறமன்று; நீதி" என்று துணிந்து வாதாடப் புறப்பட்டார். வழக்கறிஞர்களெல்லாம் லிங்கன் ஆபத்திலே மாட்டிக் கொண்டு அல்லல்படுவார் என்று தீர்க்க தரிசனம் கூறிக்கொண்டிருந்தனர். அன்றைக் காலம் அப்படி இருந்தது. ஆனால் அம் முடிவுக்கு அசைபவரா ஆபிரகாம்!

**ஒரு வழக்கு**

*ஸ்காட் என்னும் நீக்ரோ ஒருவன் வடநாட்டைச் சேர்ந்தவன். சுதந்திரமாகத் திரிந்துவந்தவன். அவனைத் தென்னாட்டடிமை என்று கூறி வளைத்துப் பிடித்தனர். ஸ்காட்டோ தான் அடிமையாக இருந்ததில்லை என்றும், வடநாட்டில் எவரடிமையுமின்றிப் பல்லாண்டுகள் வாழ்ந்து வந்ததற்கு ஆதாரம் உண்டென்றும், வாதாடும் உரிமை தனக்கு வேண்டுமென்றும் நீதிமன்றத்திற்கு ஒரு விண்ணப்பமனுப்பி யிருந்தான். "நீக்ரோ ஒருவன் வெள்ளையர்களை எதிர்த்து நீதி கேட்பதா? அடிமையாகவே படைக்கப்பட்ட அவனுக்கு ஆகுமா இத்துணிவு? அடிமையர் விடுதலைக்கு ஆரம்பம் செய்கிறான் அற்பன்!" என்று பொங்கி எழுந்தார் நீதிபதி! நீதி மன்றமும் கொதித்தெழுந்தது. "நீ தரும்விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ள முடியாது; நீ அடிமையாக இருந்தாலும்இல்லாவிட்டாலும் பிறவி அடிமை; அதை மாற்ற முடியாது" என்று விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது. இத்தள்ளுபடி நிகழ்ச்சியைச் செய்தித் தாளிலே கண்டு, "வெள்ளையனுக்கு ஒரு சட்டம் கறுப்பனுக்கு ஒரு சட்டமா?" என்றெழுந்த கொதிப்பே லிங்கனைச் சட்டம் பயிலத் தூண்டியது; வழக்கறிஞராக ஆக்கியது. நீக்ரோவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சட்டம் படித்தலிங்கனுமா நீக்ரோவர் வழக்கை ஒதுக்குவார்? லிங்கனை உணர்ந்து கொள்ள நாடு இன்னும் தவறுகின்றது!*

**அறநெஞ்சம்**

*"நீதிமன்றத்திற்கு வராமலே வழக்குகளைத் தீர்த்துவைக்க வழக்கறிஞர்கள் முயலவேண்டும். அப்படித் தீர்த்துவைக்க முடியாத வழக்குகள் இருந்தால் தான் நீதிமன்றத்திற்குக் கொண்டுவர வேண்டும். இம்மாதிரி செய்வது நாட்டின் நலம் நாடக்கூடிய ஒவ்வொரு வழக்கறிஞரின் கடமையுமாகும்" என்பார் லிங்கன். "எதைப்பற்றியும் எமக்குக் கவலை இல்லை; எமக்கு வேண்டுவது பணமே" என்ற குறிக்கோளாளர்க்கு இது பிடிக்கவில்லை. பிறருக்குப் பிடிக்காமைக்காக லிங்கன் எந்தச் செயலையும் விட்டுவிடமாட்டார். அதனால், அவர் உடலமைப் பையும், விடாப்பிடியையும் கொண்டு "கொரில்லா" என்ற பட்டப்பெயரால் அழைக்க ஆரம்பித்தனர்.*

**இல்லாள் விருப்பம்**

*வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது சட்டசபைக்கு 1836 முதல் 1846 முடிய ஆறுமுறை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். தமக்கு 33 ஆம் வயதான 1842 ஆம் ஆண்டில் மேரி என்னும் மங்கையை மணந்து கொள்கின்றார். வழக்கறிஞர் தொழிலிலே பெரும் பாலும் நாட்டம் செலுத்திக் கொண்டிருந்த லிங்கன் அரசியலிலே பெரிதும் ஈடுபட்டார் என்றால் அதற்குக் காரணமாக இருந்தவள் மேரியேதான். ஆபிரகாம் நல்ல உடையோடு திரியவேண்டும் நாகரிக நடையோடு வாழவேண்டும் என்பதிலே பெரிதும் அக்கறை காட்டினாள் மேரி. அவ் அக்கறை தன் பெருமைக்காகவே இருந்தாலும்கூட அது ஆபிரகாம் முன்னேற்றத்திற்குத் துணையாக இருந்தது என்பதற்குச் சந்தேகம் இல்லை. லிங்கன் தலைவர் தேர்தலுக்கு நிற்க விரும்பாத போது "நான் அமெரிக்கத் தலைவரின் மனைவி" என்று சிறப்படை வதற்காகவாவது தலைவர் தேர்தலுக்கு நில்லுங்கள்" என்று வற்புறுத்தினாள் மேரி. கோபக் குணமும் கொடுமைச் செயலும் குடி கொண்டவளாக அவள் இருந்தாலுங்கூட "தாம் தலைவரான தற்குக் காரணமாக இருந்தவள் மேரியே" என்று கூறிக்கொள்ள லிங்கன் தவறியதில்லை.*

**இல்லற வாழ்க்கை**

*மேரிக்கு நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவர்களைக் கட்டுப்படுத்தி லிங்கன் வளர்க்கக் கருதியது இல்லை. காரியா லயத்தில் அத்தனை குழந்தைகளும் கூடிச்சேர்ந்து கூத்தடிக்கும். வைத்த எந்தச் சாமானும் வைத்த இடத்திலே மீண்டும் இருக்காது. லிங்கனை வேலை செய்வதற்கும் விட்டு வைப்பதில்லை. லிங்கன் படுத்திருந்தாலும், உட்கார்ந்திருந்தாலும் மேலே ஏறி விளையாடு வார்கள்; அடிப்பார்கள்; மிதிப்பார்கள். தங்கள் விளையாட்டிலே கலந்து கொள்ளக் கட்டளை இடுவார்கள். லிங்கன் வேலைக் கவனிப்பிலே இருந்து விட்டால் எட்டி யுதைத்துவிட்டுப் பொங்கிக் கொழிப்பார்கள். அத்தனையையும் பொறுத்துக் கொண்டு புன்முறுவலோடு காட்சியளிப்பார் அந்தப் பண்புப் பெருந்தகை! அவர் கொண்டிருந்ததெல்லாம் "அளவிறந்த அல்லல் தாம் அனுபவித்தாலும் அடுத்தவர்களாவது அகமகிழ்ச்சி கொண்டிருக் கட்டும்" என்பதுதான்.*

*வாய்ப்பு வரும்போதெல்லாம் லிங்கன் நீக்ரோவர் விடுதலை பற்றிப் பேசினார்; எழுதினார்; விவாதித்தார். சட்ட மன்றத்தில் தம் கொள்கைகளை ஆதரிக்கக் கூடியவர்களை ஒன்று திரட்டினார். வடநாட்டிலே ஆதரவுவளர்ந்தது; தென்னாட்டிலே பகை பெருகியது. எப்பொழுதும் "விடுதலை விடுதலை" என்றே முழங்கிக் கொண்டிருந்தார். அதனால் என்ன நேரும் என்பதையும் லிங்கன் உணராது போய்விடவில்லை. நன்றாக அறிந்திருந்தார்; நாளும் நினைவிலே கொண்டிருந்தார்.*

**காரிசான்**

*"நீக்ரோவருக்கு விடுதலை வேண்டும்" என்று எழுதிய காரிசான் என்ன ஆனார்; லிபரேடர் பத்திரிகை என்ன ஆனது; காரியாலயம் தான் என்ன ஆனது, என்பதை லிங்கன் மறந்து விடவில்லை. உணர்ச்சியை வெளிக்காட்டத் தொடங்கினார் காரிசான். "அடிமை வழக்கம் அமெரிக்க நாட்டை விட்டு அகல வேண்டும்; ஆண்டவன் படைப்பில் ஏற்றத்தாழ்வு இல்லாதபோது ஏனிந்தக்கெடுமதி" என்று கேட்டார் தம் லிபரேடர் பத்திரிகையிலே. உள்ளத்தே ஒடுக்கி வைத்திருக்காது உணர்ச்சியை உரைக்க ஆரம்பித்தார் காரிசான். அவ்வளவுதான், கொதித்தெழுந்தது கூட்டம்! காரிசானைச் சூழ்ந்து கொண்டு கண்டபடி வாட்டி வதைத்தது. உயிரைப் போக்கி விட்டிருக்கும் காரிசான் மட்டும் இன்னும் ஒருநொடி நேரம் தப்பிச் செல்லாது இருந்திருந்தால்! காரிசான் தப்பிவிட்டார் என்றறிந்தது கூட்டம். காரியாலயத்தின் மேல் படையெடுத்தது. அந்தோ! காரிசான் உயர்வை வெளிப்படுத்த ஒரே ஒரு கருவியாக இருந்த காரியாலயம் சிதைக்கப்பட்டது. கருவிகள் உடைக்கப்பட்டன. கனலுக்கு இடையே காரியாலயம். கலங்கலுக்கிடையே காரிசான்!*

*இவ்வளவோடு விட்டதா கூட்டம்! காரிசானுக்கு ஆதரவாக இருப்பவர்களைத் தேடிப்பிடித்து இரத்தக் கொடை வாங்கிக் கொண்டது; கொன்று தீர்த்துங் கொண்டது. இவற்றை யெல்லாம் அறியாதவரல்லர் லிங்கன். எதற்கும் துணிவாக இருந்தார். "உயிரைக் கொடுத்துத்தான் நீக்ரோவருக்கு விடுதலை தரவேண்டும் என்பது இறைவன் விருப்பமாக இருந்தால்அதைச் செய்யத் தயார்" என்ற முடிவினால் தான் விடுதலைக்காக முயன்றார்.*

**நடுத்தர வாழ்வு**

*சுதந்திர நீக்ரோவை அடிமை நீக்ரோ என்று விற்க ஆரம்பித்தால் வழக்குத் தொடுத்து அவர்களுக்கு விடுதலை தந்தார். ஏழை எளியவர்களிடம் எவ்விதப் பணமும் வாங்காது நேர்மைக் காகவே வாதாடினார். இந்தக் காரியங்களால் நாளாவட்டத்தில் மேலும் மேலும் பேரும்புகழும் பெருக ஆரம்பித்தன. வழக்குகளும் அதிகமாக வரலாயின. இப்பொழுது லிங்கன் குதிரை ஒன்றை விலைக்கு வாங்கிக் கொண்டு அதில் ஏறிப்போய் வழக்குகளை விசாரித்து வந்தார். கிடைத்த வருமானத்தைக் கொண்டு வீட்டைச் சிறிது விரிவுபடுத்திக் கொள்ளவும் வாய்ப்புக் கிட்டியது. லிங்கனது வாழ்வு இப்பொழுது நடுத்தர வாழ்வாக இருந்தது எனலாம்.*

**சொல்லாற்றல்**

*லிங்கன் வாதம் செய்வதில் வல்லுநராக இருந்தார். தம்மை இளமையிலே ஆதரித்து வந்த சீமாட்டி ஒருத்தியின் மைந்தன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குமேடைக்குச் செல்லக் கூடிய நிலைமையில் இருப்பதைச் செய்தித்தாள் வழியாக லிங்கன் அறிந்தார். அவர்கள் வேண்டுதலை எதிர்பார்க்காமல் தாமே முன்வந்து சீமாட்டியின் மகன் சார்பிலே வழக்காடினார். அதற்கு முன்பு 'இவனே குற்றவாளி' என்று முடிவு கட்டப் பட்டிருந்தது. மேல் விசாரணை யாக லிங்கன் எடுத்துக்கொண்டு, "இவன்தான் கொலை செய்தான் என்பது உமக்குத் தெரியுமா?" என்று எதிரியின் சாட்சியினிடம் வினவினார். "ஆம். நான் நேராக என் கண்ணால் கண்டேன்" என்றார் அவர். "அப்பொழுது நேரம் என்னவாக இருக்கலாம்" என்று மீண்டும் லிங்கன் வினவினார். சாட்சியோ "இரவு 10 முதல் 11 மணியளவுக்குள் இருக்கும்" என்றார். "இரவு 10 முதல் 11 மணி என்பதில் திருத்தம் ஒன்றும் இல்லை என்று எண்ணுகின்றேன். அந்த இரவில் இவன்தான் கொலை செய்தான் என்பதை நீர் எப்படித் தெளிவாகக் கண்டிருக்க முடியும்?" என்று மேலும் கேட்டார்லிங்கன். "அப்பொழுது நிலா பகல் போல் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அதனால் இவர்தாம் கொலையாளி என்பது தெளிவாகத் தெரியும்! சந்தேகம் இல்லை" என்றார் சாட்சி. "நீர் இவன் கொலை செய்ததை இரவு 10 முதல் 11 மணிக்குள் பார்த்தீர். அப்பொழுது நிலா ஒளி வீசிக் கொண்டிருந்ததால் இவன் தான் என்பது தெளிவாகத் தெரிந்தது; அப்படித்தானே?" என்று சாட்சியளித்த பதிலெல்லாம் சேர்த்துக்*

கூறினார் லிங்கன். நீதிபதியைப் பார்த்து "நீதிபதியவர்களே, கொலை நடந்தது இரவு 10 முதல் 11 மணிக்குள் என்றும், அந் நேரத்தில் நிலவொளி தெளிவாக இருந்ததென்றும் சாட்சியார் கூறுகின்றார். ஆனால் பஞ்சாங்கமோ அன்று 12 மணிக்கு மேல் தான் நிலவுகால் வீசலாயிற்று என்பதைக் காட்டுகின்றது. அப்படி யானால் இவர்கூறிய வாக்கை உண்மையென ஒப்புக்கொள்ள வழியில்லாது போகின்றது, என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

லிங்கன் சாதுரியத்தால் பொய்க்குற்றம் சாட்டப் பட்டவன் விடுதலையடைந்தான். சீமாட்டி எவ்வளவோ வற்புறுத்தியும் கூடச் சிறிதும் பணம் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் லிங்கன். மறுத்ததோடு நில்லாமல் "எப்பொழுது எப்பொழுது என்னுதவி தேவைப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் வாருங்கள்" என்று ஆறுதல் மொழி கூறினார். அவ்வளவு நன்றியறிதல் லிங்கனிடம் இருந்தது.

**நன்னெஞ்சம்**

விதவை ஒருத்தியின்மீது சீமான் ஒருவர் வழக்குத் தொடர்ந் திருந்தார். அச்சீமான் தம்வழக்கை லிங்கன் எடுத்து நடத்தும்படி வேண்டிக் கொண்டார். உண்மையில் சட்டம் சீமான் பக்கம்தான் சாதகமாக இருந்தது. உறுதியாக வெற்றி பெற்றுத் தரலாம்; சிக்கலான வழக்குமில்லை. ஆயினும் லிங்கன் அந்த வழக்கை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். சீமானிடம் "உங்கள் பக்கம் சட்டம் சாதகமாக இருந்தாலுங்கூட, இதனை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது ஒரு விதவைப் பெண்ணும் அவள் குழந்தை களும் அல்லலுற வேண்டிய திருக்கின்றது. இந்த இடத்தில் எனக்குச் சட்டத்தைப் பார்க்கிலும் கூட ஒழுங்கு, சக்தி வாய்ந்ததாகத் தெரிகின்றது" என்று கூறி, வாதாட மறுத்து விட்டார். "வருமானத்தைப் பற்றிக் கவலை. இல்லை; அதனால் அடுத்தவர் வாழ்க்கைத் தரம் பாதிக்கக் கூடாது" என்பது லிங்கனின் கொள்கை.

**நாய்க்கடி வழக்கு**

ஒரு சமயம் ஒரு வேடிக்கையான வழக்கு வந்தது. வழியே சென்று கொண்டிருந்த ஒருவன் தன்னைக் கடிக்க வந்த நாயைச் சமாளிப்பதற்காக அவன் வைத்திருந்த கம்பை வீசினான். அந்தக் கம்பு கத்தி செருகப் பட்டதாக இருந்ததால் அது நாயின் வாயைக் கிழித்து விட்டது. நாய் இறந்தது.

"வழிப்போக்கன் தற்காப்புக்காகச் செய்திருந்தால் கத்தியில்லாப் பின்புறத்தால் நாயை வீசியிருக்கலாம். அவ்வாறு செய்யாததால் வஞ்சம் தீர்ப்பதற்காகவே செய்யப்பட்ட காரியமாகும்" என்று குற்றம் சாட்டப் பட்டான். எதிர்த் தரப்பில் லிங்கன் வாதாடினார். அதுகால், "இவர்தடியின் பின்புறத்தால் நாயைத் தாக்கியிருக்கலாம்தான். ஆனால், அத்ந நாயும் பின் புறமாகவே ஓடிவந்து இப்படிப் பின்புறத்தால் கடித்திருக்கலா மல்லவா? என்று சொல்லிக் கொண்டே பின்புறமாக ஓடிவந்தார். மன்றத்தில்சிரிப்பொலி அடங்கவில்லை. வெற்றி லிங்கன் பக்கம் தான்.

**ஒழுங்குள்ள ஆபே**

இப்பொழுது லிங்கன் வாழ்க்கைத் தரத்தை இன்னும் சிறிது உயர்த்திக் கொண்டார். அதே நேரம் தம் தந்தைக்கும், எதிர்பார்த்ததற்கு மாறாக அன்னையினும் பன்மடங்கு அன்பு செலுத்தி வந்த சிற்றன்னைக்கும் உதவி செய்ய எண்ணினார். அவர்எண்ணப்படி செய்யப் பெரும் தடைக்கல்லாக மேரி இருந்து வந்தாள். ஆனாலும் அவ்வப்போது தம்மால் இயலுமட்டும் பண உதவி செய்தார். சிற்றன்னை பெயரால் நிலம் வாங்கிவைத்து நிலையானவருமானமும் உண்டாக்கினார். இவ்வளவு காரியங் களும் செய்ததன் பின்னர் "ஒழுங்குள்ள ஆபே" என்ற உயர்ந்த பெயர் அனைவர் உரையிலும் உள்ளத்திலும் இடம் பெறலாயிற்று. இந்தப் பாராட்டைக் கேட்டுக் கொண்டிருக்க லிங்கனுக்குப் பொழுது இல்லை. தம் இலட்சியம்நிறைவேற்றப்பட வேண்டுமே என்ற ஏக்கமே எப்பொழுதும் வெதும்பிக் கொண்டிருந்தது.

# 5. மேரிக்கு எக்களிப்பு மேதைக்குத் தத்தளிப்பு

ஆபிரகாம் சட்ட சபைக்குள் நுழைந்த பின்னர்ச் சிலருள்ளத்தே "விடுதலை" எழுச்சி ஏற்பட்டது. அதன் முன்பெல்லாம் நீக்ரோவருக்கு விடுதலைகூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தவர்கள் கூட லிங்கனது கட்சியிலே சேர்ந்து பணியாற்ற ஆரம்பித்தனர். அடிமை முறை அவசியம் இருக்க வேண்டுமென்று அன்று எண்ணிக் கொண்டி ருந்தவர்கள்கூட வாய்விட்டுரைக்க வெட்கினர். அவ்வளவு தூரம் ஆபிரகாம் கொள்கைக்கு ஆதரவு தலைகாட்டலாயிற்று. ஆயினும் அரசியலில் பெரும் பங்கெடுத்துக் கொண்டிருந்த தலைவர்களுள் எண்ண வேற்றுமை மிகுந்திருந்தது.

**டக்ளஸ்**

இந்நிலைமையிலே லிங்கனின் நேரடியான எதிரி என எல்லோராலும் கருதப்பட்ட டக்ளஸ் என்பவர் அடிமை முறையின் அவசியத்தைப்பற்றிக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். வடநாட்டில் அடிமை ஒழிப்புக்காகத் திரளும் புரட்சியை அளவு கடந்து தாக்கினார். குறிப்பாக ஆபிரகாமைக் கூட்டங்களிலெல்லாம் நேரடியாகத் தாக்கிப் பேசவும் ஆரம்பித்தார். அதனால் ஆபிரகாம் டக்ளஸ் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்ற அடிமை ஒழிப்பு முறையின் அவசியத்தை எடுத்துக் கூற வேண்டிய நிலைமைக்கு ஆட்படலானார். ஆபிரகாமையும் நீக்ரோ இனத்தவரெனக் கேலி பண்ணினர். அவர் போகும் இடங்களிலும்பேசும் கூட்டங்களிலும் நீக்ரோப் பொம்மைகளை எடுத்து வீசினர்.

எதனையும் பொறுத்துக் கொள்ளும் இதயம் படைத்த லிங்கன் "மனிதன் தன்னலம் தான் அடிமை முறையை வேண்டு கின்றது; ஆனால், மனிதனது சுதந்திர உள்ளமே விடுதலையைத் தூண்டுகின்றது" என்று போனபோன இடங்களிலெல்லாம் வற்புறுத்தி வந்தார்.

**தீ வளர்ப்பு!**

தென்னாட்டிலே டக்ளஸின் புகழ் விண்மதி போல் ஒளிவிடத் தொடங்கியது. அதனால் அடிமை முறையை ஒழித்திருந்த வடநாடுகளில் சிலவற்றைத் தென்னாட்டுடன் சேர்த்துக்கொள்ள முயற்சி நடந்து கொண்டிருந்தது. அதற்கு முதல் முயற்சியாக "மிசௌரி ஒப்பந்தம்" தகர்த் தெறியப் பட்டது. அதற்குக் காரணமாக இருந்தவர் டக்ளஸ்தாம். 1820 ஆம் ஆண்டிலே மிசௌரி ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தப்படி சில மாகாணங்களில் அடிமை முறை நீக்கப் பட்டிருந்தது. அதை எதிர்த்து அடிமை முறை நீக்கப்பட்டிருந்த அந்த மாகாணங் களிலும் மீண்டும் அடிமை முறையை ஆக்கும் தீர்மானம் ஒன்றை டக்ளஸ் செனட்டிலே கொண்டு வந்தார். இஃது அணையப்போகும் தீயை ஆத்திரத்துடன் வளர்ப்பது போலாக இருந்தது.

அமெரிக்காவின் சரிதத்தை மேலும் களங்கப்படுத்தி, மனிதர் சுதந்திரத்தைப் பறிக்கும் இத் தீர்மானம் செனட்டிலே நிறை வேறியவுடனே வட நாட்டவர் கொதிப்பு மிகுந்தது. அதன் விளைவுதான் ஆபிரகாமைச் செனட்டின் உறுப்பினராக நிற்க வைத்தது.

**செனட் தேர்தல்**

குடியரசுக் கட்சியின் அங்கத்தினராகச் செனட் தேர்தலுக்கு ஆபிரகாம் நின்றார். அவரை எதிர்த்து டிரம்பல் என்பவர் நின்றார். லிங்கனுக்கு வெற்றியே கிட்டும் என எதிர்பார்க்கப் பட்டாலும் கூட, தோல்வியையே அணைத்துக் கொள்ள வேண்டியவரானார். லிங்கன் பட்ட துயரத்தைப் பார்க்கிலும் மேரி பட்ட துயரமே பெருகியது. ஆயினும் சோர்வடைந்த லிங்கனைத் தட்டி யெழுப்பினாள்; சுய உணர்வுக்குக் கொண்டு வந்தாள்.

மீண்டும் செனட் தேர்தல் ஆரம்பமானது. இப்பொழுது எதிர்ப்பவரோ நெடுநாள் அரசியல் விரோதி: சண்ட மாருதப் பேச்சாளி; அரசியல் சக்கரங்களை ஆட்டிவிட்டு அசையாது நிற்கும் வீரர் - டக்ளஸ்தாம். அவருக்குச் சாதகமாகத் தென்னாட்டுப் பண்ணையாளர்கள்; தென்காலனி அரசுகள்! "பணத்தைச் சூறையாடிப் பவனிவரும் டக்ளஸ் எங்கே? பஞ்சையர்க்காகவே உழைத்துவரும் பஞ்சை லிங்கன் எங்கே?" என்று பன்முறை தம்மைத்தாமே கேட்டுக் கொண்டே லிங்கன் தேர்தல் காரியங் களைக் கவனித்தார்.

**பிரிவுபட்ட கூரை**

இந்நிலைமையிலே ஒட்டாவா நகரில் டக்ளஸ் லிங்கன் ஆகிய இருவரும் ஒரே மேடையில் தோன்றி, தங்கள் தங்கள் கருத்துக்களை வாக்குவாதம் பண்ணுவதாக ஒருமுடிவுக்கு வந்தனர். டக்ளஸினிடம் பேச்சாற்றல் பெரிதும் இருந்தாலும் கூட நீதி தம்மிடமே இருக்கிறது என்ற துணிவு லிங்கனைத் தேற்றுதல் செய்து கொண்டிருந்தது. லிங்கன் பேசுவதற்குரிய ஆதாரங்களை யெல்லாம் சேகரித்துக் கொண்டு மேடைக்குச் சென்றார்.

"பிரிவுபட்ட கூரை நெடுநாளைக்கு நில்லாது. அதுபோலப் பிளவுபட்ட அரசும் நெடுநாளைக்கு நிலைக்காது" என்று குரலெழுப்பினார். அதே நேரம், "விடுதலை என்பது எந் நாட்டவர்க்கும் எவ்வினத்தவர்க்கும் ஏற்பட்ட பிறப்புரிமை. நீக்ரோவின்மேல் வெறுப்பு ஏற்படுகின்றது என்றால் விட்டு விடுங்கள் அவன் போக்குப்படி. இறைவன் அவனுக்களித்த அருட்கொடை அணுவளவேயாயினும் அதனைக் கொண்டு வாழட்டும். விடுதலை மனித குலத்தின் பொது உரிமை! ஆனால், அடக்கு முறையோ ஆள்வோரின் சுயநலம்! ஒருவர் தேட ஒருவர் உண்பது என்னும் கொடுஞ்செயல் நம்மால் ஒழிக்கப்பட்டே தீர வேண்டும்."

"தனிப்பட்ட ஒருவர் பெறவேண்டிய வெற்றி தோல்வி பற்றியதன்று நம்கவலை. எத்தகைய இன்னல்களுக்கிடையே நம்முன்னோர் நம் தாயகத்திற்குச் சுதந்திரம் வாங்கினர்? அவர்கள் உணவையேனும் உடையையேனும் காலுறைகளை யேனும் பற்றிக் கவலைப் பட்டுக்கொண்டு வாளா இருந்திருப் பார்களே யானால் சுதந்திரக் குடிகளாக மாறி இருப்பரா? அந்தச் சுதந்திரத் தாயகத்தை ஒன்றாகக் கட்டிக்காக்க வேண்டியதே நம் கடமையாகும்" என்று முழங்கினார். முடிவு என்ன?

**தோல்வி**

செனட் தேர்தலிலே ஆபிரகாம் தோல்வி! பிரிவு கொண்ட கூரை நில்லாது என்ற ஐக்கிய உரையே அவருக்குத் தோல்வி தந்ததெனத் தம் கட்சிக்காரர்களுக்குள்ளேயே கலகலப்பு ஏற்பட்டது. லிங்கனோ "எனக்கு நீதி எனப்பட்டதை எத்தனை எத்தனை ஏமாற்றங்கள் ஏற்பட்டாலும் சொல்லியே தீர்வேன்" என்று பதில் மொழிந்தார்.

லிங்கன் தலையிலே பேரிடி விழுந்தது போலாக செனட் தோல்வி இருந்தது. வாழ்க்கையே பெரு வெறுப்புக்குரியதாகப் போய்விட்டது. “சே! சே! இந்தஅரசியல் அளற்றிலே உழல்வதைப் பார்க்கிலும் அரசியலுக்கு மூடுவிழா முடித்துவிட்டு நிம்மதியாக இருந்த விடலாம்” என்று ஒருபக்கத்தே எண்ணம் எழும்பிக் கொண்டிருந்தது.

“நாம் வாழவே தகுதி இல்லை; வெற்றி நிச்சயம் கிடைக்கு மென்றல்லவா எண்ணினோம்; அதனால் தானே நம்மையே தேர்ந்தெடுத்தனர் நம் கட்சியினர். இப்பொழுது அவர்கள் கூறிக் கொள்வது என்ன? “நீயே வேண்டாததைப் பேசிக் கெடுத்துக் கொண்டாய்” என்றல்லவா குறை கூறுகின்றனர்? தொட்ட தெல்லாம் கெட்டது.

“வாணிகத்திலே தோல்வி! வழக்கறிஞராகப் பணியாற்று வதிலே வருமானக் கட்டை. போன போன இடங்களிலெல்லாம் பழி! அரசியலை விட்டு விட்டு வழக்காடத் தொடங்கிவிட வேண்டியதுதான். நம்மவர்களே நமக்குத் தடையாக இருக்கும் போது மற்றவர்கள் உதவிக்கு வருவார்களா?” என்ற ஏக்கத்திலே சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தார் லிங்கன்.

**அரசியல் ஆசிரியை**

“வெற்றி எளிதில் கிட்டிவிடாது; மேலும் மேலும் எவர் விடாப்பிடியாக இருக்கின்றனரோ அவரே வெற்றிக்குரியவர்! தோல்வியே வெற்றிக்குத் துணை செய்யும் கருவி; மற்றவர்கள் தம் வெற்றிக்காக எப்படி எப்படிப் பாடுபடுகின்றார்களோ அதுபோல நாமும் பாடுபடாது விசாரப் பட்டுக் கொண்டிருந்தால் வெற்றி நம் வீட்டு வாசலுக்கு வந்து நிற்கவா செய்யும்?” என்று லிங்கனது ஏங்கிய மனத்தில் எழுச்சியூட்டினாள் லிங்கனது அரசியல் ஆசிரியை மேரி.

“வாணிகமோ வழக்கறிஞர் துறையோ வேண்டுமானால் வருமானத்தைத் தரலாம். வருமானம் என்ன வருமானம்! *கூத்துக்குக் கூடி அது முடிந்தவுடனே பிரியும் மக்கள் போலாகக் கையை யடைந்து காலியாகும் செல்வத்தைச், செல்வம் என்று எண்ணிக் கொண்டு வாழ்வைப் போக்க ஆரம்பித்தால் நம் வைர எண்ணம்

* கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.” - குறள் 332.

என்னாவது? அடிமையர் குடி வாழ்வது எப்போது?" என்ற சிந்தனைச் சுடர் பற்றிக் கொண்டது லிங்கனை.

**வில்லியம் வில்பர்**

சிந்தனைச் சுடர் ஒளிவிடும் லிங்கன் முன்னாக வீரரொருவர் வருகின்றார்! அவர் யார்? வில்லியம் வில்பர் போர்ஸ்.

பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த இப்பெருந்தகை பட்டம் பவிசு பெற்றிருந்தாலும் ஏழையர் தோழனாய் விளங்கினார். தம் 21 ஆம் வயதிலே பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினராகும் பெரும் பேறு பெற்ற இவர் அடிமையர் அவல நிலைமையைக் கண்டு அதை ஒழித்தே தீர்வது என உறுதி பூண்டிருந்தார். அதனால் 1791 ஆம் ஆண்டிலே அடிமை ஒழிப்புத் தீர்மானத்தை, அடிமை வியாபாரத்தையே முதன்முதல் தொடங்கி, ஆண் டொன்றுக்கு 36,000 அடிமையரை உண்டாக்கிக் கொண்டிருந்த பிரிட்டன் பாராளுமன்றத்திலே கொண்டு வந்தார். தோல்வி மேல் தோல்வி; தூற்றுதல்மேல் தூற்றுதல்.

"வெறுங்கனவு" என வெகுண்டெழுந்தது பாராளுமன்றம். விட்டாரில்லை வில்பர் போர்ஸ். ஒருமுறை இருமுறையல்ல ஒன்பது முறை, அத் தீர்மானத்தை விடாது கொண்டுவந்து கொண்டே இருந்தார். கிடைத்தது தோல்வியேயாயினும் கிடுகிடுத்து விடவில்லை. "நெஞ்சில் உரமிருந்தது; நேர்மைத் திறம் இருந்தது" "வெற்றிமேடைக்கு ஏறவேண்டிய படிக்கற்கள் ஏராளம். அவற்றுள் ஒன்பது படிகள் ஏறியிருக்கின்றோம்" என்ற துணிவுடன் மேலும் மேலும் செயலாற்றிக்கொண்டு வந்தார்.

சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் பாராளுமன்ற உறுப்பினர் உதவியை நாடினார்; உதறியடித்தனர்.

நண்பர்களிடம் நயமாக வேண்டினார்; "நடக்கக் கூடிய செயலன்று" என்று நகர்ந்து விட்டனர்.

பத்திரிகைகளோ "பகற்களவு" என்று பழி புராணம் பாடிக் கொண்டிருந்தன. தளரவில்லை தன்னம்பிக்கையாளர்.

"வெற்றியாயினும் சரி! தோல்வியாயினும் சரி! பத்தாம் முறையும் பார்த்துவிடுவது" என்று முனைந்தார். வெற்றி! வெற்றி! வெற்றி முழக்கம் விண்ணைப்பிளக்க வீறுநடையிட்டார் வில்பர் போர்ஸ். 1791 இல் தொடங்கிய தீர்மானம் 1807 இல் நிறை வேற்றப்பட்டது.

**விடுதலை வீரர்**

*“வில்பர் போர்ஸ் எப்படி வெற்றி கண்டார்? முயற்சி! முயற்சி!! அம் முயற்சி என்ன, அவரோடு மடிந்து மண்ணோடு மண்ணாகி விட்டதா? அவர் அடிச்சுவட்டைப் பற்றுவோம்; வெற்றி நமதே” என்று எழுச்சிப் பண் பாடினார் லிங்கன். மேரியின் இடிப்புரை, வில்பரின் புரட்சிச் செயல் இரண்டும் தட்டியெழுப்பி விட்டன லிங்கனை. புதுப்பிறப்பு; வெற்றி தோல்விக்கு அணுவும் அயரா ஆபிரகாம்; விடுதலை வீரர்; ஆமாம்! அவரே விடுதலை வீரர்.*

*1860 ஆம் ஆண்டிலே குடியரசுக் கட்சி சிகாகோ நகரிலே கூடியது. ஏன்?*

**பிரவுன்**

*பிரவுன் என்பவர் நீக்ரோ! விடுதலைக்காகத் தீவிரப் புரட்சி செய்தவர். படைவீரர் பலரைச் சேர்த்துக் கொண்டு, அடிமை முறையைக் கொண்டிருக்கும் அரசை எதிர்த்துத் தீருவதென வீறிட்டெழுந்தார். அதனால் அரசினரின் ஆயுதச் சாலையைத் தாக்கி வீரர் பலரை வீழ்த்தினார். நீக்ரோவர் உதவியும் உரிய சமயங்களில் பிரவுனுக்குக் கிடைத்துவந்தது. இக்கிளர்ச்சியை ஒழிக்க அரசாங்கமும், படைவீரர்களையும் ஆயுதங்களையும் ஏராளமாகக் குவித்துக் கொண்டிருந்தது. பிரவுன் பிடிபட்டார். அவர் மைந்தர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். “அரசாங் கத்தைக் கவிழ்க்கத் துணிந்த துரோகி” என்று குற்றம் சாட்டி, சார்லஸ்டவுன் நீதிமன்றம் பிரவுனுக்குத் தூக்குத்தண்டனை விதித்தது.*

*“மாந்தராய்ப் பிறந்தவர் மற்றவர்க்கு அடிமையில்லை என்று அமெரிக்காவின் உரிமைக்குரல் இருக்கும்போது, அதனையே செயலில் காட்ட முனைந்த என்னை வீரனென்றல்லவா விருது தந்து பாராட்டவேண்டும்; அதற்குமாறாகப் பழிப்பதோடு என் உயிர் குடிக்கவும் நீதியின் பெயரால் துடிக்கின்றீர்கள். நீதி சொல்பவனை நிர்மூலமாக்க வந்த நீதிபதிகளே! உங்களைக் காலம் பழித்தே தீரும்” என்று வீரக்கணை தொடுத்துவிட்டு இறுதி மூச்சையும் விட்டுவிட்டார்.*

*இக் கொடுஞ் செயலால் வடநாட்டிலே கொந்தளிப்பு மிகுந்தது; துக்கக் கொண்டாட்டம் கொண்டாடினர். தென்னாட்டு நீதிபதிகள் போலவும், நிலக்கிழார் போலவும் பொம்மை செய்து*

தெருவழியே இழுத்து நெருப்பிட்டனர். உள்ளத்தே எரிந்து கொண்டிருந்த தீ, வீதிகளிலும் தெருக்களிலும் பற்றிக் கொள்ள லாயிற்று! அவ்வளவு எரிச்சல்.

**சிகாகோவில் கூட்டம்**

பிரவுனுக்கு நேர்ந்த துரோகச் செயலைக் கண்டித்துப் பேசி, தங்கள் குடியரசுக் கட்சியின் சார்பாக அமெரிக்கத் தலைவர் பதவிக்குத் தகுந்த ஒருவரை நிறுத்திவைக்க வேண்டும் என்ற எண்ணத்தால்தான் சிகாகோ நகரில் குடியரசுக் கட்சியின் மாநாடு தொடங்கியது. அம்மாநாட்டிலே குடியரசுக் கட்சியின் சார்பாகத் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிடுவதெனத் தேர்ந்தெடுக் கப்பட்டார் அருளாளர் ஆபிரகாம். அடிமை நீக்ரோவருக்கு விடுதலை தரவேண்டும் என்ற ஒரே ஒரு கொள்கையின் மேலாகத் தான் குடியரசுக்கட்சி போட்டியிடப் போவதாகக் கூறிக் கொண்டது.

கட்சித் தேர்தலிலும் லிங்கனுக்கு எதிர்ப்பில்லாமல் போய்விடவில்லை. சிவர்ட் என்பவர் லிங்கனை எதிர்த்துப் போட்டியிட்டார். எதிர்பாராதவிதமாக சிவர்ட்டுக்கு விரோதி யான ஒருவர் உதவி லிங்கனுக்குக் கிடைத்தமையால் சிவர்ட்டுக்குப் பாதகமாக மாறி விட்டது. லிங்கன் வெற்றியுற்றார். கட்சி, லிங்கனைத் தேர்ந்தெடுத்துவிட்டது. இனிமேலல்லவா தலைவர் தேர்தல் இருக்கின்றது!

**கட்சித் தேர்தல் முடிவு**

கட்சித் தேர்தல் முடிவைத் தெரிவிக்க லிங்கனிடம் நண்பர் சிலர் ஓடோடியும் வருகின்றனர். விளையாட்டு மைதானத்தில் இருந்த லிங்கன் செய்தியை அறிந்துகொண்டு, “நண்பர்களே, இந்த மகிழ்ச்சியான செய்தியை என்னைப் பார்க்கிலும் அதிகமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மேரியினிடம் தெரிவியுங்கள்” என்று வேண்டிக் கொண்டார். அவ்வளவு பதவிப்பற்று இருந்தது மேரிக்கு.

லிங்கன் வெற்றியைப் பாராட்டியும், அவரைப் பாராட்ட வருபவர்க்கு விருந்தளிக்க வேண்டியும் அன்பர்கள் சாராயப் புட்டிகள் பலவற்றை அனுப்பி வைத்திருந்தனர். லிங்கனோ அவற்றை யெல்லாம் தமக்கு அனுப்பி வைத்தவர்களுக்கே மீண்டும் அனுப்பிவைத்து, “இறைவனால் எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்பட்டுள்ள நீர் இருக்கும்போது வெறியூட்டும் இந்தச் சாராயத்தைக் குடிக்கவோ மற்றவர்களுக்குக் கொடுக்கவோ

விரும்பாதவனாக இருக்கின்றேன். தங்கள் உதவிக்கு நன்றி; மன்னிக்க" என்று சீட்டும் எழுதியிருந்தார். இதே உறுதியை இறுதிவரை கடைப்பிடித்து வந்த பெருமை லிங்கனுக்கு உண்டு.

லிங்கன் குடியரசுக் கட்சியின் சார்பாகத் தலைவர் தேர்தலுக்கு நிற்கப் போவதை அறிந்த தென்னாட்டுக் காலனிகள் தங்கள் வைரியான லிங்கனைத் தலைவராக வரவிடுவதில்லை என்று எதிர்க்கலாயினர். லிங்கன் தலைவராக வருவாரே யானால் "ஐக்கியம் நில்லாது; அடக்குமுறை செல்லாது" என்று கண்டனம் விடுத்தனர்.

"அடிமை முறையை அகற்றவந்த அருளாளரே! அமர்க் களத்தே சந்தியும்" என்று செய்தித்தாள்கள் எச்சரித்தன.

"பதவிகளிலிருந்து விலகிவிட்டுத் தெற்குக் காலனிகளுடன் சேர்ந்து கொள்வோம் பாருங்கள்" என்று பெரும் பெரும் பதவி களில் இருந்தவர்கள் பயம் காட்டினர். எதையும் பொருட்படுத்தாத நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தலைவர் தேர்தலும் முன்னின்றது.

**வெற்றி!**

தேர்தல் என்னாகுமோ என்ற ஏக்கத்திலே ஸ்பிரிங் பீல்டில் புரண்டு கொண்டிருக்கிறார் லிங்கன். மேரியோ விநாடிதோறும் செய்தியை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றாள். போதாக் குறைக்கு நண்பர்களும் குழந்தைகளும் தேர்தல் நிலைமை என்னாகும் என லிங்கனைப் பிய்த்தெடுத்துக் கொண்டிருக் கின்றனர். தேர்தல் காய்ச்சலிலே முணகிக் கொண்டிருக்கின்றது வீடு.

செய்தி வந்தது; ஆம்! வெற்றிச் செய்தி வந்தது. விறகு வெட்டியின் மைந்தன் வெள்ளைமாளிகையிலே ஏறுவதற்குரிய பொன்னான செய்தியைக் கொண்டு வந்தனர் நண்பர். **மேரி** மகிழ்ச்சிப் பெருக்கிலே **எக்களித்துக்** கொண்டிருந்தாள். **மேதை லிங்கன்** ஒரு மூலையிலே உட்கார்ந்து என்னென்னவோ எண்ணித் **தத்தளித்துக்** கொண்டிருந்தார்.

# 6. வெள்ளை மாளிகையில் அமைதி

நாட்டிலே குழப்பம் மிகுந்து விட்டது. தெற்குக் காலனிகள் ஐக்கிய அமைப்பினின்றும் விலகிக் கொண்டு விட்டதாக முழக்கிக் கொண்டிருந்தன. தென்னாட்டின் உளவாளிகள் பலர் வடநாட்டிலே உலாவித்திரியலாயினர். தலைவர் பதவி ஏற்புக்கு முன்னரே ஆபிரகாம் தலையைத் தரையிலே உருட்டி விட வேண்டுமெனச் சதிக் கூட்டம் தயாராகிக் கொண்டிருந்தது. இந்நிலைமைக் கிடையேயும் கல்லறை ஒன்றின் முன் அமைதியாக மண்டியிட்டுக் கசிந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார் ஆபிரகாம்!

நீக்ரோவர் விடுதலைக்காக ஆபிரகாம் அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர் தந்தை தாமஸ் லிங்கன் விடுதலையடைந்து விட்டார். அவர் ஆன்மா அமைதியுறும் படி செய்ய ஆண்டவனிடம் முறையிட்டுக் கொண்டார். இறுதி நேரம் தம் தந்தைக்குச் செய்ய வேண்டிய தொண்டுகளைச் செய்யாது தவிர்ந்ததற்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். பின்னர்ச் சிற்றன்னையையும் அவர் குமாரர்களையும் இறுதி முறையாகச் சந்தித்து விடை பெற்றுக் கொண்டு ஸ்பிரிங் பீல்டு வந்து சேர்ந்தார்.

**விடைபெறுதல்**

ஆபிரகாம் ஸ்பிரிங் பீல்டு வந்து சேர்ந்தவுடனே வாசிங்டன் செல்லுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார். பொருள்களையெல்லாம் கட்டிவைத்து "ஆ. லிங்கன், வெள்ளை மாளிகை, வாசிங்டன்." என்ற முகவரியையும் தம் கையாலே எழுதினார். ஆயத்தம் அனைத்தும் செய்யப்பட்டது. அவருக்கு என ஏற்பாடு செய்யப்பட்ட இரயில் அவரை ஏற்றிச் செல்லக் காத்திருந்தது. ஆபிரகாமை, செல்லும் வழியிலேயே கொல்லுவதற்குத் தக்க சூழ்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும், குண்டுகள் இடைஇடையே பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வந்து கொண்டிருந்தன. தம் உயிரைத் தத்தம் செய்வதற்காகவே வாசிங்டன்

செல்வதாக எண்ணிக்கொண்டே நண்பர்களிடம் லிங்கன் விடை பெற்றுக் கொண்டார். வண்டிவரை வந்து வழியனுப்பியவர்கள் ஏராளம் பேர்களாவர். அவர்களிடம், "எனது வாலிபப் பருவம் முதல் இந்த வயோதிகப் பருவம் வரை கால் நூற்றாண்டாக உங்களோடு இந்த ஸ்பிரிங் பில்டிலே வாழ்ந்து வந்தேன். இங்கே தான் என் குழந்தைகள் அனைவரும் பிறந்தனர். அவர்களுள் ஒருவன் இங்கேதான் அடக்கம் செய்யப் பட்டிருக்கின்றான். நான் இப்பொழுது ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பு தலைவர் வாசிங்டன் ஏற்றுக் கொண்டிருந்த பொறுப்பினும் பெரிதாக இருக்கின்றது. வாசிங்டனுக்கு உதவிய கடவுளின் உதவியின்றி என்னால் எதுவும் நிருவகிக்க முடியாது, என்பது தெளிவு. நீங்கள் கடவுளிடம் உங்களுக்காக வேண்டுவதுடன் எனக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள். இறைவன் கைகளிலே உங்கள் அனைவரையும் ஒப்படைக்கின்றேன். நான் இப்பொழுது இச்சில சொற்களோடு விடைபெற்றுக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். இனி எப்பொழுது கூடுவோம் என்பது அறியக் கூடாததாக இருக்கின்றது" என்று கூறி வணக்கமிட்டுப் பிரிந்து சென்றார்.

வழிகளிலெல்லாம் வம்பர் குழு மறைந்து இருப்பதாகச் செய்திவந்தது. ஆயினும் வலிய உள்ளம் கொண்ட லிங்கன் எதற்கும் அஞ்சாது, இன்னார் என எவரும் அடையாளம் கண்டு கொள்ளா வகையில் வெள்ளை மாளிகைக்குள் புகுந்துவிட்டார். இடை இடையே எத்தனையோ இடங்களில் நின்று நண்பர்களைச் சந்திப்பதையும், வரவேற்புப் பெற்றுக் கொள்வதையும் லிங்கன் தவிர்த்துவிடவில்லை.

"லிங்கன் வாழ்க! லிங்கன் வாழ்க!!" என்ற குரல் வெள்ளை மாளிகையிலிருந்து வெளிக்கிளம்பிய பின்னர்ச் சதித் திட்டக்காரர் தங்கள் முகத்தில் சாம்பல் பூசப்பட்டு விட்டதாக எண்ணிக் கொண்டு வெட்கினர். தங்கள் அருமையான திட்டம் தகர்த்தெறியப் பட்டதல்லவா; அதனால்!

**வெள்ளை மாளிகையில் ஆபிரகாம்**

ஆபிரகாம் 1861 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் நான்காம் நாள் தலைவர் பதவியேற்று வெள்ளை மாளிகைக்குள் கால் வைத்தார். அதற்கு முன்பே, தென்கரோலினா ஜார்ஜியா முதலான ஆறு காலனி நாடுகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஐக்கிய அமைப்பினின்று விலகிக் கொள்வதாக மாகாண அமைப்பினின்று

தகவல் விடுத்தன. இதனை ஒட்டிய இரண்டு வார எல்லைக்குள் டெக்ஸாஸ் என்னும் காலனியும் பிரிந்துவிட்டது. இவ்வாறு பிரிந்து சென்ற காலனிகளனைத்தும் ஒன்றுகூடி, தலைவர் தேர்தலில் லிங்கனுடன் போட்டியிட்டுத் தோல்வியுற்ற ‘டேவிஸ்’ என்பவரைத் தலைவராகக் கொண்டு ஐக்கியமாக இயங்குவது என்னும் முடிவுக்கு வந்துவிட்டன.

“எங்கள் உரிமைகளில் வடநாட்டவர் தலையிடு கின்றார்கள். இதை ஐக்கிய அமைப்பு, கண்டிப்பதாகத் தெரியவில்லை. கண்டிப்பதற்கு மாறாக வடநாட்டவர்க்கு அனுசரணையாகவும் இருந்து வருகின்றது. இனிமேல் வரும் தலைவரும் எங்களுக்கு நீதி வழங்குவார் என்பதை எங்களால் நம்பிக்கொள்ள முடியவில்லை” என்று குரலெழுப்பிவிட்டு 1861 பிப்ரவரித் திங்களிலேயே போட்டி அமைப்பை ஏற்படுத்தி விட்டன.

**சிவர்ட் – அமைச்சர்**

தம்முடன் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற ‘சிவர்ட்’ என்பவர், தமக்கு எதிரியாக இருந்தாலும் கூட திறமையும் அனுபவமும் கருதி லிங்கன், உள்நாட்டமைச் சராக நியமித்திருந்தார். பொறுப்பேற்றுப் பணியாற்றி வந்த சிவர்ட் தம்முடைய பதவியினின்று தம்மை விலக்கிவிட வேண்டு மென்று தலைவருக்கு இப்பொழுது விண்ணப்பம் அனுப்பி வைத்திருந்தார். அனுபவமிக்க சிவர்ட் பதவியினின்று விலகிச் செல்வதை விரும்பாத லிங்கன் மன்றாடி வேண்டிக் கொண்டு மீண்டும் பதவியில் நிறுத்திவைத்தார். மேலும் மேலும் ‘சிவர்ட்’ தலைவரை மதிக்கக்கூடிய அளவில்நடந்து கொள்ளா திருந்தும் வட நாட்டின் நலமொன்றே விரும்பிச் சுயமதிப்பையும் பாராட்டாது அவரைப் பதவியில் வைத்துக் கொண்டு இருந்தது லிங்கனது பெருந்தன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. பலர் “சிவர்ட்டே தலைமைப் பதவிக்குத் தக்கவர்” என்று பறையறைந்து கொண்டனர். “சிவர்ட் இல்லையேல் அரசியல் செவ்வையாக நில்லாது; அதற்காகவே வேலைநீக்கத்தைத் தலைவர் ஒப்புக்கொள்ள வில்லை” என்றெல்லாம் வதந்திகளைப் பரப்பி விட்டனர். லிங்கன் எதனையும் செவியிலே போட்டுக் கொள்ளாது இருந்துவிட்டார்.

**முதற் சொற்பொழிவு**

தலைமைப் பதவி ஏற்ற முதல் சொற்பொழிவிலேயே "நம் முன் வந்திருக்கும் உள்நாட்டுப் போர் என் கையில் இருக்கும் பொறுப்பன்று; அது தங்கள் அனைவரிடமும் இருக்கும் பொறுப்பே தான். எந்தக் காலனியும் ஐக்கிய அமைப்பினின்று தானாகவே விலகிச் செல்லும்படியான முறைமை செல்லு படியாகாது" என்று உரை நிகழ்த்தினார். அத்தகைய அவசியம் காலடிவைத்தவுடனே தேவைப்பட்டிருந்தது. "எவரையும் எதிரியாகவோ வேண்டாத வராகவோ வைத்திருக்க விரும்பவில்லை, ஐக்கியத்தைச் சிதைக்கவும் விரும்பவில்லை" என்ற லிங்கன் தெளிந்த கருத்து இதனால் புலப்படுகின்றது.

**நாட்டுப் பிரிவினை**

போட்டி அமைப்புடன், வர்ஜீனியா, வட கரோலினா முதலான நான்கு காலனிகள் சேர்ந்துவிடத் தீர்மானித்த செய்தியும் லிங்கனால் அறியவந்தது. இந்த அதிர்ச்சியிலே "தலை சுக்கு நூறாகி விடுமோ" என்று ஏங்கிக் கிடந்தார். "முந்தையோர் கண்ட முழுமை நாட்டைப் பிரித்துப் பிளவாடப் பார்த்துக் கொண்டி ருப்பதா? அந்தோ! கொடுமையே; பழியைச் சுமந்து விட்டேன்" என்று கதறித் கண்ணீர் சொரிந்தார்.

"போட்டி அமைப்பினர் படையும் கருவியும் திரட்டி, பறை முழக்கிக் கொண்டு, பிற காலனிகளின் பாசறைகளையும் படைக்கலக் கொட்டில்களையும் தன்னடிப் படுத்தி விட்டனர்" என்ற குரல் தலைநகரை எட்டியது. ஆபிரகாம் - அந்தத் தன்னந்தனி உருவம் - வெள்ளை மாளிகையிலே கணநேரமும் நிற்க முடியாது உலாவிக் கொண்டே திரிகின்றது. என்ன செய்வது?

**பேரிடி**

பேரிடி ஒன்று விழுந்தது! விழுந்தது சம்டர் துறை முகத்தில் தான். ஆனால் அதன் தாக்குதல் சம்டர் துறைமுகத்தைத் தாக்கிய அளவைப் பார்க்கிலும் வெள்ளை மாளிகையினுள் கண்ணீரும் - கதறலுமாய் நிற்கும் கடமைவீரர் இதயத்தைத் தாக்கியது. "ஐக்கியம் அகலக் கூடாது; முன்னோர் கொண்டு வந்த ஐக்கியத்தை அன்பர்களே, அழித்து விட வேண்டாம்; அன்பு முறை ஒன்றாலே காரியங்களைச் சாதிப்போம்; வன்புமுறை கொண்டதால் மடிபவர் யார்? நம்மவரே அல்லரோ?" என்று வேண்டிக் கொண்ட ஆபிரகாம் குரலுக்குத் தென்காலனியினர் தந்த மதிப்புத்தான் சம்டர் துறைமுகக் குண்டு வீச்சு!

"இன்னும் தாமதிக்க முடியாது. நான் தலைமைப் பதவி ஏற்கும் போது, ஐக்கிய அரசியலமைப்பைக் காத்தேதீர்வேன் என உறுதிஎடுத்துக் கொண்டேன். அவ்வுறுதியைக் காக்க ஆயுத பலத்தைக் கொள்ளத் தான் வேண்டுமென்றால் அதற்கும் தயங்கப் போவதில்லை; அதில் எவ்விதத் தவறும் இருப்பதாகத் தெரியவும் இல்லை" என்ற முடிவுக்கு வந்துவிட்டார் ஆபிரகாம்.போராட்டம் தொடங்கி விட்டது.

சம்டர் துறைமுகத்தைக் காத்து நின்ற தளபதி ஆண்டர்சனால் இரண்டு நாட்களே எதிர்ப்பைத் தாங்க முடிந்தது. வேறு வழியின்றி மூன்றாம் நாள் அடைக்கலம் அடைந்துவிட்டார். என் செய்வார்! எதிர்பாராத தாக்குதல்; ஆட் குறைவும் ஆயுதத் தட்டுப்பாடும் அவரை வளைத்துக் கொண்டன.

**தோல்வி மேல் தோல்வி**

வேதனைப்பட்டுக் கொண்டிருக்க லிங்கனுக்கு நேரமில்லை. மெக்டவல் என்பவரைத் தளபதியாக்கி அவரோடு பெரும் படை ஒன்றையும்அனுப்பி வைத்தார். பெரும் போர்! சளைக்காத போர்! மூன்றாம் நாளிலே முறியடிப்பு. யாருக்கு வெற்றி? தென்பகுதியி னருக்கு. ஐக்கிய அமைப்பினர் கண்ட இரண்டாம் தோல்வியிது. பின்வாங்கும் நிலைமையிலே விழுந்த பிணங்கள் ஏராளம்.

"கேவலம்; தாங்கமுடியாக் கேவலம்! இரத்தம் ஓடவில்லையா ஐக்கிய அமைப்பினரிடம்?" என்று எழுதுகின்றன செய்தித் தாள்கள்: "வீரர்களே எழுங்கள்! பயந்தான் கொள்ளிகள் படுத்துத் தூங்கட்டும்" என்று எழுகின்றது படை. ஆயிரக் கணக்கிலே அனுப்பப்பட்ட படைகளல்ல; இலட்சக் கணக்கில்! இப்போதைய தலைவர் மெக்கல்லன்.

**பழியோ பழி**

மெக்கல்லனோ தளபதி என்ற பெயர் இருந்தாலே போதும் என்பதற்காகவே பொறுப் பேற்றவராகக் காட்சி வழங்கினார்; தலைவர் உரைக்குக்கூடச் செவிசாய்க்காத தலைக்கனம் பிடித்தவராக இருந்தார்; தன் எழுச்சி இல்லாத அவர், பிறர் தூண்டுதலையும் ஏற்காது போய்க் கொண்டிருந்த காரணத்தால் தோல்வி மேல் தோல்வி வந்த வண்ணமாகவே இருந்தது. ஆயினும் தோல்விக்குக் காரணம் தாமே என்பதையும் ஒப்புக் கொள்ளாது "படையனுப்ப வில்லை" "உணவளிக்கவில்லை" "ஆயுதம் இல்லை" என்று தலைவர் ஆபிரகாம் மீதே பழி சுமத்திக் கொண்டிருந்தார்.

எதிர்ப்பணித் தளபதி 'லீ'யோ பெரும் சமர்த்தர். சமாளிக்கும் திறம் மிகப்பெற்றவர். தென்காலனிக்கு வெற்றி மேல் வெற்றி வாங்கித்தந்தவர். வந்த படைகளை யெல்லாம் வாரியடித்துப் பிணமாக்கிவிட்டு வாசிங்டனுள் புகுவதற்குச் சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

**மக்கள் குரல்**

இந்த நிலைமையிலே தளபதிகளை நீக்கி விட வேண்டும் என்று மக்களின் ஆவேசக் குரல்எழும்பியது. மேரியும் இதற்குப் பக்கத்தாளம் இட்டுக்கொண்டு துயரப்படுத்த ஆரம்பித்து விட்டாள். லிங்கன், தளபதியை நீக்கும் செயலுக்கு அசைந்து கொடுக்கவில்லை. ஒரு பொறுப்பில் நியமிக்கப்பட்டவர்களை நீக்கிவிடுவதால் ஏற்படும் கேட்டை லிங்கன் தெளிவாக அறிந்திருந்தார். அதனால் பிறர் வற்புறுத்தலுக்கு அசைந்துவிடவில்லை.

பட்டாளத்திற்கு ஆள் சேர்த்துக் கொண்டிருந்த லிங்கனுக்குப் பட்டாளத்தவர்களில் சிலரைப் பதவியினின்று விடுதலையளித்து வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இளமையிலே தம்மை ஆதரித்தவர்கள், பழகியவர்கள் ஆதரவு எதுவுமற்றவர்கள் என்பவர்கள் சாரை சாரையாக வந்து தமக்கு உரிமையானவர்களைப் போர்க்களத்தினின்று அனுப்பிவைக்கும் படி வேண்டிக் கொண்டனர். பிறர் அவலத்தை அணுவும் சகிக்க முடியாத ஆபிரகாம் தளபதிகளுக்குக் கட்டளையிட்டு விடுதலை வாங்கித் தரவேண்டிய நிலைமையில் இருந்தார். வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்களும் சாதாரணமானவர்களல்லர்! போர்க் களத்தே துப்பாக்கியும் கையுமாய் நின்றவர்கள்.

**அறவினை யாதெனில் கொல்லாமை**

இதுவேயன்றித் தளபதிகளால் மரண தண்டனைக்கு ஆட்பட்ட வீரர்கள் அநேகர். லிங்கனோ என்ன காரணம் கொண்டும் மரண தண்டனையை ஒப்புக் கொள்வதில்லை. "எதிரிகள் நம் வீரர்களைக் கொன்று குவிப்பது காணாது என்று நாமுமா இத்திருவிளையாடல்புரியவேண்டும்" என்று எடுத்துக் கூறி எமன் வாயிலிருந்து மீட்டுக் கொடுக்க வேண்டியது ஏற்பட்டது. அளவுக்கு மீறித் தலைவர் தலையிடும் இக் காரணத்தால் 'பட்டாள ஒழுங்கு பாதிக்கப்படுகின்றது' என்று தளபதியர் ஆங்காங்கே எதிர்ப்புக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர். "இறைவனிடம் அருள்வேண்டி மண்டிக் கிடக்கும் நாம் மற்றவர்களுக்கும் அருள

*வேண்டுமல்லவா! உயிரை ஆக்க முடியாத நமக்கு அழிக்க என்ன உரிமை உண்டு?" என்று பிறர் கூச்சலுக்கு மூடி இடுவார்.*

**உயிருக்கு உயிர்**

*பாடி வீட்டின் வாயில் காத்து வந்த வீரன் ஒருவன் தூங்கி விட்டான். அதற்குத் தளபதி தந்த தண்டம் மரணம்! நாட்டிற் குழைக்க நிற்கும் நல்லதொரு வீரனை இழக்க மனமில்லா வீர லிங்கன் விடுதலை தந்தார். அவனோ போர்க்களம் சென்று பகைவரைச் சின்னா பின்னப் படுத்தினான். படைகளைத் திக்குமுக்காடச் செய்தான். இறுதியிலே மார்பில் குண்டு தாங்கி மலர்ந்த முகத்தோடு "உயிரீந்த உத்தமர்க்கு உயிர்தந்தேன்; உரையுங்கள் அவரிடம்" என்று நடந்துவிட்டான் மரணப் பாதை! இத்தகைய வீரர்களின் வதனமும் வாழ்க்கையும் லிங்கனின் மனக்கண்முன் வந்து பேய்க்கூச்சல் போட்டுக் கொண்டிருக்கும். இந்நேரத்தே லிங்கன் இருந்தது தூய வெள்ளை மாளிகையல்ல; உயிர்க் கொள்ளை மாளிகைதான்!*

**பிரிட்டனின் அச்சுறுத்தல்**

*பிரிட்டன் கப்பலொன்றில் அமெரிக்த் தூதர் இருவர் பயணமாகிக் கொண்டிருக்கும் செய்தி லிங்கனுக்கு அறிய வந்தது. உடனே கப்பலை நிறுத்தித் தூதர்களைக் கைது செய்து வரும்படி உத்தரவிட்டார். இச்செயல் தங்களை அவமானப் படுத்துவதாகும் என்றும், அதற்குரிய பதில் விடுத்துமன்னிப்புக் கோராவிடில் பகை ஏற்படும் என்றும் பிரிட்டன் அச்சுறுத்திக் கடிதத்தின் மேல் கடிதம் அனுப்பிக் கொண்டிருந்தது.*

*ஐக்கிய அமைப்பின் போர்த்துறையமைச்சர் ஊழல் பலவற்றுக் கிடமானவராகப் போய்விட்டார். அவரைப் பதவியிலிருந்து நீக்கி, தக்கவர் ஒருவரை அமைச்சுத் துறையில் நிறுவ வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. இவ்வளவும் காணாது என்று மைந்தன் ஒருவனின் மரணச் செய்தியும் அலைத்துக் குலைத்துக் கொண்டிருந்தது.*

*"லிங்கன் தவிர மற்றொருவர் இந்தச் சூழலிலே ஆட்பட்டு இருப்பரேயானால் செத்தே போயிருப்பர்" என்று ஒருவர் வாய்விட்டு உரைத்தார் லிங்கனின் பரிதாப நிலைகண்டு. "டக்ளஸ்" இந்தத் தொல்லையைக் கண்டு தலைவராக வராமைக்காகத் தம்மைத் தாமே பாராட்டிக்கொண்டார் என்றால் லிங்கனின் நிலை எத்தகையதாக இருந்திருக்கக் கூடும்!*

**ஐக்கியம் ஓங்குக**

"எத்தனை எத்தனை பக்கங்களில் எதிர்ப்புக்கணை வந்தாலும் சரி, அதைப் பற்றிக் கவலை இல்லை. எம் பெருமை, மரியாதை காக்கப்பட வேண்டும் என்பதல்ல எம் நோக்கம். எம் தாயக ஐக்கியம் காக்கப்படவேண்டும். ஐக்கியம் காக்கத் தகுதியானவன் கிராண்டு தான். அவனே தளபதி! எனக்கு ஆகாதவன் என்பதற்காக வீரனை அலட்சியம் செய்துவிட முடியாது" என்று முடிவு கட்டுகின்றார். அப்படியே கிராண்டைத் தளபதியாக்கி விடுகின்றார்.

**இரண்டாம் தேர்தல்**

இந்நிலைமையிலே குறுக்கிடுகின்றது இரண்டாம் தேர்தல். "அரசியலை விட்டு ஒதுங்கி விடலாம்; ஆனால் ஐக்கியம் காக்கப்பட வேண்டும்" என்ற இரண்டு சிக்கல்களுக்கும் இடையேயும் தத்தளிக் கின்றார் லிங்கன்.

"வேலையில்லை வேலையில்லை" என்ற வேண்டுதல் ஒரு பக்கம்;

"உணவும் படையும் தேவை" என ஓலம் ஒரு பக்கம்;

"தளபதியை நீக்கு; தட்டிக் கழிக்காதே" என்ற தாக்குதல் ஒருபக்கம்;

"ஐக்கியம் காக்கப்பட வேண்டுமே" என்ற உள்ளத்தின் அபயம் ஒருபக்கம். இத்தனைக்கும் சரி சொல்லியே தீரவேண்டும். விடுதலைக் கோரிக்கையும் நிறைவேற்றியே யாகவேண்டும். இவற்றை எண்ணி மறுமுறையும் தேர்தலில் நிற்கின்றார்.

தேர்தலிலே வெற்றி! ஆபிரகாம் குரங்குப் பிடியாய்க் கிராண்டை நம்பியதும் பழுது படவில்லை. தோல்வி சில இடங்களில், வெற்றி பல இடங்களில். எதிர்ப்பணியினரைப் பார்க்கிலும் ஐக்கிய அணியினர்க்குச் சேதாரம் கம்மி! ஆயினும் எதிர்ப்பணியினரும் படையைக் குவித்த வண்ணம் இருக்கின்றனர்.

**விடுதலை முழக்கம்**

"எளிதிலே வெற்றி பெற வேண்டுமா? எம்மிதயம் கூறுவது இவ்வழிதான்! நாளை நடத்தியே தீர்வேன். ஒரு செயல்; இரண்டு பக்கங்களில் வெற்றி" என்று முடிவு கட்டிவிட்டார் லிங்கன். "செயலாளரே! இதய பூர்வமாக இச் சாசனத்தில் கையெழுத் திடப்

போகின்றேன். ஆனால் இன்று ஆயிரமாயிரம் பேர் என்கையைக் குலுக்கிய காரணத்தால் கை வலியெடுத்து நடுங்குகின்றது. நடுக்கத்துடன் கையெழுத்திடும் இக் காட்சியை எவரேனும் கண்டால், 'லிங்கன் முழுமனத்துடன் கையெழுத்திட வில்லை; அடிமையர் விடுதலையில் அவருக்கே நம்பிக்கை இல்லை'' என்று கயிறு திரிக்கவும் கூடும்'' என்று சொல்லிக் கொண்டே கையெழுத் திட்டார்.

**கையெழுத்தா?**

பதின்மூன்று லட்சம் நீக்ரோவர்களின் விடுதலை முழக்கம்! வெற்றிச் சங்கு! ''ஏழையென்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்'' என்னும் மந்திரம்! ஆண்டவனே வந்து தந்த அருட்கொடை! பிறப்புரிமைப் பெருஞ்சாசனம்! ஆம்! ''விடுதலைப் பிரகடனம்.'' 1863 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் கையெழுத்திடப் பட்டது.

**அடிமையர் தந்தை**

உள்ளத்தை உறுத்தியது எதுவோ, சட்டம் படிக்க வைத்தது எதுவோ, சட்டசபைக்குள் நுழைய வைத்தது எதுவோ, தலைவராக வரச் செய்தது எதுவோ, அகிலம் உள்ளளவும் அசைக்க முடியாத புகழ்ப் பட்டயத்தைத் தந்தது எதுவோ அது நிறைவேற்றப் பட்டுவிட்டது. எத்தனை எத்தனை ஆண்டுகளாக எவரெவர் முயற்சிகளாலும் முடிக்க முடியாச் செயல், வீரர் லிங்கனால் ஒரு நொடியில்நிறைவேற்றப் பட்டுவிட்டது.

லிங்கன் பிறவிநோக்கம் நிறைவுற்றதாக மகிழ்ந்தார். நீக்ரோவரோ பிறப்புரிமை பெற்றதாக ஆர்த்தார். இலட்சக் கணக்கில் நீக்ரோவர் கூடி முரசும் பறையும் முழங்க ஆடலும் பாடலும் நிகழ,

''பிறப்புரிமை தந்த பிதாவே வாழ்க''

''அடிமையர் தந்தையே வாழ்க''

என்று முழக்கமிட்டு நகரெங்கும் கொண்டாடினர்.

''நீக்ரோவர் அனைவருக்கும் விடுதலை தந்துதான் ஐக்கியம் காக்கப்பட வேண்டுமானால் அப்படியே செய்வேன்; விடுதலை தராதுதான் ஐக்கியம் காக்கப்பட வேண்டுமானாலும் அப்படியே செய்வேன்; ஒரு சிலருக்கு விடுதலை தந்தும், ஒருசிலருக்கு விடுதலை

*தராதும் தான் ஐக்கியம் காக்கப்பட வேண்டுமென்றாலும் அப்படியே செய்வேன்" என்று முன் பொருநாள் முழக்கிய மூன்று வழிகளிலே முதல் வழியே சரியான தென முடிவு கண்டார். செயலிலே இறங்கினார்.*

*"அடிமையர் அனைவருக்கும் எப்பகுதியிலும் விடுதலை; இப்பொழுது நடக்கும் போர் அடிமை ஒழிப்புப் போர்"- பறையறையப் படுகின்றது இப்படி. தென்காலனியிலிருந்து கிளம்புகின்றது அடிமையர் பட்டாளம். எங்கே? வடகாலனியில் சேர! உரிமை தந்த உத்தமனுக்குப் பெருமை தேடித்தர!*

**வெற்றி!**

*நீக்ரோ வீரர் குவிந்தனர் போருக்கு; கிராண்ட் கொதித் தெழுந்தான். எதிர்த்து நிற்க முடியவில்லை எதிரிகளால். எதிர்ப்பணிப் பெருங்கோட்டையான ரிச் மாண்டிலே முற்றுகை! வீரன் கிராண்டினிடம் அபயம் அடைவது அன்றி வேறு வழி அறியா 'லீ அப்படியே செய்தார். 1863 ஆம் ஆண்டு ஜுன் 7ஆம் நாள் வெற்றி முழக்கம் விண்ணைப் பிளந்தது.*

*"வீரன் கிராண்ட் வாழ்க" "லிங்கன் வாழ்க" "ஐக்கியம் காப்போம்" என மூலைமுடுக்குகளிலெல்லாம் கிளம்புகின்றது முழக்கம். ஆயினும் வெள்ளை மாளிகை மட்டும் அமைதியாக இருந்தது.'*

# 7. வாழ்க வில்கி பூத்

**அருள் நெஞ்சம்**

**வெ**ளியே மகிழ்ச்சியும் கொண்டாட்டமுமாக இருக்கும் போது வெள்ளை மாளிகைமட்டும் ஏன் அமைதியாக இருந்தது? வெற்றிகண்டும் கவலையா? வெற்றிகண்டும் கவலைதான்! வெள்ளை மாளிகைக் கல்ல! வெள்ளை மாளிகையின் உள்ளே இருந்த வள்ளல் லிங்கனுக்கு.

"யாரை வென்றேன்? ஓரினம்; ஒருகுடி; ஒருநாடு - இத்தகு மக்களைக் கொன்று கூத்தாடும் ஈவிரக்கமற்ற இச் செயலுக்கு வெற்றி என்றா பெயர்?

"அன்புப் பலத்தையே நம்பி வாழ்ந்து வந்த நான் ஆயுதபலம் தாங்கி யாரை அழித்தேன்? ஆவிபோகும் வரை அயராது உழைத்து வாழ்வையும் வளத்தையும் ஆக்க வந்த அஞ்சா நெஞ்சக் காளை களையல்லவா அழித்தேன்?"

"நானா அமைதி காத்தவன்? நானா அறம் காத்தவன்? நானா அருளுள்ளம் படைத்தவன்? ஐயோ! அமைதியையும் ஐக்கியத்தையும் காப்பதற்குத் தலைவனாக வந்தேனா? அழித்துக் குவித்துவிட்டு அலறிக் கிடக்கத்தான் வந்தேனா?

"இரத்தத்தால்தான் நம் ஐக்கியம் எழுதப்பட வேண்டுமா? அடிமையர் ஒழிப்பு அமரால்தான் ஆக வேண்டுமா? பல லட்சம் மக்களுக்கு விடுதலை தரச் செய்த முயற்சியிலே சில லட்ச மக்கள் காலனுலகில் சரணடைந்து விட்டனரே!"

"அவர்களாகவா மடிந்தனர்? அந்த உயிர் போகும் போது எத்தனை எண்ணியதோ? என்னென்ன பாடுபட்டதோ? காலும் கையும் கண்ணும் தலையும் இழந்த முண்டம் இன்று என்னைப் பார்த்துப் பேசுவதாக இருந்தால் என்ன பேசும்? இவ்வளவு சேதாரமும் காணாது என்று பகைவனுக் கருளும் நன்னெஞ்ச மின்றிச் சரணடைந்தவர்களுக்கும் சாவுப் பாதை காட்ட வேண்டுவது பட்டாள நெறியாம்! அரசியல் தற்காப்பாம்!"

“செத்தவர்களுக்காகச் சாகாதவர்களையும் சாகடிக்கும் இந்தக் கொடுமை நீக்ரோவரை அடிமையாக்கி அந்த ஆதிச் சுயநலக்காரர்களின் செயலைப் பார்க்கிலும் கொடுமை. என் இலட்சியம் பழிவாங்குவது அல்ல! பரிவுகாட்டுவது” என்று குத்திக் குத்தித் தின்னுகிறது எண்ணம் என்னும் குடை மூக்குக் கழுகு. எங்கே அமைதி இருக்கமுடியும்?

“நான் செய்ய வேண்டிய இந்தக் காரியத்தில் நாழிகை தவறினாலும் நாசம்தான்” - “மதிப்புள்ள கிராண்ட், நீக்ரோ இனத்தவருக்கு விடுதலைப் பட்டயம் செய்து நான் முடிக்க வேண்டிய பணியை முடித்துவிட்டேன். உன்னடி பணிந்து ஊஞ்சலாடித் தவிக்கும் தென் காலனி வீரர்களுக்கு நிபந்தனை எதுவுமின்றி விடுதலை தரும் பெருமைச் செயலைச் செய்து முடிக்க உனக்கு வாய்ப்புத் தருகின்றேன். அப்படியே செய்! அதுவே ஆண்டவன் விருப்பம். அருள் கொழிக்க வேண்டிய அமெரிக்காவிலே அடிமையராக எவருமே இருக்கக்கூடாது” என்று உத்தரவிட்டு விட்டார்.

“சர்வதிகாரம் படைத்திருந்தும் அதை அமைதிக்கன்றிப் பிற வழிகளுக்குப் பயன்படுத்தாத ஒரே ஒரு மனிதன் இக் கல்லறையிலே நிம்மதியாகத் தூங்குகின்றான்” என்று லிங்கன் கல்லறையிலே எழுத வேண்டும் என்று பல்லாண்டுகள் கழித்து ஒருவன் கூறியிருக்கின்றான் என்றால் அதற்குக் காரணம் பகைவனையும் மன்னிக்கும் பண்பு லிங்கனிடம் இருந்ததேதான்.

எதிரிகளை விடுதலை செய்த பின்னும் என்ன! “பாலையைச் சோலையாக்க வேண்டுமே; மாண்டவர் குடியை மீண்டும் எழுப்ப வேண்டுமே. இடிந்த வீடு சரிந்த கோட்டை சிதைந்த நகரம் மறைந்த செல்வம் - இவற்றை யெல்லாம் பழையபடி ஆக்குவது எப்படி? மக்கள் துயரைப் போக்குவது எப்படி?

“அடாத செயல் செய்த ஒருவனை அடித்துவிட்டு அவனக்கு மருந்து கட்டி அனுப்பிய என் இளமைச் செயல்போலாக அல்லவா, இன்று அமெரிக்காவின் மார்பைப் பிளந்து மருத்துவமும் பார்க்கத் தொடங்கியிருக்கின்றேன்” என்று செந்நீர் கொட்ட முட்டி மோதிக் கொள்கின்றது வெள்ளைமாளிகை உருவம்.

அன்பினர் முயன்றனர் அவலம் போக்க!

மேரி முயற்சி மிக தோல்வியிலே முடிந்தது. லிங்கன் நினை வெல்லாம் நாட்டின் வருங்காலம் பற்றியே இருந்தது.

**கலைநாடகமா?**

இந்நிலையிலே வெற்றிவிழாவுக்காக நாடகம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவலையனைத்தும் போக்கி வெற்றிக் களிப்பிலே திரிய நாடகக்கலை தக்கது என முடிவு கட்டியிருந்தனர். களப்பலி கொடுத்துவிட்டுக் களிப்பாகத் திரிதலை விரும்பாத லிங்கன் நாடகத்திற்கு வர மறுத்துவிட்டார். தலைவர் மன நிலையை மாற்றி அமைப்பதற்காகவே அன்பினரால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த அந்த நாடகத்திற்கு வர ஆபிரகாம் மறுத்தாலும் விட்டுவிடவில்லை. "மக்கள் தங்கள் வருகையை எதிர்பார்க் கின்றனர்; அவர்களுக்காகத் தாங்கள் வரத்தான் வேண்டும் என்று வற்புறுத்தினர். அன்புத் தொல்லைக்கு ஆட்பட்ட லிங்கன் மறுக்க முடியாதவராய் மேரியுடன் "தலைவிதியே" என்று நொந்து கொண்டு காட்சி மேடைக்குச் சென்றார்.

தலைவர் வந்துவிட்டார் என்று தாங்கா மகிழ்ச்சியுற்றனர் மக்கள். "வெள்ளையர் கறுப்பர் பேதம் போக்கிய வள்ளலே, தென்னாட்டவர் வடநாட்டவர் பகை நீக்கிய தீரரே, ஐக்கிய அமைப்பைக் காத்த அண்ணலே வருக வருக" என்று ஆரவாரித்தனர். காட்சி தொடக்கமாகியது. நாடகம் நடந்து கொண்டிருக்கின்றது."

**கொலை நாடகம்**

வேறொரு பக்கம் நடந்துகொண்டிருக்கின்றது தலைவரைக் காணவேண்டுமென்று தளர் நடையோடு ஓர் உருவம். காட்சிக்கு எளியராம் லிங்கன் தடை எதுவுமின்றி உள்ளே வர விட்டார். வந்தவன் லிங்கனால் அடையாளம் தெரியப்பட்டவன் அல்லன். அமைதியாக வணங்கினான். அதற்குமேல் - "டபார்" என்றஒரே ஒரு பேரிரைச்சல். இடையே வரும் நாடகக் காட்சியென ஏதுமறியா மக்கள் எண்ணுகின்றனர். அரசியல் தலைவர்களுக்கு அதிர்ச்சி! ஏன் அந்தச் சத்தம்? எங்கே எங்கே?....

மக்களிலே ஏற்றத் தாழ்வு காணாத மனித மேதையின் மண்டை யோட்டைத் துளைத்த மரத்துப் போன துப்பாக்கிக் குண்டின் சத்தமே "டபார்"

தனியொருவராய்ப் பிறந்து இலட்ச லட்சம் மக்களுக்குத் தந்தையாகச் சிறந்த அந்தப் புனிதர் தலையைப் பதம்பார்த்த குண்டொலிதான் "டபார்"

'பிறந்த பொன்னாட்டைப் பிளவுக்கு விடமாட்டேன்' என்ற பெரியவருக்குக் கிடைத்த பெரும் பரிசுதான் "டபார்"

ஊழிஊழி காலமெல்லாம் உலகத்தவர் உள்ளத்து உறையும் அருளாளர் ஆபிரகாம் கல்லறையிலே அடக்கம் செய்யப்பட்டார். எடுத்துக்காட்டாக உலகுக்கு வந்த உத்தமர் விடை பெற்றுக் கொண்டு விட்டார். ஆண்டான் அடிமை பேதமற்று, வெள்ளையர் கறுப்பர் பேதமற்று மொய்த்து விட்டனர்; கல்லறையிலே; "அழுகின்றார்; தொழுகின்றார்; அன்றி அயலொன்றறியார்"

"அந்தோ! அருமைத் திருவுடலே, அருளின் பிறப்பிடமே அவிந்துவிட்டாயே ஏன்? அடங்கிவிட்டாயே ஏன்?

"கருணை வழியும் கண்ணே! கடமை தவறாக்கரமே! சுருங்கி விட்டாயே ஏன்? சோர்ந்து விட்டாயே ஏன்?"

"நீதிக்குப் புறம்பாகா நெஞ்சமே! வாதிக்கும் திறம் படைத்த வன்மையே! வேதைக்கு ஆளானாயே விடிவுக்கு ஆளானாயே!

"அகிலத்தின் ஆரிருளை அகற்ற வந்த ஆதவனே! சோதிச் சுடரொளியே! எங்கள் குலத்திங்களே! அடங்கி விட்டாயே, அனைவர் வாழ்வையும் அடக்கி விட்டாயே!

"தொண்டுச் செயல் செய்த தூயவனே! தூய பரிசு ஏற்று விட்டாய்! தொலையாத பரிசு ஏற்றுவிட்டாய்!"

"அன்பு முகம் காட்டி ஆர்வமது ஊட்டும் நின்னைக் கண்டும் நீட்டினானே துப்பாக்கி! அம்மவோ! நெஞ்சமென்ன இரும்பா?

"குற்றம் செய்து விட்டாய் குணக்கடலே குற்றம் செய்து விட்டாய். அளவு கடந்து நல்லவனாக, இவ்வகிலத்தே பிறந்து குற்றம் செய்து விட்டாய்" என்று அழுதனர் அரற்றினர்; வெதும்பினர் விழுந்தனர்; புழுங்கினர் புரண்டனர்; நடுங்கினர் நைந்தனர்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைகூட அகிலத்துத் தோன்றாத அரும் பெரும் தலைவரை ஒரு குண்டு பதம் பார்த்து விட்டது. அணுக்குண்டினும் கொடிது ஆபிரகாமைத் துளைத்த குண்டு. உலகத்தின் ஒரு கோடியிலே விழுந்தால் மறு கோடி வரைதாக்கும் அணுக்குண்டும் ஆபிரகாமைத் துளைத்த குண்டினும் இளைத்ததுதான்.

அணுக் குண்டின் விளைவுக்காக அனுதினமும் கோடானு கோடிப் பேர் அழுகின்றனரா? ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு

*அழுவரா? உலக வரலாற்றிலே நீங்காத வடுவை ஏற்படுத்தி விட்டது லிங்கனைத் துளைத்த குண்டு.*

**எளிதில் மலராத மலர்**

*நீக்ரோவர் உள்ளத்தே நீங்காத இருள் கப்பிக் கொண்டது. அவர்கள் குடிசையைக் கோரப்புயல் பிரிக்க ஆரம்பித்தது. எங்கெங்கும் சாக்காட்டு ஒலி! இவ்வளவும் என்ன செய்தன? அத்தனை பேர் கண்ணீரும் ஐயன் கண்களை விழிக்கச் செய்யச் சக்தியற்றதாகப் போய்விட்டது. துக்கச் செய்தி கேட்டவுடனே செந்நீர் வடித்தவர் உண்டு; செத்தவர்களும் உண்டு; இவையும் லிங்கனை மீட்டும் எழுப்பி விட்டு விடவில்லை. எளிதில் மலராத அந்த மலர் குவிந்து கொண்டுவிட்டது.*

*இளகிய மனத்தவர் ஏக்கத்திலே இருந்தாலும் இரும்பு மனம் படைத்தவர் கவலையிலே கடமையை மறந்து விடவில்லை. காடு செடி தேடி, துப்பாக்கி தூக்கித் துணிகரச் செயல் செய்தவனைப் பிய்த்து எடுத்து விட்டனர்; நார் நாராய்ப் பிடுங்கி விட்டனர்.*

**பழிகாரன் பூத்**

*கலையால் களிப்பூட்டி வந்தான் அவன். அருளாளர் ஆபிரகாம் பார்க்க வந்த நாடகத்தில் முக்கிய பாகம் ஏற்றிருந்தவன்தான்! 'வில்கிபூத்' என்னும் பெயர் தாங்கியிருந்தான். கலையால் கொலை செய்தான்! கலைக்கே இழுக்குத் தேடி விட்டான்! "தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்" என்னும் தூயோரின் வாக்குக்கு இலக்காகி விட்டான். உலகுள்ளளவும் நீங்காப் பழியேற்று விட்டான். அவனை வைய எழும்புகின்றது உள்ளம்! வள்ளல் ஆபிரகாம் பண்பு வில்கிபூத்தை வாழ்த்தச் சொல்கின்றது.*

*இன்று, வானளாவ உயர்ந்து நிற்கும் நீக்ரோவர் தந்தையின் நினைவுச் சிலையைக் கண்டு கண்ணீர் சொரிந்து, வாய்குழறி, உள்ள மொடுங்கி, ஊசலாடும் திரள் திரளான மக்களை எண்ணு வோமாயின்,*

"வாழ்க வறுமை வாழ்க்கை!"

"வாழ்க அடிமை வாணிகம்!"

"வாழ்க வில்கி பூத்!"

*என்று வாழ்த்தவே தோன்றுகிறது.*

# 8. பொற்சிலைப் புனிதன்

வறுமையிலே பிறந்து வறுமையிலே வளர்ந்து வறுமையிலே வாழ்ந்த லிங்கன் சீரும் செல்வமும் கொழிக்கும் அமெரிக்க நாட்டின் தலைவராக ஒருமுறைக் கிருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குக் காரணமாக இருந்தது அவருடைய பண்புடைமை தான். உலகியல் அறிவு வாய்க்கப் பெற்ற காலம் முதல் எதைச் செய்தால் நல்லதோ அதை, எம்முறையால் செய்து முடித்தால் நல்லதோ அம்முறையால் செய்து முடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அதனால் பேரும் புகழும் தாமாகவே வந்தடைந்தன. மனித குலத்துக்கொரு மாபெரும் எடுத்துக் காட்டு என்று இன்று மக்கள் குலம் பேசுகின்றது. அவர் வழி நிற்பதிலே பெருமை காண்கின்றது.

**இறையன்பு**

இறையன்பிலே ஆபிரகாமுக்கு ஈடுபாடு நிறைய இருந்தது. எண்ணும் எண்ணமும் எழுதும் எழுத்தும் பேசும் பேச்சும் இறைமயமாகவே திகழ்ந்தன. எத்தனை எத்தனை இடங்களில் திருமறைச் சொற்றொடர்களை மேற்கோள் காட்ட முடியுமோ அத்தனை அத்தனை இடங்களில் மேற்கோள் காட்டினார். பெரும் பெரும் பொறுப்பேற்றுக் கொண்ட பொழுதுகளிலெல்லாம் "இறையருள் இன்றேல் என்னால் ஒன்றும் செய்ய இயலாது" என்று தெளிவாக வெளியிட்டார். எவரையேனும் பிரிய நேர்ந்தாலும் வாழ்த்த நேர்ந்தாலும்"கடவுள் காக்க" என்று கையருள் காட்டினார். அன்னையர் அன்பளிப்பாகத் தந்த திருமறையைப் புனிதப் பொருளாகப் போற்றி இறுதிவரை தம்மைவிட்டு அகலாதவாறு காத்து வந்தார். உலக வாழ்வை நீத்த பெற்றவர்க்கும் மற்றவர்க்கும் புனிதத் தன்மைதர இறைவனிடம் முறையிட்டுக் கொண்டார். ஒரு முறை, "ஆண்டவரே! நீர் மனிதராகப் பிறந்திருந்தால் உம் ஆண்டவரிடம் எதை வேண்டிக்கொள்வீரோ அதை உம் மக்களுக்கும் தந்தருளும்" என்று வேண்டினார். இவ் வேண்டுதலால் ஆபிரகாம் இறைவனை "நல்லனவே செய்யும் நம்பன்" என்று நம்பியமை புலப்படுகின்றது.

**கடவுள் தூதர்**

லிங்கன் பண்புடைமையைக் கண்ணாகக் காத்து வருவதை அறிந்த நல்லோர் பலர் "கடவுள் தூதர்" என்று எண்ணுவாரா யினர். நேரடியாகவும் மறைவாகவும் பாராட்டிப் புகழ்வதும் வழக்கில் வரலாயிற்று. "எல்லாம் வல்ல இறைவனும் எங்கள் தலைவர் லிங்கனும் இந்நாட்டை இனிது காத்து வருவார்கள் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு" என்று முதியர் ஒருவர் லிங்கனை நேரடியாகப் பாராட்டினார். லிங்கன் அமைதியாக "ஐயா, தாங்கள் கூறுவதிலே பாதியளவே உண்மை இருக்கின்றது. இறைவனே காத்துவருவதாகக் கூறியிருப்பின் முழுவதும் சரியாக இருந்திருக்கும்" என்று மொழிந்தார். தம்மைத் "தேவ தூதர்" என எவரேனும் கூறினால் தமக்குள்ளாகவே வருந்திக் கொண்டார். தம்மிடம் "தெய்வ ஒளி" ஒன்றும் இல்லையென்று கூறிக்கொண்டே இருந்த போதிலும் இன்று அமெரிக்காவிலே திருமறைக்கு அடுத்த நிலைமையிலே வைத்து லிங்கன் பொன்னெழுத்துக்கள் போற்றப் படுகின்றன. நீக்ரோவர் அனைவரும் தமக்குக் கிட்டும் பொருள், புகழ், பட்டம், பதவி அனைத்தும் தந்த ஆண்டவன் தூதர் ஆபிரகாமே என்று பாராட்டுகின்றனர். லிங்கன் இருக்கும் பொழுது தம்மைப் பாராட்டுவதைத் தடுத்தார். இனி அவரால் என்ன செய்ய முடியும்?

**பணிவுடைமை**

இறையன்பிலே திளைத்த லிங்கனுக்கு இயற்கையாகவே பணிவுடைமை நிறைந்திருந்தது. ஏழ்மையிலே கொண்டிருந்த பணிவுடைமையினும் ஏற்றமுற்ற நேரத்தே மிகுதியாகக் கொண்டிருந்தார் * "அனைவருக்கும் பணிவுடைமை அணிகல மாக இருப்பினும் பெருஞ் செல்வரிடத்தே பணிவு சேர்வதே செல்வத்துள் செல்வமாகும்" என்னும் தமிழ்மறைக்கு எடுத்துக் காட்டாக இலங்கினார். தம்மிடம் பணியாற்றும் அதிகாரிகளை யும் அளவிறந்த மரியாதையோடு நடத்தினார். அவர்களிடம் அன்பு குழையப் பேசினார். அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அமைதியுடன் பார்த்துவந்தார். தாம் தலைவர் என்னும் தன்னெடுப்பு தலைதூக்கும்படி இருந்ததில்லை. "தலைவரவர் களே" என்று எவரேனும் அழைத்தாலும் "ஆபிரகாம் என்று

---

* எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (குறள்)

அழையுங்கள்" என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார். அதிகாரிகளுக்கு அன்புடன் ஆலோசனை போலாக எதையும் கூறுவாரே யன்றி அரசியல் முறைக்கேற்ப உத்தரவிட விரும்ப மாட்டார். பிறர் வணங்கும் பொழுதெல்லாம் அவர்களினும் தாழ்ந்து வணங்கும் கடப்பாட்டையே காலமெல்லாம் கொண்டிருந்தார்.

லிங்கன் ஒருசமயம் குதிரையிலேறி விரைவாகச் சென்று கொண்டிருந்தார். எதிரே வந்த ஏழை ஒருவர் லிங்கனைக் கண்டவுடன் தொப்பியை எடுத்து, பணிவோடு நின்று வணக்க மிட்டார். லிங்கனும் குதிரையை விட்டுக் கீழே குதித்து, தம் தொப்பியையும் எடுத்து, தலைதாழ்த்தி ஏழை வணங்கிய வணக்கத்தினும் தாழ்ந்து வணங்கினார். உடன் வந்த செல்வருக்கு இது வெறுப் பூட்டும் நிகழ்ச்சியாக இருந்தது. அதனால் "இந்த ஏழைக்காக நீங்கள் இவ்வளவு தாழ்ந்து வணங்க வேண்டுமா?" என்று செருக்குடன் வினவினார். லிங்கனோ, "ஐயா, என்னை இவர் பணிவுடைமையால் வென்று விடும்படி விட்டுக் கொடுக்க நான் விரும்பவில்லை" என்று விளக்கினார் பாவம்! பதவியில் தலைமையுடையவர் பணிவுடைமையிலும் தலைவராக இருக்க வேண்டும் என்ற லிங்கன் பண்புடைமையை அவர் அறிந்திருக்க வேண்டுமல்லவா!

**எளிமை**

உணவிலும் உடையிலும் எளிமை கண்டார் உத்தமர் லிங்கன். எளிமையில் தான் இன்பம்இருக்கிறது என்பதில் எள்ளளவும் அவருக்கு ஐயம் இருந்தது இல்லை. மேரி பகட்டுடை அணிந்து கொள்ளும்போது கேலி பண்ணுவார். அவளோ, ஆபிரகாம் எளிய வாழ்வைக் கண்டு கிண்டல் பண்ணுவாள். பற்பல சமயங்களில் தன் கணவர் இப்படிப் பைத்தியக்காரராக இருக்கிறாரே என்று வாழ்க்கைப்பட்ட குற்றத்திற்காகத் தன்னையே வைதுகொண்டதும் உண்டு. விருந்து வேடிக்கை இவற்றில் லிங்கனுக்கு விருப்பு இருப்பதே இல்லை. அன்புத் தொல்லைக்கு ஆட்பட்டு எந்த வேடிக்கை நிகழ்ச்சியிலாவது கலந்து கொண்டாலும் ஒரு மூலையில் உட்கார்ந்து உலகத்தவர் அனைவரின் சிந்தனையும் உருக் கொண்டால் போல் இருப்பார். அல்லது கவலைக் கடலாய்க் காட்சியளிப்பார்.

எவர் தம்மைப் பார்க்க விரும்பினாலும் எளிதில் அனுமதி யளிப்பார். தாமே மாளிகையின் முன்வாயில் வரை சென்று

வரவேற்று மீண்டும் வாயில்வரை போய் வழியனுப்பி வருவார். தமக்காகப் பாதுகாப்போ பரிவாரமோ வைத்துக் கொள்ள விரும்பவில்லை. கடிதங்களைத் தம் கையால் எழுது வதையே பெரிதும் விரும்பினார். நண்பர்களிடம் சமயம் வாய்க்கும் பொழுதெல்லாம் தம் வாழ்க்கையையும் வறுமையையும் எடுத்துக் கூறுவார். பழைய ஏழ்மை நிலைமையை எடுத்துக் கூறுவதில் எத்தகைய இழுக்கும் இல்லை என்று நம்பினார்.

தமது சோடுகளைத் தாமே சுத்தம் செய்து கொண்டார். இழிதொழில் என்று எதையேனும் கருதும் எண்ணம் லிங்கனிடம் இருந்ததே இல்லை. ஒரு சமயம் வெள்ளை மாளிகைக் குள்ளே தம் சோடுகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார் லிங்கன். நண்பர் ஒருவர் "நீங்களே உங்கள் சோடுகளைத் துடைத்துக் கொள்கின்றீர்களே" என்று புன்முறுவலுக்கிடையே கேட்டார். "அப்படியானால் நான் யாருடைய சோடுகளைத் துடைக்க வேண்டுமென்று விரும்பு கிறீர்கள்" என்று பதில் மொழிந்து வாயை அடக்கினார். தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பும், பசுவுக்குத் தீனிவைத்திருக்கிறார்; பால் கறந்திருக்கிறார்; விறகு வெட்டியிருக்கிறார். தொழிலிலே ஏற்றத் தாழ்வு காணாத தூய வாழ்க்கை லிங்கன் வாழ்க்கையாக இருந்தது.

**ஒப்ப மதிக்கும் உயர்வு**

தொழிலில் ஏற்றத் தாழ்வு காண்பதை வெறுத்த லிங்கனிடம் நிறத்தால் ஏற்றத்தாழ்வு காண்பது கொடுமை என்னும் எண்ணமும் செறிந்திருந்தது. நிறபேதத்தை ஒழிப்பதற்காகவே தம் வாழ்வை யெல்லாம் ஒப்படைத்திருந்ததை அவர் வரலாற்றின் எந்த மூலையும் காட்டிக்கொண்டுதான் இருக்கின்றது. அவர் நினைவுச் சின்னமாக வாசிங்டனில் பளிக்கு மண்டபத்தே எழுப்பியிருக்கும் பேருருவம் முதலாக பென்னி நாணத்தின் சிற்றுருவம் ஈறாக அனைத்தும் நிறபேதம் ஒழித்த அறத்தையே அகிலத்திற்கு அறிவிப்புச் செய்த வண்ணமாக இருக்கின்றன.

**குறிக்கோள்**

லிங்கன் ஒருநாள் நெடுநேரம் வரை நண்பர் ஒருவரிடம் அடிமை ஒழிப்புப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார். அதற்கு மேல் நண்பர் அயர்ந்து தூங்கி விட்டார். லிங்கனோ உட்கார்ந்து விடியு மளவும் சிந்தித்துக் கொண்டே இருந்தார். நண்பர் விழித்தெழுந்தவுடன் "அன்பரே! அரைவாசிப் பேருக்குச் சுதந்திரம் அளித்துவிட்டு அரைவாசிப் பேரை அடிமையாக வைத்திருக்கும்

களங்கத்தை அனுமதிக்கவே முடியாது" என்றார் ஆபிரகாம். "நீங்கள் இரவெல்லாம் தூங்கவே இல்லையா?" என்று பதில் கேள்விதான் நண்பரால் கேட்க முடிந்தது.

குறிக்கோளொன்று வெற்றியுற முழு மூச்சாகப் பாடுபட்டால் மட்டும் போதாது. தன்னளவில் அணுவும் ஐயமுறாது விடாப் பிடியோடு கடைப்பிடிக்க வேண்டும். உள்ளொன்றும் புற மொன்றும் கொண்டுறைவோர் குறிக்கோள் சின்னாட்களிலே சிதைந்து போவதை உலகியல் காட்டிக் கொண்டிருக்கின்றது. உலகியலாராய்வு மிக்க லிங்கன் கொண்ட கொள்கையை நிறைவேற்ற, குரங்குப் பிடியினராக வாழ்வெல்லாம் இருந்து வந்தார். "ஏழையடிமையர்க்காக வாதாடுவது இழுக்கு" என்பது வழக்கறிஞர்கள் கொள்கையாக, வலிய வந்து அடிமையர்க்காக வாதாடினார். அடிமையரோடு அளவளாவிப் பழகினார். ஒருமுறை நீக்ரோவர் ஒருவரைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார் லிங்கன். அந் நீக்ரோவர் "அளவிறந்த நேரம் பேசிக் கொண்டிருந் தாலும் நான் ஓர் அடிமை நீக்ரோ என்பதை என்னிடம் நினைவூட்டாது பேசிக்கொண்டிருந்த ஒரே ஒரு வெள்ளையர் லிங்கனே" என்கின்றார். என்னே லிங்கனின் பண்புடைமை!

**சொல்வன்மை**

லிங்கனின் குறிக்கோள் வெற்றியுற்றமைக்குப் பெருங் காரணமாக இருந்தது சொல்வன்மையே. சொற்போர் வல்லாளரான டக்ளஸே எதிர் நிற்பதற்கு அஞ்சும் சொல்லாற்றல் லிங்கனிடம் இருந்தது. சொற்பொழிவால் சம்பாதித்து வாழ்க்கை நடத்தினும் நடத்தலாம் என்ற எண்ணம் கூட ஒருசமயம் எழுந்த துண்டு. சொல்வன்மையினாலே தீரா வழக்குகளையும் தீர்த்து வைத்ததை முன்னர் அறிந்துள்ளோம். லிங்கன் பேசுவதைக் கேட்க, அறியார் முதல் அறிஞர் வரை கூடுவர். நகைச்சுவை நிரம்பப் பெய்யப் பட்டிருக்கும் லிங்கன் பேச்சிலே.

"உங்கள் பாட்டனார் எத்தகையர்" என்று லிங்கனிடம் ஒருவர்கேள்வி கேட்டார். "என் பாட்டனார்எத்தகையராக இருந்தார் என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் அவர் பேரன் எத்தகையனாகஇருக்க வேண்டும் என்பது பற்றியே எனக்குக் கவலையாக இருக்கின்றது" என்று மடக்கினார். "லிங்கன் மது விற்பனைக்காரர்" என்று டக்ளஸ் தம் வாதத்தின் போது லிங்கனைக் குறை கூறினார். "நண்பர் டக்ளஸ் கூறுவது உண்மையே! நான் மது விற்பனை செய்து கொண்டிருந்த போது டக்ளஸ்

பன்முறை மதுக் கடைக்கு வந்து மது வருந்துவார். நான் இப்பொழுது மதுவிற்பனையை விட்டுவிட்டேன்." ஆனால் நண்பரோ இன்னும் விடாப்பிடியினராக இருக்கின்றார்" என்று மூச்சுத் திணறச் சொல்லடி வைத்தார். அடிமை முறையை ஒழித்துக்கட்ட இறைவன் தம்மிடம் திருவருள் செய்ததாகக் கூறிய ஒருவரிடம் "இறைவன் நான் செய்யவேண்டிய காரியத்திற்கு என்னிடமே திருவருள் செய்ததாகக் கூறிய ஒருவரிடம் "இறைவன் நான் செய்யவேண்டிய காரியத்திற்கு என்னிடமே திருவருள் செய்யாது தங்கள் வழியாக அனுப்பி வைக்க மாட்டான்" என்று வாய் பேசாப் பதுமையாக்கினார். விடுதலைப் பிரகடனம் செய்விக்க வற்புறுத்திய சிலரிடம் "விடுதலை எழுத்திலே இல்லை; நாம் விட்டுக்கொடுப்பதிலே தான் இருக்கின்றது" என்று கூறிவிட்டு "ஆட்டுக்குட்டியின் வாலையும் கால்களோடு சேர்த்துக் கொண்டார்" என்றார். கணக்குப் புலிகளான அவர்கள்" ஐந்து" என்று அறுதியிட்டார்கள். லிங்கனோ, "வால் வாலாகுமே யன்றிக் காலாகுமா? ஆகாதது போல எழுத்து விடுதலையும் உண்மை விடுதலையாகாது" என்று விளக்கினார். சொல்வன்மையும் சோர் வின்மையும் கொண்டிருந்ததால் லிங்கனுக்கு வில்வன்மை தேவை யற்றதாகப் போய்விட்டது. லிங்கன் கொண்டிருந்த சொல்லெல்லாம் கொல்லும் சொல்லல்ல; வெல்லும் சொல்.

**நற்பண்புகள்**

இவையேயன்றி "**நன்றி** மறப்பது நன்றன்று" என்னும் பொன்னெறி போற்றிக் காத்து வந்தார் லிங்கன். "பாம்பின் பற்களைவிட நன்றிகெட்டவரின் நாக்கு கொடிது" என்பது அவர் பொன்னுரை. தமக்குச் சிறு உபகாரம் பண்ணியவர்களையும் சமயம் ஏற்படும் பொழுதெல்லாம் பாராட்டிப் பணமும் தந்தார். செய்யும் உதவியெல்லாம் செய்தார். தாம் முன்னுக்கு வரக் காரணமாக இருந்தவர்களுக்கு இதயத்தே பெருமளவில் இடம் ஒதுக்கினார். **பொறுமைக்** குணத்திற்கு லிங்கன் கிடைத்தற்கரிய எடுத்துக்காட்டு. உணர்ச்சியற்ற பிண்டம் போலாக இருப்பார், பிறர்பழிக்கும் போதும் தொல்லை தரும் போதும். ஆனால் கோழை என்று கூறிவிடமட்டும் எவரையும் அனுமதிக்க மாட்டார். அடிக்கீழ் இருந்தஅதிகாரிகள் அவமதித்துக் கொண்டிருந்த போதும் பொறுத்தார். அவர்களைச் சந்திக்கவீடு தேடிப் போய், கால்கடுக்க வெளியே நின்றதுமுண்டு. "பொறுத்தால் பெருமை சிறுத்து விடும்" என்ற எண்ணம் லிங்கனிடம் துளியும் இருந்த தில்லை. வாழ்வெல்லாம் **இன்சொல்** கூறினார். *"இனிய சொல்லை

*விரும்புபவன் ஏன் இன்னாச் சொல்லைக் கூறவேண்டும்?" என்று வினயமாய்க் கேட்பார். மக்களே அன்றி மற்ற உயிர்களும்* ***இன்னலுற*** *லிங்கன் பொறுத்துக் கொள்ள மாட்டார். விரோதிகளென்று வேலை நீக்கம் புரிந்துவிடவில்லை. தூற்றியவர்களென்று துச்சமாக மதித்ததும் இல்லை. தம்மிடம் தவறொன்று இருக்குமாயின் உரியவரிடம் மன்னிப்புக் கேட்கத் தவற மாட்டார்.* ***கற்றதையும்*** *கற்றபடி நிற்பதையும் காலமெல்லாம் கொண்டிருந்தார். நல்லவர்கள் எப்பொழுதும் லிங்கனைச் சுற்றியிருப்பர். நல்லவர்கள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் நட்பினராக்கிக் கொள்வார். நல்ல புத்தகங்கள் எவ்வளவு தூரத்தே இருந்தாலும் பெற்று வந்து நெஞ்சத்தே நிறுத்திக் கொள்வார். "நல்ல புத்தகங்கள் தேடித் தருபவர் எவரோ அவரே நண்பர்" என்று சொல்வார். நண்பர் பலர் இருந்துங்கூட லிங்கனின் ஆசைதீர அவர்களால் புத்தகம் சேகரித்துத் தர முடியவில்லை. அவ்வளவு தூரம் படிப்பார்வம் லிங்கனை வாட்டியது.*

**புகழ் வாழ்வு**

*"பிறக்கின்றார்கள்; பின்னர் இறக்கின்றார்கள். பிறந்தவர்கள் எவ்வழியிலாவது சிறந்திருந்தார்களா? சரித்திரத்தில் என்றும் அகலாத ஓரிடத்தைப் பெற்றார்களா?" என்று தம்மைத் தாமே கேட்டுக் கொண்டார் லிங்கன். இந்த அடிப்படைக் கேள்வி அகிலத்தின் கடைசி மனித வாழ்க்கை வரைக்கும் நிற்கும் பெருமை தேடித் தந்துவிட்டது. "வாழ்ந்தால் போதாது; பிறர் வாழ்வதற் காகவும் வாழ வேண்டும்" என்றார். பிறருக்காகவே வாழ்ந்தார். அதனால் பிறருள்ளத்தே வாழ்கின்றார்; வளரவும் செய்கின்றார்.*

*லிங்கனுடைய உயர்ந்த பண்புகளே அவரை உயர்நிலைக்கு ஆக்கிவைத்தன. எனினும் அவரது அயரா முயற்சி என்றும் துணையாக நின்று உதவி புரியத் தவறவில்லை. சின்னஞ்சிறு பதவி ஒன்றைப் பெறுவதும், அதனைத் திறம்பட நடத்துவதும் அருமையாக இருக்க, வாய்ப்பு வசதி அற்ற ஏழ்மைக் குடியிலே, கல்வியறிவு மிகுதியும் அற்ற பெற்றோர்களுக்குப் பிறந்த ஆபிரகாம் உயரிய பதவியைப் பெற்று, சீரிய முறையிலே நடத்திக் காட்டியது அவருக்கே அமைந்திருந்த இடையறா முயற்சியால் தான்!*

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

அரசியல் வண்டி பிணக்கற்ற பெருவழியிலேதான் சென்று கொண்டிருக்கும் என்பது இல்லை. மேடு பள்ளங்களிலும் சேறு அளறுகளிலும் மாட்டிக் கொள்ள வேண்டி நேரிடலாம். இந்நிலை வருதல் அமெரிக்காவுக்கோ, ஆபிரகாம் லிங்கனுக்கோ விதி விலக்கு ஆகமுடியாது. ஆனால் இச்சமயங்களிலெல்லாம் லிங்கன் எவ்வளவு மதி நுட்பத்துடனும், பொறுப்புடனும் நடந்து கொண்டார் என்பதை நாம் முன்னர் அறிந்தோம். பொறுப் புடையவர்கள் 'தொட்டாற் சுருங்கி' போல் இருக்கக் கூடாது. அதாவது, எச்சிறு நிகழ்ச்சியையும் பெரிது பண்ணிக் கொண்டு மனத்தைத் துயரத்தில் ஆழ்த்திக் கொண்டோ, சிந்தனையைக் குழப்பிச் சிதைத்துக் கொண்டோ இருக்கக்கூடாது. இக் கோட்பாட்டை ஆபிரகாம் சிக்கெனப் பிடித்தார்.

அமெரிக்க அரசியல் தோழர்களாலும், அமைச்சர்களாலும், போர் வீரர்களாலும், சமுதாயத்தோராலும் எதிர் பாராத எதிர்ப்புகள் அவ்வப்போது தோன்றின. புயல், பூகம்பம் போலாகவே கிளர்ச்சிகள் தோன்றின; எரிமலை நெருப்பைக் கக்குவது போல் கக்கின. எனினும் அமைதியுடன் அடியடியாகத் தமக்கென வகுத்துக் கொண்ட பாதையிலே சென்று கொண்டி ருந்தார். அதனால் எட்டிப் பிடிக்க முடியாத பதவியையும் எட்டிப் பிடித்து, அழியா எழுத்தில் தம் பெயரை எழுதிக் கொண்டு விட்டார்.

முன்னேறும் துடிப்புடைய ஒருவனுக்கு எத்தகைய தொழில் கிடைத்தாலும் கவலை இல்லை. ஏதேனும் ஒரு தொழில் கிடைக்க வேண்டும் என்பது தான் அவன் கவலை. அது சிறியதா பெரியதா என்பதுபற்றி அக்கறை காட்டுவதே இல்லை. எத்தகைய சிறிய கிளை கிடைத்தாலும் அதனையே துணையாகக் கொண்டு குரங்கு தாவி விடுகின்றது அல்லவா! இது போலவே உந்தும் உணர்ச்சி உடையவர்கள் நொடிக்கு நொடி முன்னேறிக் கொண்டே போவர் என்பது உறுதியாம். இவ்வுறுதி ஆபிரகாம் வாழ்வில் மிக உறுதி ஆக்கப்படுவதை அறியலாம்.

பள்ளிசெல்வதற்கே முடியாதநிலைமை - அப்படிப் போகும் பொழுதும் புத்தகமும் சிலேட்டுப் பலகையும் வாங்குவதற்கு வசதி இன்மை - படிப்புக்குத் தடையாக இருக்கும் தந்தை - அரித்துத் தொலைக்கும் வறுமை - வயலிலும் காட்டிலும் வேலை செய்தே பிழைக்க வேண்டிய கடமை - இவற்றுக்கிடையே இருந்த ஆபிரகாம் எப்படி நூலறிவு பெற்றார்? சொல்லாற்றலால் வெற்றி காணும் கட்டடக்கலை பயிலும் நுண்ணறிவு பெற்றார்? போட்டியும்,

பொறாமையும் மிக்க அரசியலிலே புகுந்து அழியா இடம் பெற்றார்? எல்லாம் அயரா உழைப்பினாலும், தொழிலில் சிறுமை பெருமை கருதாத உள்ளத்தினாலுமே அன்றோ!

வயலில் வேலை செய்தார்; விறகு வெட்டினார்; கூலிப் படகு நடத்தினார்; கடைச் சிப்பந்தியாக இருந்தார்; போர்ப்பணி புரிந்தார்; அஞ்சல் நிலையப் பணியாற்றினார்; நில அளவை யாளராக இருந்தார்; வழக்கறிஞராக மாறினார்; அமெரிக்கத் தலைவராகவும் துலங்கினார். தொழில் செய்யும் முறையிலே சிறுமை, பெருமை உண்டே அன்றி, தொழிலிலே சிறுமை, பெருமை இல்லை என்பதற்கு ஆபிரகாம் செய்துவந்த தொழில்களே சான்றாதற்குப் போதுமானவையாகும்.

சிலர் உள்ளத்திண்மை இன்றி, எளிய துயரையும் பொறுத்துக் கொள்ளமாட்டாதவர்களாய் அல்லலுறு கின்றனர். எளிதில் சோர்வடைவதும், முயற்சியை விட்டு விடுவதுமே அவர்கள் இயல்பு. இத்தகையவர்கள் “வாழ்க்கை இன்பச்சோலை” என்றே கனவு காண்பவர்கள்; இன்னும் சிலரோ, “வாழ்க்கை துன்பமே வடிவானது; இன்ப நிழல் சிறிதும்இல்லாதது” என்று அவலப் பாட்டுப் பாடுபவர்கள். ஆனால் உண்மை அறிவினர் “இன்பமும் துன்பமும் கலந்து வருவதே வாழ்வு” என்று தெளிவு கொண்ட வர்கள் அவர். இத்தகையர் இன்பத்தை விரும்பி அனுபவிப்பது போலத் துன்பத்தையும் விரும்பி அனுபவிக்க வேண்டும் என்று ஆவல் கொள்வர். “இன்பத்தை விரும்பும் ஒருவன் துன்பத்தை மட்டும் வெறுப்பது ஏன்?” என்று கைகொட்டிச் சிரிப்பர். “இடுக்கண் வருங்கால்” நகவேண்டும் என்றும், “இடும்பைக்கு இடும்பை” ஆக்க வேண்டும் என்றும், ஓங்கிய குரலில் பேசுவர். இத்தகையரே வாழ்க்கையில் அடி சறுக்கி விழா இயல்பு கொண்டு முன்னேறிச் செல்பவர் ஆவர். இவ்வாறு அடி சறுக்காமல் சிங்கம்போல் செம்மாந்து சென்றார் லிங்கன் என்றால் புனைந்துரை அன்று; உண்மை உரை என்பது தெளிவே.

அயரா முயற்சியும், அழியா வெற்றியும் கொள்வோரிடையும் அறநெஞ்சத்தைக் காண்பது அரிதாகி விட்டது. அறநெஞ்சம் இல்லாத வாழ்வு எத்தகைய உயரிய வாழ்வாயினும் சரி ‘தூ’ வெனத் துப்பி ஒதுக்கத் தக்கதே. கல்வியோ, செல்வமோ வாழ்க்கை வசதிகளோ அனைத்தும் அறநெஞ்சத்தோடு பின்னிப் பிணைந்து மின்னிச் செல்வதே சிறப்புக்குரியதாம்.

எல்லோர் கல்வியும் உலகுக்குப் பயன்படுகின்றதா? எல்லோர் செல்வமும் பயன்படுகின்றதா? அறநெஞ்சம் உடையவர் கல்வியும் செல்வமும் உலகெல்லாம் மணம் பரப்புவதை அறிகின்றோம். நாடு, மொழி, இனம் ஆகிய வேறுபாடுகள் அற்று அனைவருக்கும் பயன்படுவதைக் காண்கின்றோம்.

வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தரவில்லையா தமிழகம்? பாரியும் ஓரியும் காரியும் வாழ்ந்து கொடை மழையால் மக்களை வாழவைக்க வில்லையா? அறநெஞ்சம் மிக்க நாவுக்கரசரும், மணிமேகலையும், காந்தியடிகளும் உலக வாழ்வே தம் வாழ்வெனக் கொண்டு வாழவில்லையா? அறநெஞ்சம் இவர்களிடை அரும்பாது இருந்திருந்தால் பிறருக்காக வாழ்ந்திருப்பரோ?

பொன்னைக் கொடுப்பார் சிலருண்டு; பொருளைக் கொடுப்பார் சிலருண்டு; தன்னைக் கொடுப்பவரோ அரியர்! அரியரினும் அரியர். அவ்வாறு தம்மையே பிறருக்காக ஒப்படைத்த தொண்டர்களே உயரியவர்கள். இவர்கள் அறத்திலேயே ஊறிக் கிடக்கும் நெஞ்சம் உடையவர்கள் ஆவர். இத்தகையவர்களுள் ஒரு மாமணியாய்த் திகழ்ந்தார் ஆபிரகாம். அவர் அரசியலிலே சிக்குண்டும் அறநெஞ்சுடன் வாழ்ந்தாரே, அதனை எழுதிக் காட்ட எழுத்துப் போதா! பேசிக் காட்ட நா போதா!

*மனத்துக்கண் மாசின்மையே அறம் என்று அறுதி யிட்டார் வள்ளுவர். உள்ளத்தூய்மை அமையும் போது உரையும், செயலும் தூய்மை அடைவது உறுதியே. தேன் குடத்திலிருந்து வழிவது தேனாக இருப்பதன்றி வேம்பாக இருக்குமோ? மாசின்மையால் கனிந்த உள்ளம் "குளிர் தருவாய், தரு நிழலாய்" அமைவது திண்ணமே. இத்தகைய அறவாழ்வு உடையவர்கள் இருப்பதால் தான் உலகம் நிலைத்திருக்கிறது. இன்றேல் மன்னோடு மண்ணாகக் கலந்து என்றோ அழிந்திருக்கும்.

+"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்னும் பொன்மொழி நினைவில் வைக்கத்தக்கதாம்.

++ அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய நான்கும் நெஞ்சில் புகவிட்டால் அறத்தின் வேரையே வெட்டி எறிந்து விடும். பிறர் வாழ்வதற்குப் பொறாத, பொறாமையும்,

தன்னலமே குறியாம் ஆசையும், தன்னையும் கெடுத்துத் தன்னை நெருங்கிய வர்களையும் கெடுத்துத் தொலைக்கும் வெகுளியும், சுடுநெருப்பன்ன கொடுஞ்சொல்லும் பொருளாகக் கொண்டு வாழ்பவர் நன்னெஞ்சம் உடையர் ஆவரோ? * "அறத்தான் வருவதே இன்பம்"; மற்றெல்லாம் துன்பம்! பெருந்துன்பம்!

இவற்றால், உன்னத நோக்கமும் உலையாமுயற்சியும், உயரிய பண்பும் உடையவர் உலகில் உயரிய இடம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு "இறவா வரம்" பெறுகின்றனர். இசைபட வாழும் பேறு எய்துகின்றனர். மற்றையோர் தங்கள் சிறுநோக்காலும், சிதறும் முயற்சியாலும், செம்மையில்லாப் பண்பாலும் உலகத்தே தமக்கென ஓரிடத்தைப் பெறாது, "நின்றான், இருந்தான், கிடந்தான், தன்கேள் அலற, புல் நுனிமேல் நீர்போல் நிலையாது சென்றான்" என்னும் அளவில் வாழ்ந்து வாளா மடிந்து போகின்றனர்.

"வரலாற்றுப் புகழ் வல்லவனுக்கே உண்டு" என்பது வழங்கு மொழி. ஆனால் வல்லவனாக மட்டும் இருந்தால் போதாது; நல்லவனாகவும் இருந்தால் தான் என்றும் ஏற்ற காணாப் புகழ் அடையமுடியும் என்பதை நிலை நிறுத்திக் காட்டியவர்கள் மிகச் சிலரே ஆவர். அவர்களுள் ஒருவராக இலங்கினார் ஆபிரகாம். அவர் வாழ்வும் வழியும் என்றும் பின்பற்றி நடக்கத் தக்கதாகும்.

ஆபிரகாம் இளவயதிலேயே சிலரைத் தமக்கு முன்னோடி யாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவர்கள் சென்ற வழியிலே நடைபோட்டார். அரசியலுக்காக வாசிங்டனையும், அடிமை ஒழிப்புக்காக வில்பர் போர்ஸ், காரிசான் ஆகியவர்களையும், வழக்காடும் திறத்திற்காக பிரெக்கன் ரிட்ஜையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லையா?

பேரொளியினால் வழி காட்டும் கலங்கரை விளக்கைக் கொண்டு கப்பல் தன் வழியைத் தீர்மானித்துக் கொள்ள வில்லையா? அதுபோல் உயரியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டபின் ஐயமின்றி அவர்கள் வழியே அடியடியாக - கூடுமானால் விரைவாகக் கூடப் பின்பற்றிச் சென்ற ஆபிரகாமை நாம் நல்லதொரு வழிகாட்டியாகக் கொண்டு தொடர வேண்டும். அப்பொழுது

---

* குறள் : 34 + குறள் : 35. ++ குறள் 996.

*குறள் : 39

உலகப் பிணக்குகள் எத்தனையோ இருந்த இடம் தெரியாமல் தொலையும்; நிறத்தால் வேற்றுமை காட்டிக் கொண்டிருக்கும் இழிநிலை ஒழியும்; ஆள்வோர், ஆளப்படுவோர்; ஆண்டான் அடிமை என்னும் பிணக்குகள் ஓயும். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்," "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் உயர்நெறிகள் அரும்பும். இவற்றை நினைவு கூருமுகத்தான் ஆபிரகாமை ஒவ்வொருவர் உள்ளத் தேயும் நிறுத்திக்கொள்ள வேண்டும். அது இன்றியமையாக் கடமையாம்.

செல்வ வளமிக்க அமெரிக்க நாட்டினர் பளிக்கு மண்டபத்தே "பொற்சிலை" நிறுவிப் போற்றுகின்றனர். பளிக்கு மண்டபமே அன்றி அதன் வளாகமே தூய்மை பெற்றுவிட்டது. அமைதிக்காக வாழ்ந்த அந்த மனிதத் தெய்வத்தின் அருள் உரு ஒவ்வொருவர் உள்ளத்தும் நிறைந்து விடுமானால் உலகமே தூய்மையும் அமைதியும் பெற்றுவிடுவது உறுதி! வாழ்க அண்ணல் ஆபிரகாம் புகழ்!

# அறவோர் அமைதிப் பணிகள்

# 1. அமைதிப்பணி

உலகம் அமைதியை விரும்புகிறது; மிக மிக விரும்புகிறது; அணுக்குண்டுகளை அடுக்கி வைத்து அணிவகுப்பு நடத்தும் அளப்பரும் அறிவியல் வளர்ச்சியுடைய நாடுமுதல், அடிப்படைத் தேவைகளுக்கும் அலமரும் நாடு இறுதியாக அனைத்து நாடுகளும் அமைதி ஒன்றையே நாடுகின்றன. எழுநிலை மாடத்து இனிது வாழும் ஈடில்லாச்செல்வர் முதல், 'இன்றைய பசிக்கு என் செய்வோம்?' என ஏங்கி நிற்கும் ஏழைகள் வரை அமைதியையே நாடுகின்றனர்.

**வரவேற்பும் வாழ்த்தும் :**

அமைதியை நினைத்து, அதிலேயே நிலைத்து நிற்பவரை உலகம் வரவேற்கின்றது. அமைதியைப் பற்றிப் பேசி அவனியை வாழவைக்கக் கருதுவாரை உலகம் கைதட்டி அழைத்துத் தழுவு கின்றது. அமைதியைப்பற்றி எழுதி அருள் நெறி பரப்பு வாரை உலகம் நெஞ்சார 'வாழ்க! வாழ்க!' என வாழ்த்துகின்றது. அமைதி வழிகளைச் செயலுக்குக் கொண்டு வருதற்காக அரும்பாடுபடும் தலைவர்களை உலகம் அரவணைத்துக் கொள்கின்றது. அவர்கள் மண்ணுலகில் வாழ்ந்தால்கூட விண்ணுலகில் வாழும் வியன்மிகு தெய்வநிலையாளராகவும், வழிகாட்ட வந்த ஒளி விளக்கு களாகவும், குணத்தின் குன்றங்களாகவும் கருதி, உலகம் அவர்களை வரவேற்கின்றது; வாயார வாழ்த்துகின்றது; நெஞ்சார வணங்கு கின்றது.

**போர்ப்பகையே போ! :**

அமைதி நாட்டம் உடையவர்களை அன்பொழுக அரவணைப்பது போலவே, 'போரே வா' என்று அழைப்பவரை நினைந்து நெஞ்சம் புண்ணாகிப் புறக்கணிக்கத் தொடங்கி விட்டது உலகம். வெறியூட்டும் பேச்சு, எழுத்து, செயல் எவ்விடத்தில் எந்த மூலையில் கிளம்பினாலும் சரி என்றேனும் ஒரு நாள் எங்கெங்கோ கிளம்பி, உலகப்போராக மாறித் திருக்கூத்தாடத் தவறாது என்னும்

அச்சம் அறிவுடையவர்கள், அருளுடையவர்கள் உள்ளத்தெல்லாம் உண்டாகிவிட்டது. ஆகவே 'போர்ப் பகையே போ' என்னும் முழக்கம் சந்து பொந்துகளிலும், மூலை முடுக்குகளிலும் முழங்கத் தொடங்கிவிட்டது. எந்நாளும் இல்லாத அளவுக்கு ஏன் இந்நாளில் அமைதி வேட்கை உண்டாகிவிட்டது?

**உலகப்போர் மூண்டால் :**

அறிஞர் ஐன்ஸ்டீனிடம் ஒருவர், "மூன்றாம் உலகப்போர் மூண்டால் உலகம் எப்படி இருக்கும்?" என்று வினாவினார். அணுவினைக் கண்டு அதனை, 'ஆக்கப்பணிக்கு அன்றி அழிப்புக் கொடுமைக்குப் பயன்படுத்தக் கூடாது' எனக்கூறிய அப்பெருமேதை [1] 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்பதற்கு ஏற்பத் தம் மூளையை உலக உடைமையாக வைத்துச்சென்ற அவ்வருளாளர், இவ்வினாவிற்கு என்ன விடை கூறினார்?

"மூன்றாம் உலகப்போர் தோன்றினால் அஃது எத்தகையதாக இருக்கும் என்பதைக் கூற இயலாது. ஆனால், நான்காம் உலகப்போர் ஒன்று நடந்தால் அதில் பழங்காலக் கருவிகளே பயன்படுத்தப்படும் என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம்" என்றார்.

இக்காலக் கொடும்போர் முறையை இதனினும் குறிப்பாகவும் தெளிவாகவும் எவ்வாறு வெளிப்படுத்துவது? உலகம் முழுக்க முழுக்கப் புல் பூண்டுகள் கூட இல்லாமல் ஒழியும்; புத்துலகம் ஒன்று தோன்றிப் [2] 'புல்லாகிப் பூடாகிப் புழுவாகி' வளரும்; அதன் பின்னரே மாந்தர் தோன்றி உலகத்தொடக்க நாளில் கையாண்டு வளர்ந்தது போல் கற்கருவிகளைப் பயன்படுத்துவர்! சொல்ல வேண்டியதைச் சொல்லவேண்டிய முறையில் அறிஞர் சொல்லி விட்டார். அதனை உலகத் தலைவர்கள் கேட்கவேண்டும்! உடன் தலையாட்டிகளும் ஒப்பவேண்டும்!

**அன்றைய நிலை :**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மாந்தர் கொடுவிலங்கு களைப் போலக் குகைகளிலும், குரங்குகள் போல மரக்கிளைகளிலும் வாழ்ந்தனர். அந்நாளில் அவர்களுக்கும் விருப்பு வெறுப்புக்கள், இன்ப துன்பங்கள் இருந்தன; விருப்பு வெறுப்புக்களால் நட்பும்

1. குறள் : 72
2. திருவாசகம்

பகையும் உண்டாயின; நண்பர்களைத் தழுவி வரவேற்று மகிழ்ந்தது போலவே, பகைவரை ஒழித்து இன்புற்றனர். தம் பகையை ஒழிக்க அவர்கள் பயன்படுத்திய கருவிகள் கற்களேயாம்.

கற்களால் எறிந்தும், பின்னர் அவற்றைத் தேய்த்துக் கூராக்கி வெட்டியும் குத்தியும் தம் பகைவருடன் போரிட்டனர். அறிவு மேலும் வளரத் தொடங்கியது; சில உலோகங்களைக் கண்டு பிடித்தனர். அவற்றால் கத்தி, வேல், வாள், ஈட்டி, அம்பு முதலிய கருவிகளைக் கண்டனர். காட்டு விலங்குகளையும், வானப்பறவை களையும் தம் வயிற்றுப் பாட்டுக்காக வேட்டையாடித் தீர்த்தனர். அதே கருவிகளைத் திருப்பித் தம் பகைவர் மேலும் ஏவினர்.

இத்தகைய போராட்டங்களில் நேரில் நின்று போரில் தலைப்பட்டவரே தாக்கப்பட்டனர், ஒதுங்கி நிற்பவர், ஒளிந்து நிற்பவர் எவரும் தாக்கப்பட்டார் அல்லர். எட்டநிற்பவரும், எதிரிட்டு நில்லாதவரும் வதைக்கப்பட்டார் அல்லர். வீட்டிலே கடமை புரிபவர், வயலிலே வேலை செய்பவர், தொழிற்கூடங் களிலே பணியாற்றுபவர், கடைத் தெருக்களிலே கடமை பேணுபவர், பள்ளிகளிலே பயில்பவர், அமைதித் தொண்டு செய்தற்காக முன்னிற்பவர் எவரும் தாக்கப்பட்டார் அல்லர்.

**நெறி முறை :**

நாள் செல்லச் செல்லப்போர்க்கென நெறிமுறைகள் வகுக்கப் பெற்றன. நெறிமுறைகளைப் போற்றிப் போரிடுவோரே அறப் போராளிகளாகக் கருதிப் போற்றப் பெற்றனர். அல்லோர், பழித்தும் இழித்தும் பேசப்பெற்றனர். காலம் குறிப்பிட்டு இடம் குறிப்பிட்டுப், படையளவு குறிப்பிட்டுப் போர் தொடங்கினர். போரில் தலைப்படாதவர்கள் போர் நிகழ்ச்சி என ஒன்று இருப்பதையே அறியாமல் கூட அமைதியாக வாழ முடிந்தது.

போர்நெறி வகுக்கப்பெற்ற பின், கண்டவரை எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு தாக்கினர் இல்லை. பரிமேல் இருப்பவன்; பரிமேல் இருப்பவனையே தாக்கினான். கரிமேல் இருப்பவன், கரிமேல் இருப்பவனையே தாக்கினான். தேர்மேல் இருப்பவன் தேர்மேல் இருப்பவனையே தாக்கினான். வாள்வீரன் வாள் வீரனோடும், வேலாளி வேலாளியுடனும், வில்லாளி வில்லாளி

யுடனும், மல்லன் மல்லனோடும் போரிட்டான். தாக்குங்கால் கருவியை இழந்தாலும், அச்சத்தால் கண்களை மூடினாலும் போரிடுதல் ஒழிந்தனர். ஆடை அவிழ்ந்தாலும், குடுமி நெகிழ்ந் தாலும் தாக்குதல் தவிர்ந்தனர்.

[1]"போரில் பட்டு அழிதற்கு வேண்டாத பசுக்களையும், பசுக்களன்ன அமைதியுடைய அறவோரையும், மெல்லியல் நங்கை யரையும், இளங்குழந்தைகளையும் போர்க்களத்தில் இருந்து விலக்கிப் பாதுகாப்பா இடத்தைச் சேரச்செய்து அதன் பின்னரே போர் தொடங்கவேண்டும்' என்பது நம் இலக்கிய இலக்கணங்கள் காட்டும் நெறிமுறை. இத்தகைய நெறியமைந்த போராலும் உயிர்க்கு அழிவு உண்டு என்றால்கூட, போரை விரும்பாதவர் களும், போர்க்கு அஞ்சுபவர்களும் அழிவுக்கு ஆட்படாமல் ஒதுங்கலாம் அல்லவா! அன்றியும், 'புறமுதுகில் தாக்குவது போன்ற புன்மை வேறு இல்லை' என்னும் போர்நெறி திகழ்ந்த அந்நாளில், புறங்காட்டி ஓடுவாரே எத்தகைய இழப்புக்கும் ஆளாகமாட்டார் என்னும்போது, போர்க்களத்திற்கு வாராதவர் அழிவாரா?

இது முன்னை நிலைமை; இன்று இந் நிலைமை உண்டா? காலம் குறிப்பிடல் உண்டா? களம் குறித்தல் உண்டா? நேருக்கு நேர் நின்று போரிடல் தான் உண்டா? எவையும் இல்லை.

**அறிவியல் ஆட்டம் :**

மனிதன் கால் நடையில் போனான். பின்னர்க் கட்டை வண்டியில் போனான். அதனை நாகரிகம் என்றோம்; கட்டை வண்டியினும் விரைந்து செல்லும் வில் வண்டிகளையும், மிதி வண்டிகளையும் கண்டதை நாகரிக வளர்ச்சி என்றோம்; கூரிய மூளையாளன் உந்து வண்டி, புகை வண்டி, வானூர்தி கண்ட போது நாகரிக முதிர்ச்சி என்றோம்; அந்த நாகரிக முதிர்ச்சி மனிதன் மண்ணில் இருந்து திங்கள் மண்டலத்திற்குச் சென்று வரும் அளவுக்குப் பெருகியதையும், ஞாயிற்று மண்டலத்தில் புள்ளிவைக்கும் அளவுக்கு விரிந்ததையும் கண்டு "ஓ! ஓ! என்னே நாகரிக ஏற்றம்?" என்று மூக்கில் விரல் வைத்து நோக்குகிறோம். ஆனால் அந் நாகரிகம் கோடி கோடிப்பேர்களை நொடிப் பொழுதுக்குள் மண்ணுக்குள் மண்ணாகிப் பேயாட்டம்

1. புறநானூறு : 9

ஆடுவதையும் காணுகிறோம். இந்நிலையில் அந்த நாகரிகத்தை நாகரிகம் என்பதா? அநாகரிகம் என்பதா?

மணிக்கு ஆயிரம் கி.மீ. விரைவில் பறப்பது தரக்குறைவான விரைவு, என்னும் அளவுக்கு அறிவியல் வளர்ந்துவிட்டது என்பதை எண்ணும் போதே என்ன தோன்றுகின்றது! அவ்விரைவு, ஆக்கத்திற்கு எவ்வளவு உதவ முடியுமோ, அவ்வளவு அழிவுக்கும் உதவ முடியுமே என்னும் அச்சமும் உண்டாகி விடுகின்றது. அவ்வச்சம் உண்டாவதும் இயற்கைதானே! [1] "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" அல்லவோ! [2] "அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்" அல்லவா.

நாம் இன்று கண்ணாரக் காண்பதும் கேட்பதும் என்ன? ஒரு கண்டத்தில் இருந்து கொண்டே மறுகண்டத்தைத் தாக்கும் குண்டுகளைக் காணுகிறோம். அண்டம் விட்டு அண்டம் செல்லும் குண்டுகளைக் காணுகிறோம்; ஏவுகணைகளையும் காணுகிறோம்; இவற்றின் அழிபாட்டுக் கொடுமையை அரை நொடியளவு எண்ணினாலும் போதும், அருளாளர் உள்ளம் அமைதி கொள்ள முடியாது; 'எமக்கு என்ன?' என்று 'வாளா' விருக்கவும் இயலாது.

**அந்தோ அழிவே! :**

கடற்கரையில் சில பிணங்கள் ஒதுங்கிக் கிடந்தன. ஒரு பிணத்தின் சட்டைப் பையில் இருந்த குறிப்பு ஒன்று சொல்கின்றது; "கொடுவாய்க் குண்டுக்கு ஆட்பட்டுத் துடித்துச் சாக நாங்கள் விரும்பவில்லை; ஆகவே குடும்பத்தோடு மகிழ்ந்து கடலிலே வீழ்ந்து நாங்களாகவே சாகின்றோம்."

"மூளை இல்லாமல் முப்பதிற்கு மேற்பட்ட குழந்தைகள் சப்பானில் பிறந்துள்ளன; இஃது இரண்டாம் உலகப்போரில் போடப்பெற்ற அணுக்குண்டின் விளைவாகும்" என்று செய்தித்தாள் சொல்கின்றது.

ஒரு கிலோ எடைக் கருமருந்தைக் கொண்டு பன்னூறு மெட்ரிக் டன் கல்லைப் பெயர்த்தெறிய முடிகின்றது. ஆனால், 'நடுத்தரத்தில் கடைப்பட்ட ஓர் அணுக்குண்டில் இரண்டு மெட்ரிக் டன் கருமருந்தின் ஆற்றல் உள்ளதாம்! அது வீழ்ந்து வெடித்தால்......? 'சோதனை செய்யாதே, என்று உலகம் எல்லாம் வரிந்து கட்டிக்

1. 1. 2. குறள் : 428.

கொண்டு தடுத்தும், கேளாச் செவியுடன் சோதனை செய்யப் பெற்ற அணுக்குண்டு ஒன்றின் ஆற்றலை அளவிட்டுரைத்த அறிவியல் உலகின் புள்ளி விவரம் இது.

இறைவன் தன்னின் ஒரு கூறாக மனிதனைப் படைத்தான்; பிற உயிர்களுக்கு இல்லாத அளவில் மூளை முதிர்ச்சியையும் மன வளர்ச்சியையும் படைத்தருளினான். என்றாலும், அவன் விலங்கினும் கேடனாக, நச்சுயிரினும் கொடியனாகத் தலை நீட்டத் தவறுகிறான் அல்லன்.

**இப்படியும் உண்டா? :**

எந்த ஒரு மலையில் இருந்தேனும், மனிதர்களைத் தாக்கு வதற்காகப் புலிகள் படையெடுத்து வந்துள்ளனவா? கரடிக் கூட்டம்தான் கொடுங்காட்டில் இருந்து, கிளம்பி நாட்டு மாந்தரைத் தாக்கக் காலடி வைத்துள்ளதா? காட்டு நாய்கள் தாம் மானிடரை ஒழித்துக் கட்டுவதற்காகப் பறை முழக்கிக் கொண்டு பாய்ந்து வந்துள்ளனவா? கொடிய பாம்புகள் தாம் குழுமலாகச் சேர்ந்து குடியிருப்புகளில் நுழைந்து கொன்றொழிக்கும் கொலைவெறியுடன் வந்துள்ளனவா? அன்றி, அக்குழுமல்கள் தங்களுக்குள்ளே அணி வகுத்து நின்றேனும் அரும்போர் ஆற்றி அழிந்தொழிந்தனவா? இல்லவே இல்லை. மாந்தன் தான் மாந்தனை அழித்து ஒழிக்கத் திட்டமிடுகின்றான். வெறியாளர்களை உடன் கூட்டிக் கொண்டு வீர நடைபோடுகின்றான். நாடு நகரங்களைப் பாழாக்கி நலிவூட்டு கின்றான். வளந்தரும் வயலையும், நீர் பெருக்கும் அணையையும், பயன்மிகு பாலத்தையும், கனி தரும் காவையும், பயிலும் பள்ளியையும், வழிபடும் கோவிலையும், உயிரூட்டும் மருந்தகங் களையும் பாழாக்குகிறான். பாவி! பாம்பும், பாழும் விலங்குகளும் செய்யாச் செயல்களைப் பகுத்தறிவுடைய மாந்தன் செய்கின்றான். பாவி அல்லனோ அவன்?

**உரிமை உண்டா? :**

உயிர்களைப் படைக்க முடியாத அவனுக்கு உயிர்களை அழிக்க என்ன உரிமை உண்டு? காலும், கையும், கண்ணும், காதும், மூக்கும், பல்லும் சிதைந்து, மூளை ஒழுகி உதிரம் பெருகிக் கிடக்கும் கொடுங்காட்சியைக் கண்டு உள்ளம் குளிர்ந்து கூத்தாடுகின்றானே போர்வெறியன்! இவன் மாந்தன் தானா?

அன்புப் பெற்றோர்க்குப் பிறந்த மைந்தன் தானா? தனக்கு எய்தும் துயரத்தை அறிந்தவன் பிறருக்குத் துயர்செய்ய முந்துவானா? உந்தும் உணர்ச்சியால் எழுவானா? இவனை மனிதன் - மனத்தை உடையவன் - என்று எவ்வாறு கூறமுடியும்.

ஒருவனுக்குக் கிறுக்குப் பிடித்து விடுகிறது. அவன் ஏதேதோ பேசுகிறான்; உளறுகிறான்; சிலரை வெருட்டுகிறான்; சிறுவர் களால் வெருட்டவும், ‘கிறுக்கன்’ எனப் பேசவும் படுகிறான். ஆனால் போர்க்கிறுக்கர்கள் இருக்கிறார்களே! அவர்கள் நிலைமை மூளைக் கிறுக்கர்கள் நிலைமை போலா உள்ளது?

**பழிகாரனுக்குப் பாராட்டு :**

போர்க் கிறுக்கன் ஏவல் கேட்க நாடே காத்துக் கிடக்கிறது; படைகளும், பக்கத் துணைகளும் காத்துக் கிடக்கின்றன; அவன் கண்சாடை காட்டிவிட்டால் போதும்; அவன் பகைநாடும், படை நடக்கும் நாடும் சுடுகாடாக மாறிவிடுகின்றன; கொள்ளையடிக்கப் பெற்ற கோநகரங்களாகி விடுகின்றன; இவ்வளவும் ஆகிய பின்னராவது போர் வெறியனுக்குக், ‘கொள்ளைக்காரன்,’ ‘கொலைகாரன்,’ ‘கொடியன்’ என்னும் ஒரு சொல் உண்டா? அவன் ‘வீரன்’ என்றும், ‘வேந்தன்’ என்றும், ‘படைத் தலைவன்’ என்றும், ‘பாராள்வோன்’ என்றும், ‘கடவுளின் திருவருட் பிறப்பாளன்’ என்றும், ‘கருணை வள்ளல்’ என்றும் அல்லவோ பாராட்டப்படுகின்றான்! அவனுக்கு வெறி மேலும் மேலும் ஏறிச் செல்லாமல் இருக்குமா?

[1]“இயற்கையாகவே குறும்பு மிக்கது குரங்கு; அது நெருப்பிலே வீழ்ந்து, வெறிகொண்டு விடுகிறது. அந்நிலையில் அதனைத் தேள் கொட்டுகிறது; பாம்பு தீண்டுகிறது. இவை போதாவென்று அக்குரங்கு கள்ளைக் குடித்துப், பச்சை மிளகாயையும் கடிக்கிறது! அப்பொழுது அதன் வெறி எத்தகையதாக வளர்ந்து இருக்கும்? அதன் கையில் கொள்ளி அந்நிலையில் அகப்பட்டால் விளைவு என்னாம்?” பாராட்டுப் பெறும் போர் வெறியர்கள் இக் குரங்கு போலவே உள்ளனர். அவர்கள் பிறப்பால், அவர்கள் கண்பட்ட நாடு நகரங்கள் எல்லாம் தீப்பற்றி எரிக்கப்பெற்ற காடுகள் போல் கொடுங்காட்சி வழங்குகின்றன!

1. பெருந்தொகை: 260; 262.

**அருட்பணி :**

*உலகில் வாழும் மாந்தர் அனைவரும் போர் வெறியர் தாமா? போர் வெறியைப் பழிப்போர் இலரா? நல்வழிப்படுத்தும் நாட்டமிக்குத் தொண்டு செய்ய முன்வருவோர் இலரா? அங்கொரு வரும் இங்கொருவரும் ஆக இருந்திருக்கின்றனர். அவர்கள் தம்மையே அமைதிப்பணிக்கு உள்ளார ஒப்படைத்துந் தொண்டாற்றினர். பொருள் இழப்புகளுக்கோபுண்பாடுகளுக்கோ அவர்கள் அஞ்சினர் அல்லர். தம் உயிரை ஈந்தும் அமைதிப் பணியாற்றுவதற்குப் புன்முறுவலுடன் நின்றனர். அத்தகை யவர்கள் அமைதிப்பணியே உலகத்தை அழிவில் இருந்து இதுவரை காத்து வந்துள்ளது. எதிர்காலத்திலும் அத்தகையவர்கள் பணியால் தான் உலகம் வாழவும் போகின்றது. ஆகவே, “வாழ்க அமைதிப் பணியாளர்கள்” என்று நாம் வாழ்த்துவோம். ஏனெனில், அவர்களே உலகத்தை வாழவைக்கின்றார்கள்!*

# 2. அறவோர் உள்ளம்

**உலகம் :**

உலகம் என்பது யாது? அது மண்ணா? கல்லா? மரமா? செடியா? வளியா? ஒளியா? உடலா? உயிரா? எந்த ஒன்றும் உலகம் இல்லை. எல்லாமும் கூடிய ஒன்றே உலகம். ஆனால், உலகை உலகாக வைத்திருப்பது எது? மேலே கண்டவை எல்லாம் உடலின் உறுப்புகள் போன்றனவே. உலகின் உயிர் அறவோரே ஆவர்! அறவோர் இல்லா உலகம் உயிரிலா உடல் போன்றது. அவ்வுலகம் மண்ணாக இருக்குமே அன்றி மதிக்கத்தக்கதாக இருக்காது. அறவோரே உலகை, உலகாக வைத்திருக்கின்றனர். உயிர் வாழ்வுக்கு உரியதாகவும் வைத்திருக்கின்றனர். ஆதலால் அன்றோ,

[1] "பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்றார் வள்ளுவர்.

[2] "தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே",

"உண்டால் அம்ம இவ்வுலகம்"

என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் அரசர் பெருமான் இயம்பினான். ஆதலால் உலகம் உய்வது உயர்ந்த பெருமக்களால் தான் என்பதை உணரலாம். இதனைத் தெள்ளிதின் உணர்ந்தமையால், "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது வழக்கு மொழியாயிற்று.

**அறவோர் :**

உலகை உய்க்கும் அறவோர் எத்தகையர்? அறத்தைத் தம் உயிராகக் கொண்டவரே அறவோர். அவர் தம் இலக்கணம் அறிதற்கு எங்குச் செல்லுதல் தகும்? அறநூலாம் திருக்குறளிடைச்

1. குறள் : 996.

2. புறநானூறு : 182.

செல்லுதல் வேண்டும். ஏன் அவ்வற நூலிடைச் சேறல் வேண்டும்? அவ்வறம் பாடியவர் [3] 'பொய்யில் புலவர்' ஆதலாலும், அவர் உரை [4] 'பொருள் உரை' ஆதலாலும் என்க.

அறவோரைப் பற்றிப் பொய்யில் புலவர் புகலும் பொருளுரை தான் என்ன?

"எவ்வுயிர்க்கும் துன்பம் தாராமல் இன்பந்தருவது எதுவோ அதுவே அறம்; அவ்வினையே அறவினை; அதனை ஆற்றுவோரே அறவோர்" என்பது வள்ளுவர் கருத்து. இதனை அவர் தம் நூலகத்துப் பரக்கக் காணலாம்.

**பொய்யும் மெய்யும் :**

எல்லாக் குற்றங்களுக்கும் தாய்போன்றது பொய்மையே என்பதும், எல்லா அறங்களிலும் தலையாயது வாய்மையே என்பதும் அறிஞர்கள் துணிவு ஆனால், உயிர்களின் இனியவாழ்வு ஒன்றையே உளத்துக் கொண்டு அறம் வகுத்த வள்ளுவரும் வாய்மையையே முழு முதல் அறமாகக் கொண்டிருந்துங் கூட, அதற்குத் தனி முதல் தலைமைதர விழைந்தார் அல்லர்.

கொல்லாமையாகிய அகிம்சையே முதல் அறம்; அக் கொல்லாமைக்குத் துணை நிற்குமானால் பொய்யாமையும் - வாய்மையும் - அறமே என்றார். இதனை,

[1] "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்னும் குறளால் அறியலாம். நல்லது கொல்லாமை என்னும் அளவில் நில்லாமல் 'ஒன்றாக' என்றதும், 'பொய்யாமை நன்று' என்னாமல் 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்றதும் அறத்தின் ஆணிவேர் கொல்லாமையே எனத் தெளிவாக விளக்கு கின்றது. மேலும், அவர் வாய்மை என்பது உள்ளது உள்ளவாறே கூறல் என்பதாக இல்லாமல் "தீமை இல்லாதவற்றைச் சொல்லுதலே வாய்மை" என்பதையும், உயிர்களுக்குக் குற்றமற்ற நன்மையை விளைக்குமாறு சொல்வது பொய்யாக இருந்தால்கூட, அந்தப் பொழுதில் அது மெய்யாகவே கருதப்படும்" என்பதையும் ஊன்றி

3, 4. மணிமேகலை 22 : 61.

1. குறள் : 323.

அறியும் பொழுது 'உயிர்களுக்கு நன்மைபயக்கும் ஒன்றைச் செய்வதே அறம்' என்று வள்ளுவர் கருதுகின்றார் என்பது மேலும் தெளிவாகின்றது.

**அறவோர் உள்ளம் :**

இனி, வள்ளுவர் வழியே, அறவோர் உள்ளம் எத்தகையது எனக் காண்போம்:[2] அறவோர் உள்ளத்தில் மாசு என்பது சிறிதும் இருக்காது. மதியில் கறைபடிந்தாலும், கதிரில் களங்கம் செறிந்தாலும் அறவோர் நெஞ்சில் மாசு புகாது. மாசு அறவோர் நெஞ்சில் புகுந்தால் அவர் அறவோர் நிலையில் இருந்து கீழே இறங்கி விடுகின்றார். ஆகவே அறவோரின் முதன்மைப்பண்பு மனமாசில்லாமையே!

கறையற்ற உள்ளம் உடைய அறவோரிடம் பொறாமை எழும்புதல் உண்டா? தன்னலம் விஞ்சும் உள்ளத்தில் அல்லவோ பிறர் நலம் கண்டு பொறாமை உண்டாகும்! தன்னலம் என்னும் ஒன்று இல்லாமல் பொதுநலமே பூத்துக் குலுங்கும் அறவோர் உள்ளத்தில் சிறிதும் பொறாமை புக வாய்ப்பு இல்லை.

**அளவிலா ஆசை :**

பொறாமையையே கண்ணாகவும் காலாகவும் கொண்டு உலாவருவது ஆசை என்னும் பேய்க் குணம். பொறாமை ஒழிந்த அறவோர் உள்ளத்தில் ஆசைக்கு இருப்பே இல்லை.

[1] "ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்தம் ஆமே!"

என்பதை உணர்ந்த அறவோர்களிடம் ஆசை தலைகாட்ட வாய்ப்பே இல்லை.

ஆசைப் பெருக்கம் உடையவர்க்கே ஆசை நிறைவேற்றமும், அதனால் உண்டாகும் இன்பமும், ஆசை நிறைவேறாமையும், அதனால் உண்டாகும் ஏக்கத்துன்பமும் உண்டு. ஆசையே அற்ற இடத்தில் ஏக்கம் இல்லை. ஏக்கம் இல்லாதபோது அதனால் ஏற்படும் கொடுஞ்சொல்லும் இல்லை.

---

*2. குறள் : 34.*

*1. திருமந்திரம் : 2615*

*2. குறள் : 306.*

**எரிக்கும் சினம் :**

[2] வெகுளியும் இன்னாச்சொல்லும் தீயைப் போன்றன. தீ., பஞ்சிலோ குச்சியிலோ பற்றுகிறது. முதற்கண் தான் பற்றியதை எரிக்கும்; பின்னர்ச் சுற்றியுள்ளவற்றை எரிக்கும்; அதுபோலவே வெகுளியும் சரி, அதன் விளைவாம் இன்னாச்சொல்லும் சரி கொண்டவனை முதற்கண் அழிக்கும். பின்னர் அடுத்தும் தொடுக்கும் இருப்பவரை அழிக்கும். எவ்வுயிர்க்கும் இன்பமே கருதும் அறவோர் உள்ளத்தில் சுட்டெரிக்கும் இத்தீக்கு இடம் இருக்கவே முடியாது.

பொறாமை, ஆசை, கோபம், கொடுஞ்சொல் என்னும் நான்கு பேய்மையும் ஒட்டாத அறவோர் உள்ளத்தே அறக்கடவுள் கோவில் கொள்வான்; அத்தகைய [1] ‘அறவாழி அந்தண’னுக்கு அறவோர் ஆற்றும் வழிபாடு யாது? அமைதிப் பணியாகத் தானே இருக்கமுடியும்!

**அறவோர் உள்ளம் :**

பளிங்கு போன்ற நீரில் தூசியும் தும்பும் இல்லை; சேறும் செதும்பும் இல்லை; நாற்றமும் நெடியும் இல்லை; பாசியும் வழுக்கலும் இல்லை. அத்தகைய தூய பளிங்கு நீர் போன்றதே அறவோர் உள்ளமும். அவர்கள் மனத்தில் மாசு இல்லை; சொல்லில் கொடுமை இல்லை; செயலில் தீமை இல்லை. உயிர்கள் எல்லாம் அமைதியாக வாழவேண்டும் என்பதே அவர்கள் நோக்கம். அந்நோக்கம் நிறைவேறுவதற்காக அரும்பாடுகள் படவும், அல்லல் களை அணைக்கவும், ஆருயிர் இழக்கவும் அவர்கள் தவறியதே இல்லை.

**தூய துறவு :**

அறவோர் வாழ்வியல் துறைகள் பலப்பல. அவற்றுள் துறவு நிலை தலையாயது. நாடு நகர். உற்றார் உறவு நீத்துக் காடு தேடும் ஒன்றோ துறவு? தன்னலத்தைத் துறப்பதே துறவு. தன்னலத்தில் எல்லாம் தன்னலமானது தன்னுயிர் வாழ்வு பற்றியது. அதனையும் துறக்கத் துணிந்தவர் எவரோ, அதனையும் பொதுநலங் கருதித் துறக்கத் துணிந்தவர் எவரோ அவரே துறவி. அவரே அறவோர்.

---

1. குறள் : 8.

1. குறள் : 261.

[1] "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்பது பொய்யாமொழி.

தன் துயர் பொறுத்தலும், பிற உயிர்களைத் துன்புறுத்தா திருத்தலும் ஆகிய இரண்டுமே துறவறம். இத்தகைய மாண்புத் துறவோரே அமைதிப் பணிக்கென இறையருளால் தோன்றியவர். அவர் வாழும் காலத்தில், அவர் வாழும் இடத்தில் அறப்பயிர் முளைத்துக் கிளைத்துத் தழைத்து, அரும்பிப் பூத்துக்காய்த்துக் கனியும். அவர் வழியைச் சிக்கெனப் பிடித்து வாழும் பெருமக்கள் தொடர்ந்து வந்தார் எனில் நற்பயன் விளைக்கும். இல்லையேல் அவர்கள் கோட்பாடுகள் ஏட்டளவில் தலைகாட்டி நிற்கும். பிறிதொரு காலத்தே தோன்றும் அறவோர்க்கு வழிகாட்டியாக அமையும்.

**பண்பார்ந்த பணி :**

அறவோர் தன்மை இன்னதென அறிந்தோம். இனிப் பணி என்பதைப் பற்றிச் சிறிது அறிவோம். பணி என்பது தொண்டு. அது கடமை, கடப்பாடு என்றும் வழங்கப்பெறும். தன்னலந் துறந்த பெருமக்களே பணிபுரிதலில் முனைந்து நிற்கமுடியும். அன்னோரே,

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்று இறைவனிடம் வேண்ட முடியும். தன் பெண்டு, தன் குடும்பம், தன் சுற்றம் என்று வட்டமிடும் உலகவாழ்வில்,

[1] "எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்று வேண்டுதல் அரிதினும் அரிது அன்றோ!

பணி செய்தலே தம் பிறவியின் நோக்கம் எனக்கொண்ட ஒரு பெருமகனார், வேண்டுகிறார் இறைவனிடம்:

[2] "தன்கடன் அடியேனையும் தாங்குதல்;
என் கடன் பணி செய்து கிடப்பதே"

---

2. தாயுமானவர்,

1. தாயுமானவர்,

2. நாவுக்கரசர்.

இத்தகைய தொண்டர் பெருமையே பெருமை. அவர் தம் பெருமையை அறைதல் அரிது. "தொண்டர் தம் பெருமை சொல்ல ஒண்ணாதே" என்பது ஔவையார் வாக்கு.

அறவோர்கள் உள்ளத்தில் பணிபுரியும் வேட்கை எழும்பு வானேன்? இறைவனிடம் அவர்கள் தம் பணிசெய்யும் வேட்கையை வெளிப்படுத்தி வேண்டுவானேன்?

**ஈத்துவக்கும் இன்பம் :**

இறைவன் உலகைப் படைத்தவன்; உயிர்களைப் படைத்தவன்; உயிருக்குள் உயிராக இருப்பவன். அவனுக்கு உயிர்களைத் துன்பங் களினின்று காத்து விடுதலை அளிப்பது பெருவிருப்பு. அவன் விருப்பை உண்மையாக உணர்ந்து அதனை நிறைவேற்றப் பாடுபடுதலே தொண்டர் கடன். ஆகவே உயிர்கள் படும் துன்பத்தைக் கண்ணால் காணவும், காதால் கேட்கவும் நைந்து நலிகின்றனர். அவற்றின் துயரைப் போக்குவதிலேயே இன்பங் காணுகின்றனர்.

"ஈதல் இன்பமிக்க செயல்; பெறுபவனுக்கு மட்டும் இன்பமானது அன்று ஈதல்; கொடுப்பவனுக்கும் இன்பம் பயப்பது", என்பது ஆய்ந்தவர்கள் தெளிவுரை. அவர்கள் [3] 'ஈத்துவக்கும் இன்பம்' என்பர். பிறருக்கு ஈவதால் அதனைப் பெற்றவர் அடையும் இன்பத்தைக் காணும் இன்பம் என்பதே இதன் விளக்கப் பொருள். ஈதல் இன்பம் போலவே தம் பணியால் பிறர் பெறும் இன்பமும் பேரின்பமேயாம்.

தாம் செய்யும் பணியால் பிறர் அடையும் நலங்களையும் நல்வாழ்வையும் காணுங்கால் அறவோர்களுக்கு உண்டாகும் உவகைக்கு அளவுண்டோ? பிறர் இன்பத்தைக் காணுமாறு அன்றே பெரும்பாடுபட்டனர்; துன்பங்களையும் புன்முறுவலுடன் ஏற்றுத்துணிந்து பணியாற்றினர். அதன் பயனைக் காணும் போது இன்பம் ஏற்படாதா? இன்பப்பயனைக் காணுதற்கு வேட்கை எழும்பாதா? இன்பப்பயன் தரும் அத்தொண்டுக்குத் தம்மை ஆளாக்க அருட்பெருங்கடலாம் இறைவனிடம் வேண்டுதல் கிளம்பாதா? ஆசைகள் அனைத்தையும் துறந்து சென்ற பெரு மக்களுக்கும் ஓர் ஆசை இல்லாமல் ஒழியவில்லையே! 'எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்பது அவர்கள் ஆசை அல்லவா!

3 குறள் : 228.

# 3. வள்ளுவர் வழி

*திருவள்ளுவர் யார்? அவர் ஊர் யாது? அவர்தம் பெற்றோர் யாவர்? அவர் எங்கு வளர்ந்தார்? எவ்வாறு வளர்ந்தார்? அவர் தம் வாழ்வு நிகழ்ச்சிகள் எவை? இவ்வினாக்களுக்கு மனநிறைவானதும் தெளிவானதும் ஆகிய விடைகாண்பது அரிது. ஆனால் வள்ளுவர் அறவோர் என்பதும், உலக அமைதிக்கு அருமருந்தாம் நூல் அருளியவர் என்பதும், அவர் பிறப்பால் அவர் தம் பெற்றோர் பெற்ற நலத்தினும் இவ்வுலகம் பெற்ற நலமே பெரிது என்பதும் அவர் தம் நூலால் தெளிவாக அறியக்கிடக்கின்றன.*

**பழிக்குப் பழி :**

*'பல்லுக்குப் பல்', 'கண்ணுக்குக் கண்', 'பழிக்குப்பழி' என்பன பல இடங்களிலும் பலர் வாயிலும் கேட்கும் பழமொழி கள்; இவை ஆட்சிச் சட்டமாக இருந்த துண்டு என்பதும் ஆண்டு மாண்ட மக்கள் வரலாற்றுக் குறிப்புக்களால் புலப்படாமல் இல்லை. இத்தகைய உலகில், 'பழிக்குப் பழியே' நீதிநெறி என்றும், வீரவாழ்வு என்றும் கருதி வாழ்வோர் சூழலில் இருந்து கொண்டு "பழிக்குப்பழி வாங்குதல் கூடாது; அவ்வெண்ணம் அரும்புவதே தவறு; பாவம்" என்று ஒருவர் உரைக்க வேண்டு மானால் எத்தகைய உரம் அவருக்கு இருத்தல் வேண்டும்?*

**வள்ளுவர் வழி :**

*'வீட்டில் அமைதி தவழ்வதே உலக அமைதிக்கு அடிப்படை' என்பது வள்ளுவர் தெளிந்த கருத்து. வீட்டில் அமைதி உண்டாகும் போது தான் ஊரிலும் நாட்டிலும் அமைதி காணமுடியும். பற்பல வீடுகளையும் ஊர்களையும் கொண்டது தானே நாடு! ஆகவே தனி வாழ்வின் அமைதியால் உலக வாழ்வில் அமைதி வேண்டும்; அறவோர்கள் அமைதி உண்டாக்கப்பாடுபடவும் வேண்டும் என்று திட்டவட்டமாகக் கருதினார். அக்கருத்தால், தமிழர் தலை*

நிமிர்ந்து நடக்கும் வண்ணம் உதவும் குறள் நூலை அருளினார். அதன்கண் காணக்கிடக்கும் அமைதிக் குறிப்புக்கள் அனைத்தையும் காண்பதும் காட்டுவதும் நம் கருத்து அன்று. எடுத்துக்கொண்ட தலைப்புக்கேற்பச் சிலவற்றைக் காண்போம்.

**இனிய இல்லறம் :**

"இல்லறம் தூய பளிங்கு நீர்ப்பொய்கையாக விளங்க வேண்டும்; அங்கு இன்பத் தென்றல் தவழ வேண்டும்; அன்பு ஊற்றுக் கண்திறந்து வற்றாமல் பெருகவேண்டும்; அருள்மடை திறந்து பாய்ந்து செல்லல் வேண்டும்; புதல்வர்கள் ஆகிய பூக்கள் பொலிவுற விளங்கவேண்டும்; இன்சொல் ஆகிய தேன் பெருக் கெடுக்க வேண்டும்; விருந்தினர், வறியவர், இரவலர் என்னும் வண்டுகள் வந்து நலம் பெறுதல் வேண்டும்; அழுக்காறு, அவா முதலாகிய மாசுகள் சேராது இருத்தல் வேண்டும். புகழ் என்னும் மணம் பரவுதல் வேண்டும்" இது வள்ளுவர் காட்டும் இல்வாழ்வுத் தொகுப்புரை. இல்வாழ்வில் இத்தன்மைகள் அனைத்தும் அமையப் பெற்றால், இன்ப உலகமே இவ்வில்லறம் தான் என்பதற்குத் தடையுண்டோ?

**வலியவனுக்கு வலியவன் :**

[1] வலியவன் ஒருவன் தன்னிலும் மெலிய ஒருவனை அடிப்பதற்குக் கையை ஓங்குகின்றான். ஓங்கிய கையைக் கீழே இறக்குமுன் ஓடிவந்து நிற்கிறார் வள்ளுவர். "வீரனே! அன்பனே! நான் சொல்லுவதைச் சிறிதுகேள். நீ இப்பொழுது ஓங்கி இவனை அடிக்கப் போகிறாய் அல்லவா! இவன் உன்னிலும் வலுக் குறைந்தவன் என்பதால் தானே துணிந்து கை தூக்கினை? உன்னினும் வலியவனாக இவன் இருப்பானேயானால் உன்கை இவ்வளவு உயர்ந்திருக்குமா? நீ உன்னைப் பார்க்கிலும் வலிய ஒருவன் முன் இந்நிலைமையில் நிற்க நேர்ந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார். அதன் பின் உன் விருப்பம் போல் செயலாற்று" என்றார். ஏறும் உணர்ச்சி இறங்கியது. வேண்டுவது அவ்வளவு தானே!

1. குறள் : 250.

2. குறள் : 318; 316.

**தன்னுயிரும் மன்னுயிரும் :**

[2] ஒருவன் மற்றொருவனைத் தாக்குவதற்குக் கொடிய கருவியுடன் நிற்கிறான். கருவியின் தாக்குதலால் உண்டாகும் துன்பம் அளப்பெரியது. குருதி கொட்டும்; குற்றுயிரும் ஆகும்; இறப்பும் நேரும். இக்கொடுமையை அருளாளர் வள்ளுவரால் காணப் பொறுக்கவில்லை. கருவியைக் கையகத்துக் கொண்டு விலங்குணர்வுடன் நிற்பவனை, நேரில் காண்கிறார். "இக் கருவியால் உன்னை வெட்டினால் உனக்கு எத்தகைய துன்பம் உண்டாகும் என்பதை நன்றாக அறிவாய் அல்லவா? அத்தகைய துன்பம் தானே இவனுக்கும் உண்டாகும்! தன்னுயிர்க்கு வரும் துன்பத்தை அறிபவன், பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தை மட்டும் அறியத் தவறுவது ஏன்?" என்று ஒரு வினாவை எழுப்புகிறார். சிறிது அறிவுடையவனையும் சிந்திக்க வைக்காமல் விடாதே இவ்வினா.

**அறிவால் ஆகும் பயன் :**

[1] ஓர் அறிவாளனைக் காணுகிறார் வள்ளுவர். அவன் தன் சொல்லாற்றலால் மக்களுக்குள் பகையையும், வெறியையும் மூட்டுகிறான். அவன் சொல்லில் மயங்கிய மக்கள் விளக் கொளியில் வீழ்ந்துபடும் விட்டிலைப்போல் மாய்வார்கள் என்பதை அறிகிறார். ஆதலால் ஆங்குச் செல்கிறார். "அறிஞனே! அறிவினால் ஆகிய பயன் தான் என்ன? பிற உயிர்களையும் உன் உயிர் போலப் பேணிக் காப்பதற்காகத் தானே அறிவைப் பெற்றாய். அவ்வறிவை அழிவு வழிகளுக்கும், அமைதிக் கேட்டுக்கும் பயன்படுத்துவாய் ஆனால், நீ பெற்ற அறிவால் ஆகும் பயன் தான் என்ன? 'போன போக்கெல்லாம் மனத்தைப் போகவிடாமல், நல்வழியில் திருப்புவதே அறிவு' என்பதை அறிவாயாக; அறிவினை ஆக்கப்பணிக்குப் பயன்படுத்துவாயாக" என்றார். அதனைக் கேட்டு நடக்கத் தவறினால் அவன் அறிவுடையவன் ஆக மாட்டானே!

1. குறள் : 422.

2. குறள் : 773.

**ஆண்மையில் ஆண்மை :**

[2] *வீரன் ஒருவனைக் காணுகிறார் வள்ளுவர். அவ் வீரனையும் போர்க்களத்தில் காணுகிறார். அவனும் மற்றொரு வீரனும் ஆற்றல் எல்லாம் கூட்டிப் போரிடுகின்றனர். அவனை எதிர்த்த வீரன் சோர்வடைகிறான். அச்சோர்வை வீரன் பயன்படுத்திக் கொள்வான் போல் தெரிகிறது. போரே கொடுமையானது. அதிலும் அறநெறி தவறிய போர் மிகமிகக் கொடியது என்று கருதுகிறார் வள்ளுவர். ஆகவே "மான வீரனே! நீ வீரத்துடன் போரிட்டாய். இவனும் தாழாமல் போரிட்டான். ஆனால் இப்பொழுது தன் நிலையில் தளர்ந்து விட்டான். இதற்கு மேல் இவனுடன் நீ போர் செய்து உன் ஆண்மைக்கு இழுக்காகும். இவன் மேல் இவ்வேளையில் அருள் காட்டி உதவி செய்வது இருக்கிறதே அதுவே வீரத்திலும் வீரம். ஆன்றோர்கள் சீரிய கூர்மை பேராண்மை என்பது பேராண்மைக் களத்தில் காட்டும் அருள் ஒன்றையே ஆகும் என்பதை அறிவா யாக" என்றார். உண்மை வீரன் ஆண்மையை விரும்புவானா? பேராண்மையை விரும்புவானா?*

**அறமிகு துறவு :**

[1] *துறவுக்கோலம் உடையவன் ஒருவனைக் காணுகிறார் வள்ளுவர். அவன் தனக்கு உண்டாகிய அல்லல்களைப் பற்றி அளவிறந்து விவரிக்கிறான்.தன் துயரத்தையே தாங்கமாட்டாத இவன், பிற உயிர்களுக்கு உண்டாகும் துன்பத்தைப் போக்கி, இன்பத்தை ஆக்க எங்கே பாடுபடப் போகிறான் என்று எண்ணுகிறார். கால்வாயைக் கடக்கமாட்டாதவன் கடலைக் கடப்பானா? வெந்நீரில் குளிக்க மாட்டாதவன் தீயில் பாய்வானா? மாட்டான். ஆதலால் அவனிடம் உரைக்கிறார்.*

*"துறவியே! உன்னைப்போல் தலையை மழித்துக்கொள்ள எவராலும் எளிதில் முடியும். அதனை வளர்த்துக் கொள்ளவும் முடியும். இவற்றைச் செய்தற்காக மட்டும் அமைந்தது அன்று தவநெறி. அதனைத் தெளிவாக அறிந்து கொள்ளாமல் அக்கோலம் கொள்வது பாவம்! அது பிறரை ஏமாற்றும் செயலாகவே அமையும். உனக்கு வரும் பசி, பிணி, ஏச்சு, பேச்சு ஆகிய எல்லாவற்றையும் பொறுக்கவேண்டும். வேண்டா வெறுப்புடன் பொறுப்பதில்*

*1. குறள் : 261.*

*பயனில்லை. புன்முறுவலுடன் பொறுத்துக் கொள்ளவேண்டும். எவ்வுயிரேனும் உனக்குச் செய்யும் கொடுமையைக் கண்டு துடிக்கக் கூடாததுமட்டும் அன்று. அவ்வுயிருக்கு எத்தகைய கொடுமையையும் நீ நினைக்கவும் கூடாது. இத்தன்மையைக் கொள்வதே துறவு என்பதை அறிவாயாக" என்றார். தன்னலத் துறவே துறவு என்பதை அறிந்த அவன் தன் அறியாமைக்காக நாணங்கொண்டான்.*

**பொன் போன்ற பொறை :**

*வள்ளுவர் வழியைத் தெரிந்தவன் ஒருவன். அவன் வலிமை மிக்கவன். என்றாலும் அடக்கமும் பொறுமையும் வாய்ந்தவன். அவனை இன்னொருவன் தாக்கிவிட்டான். இதனை வள்ளுவர் அறிகிறார். அவனிடம் சென்று [2] "அன்பனே! பொறுப்பாயாக! அவன் தாக்கிவிட்டான் என்று வெதும்பாது இருப்பாயாக! தாக்கியவன் இருக்கிறானே அவனுக்குச் சிறிது பொழுதுதான், 'அவனைத் தாக்கி விட்டேன்' என்னும் மகிழ்ச்சி இருக்கும். ஆனால் நீ தீமைக்குத் தீமை செய்யாமல் பொறுத்துக் கொண்டால் நாளும் பெருமை பெருகி வரக்காண்பாய். பகைத்தவனும் நண்பனாகக் காண்பாய்! உன் பொறுமையைக் கேள்விப்பட்ட மக்களும், [3] தங்கள் பொன்னை எவ்வாறு பேணிப் போற்றிக் காப்பார்கள். பொறாதவனை அவனே முயன்று காத்துக் கொள்ள முடியாது. பொறுத்தவன் தன் காவல் இல்லாமல்கூடப் பிறரால் காக்கப்படுவான்" என்றார். இயற்கையாகவே வள்ளுவர் வழியில் நின்ற அவன்மேலும் உரத்துடன் அந்நெறியில் நின்றான்.*

**நன்மையால் நாணவைத்தல் :**

*நாட்கள் சில கடந்தன. எவனோ ஒருவன் நன்றாக மூட்டி விட்டிருக்கிறான். ஆகவே முன்னர்த் தாக்கியவனே மீண்டும் வள்ளுவர் வழி நிற்பவனைத் தாக்கினான்; வாய் வலிக்க ஏசினான். "பொறுமைக்கு நற்காலம் இல்லை போலும்" என்று வள்ளுவர் வழியினன் நினைத்தான். ஆனாலும் பொறுமை இழந்தான் அல்லன். அந்நிலையில் வள்ளுவர் அவண் வந்தார். "அன்பனே! அரிய நண்பனே! பொறுத்தலின் சிறப்பைச் சொல்லுதற்கு இயலாது. உன்னை மீண்டும் தாக்கினான் என்பதால் உடனே ஒரு*

---

*2. குறள் : 156.*

*3. குறள் : 155.*

*1. குறள் : 314.*

முடிவுக்கு வந்துவிடாதே. அவனை இப்படியே விட்டு விடுவதும் சரியன்று. அவன் திருந்துவதற்குத் தக்க தண்டனை தரவேண்டும்; அவன் வருந்தி நாணுவதற்குத் தக்க தண்டனையாகவும் தர வேண்டும். எப்படி? அவனை நலிவு படுத்தியா? நான்கு பேர்கட்கு இடையே வைத்து ஏதேனும் இழிவு படுத்தியா? இல்லவே இல்லை. [1] பன்முறை தீமை செய்த அவனுக்குப் பன்முறை நன்மை செய்து நாணவைக்க வேண்டும். நான் செய்த கேடுகளுக்கோ இத்தகைய நன்மைகள் என்று எண்ணி எண்ணி அவன் நைந்து நாண வைக்க வேண்டும். தீயைத் தீயால் அணைக்க முடியுமா? நீரால் தானே அணைக்க முடியும்!'' என்றார்.

''பெரியீர்! உம் உரையைக் கேட்டு அன்றும், இன்றும் பட்ட துயர்கள் போதாவா? இன்னும் அவனுக்கு நான் நன்மை செய்யவும் வேண்டுமா? நன்மை செய்தால் மட்டும் திருந்திவிடுவானா? மேலும் மேலும் நன்மை பெறலாம் என்று அவன் எண்ணித் தீமை செய்யத் தொடங்கி விட்டால்....?'' என்றான் துன்பத்திற்கு ஆளான அவன்.

''நண்ப! தீமை செய்தவனுக்கு நன்மை செய்வதைக் கடமையாகக் கொள்ளவேண்டுமே ஒழிய 'நன்மை செய்யலாமா?' என்று வினாவுவதே வேண்டாச்செயல். தாக்கியவன் சால் பில்லாதவன் என்று கருதுகிறாய். தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்த விரும்புவாயானால் நீ சால்புடையவன் என்பது எவ்வாறு தகும்? சால்பில்லாதவன், சால்பில்லா ஒருவனைச் 'சால்பில்லாவன்' என்பது, குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடுவதாக அல்லவா அமையும். [1] ஆகவே நீ சால்புடையவன் என்றால் இன்னும் பொறுமையுடன் இருந்து அவனுக்கு நன்மையே செய்தல் வேண்டும்'' என்று அழுத்திக் கூறினார். மேலும், அவன் தெளிவடைவதற்காக ஒரு விளக்கம் தந்தார் வள்ளுவர்.

1. குறள் : 987.

1. குறள் : 151.

2. குறள் : 1040.

**புவியன்ன பொறுமை :**

"சான்றோய்! [1] பொறுமைக்குச் சான்றாக இருப்பது நிலம். அது தன்னை வெட்டுபவரையும் குத்துபவரையும் தாங்கி அருள் செலுத்தும் பான்மையினது. அன்றியும் தன்னைப் துன்புறுத்து கிறானே என்று எண்ணாமல் அவனுக்கு வேண்டிய வேண்டிய வளங்களை யெல்லாம் வாரி வாரி வழங்குகிறது. [2] மேலும், அது தன்னை வெட்டியும் குத்தியும் பயன் கொள்ள மாட்டாத ஆண்மை இல்லாதவனைக் கண்டு நகைக்கவும் செய்கிறது. இத்தகைய பொறுமைக்கு இருப்பிடமாம் புவியும் தாங்கமுடியாச் சுமைத் துயருக்கு ஆளாகும். எப்பொழுது என்று தெரிவாயா?" என்றார் வள்ளுவர்.

'பெரியீர்! எனக்குத் தெரியிவில்லை'

என்றான் அவன்.

**புவியும் தாங்காப்பொறை :**

[3] 'சால்பில்லாதவர்கள் இருக்கட்டும்; இன்று இல்லா விட்டாலும் இன்னொருநாள் சால்புகொள்வார்கள். ஆனால் சான்றோர்களும் தம் சான்றாண்மைத் தன்மையில் இருந்து குறைந்து விட்டார்கள் என்றால் - சால்புப் படிகளில் கால் வைத்து ஏற மாட்டாமல் கீழே இடறி வீழ்ந்து விட்டார்கள் என்றால் - அப்பொழுது இப்பெரு நிலம் தன் சுமையைத் தாங்கவே தாங்காது" என்றார் வள்ளுவர். அவனுக்கு நல்ல தெளிவு பிறந்தது. வள்ளுவர்க்கு நன்றி கூறிப் பிரியாவிடை கொண்டான் அவன்.

வள்ளுவர் யாத்த குறள் மணிகளைக் கொண்டு தீட்டப்பெற்ற சில காட்சிகள் இவை. தனி மனித அமைதிக்கு இவற்றினும் வேறென்ன வேண்டும்?

3. குறள் : 990.

1. திருக்குறள் : 776.

**காலங்கடந்த கண்ணோட்டம் :**

நாளெல்லாம் "போர் போர்" என்று முழக்கமிட்டு வாழ்ந்த மானவீரம் மல்கிய நாளிலே வாழ்ந்தார் வள்ளுவர்.[1] 'விழுப் புண் படாத நாள் வீண் நாள்' என்னும் வீர நிலையும், 'வீட்டுக்கு ஒரு வீரமகன் வருக' என்று பறையறைந்து போர்க் களத்திற்கு அழைக்கும் காலச் சூழ் நிலையும் அவர் முன் நின்றன. என்றாலும் அக் கால, இட எல்லைகளைக் கடந்து, உலக அமைதியில் அவர் கண்ணோட்டம் நின்றமை காணத் தக்கதாகும்.

# 4. சங்கச் சான்றோர் I

உலகில் போரும் பூசலும் ஒழிய வேண்டும்; பிணக்கும் பிளவும் மறைய வேண்டும். இவற்றுக்கு அடிப்படையாக வேண்டுவது என்ன?

**உலகம் ஒருகுடி :**

‘உலகம் ஒரு குடும்பம்’ என்னும் உணர்வு தோன்றுதல் ஒன்றே அடிப்படையாம் அறிவியல் வளர்ச்சி இன்றைய உலகை மிக மிகச் சுருக்கிவிட்டது உண்மை. இங்கிருந்து கொண்டே இங்கிலாந்தைத் தொலையாடியில் (டெலிவிசன்) காணும் படியான அளவில் அறிவியல் வளர்ச்சி அடைந்திருப்பது உண்மை. ஆனால், அவ்வறிவியல், ‘உலகம் ஒருகுடி’ என்னும் உணர்வை உண்டாக்கிவிட்டதா என்பதை ஆய்ந்து காண வேண்டியதாகவே உள்ளது.

**ஊரும் உறவும் :**

அமைதிக் கேடு எக்காரணங்களால் ஏற்படுகின்றது? மேற்கு, கிழக்கு, தெற்கு வடக்கு என்னும் திசைப்போர், மேல் கீழ், உயர்வு தாழ்வு என்னும் இனப்போர், வெள்ளை கறுப்பு என்னும் நிறப்போர், என் சமயம் உன் சமயம் என்னும் சமயப்போர், என் கட்சி உன் கட்சி என்னும் கட்சிப்போர், என் சாதி உன் சாதி என்னும் சாதிப் போர், உழைப்பாளர் தொழிலாளர் என்னும் பொருள் நிலைப் போர், பழக்க வழக்க மாறுபாட்டுப் போர் - ஆகிய இப்போர்கள் அமைதிக் கேட்டுக்கு அடிப்படையாக அமைகின்றன. இவற்றைத் துச்சமெனத் தள்ளிவிட்டு மாந்தர் ஒன்றுபட்டு வாழ முடியாதா? முடியும்! “எல்லாரும் எம் உடன் பிறந்தார்; எல்லா ஊர்களும் எம் ஊர்” என்னும் எண்ணம் உண்டானால் ஒன்றுபட்டு வாழ முடியும்.

உலகோர், தம்மை ‘ஒருதாய் வயிற்றுப் பிள்ளை’ யென உணர்ந்து கொண்டால் அன்றி உலகில் தோன்ற வாய்ப்பு இல்லை என்பதைத் தெளிவாகக் கண்டறிந்தார் சங்கச் சான்றோர் ஒருவர்.

அவர் பெயர் கணியன் பூங்குன்றன் என்பது![1] "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது அச்சான்றோர் வாக்கு.

தமிழர் விரிந்த பாங்கினர் என்பது இக் கணியன் பூங்குன்றன் உரையால் தெளிவாகும். அன்றியும்[2] 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலர் திருமொழியும்,[3] 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் வள்ளுவர் வாய்மொழியும் தக்க சான்றுகளாம்.

**உலக உள்ளம் :**

வட வேங்கடம் தென் குமரி என்னும் ஒரு நிலப்பரப்பிடை வாழ்ந்தவர்கள் தமிழ்ப் பெருமக்கள். என்றாலும், அவர்கள் உள்ளம் உலகத் தளவில் விரிந்து பரந்து கிடந்தது. தாம் வாழ்ந்த தமிழகப் பகுதியையும் 'தமிழ் கூறு நல்லுலகம்' என்று குறித்தனர். "ஆதி பகவன் முதற்றே உலகு" என்று தொடங்கினார் வள்ளுவர். 'உலகம் உவப்ப' என்று திருமுருகாற்றுப் படையைத் தொடங்கினார் புலவர் தலைவர் நக்கீரனார். "மாநிலம் சேவடியாக" என நற்றிணை தொடங்குகிறது. "ஏம வைகல் எய்தின்றால் உலகே" எனக் குறுந்தொகையின் முதற்பாட்டு முடிகின்றது. இன்ன பிற சான்றுகள் பலப் பல. இத்தகைய உலகக் கண்ணோட்டம் உடைய சங்கச் சான்றோர்கள் செய்துள்ள அமைதிப் பணிகளும் பலப்பல. அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**அமைதி நெறி :**

அமைதி உண்டாக்கக் கருதுவார் இருவகை நெறிகளில் சொல்லறம் ஆற்றுவது உண்டு. ஒருவகை, அமைதிச் சூழ்நிலை ஏற்படும் போது அதனை நெஞ்சார வாழ்த்தி வரவேற்பது; மற்றொருவகை, அமைதிக் கேட்டுச் சூழ்நிலை ஏற்படும் போது வீரரினும் வீரராக அஞ்சாது நின்று அமைதிக்கேட்டுச் சூழ்நிலையை வீழ்த்துவது. இவ் விருவகை நெறிகளிலும் சங்கச் சான்றோர் பணி செய்துள்ளனர்.

முடியுடை மூவேந்தர்களுக்குள்ளும் கொள்வினை கொடுப்பினைகள் இருந்தன. என்றாலும் அவர்கள் உள்ளம் ஒன்றி நின்று உறவு பூண்டு வாழ்ந்த குறிப்புக்கள் அரிதாகவே காணக் கிடக்கின்றன.

1. புறநானூறு : 192.

2. திருமந்திரம் : 2104.

3. திருக்குறள் : 972.

அத்தகைய ஒன்றுபட்ட காட்சிகளைக் காணுங்கால் அமைதி நாட்டம் உடைய புலவர் பெருமக்கள் தம் நயன்மிகு நாவால் நன்கனம் வாழ்த்தி வரவேற்றுள்ளனர்.

**நீவிர் நீடு வாழ்க!**

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் நெஞ்சத்தால் ஒன்றுபட்டு நேயங்கொண்டு ஓரிடத்தில் மகிழ்ந் திருந்தனர். அதனைக் கண்டார் கவிஞர் காரிக்கண்ணனார். அவருக்கு உண்டாய களிப்புக்கு எல்லை இல்லை. இந்த இருபெரு வேந்தர் களும் இவ்வாறே கூடி இருந்தால் நாட்டுக்கு எவ்வளவு நலம் பயக்கும் என்று எண்ணினார். அவ்வெண்ணத்தை அவ்வேந்தர்கள் இனிது கேட்கும் வண்ணம் உரைத்தார். உரைக்குங்கால் தம் நாட்டு வேந்தன் ஆகிய சோழனை முன்னிலைப்படுத்தி[1] "நீயோ, உறையூர் வேந்தன்; இவனோ , கூடற் காவலன். இருவரும் ஒருங்கு கூடிய தோற்றம், பால்நிற வண்ணனாம் பலராமனும், நீலநிற வண்ணனாம் கண்ணனும் கூடிய தோற்றம் போல் உள்ளது. எமக்கு இதனினும் இன்பந் தருவது எதுவும் இல்லை. நீங்கள் ஒன்றுபட்டு நிற்கும் இந் நன்னிலையைப் பொறுக்காமல் உங்களைப் பிரித்து வைக்கவும் சிலர் செயலாற்றலாம். சீரற்ற அவர்கள் செயலைச் சிந்தையிடைக் கொள்ளாமல் நெடுநாள் வாழ்வீர்களாக!" என்றார்.

ஒன்று பட்டதை வாழ்த்துவதுடன் ஒற்றுமையைக் கெடுக்க நினைவாரையும் சுட்டிக்காட்டி அறிவுறுத்தினார் காரிக்கண்ணனார். அஃது அவர்தம் அமைதிப் பணியின் வேட்கையை நன்றாகத் தெரிவிக்கிறது

**மும்மன்னரும் முத்தீயும் :**

இங்குச் சோழனும் பாண்டியனும் கூடியிருக்கக் கண்டோம். இன்னோரிடத்தே சேரமான் மாவண்கோ, பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராச சூயம் வேட்ட பெருநற் கிள்ளி என்னும் மூவேந்தரும் கூடியிருக்கக் கண்டார் ஒளவையார். அவர் அக்காட்சியில் உள்ளம் ஒன்றினார். மூவேந்தர் களின் ஒன்றுபட்ட இருப்பு, அந்தணர் வேள்விகளில் வளர்க்கும் செந்தழல் மூன்றையும் அவருக்கு நினைவூட்டியது.

1. புறநானூறு : 58.

[2] “வேந்தர்களே! வீடுபேறு ஒன்றையே விரும்பி ஆசைகளையெல்லாம் அடக்கிய அந்தணர்கள் வளர்க்கும் மூன்று தீக்களைப் போல நீங்கள் அழகாக அமைந்துள்ளீர். நீங்கள் மூவரும், வானில் தோன்றும் மீன்களினும், மண்ணில் வீழும் மழைத் துளிகளினும் பலகாலம் வாழ்வீர்களாக” என்று வாழ்த்தினார். ஆள்வோர் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதில் அவருக்கு அவ்வளவு ஆவல்!

**மயிலுக்குதவிய மன்னவன் :**

அருள் உள்ளம் மிக்கவன் பேகன். அவன் ஒருநாள் மழை மேகம் கண்டு களிப்புடன் ஆடும் மயிலைக் கண்டான். குளிர் தாங்கமாட்டாமல் அது நடுங்குவதாக அவனுக்குத் தோன்றியது. தன் வாடைத் துயரைப் பொருட்டாக எண்ணாமல், மேலே மூடியிருந்த ஆடையை எடுத்து மயிலுக்குப் போர்த்தினான். அத்தகை அருளாளன் அவன். மயிலின் நடுக்கம் காணப் பொறாத அவன் ஏதோ காரணத்தால் தன் மனைவியை நைந்து அழவிட்டு விட்டான். நல்லூரர் என்னும் ஊரில் வேறொரு நங்கையுடன் தன் நாளைக் கழித்தான்.

**பண்புடைய பாவலர் :**

பேகன் மனைவியின் பெயர் கண்ணகி. அவர் துயரை அறவோர் சிலர் அறிந்தனர். அரசரே என்று கருதி வாளா விருக்க அவர்களால் முடியவில்லை. அரசியார் வாழ்வில் அமைதி உண்டாக்க முயன்றனர். முயன்றவர்கள் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர்கள் ஆவர்.

[1] “அரசே! நாங்கள் உன்னையும் உன் மலையையும் பாடினோம். அப்பொழுது குழல் ஒன்று கரைந்து அழுவது போல் ஒருத்தி அழுதாள். அவள் யாவளோ? நீ அறிவாயா? அவள் நின்னால் அருள் செய்யத் தக்கவள்” என்றார் கபிலர்.

2 “வேந்தே! நாங்கள் இசை மீட்டினோம். அப்பொழுது எங்கள்காதில் அழுகை ஒலி விழுந்தது. அழும் அவளை, ‘எம் வேந்தனுக்கு உறவு உடையையோ?’ என்று வினாவினோம். அவள் வழிந்த கண்ணீரைக் கையால் துடைத்துக் கொண்டே ‘நாங்கள்

2. புறநானூறு : 367

1. புறநானூறு : 143.

2. புறநானூறு : 144, 145.

இப்பொழுது அவன் உறவு உடையோம் அல்லோம்' என்றாள். நீ அவளிடத்து அருள் செய்யாது இருப்பது கொடிது. உடனே தேர் ஏறி அவள் துயரத்தை ஒழிப்பாயாக'' என்றார் பரணர்.

[3] ''மன்னவ! எமக்கு எந்தவொரு பரிசும் வேண்டா. உன் மனைவி கூந்தலில் பூச்சூடி மகிழும் வண்ணம் உன் குதிரைகள் தேரில் பூட்டப்படுவனவாக'' என்று தம் அரிய பரிசை வெளியிட்டார் அரிசில் கிழார்.

[4] ''காவல்! காடுமலை கடந்து வந்து நின்னைப் பாடி நிற்கும் எங்கட்கு நீ இப்பொழுது தரவேண்டிய பரிசு ஒன்றே. அது, நின் மனைவி மகிழ்வு எய்தும் வண்ணம் இப்பொழுதே இவ்விடத்தில் இருந்து நீ புறப்படுவதே'' என்றார் பெருங்குன்றூர் கிழார்.

**பிரிந்தவர் கூடல் :**

இவ்வாழ்வின் இடையே புகுந்தும் புலவர்கள் ஆற்றிய அமைதித் தொண்டு தலைமேல் கொள்ளத்தக்கதாகும். தந்நலம் கருதாப் புலவர்கள் உரையைத் தட்டிக் கழிக்காமல் பேகன் தேரில் ஏறினான். அவன் வரக் கண்ட மனைவியார் மகிழ்ந்தார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

**தலைக்கு விலை :**

காடு மலை கடந்து வந்தார் ஒரு புலவர். அவர் பெயர் பெருந்தலைச் சாத்தனார். வள்ளல் குமணனைக் காணவேண்டும் என்பது அவர் ஆவல். ஆனால், அவன் தன் ஆட்சியைத் தம்பிக்குக் கொடுத்துக் காடு சென்றதை அறிந்தார். காடு தேடிச் சென்று அங்குக் குமணனைக் கண்டார். கடல் விரிந்து பரந்து கிடந்தாலும் நீர்வேட்கை உடையவர் ஊற்றைத் தேடுவது தானே வழக்கு!

சாத்தனார் மிக வறுமைக்கு ஆட்பட்டவர். தம் நிலைமையைக் குமணனிடம் கூறினார். குமணனோ பாடும் புலவன் பரிசில் இல்லாமல் மீள்வதுபோல் கொடுந்துயரானது ஒன்றும் இல்லை என்று கருதினான். தன் வாளை எடுத்துப் புலவரிடம் தந்து தலையைக் கொண்டு தம் தம்பியிடம் போகுமாறு வேண்டினான். ஏனெனில், அண்ணன் தலைக்கு விலை வைத்திருந்தான் அவன் அருமைத் தம்பி!

3. புறநானூறு : 146.

4. புறநானூறு : 147.

**தலைகாத்த தமிழ் :**

வாள் பெற்ற புலவர் உள்ளத்தில் ஒரு போராட்டம் கிளம்பியது. அதனைக் கொண்டே அமைதித்தொண்டு செய்ய முனைந்தார். குமணன் தம்பி இளங்குமணன் இருக்கும் அரண்மனையை அடைந்தார் வாளுடன்.[1] "வேந்தே! நிலையற்ற உலகத்தில் நிலைபெற்று வாழ விரும்பும் பெருமக்கள் தம் புகழை நிலை நிறுத்தி வைத்து இறந்தார்கள்" என்றார். அவ்வுரையால் அதற்கு முன் இருந்த பேய்த்தன்மை இளங்குமணனிடம் இருந்து விரைந்து ஓடியது. உடன் பிறப்புப் பற்று உண்டாயது. புலவர், "யான் உன் அண்ணனைப் பாடினேன். அவன் பாடிய புலவன் பரிசில் இல்லாமல் திரும்புவது நாடு இழந்த கொடுமையினும் கொடுமையானதாகும் என்று எண்ணித் தன் தலையைக் கொய்து கொள்ளுமாறு வாளைத் தந்தான். அவ் வெற்றிக் களிப்புடன் இங்கு வந்துள்ளேன்" என்றார். அதுவரை புலப்படாத அண்ணனது அருங்குணங்கள் அப்பொழுது புலப்பட்டன. ஆகவே, காட்டுக்குச் சென்று அண்ணனைக் கட்டித் தழுவி அழைத்து வந்தான். மீண்டும் மன்னவன் ஆக்கினான்; நாடு நலம் பெற்றது! வறுமைப் புலவர் சாத்தனார் தம் நிலைமையை மறந்து எத்தகைய அருமையான அமைதித் தொண்டு செய்துள்ளார்! அவர் தொண்டு வாழ்வதாக!

**பண்பிலாப் பகை :**

காவலனும் பாவலனுமாகத் திகழ்ந்தவன் கிள்ளி வளவன். தன் குடிகளில் ஒருவனுடைய சிற்றூரைத் தேடிச்சென்று அவனை உள்ளங்குளிரப் பாடியவன் அவன். அத்தகையவனுக்குப் பகைவனாக இருந்தான் மலையமான் திருமுடிக்காரி என்னும் மன்னன். காரியோடு கிள்ளியின் பகை நின்று விடவில்லை. காரியின் காலத்திற்குப் பின்னரும் அவன் மைந்தர் மேல் கிள்ளியின் பகை தாவியது.

**கொலைக்களத்தில் கோவூரார் :**

காரியின் மைந்தர் இருவரையும் கட்டி இழுத்து வரச் செய்தான் கிள்ளி. ஊர் அறிய ஓர் இடத்தில் நிறுத்தி, யானையின் காற்கீழ்க் கிடத்தி அவர்களைக் கொல்லத் தொடங்கினான். அருளாளர் உள்ளங்களில் அரங்கொண்டு அராவுவது போல் இருந்தது இரக்கமற்ற இச்செயல். நாற்படைகளைக் கொண்டு நானிலம் ஆளுபவன் செய்யும் நயனற்ற செயலைத் தடுத்துக்

1. புறநானூறு : 195.

கேட்கும் உரம் எல்லோருக்கும் உண்டா? கோவூர் கிழார் என்னும் அருட்புலவர் கொலைக்களத்தில் நிற்கும் அக்கோக் கிள்ளியை நெருங்கினார்.

[1] "வேந்தே! புறாவொன்றின் துயரத்தைப் பொறுக்க மாட்டாமல் தன் உடலையே அரிந்து தந்த அருளாளன் வழியில் வந்தவன் நீ. இவரோ, புலவர்களைப் பேணுவதே தம் தொழில் எனக்கொண்டு உள்ளவெல்லாம் உவந்தளித்த வள்ளல் பெருமகன் வழி வந்தவர். இதோ பார்! இச்சிறுவர்கள் இந்தப் புதிய இடத்தையும் இங்குள்ள ஆரவாரத்தையும் கண்டு அழுது நின்றனர். ஆனால், ஆடும் மணியுடன் மலைபோல் அசைந்து வரும் யானையைக் கண்டு அழுகையை மறந்து வியப்புடன் நோக்குகின்றனர். நான் சொல்லும் இவற்றைத் தெளிவாகக் கேட்டாய் என்றால் நீ விரும்பிய வண்ணம் செய்க!" என்றார். கோக்கிள்ளி தான் விரும்பியதைச் செய்தான் அல்லன். கோவூரார் விரும்பியதையே செய்தான். இந்நிகழ்ச்சியை நோக்குங்கால் கோவூரார் போல நயமிகப் பேசி நற்றொண்டு புரியவல்ல தொண்டர்கள் உலகிற்கு நிரம்பவேண்டும் என்னும் ஏக்கமும் எழும்பாமல் இருக்காது.

**மதயானைமேல் மன்னவன் :**

மதங்கொண்டு ஓடிவருகிறது யானை. அதன் மேல் இருப்பவன் பாகன் அல்லன். சோழநாட்டு மன்னன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி என்பவன். வீரர்களும், பாகர்களும் யானையை நிறுத்த முழுமுயற்சி செய்கின்றனர். வெறிகொண்ட அவ்யானை சோழநாட்டு எல்லை கடந்து சேரநாட்டுள் செல்கின்றது. அதன் தலைநகராம் கருவூரையும் நெருங்குகின்றது. வீரர்கள் விடாமல் தொடர்கின்றனர். வேந்தனும் கீழே விழாமல் தடுத்து நிறுத்தப் பார்க்கிறான். இந்நிலைமையில் கருவூர் மாடத்தில் இருந்து காணுகின்றான் சேரமன்னன் அந்துவஞ்சேரல் இரும்பொறை. பகைவன் ஒருவன் படையுடன் வருவதாக அவனுக்குத் தோன்று கின்றது. கண் சிவந்து சினங்கொள்கின்றான். அப்பொழுது உடன் இருக்கிறார் அவ்வரசனது பெருமதிப்புக்குரிய முடமோசியார் என்னும் புலவர். அவர் கிள்ளியை முன்னரே அறிவார். சூழ் நிலையையும் அவரால் அறியமுடிந்தது. குறிப்பில் குறிப்பு உணரும் திறமிக்கவர் அவர்.

1. புறநானூறு : 46.

**பாலில் நீர் :**

[1] "வேந்தே! கடலில் செல்லும் கப்பல் போலவும், வானில் செல்லும் நிலவு போலவும் யானை வருவதைக் காண்கிறாய். அவ்யானையைச் சூழவும் சுறா மீனைப்போன்ற வாள் வீரர்கள் வருகின்றனர். இதனைக்கண்டு சினங்கொள்கிறாய். யானையோ மதங்கொண்டு பாகரை மீறி வருகின்றது என்பதை அறிவாயாக! இவன் எத்தயை துயர் இன்றியும் மீண்டுசெல்ல விடுவாயாக!" என்றார். பொங்கிவரும் பாலை நீர் விட்டுத் தணிப்பது போல் புலவர் தணித்தார். அச்செயல் இரண்டு அண்டை நாடுகள் அமைதியாக வாழத் துணையாயிற்று.

**வில்லும் சொல்லும் :**

இளந்தத்தர் என்பார் ஒரு புலவர். அவர் சோழன் நலங்கிள்ளியினிடம் சென்று சில நாட்கள் இருந்தார். பின்னர்ச் சோழன் நெடுங்கிள்ளி இடத்தை அடைந்தார். கிள்ளிகள் இருவருக்கும் பகைமை உண்டு என்பதைப் புலவர் அறியார். நெடுங்கிள்ளி, புலவர் பகைவனது ஒற்றராக இருக்கவேண்டும் என்று கருதினான். ஆகவே இரக்கம் காட்டாமல் கொன்றுவிடத் துணிந்தான். புலவர் இளந்தத்தருக்கு நல்லூழ் இருந்திருக்கிறது. ஆகவே அங்குக் கோவூர்கிழார் இருந்தார். அவர் இளந்தத்தரை நன்கு அறிவார். உடனே மன்னனிடம் சென்று, "பழமரம் நாடும் பறவைகளைப்போல பரிசில் கிடைக்கும் இடங்களைப் பாவலர்கள் விரும்பி அடைவர். அவர்கள் வாழ்வில் எத்தகைய களங்கமும் கொடுமையும் இல்லை. நாம் அவர்கள் மேல் குறையோ, கறையோ கற்பித்தல் அறம் அன்று" என்றார். வில்லாண்மையினும் சொல்லாண்மை வலியது என்பர். அதனை மெய்யாக்கியதுடன் புலவர் ஒருவர் உயிரையும் காத்தார் கோவூரார்! அவர் தொண்டு பெரிது! அவர் வாழ்க!

இதுகாறும் தனிப்பட்டவர் அமைதி வாழ்வுக்குப் பாடுபட்ட சங்கச்சான்றோர் சிலரைக் கண்டோம். இனி, நாட்டின் அமைதிக்குப் பாடுபட்ட சங்கச்சான்றோர் சிலரைக் காண்போம்.

# 5. சங்கச் சான்றோர் II

**அளவிலாக் களிப்பு :**

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டு வந்தான் தொண்டைமான். அவன் படைப் பெருக்கமும் அரண் வலிமையும் மிக்கவன். தன் படைகளையும், அதன் ஆரவாரத்தையும், அரணச்சிறப்பையும் கண்டு கண்டு களிப் படைந்தான். அளவிறந்த களிப்பு அறமற்ற செயலுக்கு ஏவும் அல்லவா!

**தகடூர்த் தலைவன் :**

தொண்டைமான் தன் நாட்டை அடுத்திருந்த தகடூரை ஆண்டுவந்த அதியமானைத் தாக்கக் கருதினான். எளிதில் வென்று விடலாம் என்றும் உறுதிகொண்டான். ஆங்காங்கு ஒற்றர்களை வைத்திருந்த அதியமானுக்குத் தொண்டைமான் எண்ணம் ஒருவாறு புலப்பட்டது. அவனது தவறான திட்டத்தால் அவன் நாட்டு மக்கள் அழிந்து போவதை அதியமான் விரும்பினான் அல்லன். ஆராயாமல் அரசன் செய்யும் செயலுக்கு அவன் நாட்டு மக்கள் யாது செய்வர்? அரசன் பகைத்து நின்றாலும் அவன் நாட்டு மக்கள் பகைவர் அல்லரே! ஆகவே அறவழியால் போரைத் தடுக்கக் கருதினான் அதியமான்.

நாடறிந்த தமிழ்ப்பெருமாட்டி ஔவையார். அவரைத் தொண்டைமானும் நன்கு அறிவான். ஆகவே ஔவையாரைக் காஞ்சி மாநகருக்குத் தூதராக அனுப்பி வைத்தான்.

**அதியன் அருள்நெறி :**

அதியமான் மாபெரும் வீரன். "நாள் ஒன்றுக்கு எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன், ஒரு திங்கள் காலம் முயன்று ஒரு தேர்க் காலைச் செய்தால் அது எத்தகைய உறுதிப் பாட்டுடன் இருக்குமோ அத்தகைய உறுதிப்பாடுடையவன்" என்று ஔவையாரால் பாராட்டப்பெற்றவன். அவனுடைய 'மழவர்' என்னும் படை வீரர்களோ போர் செய்தலைப் பொழுது

போக்கவும் விருப்பமிக்க விளையாட்டாகவும் கொண்டவர். அடிக்கும் கோலுக்கும் அஞ்சாமல் எதிர்த்துத் தாவும் ஆடரவம் போன்றவர். இத்தகைய படையும், வலியும் வாய்ந்தவன் அமைதித் தூது அனுப்பும் செயல் மதிக்கத் தக்கது. அமைதியும் சரி, இன்னா செய்யாமையாகிய 'அகிம்சை'யும் சரி, வீரர்களின் படைக் கருவிகளே அன்றிக் கோழைகளுடையனவாக இருக்க முடியா. தொண்டைமானினும் அதியமான் மெல்லியனாக இருந்து அமைதித் தூது அனுப்பினான் எனில் அது அச்சத்தின் பாற்பட்டதே ஆம்; அல்லது, தன்னலத்தின் பாற்பட்டதேயாம். வலியவன் அமைதித் தூது அனுப்புவதோ அருளின் பாற்பட்டது. அன்றியும், பொதுநலத்தின் பாற்பட்டதும் ஆகும்.

**காஞ்சியில் கவிப்பெருமாட்டி :**

ஔவையார் காஞ்சிமாநகரை அடைந்தார். அவர் வருகையின் நோக்கத்தைக் குறிப்பாக அறிந்தான் தொண்டைமான். தன் ஆற்றலையும், படைக்கருவிகளையும், அரணையும் காட்டுவான் போலப் படைக்கலக் கொட்டிலுக்கு ஔவையாரை அழைத்துச் சென்றான். வரிசை வரிசையாக வனப்புற அடுக்கப்பெற்ற கருவி களைத் தானே முன்னின்று காட்டினார். படைக்கருவிகளைக் கண்டு களித்த ஔவையார் தொண்டைமான் குறிப்பை அறியாதவரா?

[1] "வேந்தே! இங்கிருக்கும் கருவிகள் மிக அழகியன; மயில் தோகை அணியப் பெற்றுள்ளன; மாலை சூட்டப் பெற்றுள்ளன; நெய் தடவப் பெற்றுள்ளன; பிடிகளும் அழகுறச் செய்யப் பெற்றுள்ளன. காவல் மிக்க இடத்தில் அடுக்கிவைக்கப் பெற்றுள்ளன. உள்ளவற்றை யெல்லாம் ஊருக்கு உதவியவனும், இல்லோரை யெல்லாம் இனிய உறவாகக் கொண்டவனும் ஆகிய அதியமான் படைக்கருவிகள் அடிக்கடி போர்க்களம் சென்று பகைவர்களைத் தாக்குதலால் பக்கமும் நுனியும் அழிந்து கொல்லனது பட்டறையிலே காவலற்றுக் கிடக்கின்றன" என்றார்.

தொண்டைதான் படைக்கருவிகளைப் புகழ்வது போலவும், அதியமான் படைக்கருவிகளை இகழ்வது போலவும் ஔவையார் கூறினால் கூட, அவர் சொல்லில் அடங்கியுள்ள உட்கருத்து என்ன? "தொண்டைமான்! உன்படை உதவாப் படை; அழகுப் பொருளாக அமையும் படை! அவ்வளவோ; அதியமான் படையோ

1. புறநானூறு : 95.

அழியாப் படை; அடுத்து வந்தவற்றைத் தவறாமல் அழிக்கும் படை; இவற்றை அறிவாயாக" என்னும் உட்கருத்து விளங்க அல்லவோ ஔவையார் உரைத்தார்.

உண்மை உணர்ந்தான் தொண்டைமான். போர் எண்ணம் நீங்கினான். இரண்டு நாடுகளும் குருதி மழை கொட்டாமல் அமைந்து வாழ்ந்தன.

**முயற்சியே உயர்ச்சி :**

ஔவையார் ஒரு புலவர்; அதிலும் ஒரு பெண்பாற் புலவர். அவர் எடுத்துக்கொண்ட அமைதித் தொண்டு மிகச் சீரியது. [1] 'இஃது எம்மால் செய்தற்கு அரிது' என்று சிறிதும் சோர்வு கொள்ளாமல் முயற்சி செய்யவேண்டும். அத்தகைய முயற்சியை அமைதிப் பணிக்குக் கொண்டார் ஔவையார்; வெற்றியும் கொண்டார்; அவர் 'தொண்டு வாழ்க' என வாழ்த்துதல் நம் கடன். ஏனெனில் எத்துணையோ உயிர்கள் வன்கொலைக்கு ஆளாகாமல் வாழ்ந்தன அல்லவா!

போர் மூளாமல் தடுப்பது நல்லது. மூண்டு விட்டால் என்ன செய்வது? அப்பொழுதும் கூட முடிந்தால் அமைதிப் பணிக்கு முயல்வது நலம். அவ்வாறு போர்க்களத்தில் இருபக்கத்தார்களும் கைகலந்த பின்னர்க் கூட, துணிந்து அமைதித் தொண்டாற்றிய சங்கச் சான்றோர்களும் சிலர் இருந்துள்ளனர். தம் உயிரைச் சிறிய அளவில் கூடப் பொருட்டாக எண்ணாமல் போரிடைப் புகுந்து அவர்கள் செய்த தொண்டு நினைவு கூறத்தக்கது.

**சிறு பொறி :**

ஓர் ஊருக்குள்ளாகவே எதிர் எதிரான பறை முழக்கம். இன்னும் தெளிவாகச் சொன்னால் ஒரு வீட்டுக்குள்ளேயே எதிர் எதிராக பறை முழக்கம். ஆனால், அது வீட்டுப்போர் அன்று! நாட்டுப் போராகிவிட்டது. 'சிறுபொறி பெருந் தீ' என்பது பழமொழி அல்லவா.

**உயிர் நட்பு :**

பாண்டிய நாட்டுப் பிசிராந்தையாரிடம் 'உம் பெயர் என்ன?' என்று எவரேனும் கேட்டால் 'என் பெயர் கோப்பெருஞ்சோழன்' என்பார். கோப்பெருஞ்சோழனிடம் 'உன் பெயர் என்ன?' என்று

1. திருக்குறள் : 611.

*வினாவினால் 'என் பெயர் பிசிராந்தையார்' என்பான். ஆனால் அவர்கள் கண்டறிந்தது இல்லை; கேட்டறிந்த அளவே உண்டு. உணர்ச்சியால் ஒன்றுபட்ட அவர்கள் நட்பு உயிர்நட்பு ஆகியது. உலகவழக்கில் உயிர்நட்பு என்று கூறுவது போலவா? சோழன் வடக்கிருந்த போது தாமும் வடக்கிருந்து இறந்து தம் 'உயிர் நட்பு' என்பதை உலகறியச் செய்துவிட்டாரே பிசிராந்தையார்.*

**களத்தில் கைகலப்பு :**

*பாண்டிய நாட்டு அறவோர் சோழன் மேல் உயிரன்பு கொண்டார். சோழன் மைந்தரோ அவனுக்குப் பகையாக நின்றனர். தந்தையைப் பகைவன் ஆக்கிப் பறையும் சங்கும் முழங்க நாற்படை களையும் ஏவிப், போர்க்களத்தில் நிற்கின்றனர். அரசன் மைந்தர் களது அறமற்ற செயலால் நாட்டுமக்கள் அழிவுக்கு ஆளாக இருக்கின்றனர். இந்நிலை எவருக்கே இன்பந்தரும்? முன்னைப் பகைவராக இருக்கும் பிறநாட்டவர்க்கு வேண்டுமானால் இன்பமாக இருக்கலாம். உள்நாட்டில் வாழும் நன்னெஞ்சி னர்க்குப் பெருந்துயராக இருந்தது. ஆனால் அதைத் தடுப்பது அவ்வளவு எளிய செயல் அல்லவே. களத்தில் அல்லவோ இருதிறத்துப் படைகளும் கைகலக்க நிற்கின்றன.*

**படைக்கடலில் பாவலர் :**

*படைக்கடலின் இடையே ஒரு புலவர் வருகிறார். அவர் பெயர் புல்லாற்றூர் எயிற்றியனார் என்பது. மைந்தர் நிற்கும் பக்கத்தைப் புலவர் நோக்கவில்லை. தந்தையின் பக்கம் சென்றார். அவர் கையைப் பற்றினார். பாகன் பின்னே செல்லும் யானையைப் போல் பாடும் புலவர் பின்னே சென்றான் கோப்பெருஞ்சோழன்.*

*வேந்தன் போர்க்களத்தை விட்டு வெளியேறவும் ஆரவாரத் துடன் நின்ற வீரர்கள் அடங்கினர். புலவர், அமைதிப் பணியைத் தொடங்கினார்.*

*"போராற்றலும் வெற்றித் திறமும் வாய்ந்த வேந்தே! நின்னை எதிர்த்து வந்து நிற்கும் இருவரையும் எண்ணினால் நின்பகைவர் அல்லர்; நீயும் அவர்கட்குப் பகைவன் அல்லை. பகைமை பாராட்ட வேண்டாத இருதிறத்தார்கள் பகைத்து நின்றால் உண்மைப் பகைவர்களுக்குப் பெருமகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா!*

"அஃதிருக்கட்டும், எத்தகையவர் வாழ்வுக்கும் ஓர் எல்லை யுண்டே. நீயும் ஒரு நாள் விண்ணுலகு அடைவது உறுதி. அக் காலத்தில் உன் நாட்டுரிமை எவர்க்கே சேரும்? இவர்களுக்கே உரிமைப்பட்டது அல்லவா!

"புகழ் மிக்க வேந்தே! கேள். இப்பொழுது எதிர்க்கும் இவ்விருவரும் நின்னிடம் தோற்று நீ வென்றால் அவ்வாட்சியை எவர்க்கே தருவாய்? வேற்றவர்க்குத் தர உன் உள்ளம் விழையுமா?

"மற்றொன்று; வேந்தே! நீ ஒரு வேளை இவர்கட்குத் தோற்று விட்டால்! நினைக்கவே நாணமாக இருக்கிறது. உன் பகைவர்கள் மகிழ அதற்கு மேலும் என்ன வாய்ப்பு வேண்டும்?

"அரசே! போரை ஒழிப்பாயாக; நாட்டு மக்களை நலிக்கா திருப்பாயாக; விண்ணுலகோர் விரும்பி ஏற்கும் விருந்தாளன் ஆவாயாக" என்றார் புலவர் எயிற்றியனார்.

புலவர் உரையைத் தன் செவிக்கண் ஏற்றான் சோழன். நாட்டின் நல்வாழ்வும், வீட்டின் நற்பேறும் கருதிப் புலவர் இருந்த போர் ஒழிந்தது. புல்லாற்றூரார் தொண்டு பல்லாயிரம் பேர் களைச் சாவில் இருந்து காத்தது. ஒருவரை ஒருவரே காக்க அரிய நிலையில், பல்லாயிரம் பேர்களை ஒருவர் காப்பதென்பது எளிமை யானதா?

**சேர நாட்டில் சோழ வேந்தன் :**

கோப்பெருஞ்சோழன் இருந்தாண்ட உறையூரையே தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான், இன்னொரு வேந்தன். அவன் கோவேந்தனாகவும் பாவேந்தனாகவும் விளங்கினான். புலவர் தோழனாகவும், நல்லோர் நண்பனாகவும் திகழ்ந்தான். அவன், மலையமான் காரியின் மக்களை யானைக் காற்கீழ்க் கிடத்திக் கொல்ல முயன்ற போது கோவூர்கிழார் காத்த அருட் செயலை முன்னர்க் கண்டோம். அக்கிள்ளி வேந்தன் சேர நாட்டுக் கருவூர் மேல் படையெடுத்துச் சென்றான்.

தடையொன்றும் இன்றிச் சேரன் தலைநகர் வரை சென்றான் சோழன். சேர அரசன் அது வரை என்ன செய்தான்? தக்க காவலாகத் தன் அரண்மனையைக் கொண்டு உள்ளேயே பதுங்கி இருந்தான். அஞ்சிய பகையைத் தாக்க முனைவது ஆண்மை அன்று என்று சோழன் நினைத்திருக்க வேண்டும்; போரை நிறுத்தி இருக்கவேண்டும். அவ்வாறு அவன் செய்யவில்லை. ஆகவே போரை நிறுத்த வேண்டுவது அறவோர் கடன் ஆயிற்று.

**கண்டதும் கேட்டதும் :**

ஆலத்தூர் கிழார் என்னும் புலவர் கருவூரை முற்றுகை இட்டிருந்த கிள்ளி வளவனிடம் சென்றார். அடைத்து உள்ளே இருப்பவனிடம் போய் ஆவது என்ன? புலவர் கிள்ளியை நெருங்கும் போது, வீரர்கள் கருவூருக்கு அருகில் இருந்த சேரனது காவல் மரங்களை வெட்டி வீழ்த்தினர். அதனைக் காண்டார். வெட்டும் ஒலி சேரனது மதிலில் மோதி எதிரொலி செய்தது. அதனைக் கேட்டார். கருவூரை ஒட்டி ஓடும் ஆன் பொருநை ஆற்றின் மணல்மேடுகளில் இருந்து விளையாடும் இளமகளிர் அஞ்சி ஓடுவதைக் கண்டார். அவர்கள் அரற்றுதலைக் கேட்டார். அரசன் கிள்ளியினிடம் பேசத் தொடங்கினார்.

**புலவர் பொருளுரை :**

"அரசே! நீ உன் பகையரசனைக் கொல்லக் கருதினால் கொல்க! கொல்லாது விடக்கருதினால் விடுக! ஆனால் உனக்குப் பெருமையாவது எது என்பதை மட்டும் எண்ணிப்பார்! இளமகளிர் இருந்து விளையாடும் ஆன்பொருநை ஆற்று மணல் திட்டைகள் சிதைகின்றன; அருகில் உள்ள காக்களில் இருக்கும் காவல் மரங்கள் கோடரியால் வெட்டப்படுகின்றன. இவற்றை எண்ணாமல் அரணுக்குள் இனிது அமைந்து கிடக்கும் ஆற்றலிலா அரசனுடன் அமர் புரிந்தார் என்பது நாணுதற்கு உரியது!" என்றார்.

"பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்க துடைத்து"

என்பது அறவோர் உரை. இதனைத் தானே அறியாமல் போயினும் அறிந்த ஒருவர் உரைக்கும் போதாவது கேட்டுப் போற்றி ஒழுக வேண்டும். போற்றி ஒழுகினான் கிள்ளிவளவன். போர் மூட்டம் கலைந்தது. புலவர், புகழுக்கு உரியவர் ஆனார்.

**ஒரு குடியில் கொடும்பகை :**

சோழன் நலங்கிள்ளியும், நெடுங்கிள்ளியும், ஒரு குடிப் பிறந்தவர்கள். ஆனால் ஒன்று பட்டு வாழ்ந்தார் இலர். நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைத் தாக்க முனைந்தான். நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையின் மதிலை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்தான். தாக்குதல் வலுக்கவே, ஆங்கிருந்து ஓடி உறையூர்க் கோட்டையின் உள்ளே புகுந்து கதவை மூடிக்கொண்டான். அவன் நிலைமை

அறத்தோடு சேர்ந்ததாகவும் இல்லை; மறத்தோடு பொருந்திய தாகவும் இல்லை. ஆகவே ஓடி ஓடி அமைதிப்பணி புரிந்த அருட் புலவர் கோவூரார் இந்நிலைமையை அறிந்து உறையூர் சென்று நலங்கிள்ளியைக் கண்டார்.

**வள்ளல் புலவரும், கிள்ளிகளும் :**

"மன்னவ! மதிலுக்குள் இருப்பவன் பனம்பூ மாலை சூடிய சேரனும் அல்லன். வேப்பம்பூ மாலை சூடிய பாண்டியனும் அல்லன். அவன் சூடியிருப்பதும் ஆத்திப்பூ. நீ சூடி இருப்பதும் ஆத்திப்பூவே. இப்பூவே நீங்கள் இருவரும் ஒரு குடியினர் என்பதைக் காட்டும். அவ்வாறு இருக்கவும் நீங்கள் இருவரும் போரிடுவது உங்கள் குடிக்கே இழுக்காகும். எவர் ஒருவர் தோற்றாலும் சரி உங்கள் குடிக்கு இழிவே.

"எந்தப் போராட்டத்திலாவது போரிட்ட இருவரும் வெற்றி காண்பது உண்டா? ஆகவே, இது உங்கள் குடிக்குப் பெருமை தருவது ஆகாது. அன்றியும் உங்கள் பகைவர்க்கு மாறா மகிழ்ச்சியும் தரும். ஆதலால் போர் ஒழிக" என்றார்.

நலங்கிள்ளி முற்றுகை தவிர்ந்தான். நெடுங்கிள்ளியும், நாட்டினரும் உய்ந்தனர். இத்தகைய தொண்டு செய்த சங்கச் சான்றோர் பலர். அதற்குரிய சான்றுகளும் பல. சுட்டிக் காட்டும் அளவில் சிலவற்றை இவண் அறிந்தோம். இனி இந்நாட்டில் இருந்து அமைதிப் பணி செய்தற்கென வடநாடு சென்ற ஒரு வேந்தனைக் காண்போம்.

**ஒரு செந்தண்மை :**

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நடந்த வியத்தகு நிகழ்ச்சி இது. பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் போர் நடந்தது. அதற்குப் பாரதப் போர் என்பது பெயர். அது பதினெட்டு நாட்கள் நடைபெற்றது. அப் போர்க்குத் துணையாகப் பலப்பல அரசர்கள் சென்று இரு பக்கத்திலும் கலந்து போரிட்டனர். ஆனால், தமிழ்நாட்டைச் சேர்ந்த உதியஞ் சேரலாதன் என்னும் மன்னவன் இரண்டு பக்கப் படைகளுக்கும் துணையாகச் சென்றான். 'அஃதெப் படி முடியும்?' என்னும் ஐயம் எழலாம். ஆனால் அவன் இரண்டு பக்க படைகளுக்கும் செயற்கரிய உதவி செய்த செந்தண்மைச் செயலைப் புறநானூறு இன்றும் மலைமேல் விளக்கெனக் காட்டுகின்றது.

**உண்டியே உயிர் :**

வண்டி வண்டியாக வடநாட்டுக்கு அரிசி பருப்புக் கொண்டு சென்றான். அவர் இவர் என்று பாராமல் போர் வீரர் அனைவருக்கும் சோறு படைத்தான். உணவுக்கொடைக்கு விஞ்சிய கொடையே இல்லை. ஏனெனில் [1] "உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே" ஆவர். அதிலும் போர்க்களத்திற்குக் கொண்டுபோய் உணவுதரும் அறத்திற்கு இணையான ஓர் அறம் இருக்கவே முடியாது. அச் செயற்கருஞ் செயலை வியந்து பாராட்டுகின்றார் முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர்.

**முடிநாகர் முறையுரை :**

"அசைந்தாடும் பிடரிமயிரைக் கொண்ட குதிரைகளை யுடைய பாண்டவர் ஐவருடனே துரியோதனன் முதலான நூற்று வரும் போரிட்டுக் களத்தில் மடியும் அளவும் இருபடைகளுக்கும் பெருஞ்சோறு வழங்கி உதியஞ் சேரலாதன்" என்று பாராட்டுகிறார் முடிநாகராயர்

2 "அலங்குகளைப் புரவி ஐவரொடு சினை இ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்மை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தாய்"

என்பது அவர் வாக்கு.

இந்நாளில் சாரணர் படையும், செஞ்சிலுவைச் சங்கமும் செய்யும் பணியைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம்மவன் ஒருவன் செய்துள்ளான் எனின் அச்சிறப்பை மதிப்பதோடு அவன் வழிமுறைக்கு ஏற்ற செயல்களிலும் நாம் ஈடுபடுதல் வேண்டும்.

புலவர்கள், அமைதிப் பணிக்குத்துணை நின்ற பெருமக்களைப் பாராட்டியது போலவே, அமைதிப் பணிக்குத் துணையாகாதவர் களைப் பழிக்கத் தவறினார் அல்லர். [3] 'இருவேறுலகம்' தானே இது.

1. புறநானூறு : 18.

2. புறநானூறு : 2.

3. குறள் 374.

**நயமிலா நன்னன் :**

நன்னன் என்பவன் ஓர் அரசன். ஆற்றில் மிதந்து வந்த மாங்கனி ஒன்றை எடுத்துத் தின்ற அறியாக் குற்றத்திற்காக இளஞ்செல்வி ஒருத்தியைக் கொன்றொழித்த பாவி அவன்! அவன் 'பெண்கொலை புரிந்த நன்னன்' என்று பேசப்பட்டான். அவன் பரிசிலைக்கருதிப் புகழ்ந்து பாடுதற்குப் புலவர் எவரும் சென்றார் அல்லர். அவனை என்ன, அவன் பரம்பரையையே பாடுவது பாவம் என்று ஒதுக்கினார்.

நன்னன் வழியில் வந்தவன் இளவிச்சிக்கோ என்பவன். அண்ணனும் தம்பியும் அமைந்து வாழ அருந் தொண்டாற்றிய புலவர் பெருந்தலைச் சாத்தனாரை அறிவோம். அவர் காணுகிறார் இளவிச்சிக்கோவை. இளங்கண்டீரக்கோ என்னும் அரசனுடன் அவன் கூடியிருக்கும்போது காணுகிறார். பிறர் ஒருவனாக இருப்பானே ஆனால், 'நீங்கள் இவ்வாறு இணைந்து நெடிது வாழ்க' என்று வாழ்த்தி இருப்பார். ஆனால் புலவர் இங்கு அவ்வாறு செய்தாரல்லர்.

**ஏன். தழுவவில்லை :**

இளங்கண்டீரக்கோவைத் தம் அன்பெல்லாம் கூட்டித் தழுவி இன்புற்றார். விச்சிகோவை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. இது விச்சிக்கோவுக்குப் பெரிய மானக் கேடாகத் தோன்றியது. ஆகவே, 'என்னை ஏன் அவ்வாறு தழுவி இன்புறவில்லை' என்று புலவரிடம் வினாவினான்.

அறப் புலவர்-அமைதித் தொண்டர்-மறைத்தாரா? உடனே, [1] "நீ தழுவுவதற்குத் தக்கவன் தான் என்றாலும், 'பெண்கொலை புரிந்த நன்னன் வழியில் வந்தவன்' என்ற ஒன்று உன்னைத் தழுவத் தடையாக உள்ளது" என்றார். அறப்பணிக்குத் துணையாவாரை வாழ்த்தும் நெஞ்சம், அதற்குக் கேடு சூழ்வாரைப் புறக்கணிக்கத் தவறாதன்றோ!

இங்குக் கண்ட குறிப்புக்களால் சங்கச் சான்றோர் சால்பும், அவர்கள் செய்த அமைதித் தொண்டும் ஒருவாறு புலனாம், இனிச், சமயச் சான்றோர் ஆற்றிய அமைதிப் பணிகளை அறிவோம்.

1. புறநானூறு : 151.

# 6. சமயச் சான்றோர் - I

## புத்தர் பெருமான்

**சமயச்சால்பு :**

உலகியலின் உண்மை நிலைமையை அறிந்து 'உயிர்கள் ஈடேறுதல் வேண்டும்' என்னும் நோக்குடன் தோன்றினவே சமயங்கள் ஆகும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று வாழும் வாழ்வு இன்பம் பயப்பது ஆகாதது மட்டுமின்றி மாறாத் துன்பம் தருவதும் ஆகும். பிறவி என்னும் பெருநோயை நீரும் உரமும் இட்டு வளர்த்துச் செழிக்க வைப்பது போன்றதும் ஆகும்" என்னும் கருத்தால் உண்மைப்பொருளை உலகுக்கு உணர்த்த எழுந்தனவே சமயங்கள்.

**பிள்ளைப்பெயர் :**

சமயங்களைத் தோற்றுவித்த சான்றோர்களும் சரி, அவற்றை வளர்க்க அரும்பாடுபட்ட சான்றோர்களும் சரி, வாழ்ந்து காட்டிய தொண்டர் பெருமக்களும் சரி, அவர்கள் அனைவரும் அமைதிக்கு அரும்பாடுபட்டுள்ளனர். அத்தகைய பெருமக்களுள் ஒருவர் புத்தர் பெருமான். அவர் பிள்ளைப் பெயர் கௌதமர் என்பது.

**களிப்பிலே கௌதமர் :**

கௌதமர் இன்பத்தின் எல்லை என்ன உண்டோ அந்த அளவும் கண்டு வாழ்ந்தார். "உலகவாழ்வை வெறுத்து அரண்மனையை விட்டு வெளியேறி உலகம் போற்றும் துறவியாகக் கூடும்" என்று கௌதமர் பிறந்தபோது அவரைக் கண்ட அசிதமுனிவர் கூறினார். ஆகவே கௌதமருக்குத் துறவு எண்ணம் தோன்றிவிடாதவாறு காக்க விரும்பிய மன்னர் சுத்தோதனர் தம் அரண்மனை வளாகத்தையே இன்பஉலகம் ஆக்கினார். தாம் இளமையில் நுகர்ந்த இன்ப வாழ்வைப் புத்தரே பின்னாளில் உரைக்கிறார்.

"நான் மிகச்செல்லமாக வளர்க்கப் பெற்றேன். என் தந்தையாரின் அரண்மனைத் தோட்டத்திலே வெண்டாமரைப் பொய்கையும், செந்தாமரைப் பொய்கையும், குவளைப் பொய்கையும் எனக்காக அமைக்கப் பெற்றன. காசிச்சந்தனம் தவிர்த்துப் பிறிதொரு சந்தனத்தைப் பூசி அறியேன். காசிப்பட்டன்றிப் பிறிதொன்றைக் கட்டி அறியேன். வெயிலும், மழையும், தூசியும் என்னைத் தொடாவண்ணம் என் ஏவலர்கள் இராப் பகலாகக் குடை பிடித்திருந்தனர்.

"இளவேனில் காலத்திற்கெனவும், மழைக்காலத்திற்கெனவும், பனிக்காலத்திற்கெனவும், மூன்று மாளிகைகள் எனக்காகக் கட்டப் பெற்றிருந்தன. மழைக்காலத்தில் நான் என் அரண்மனையில் இருந்து கீழே இறங்கி வந்ததே இல்லை. எப்பொழுதும் பேரழகியர் ஆடியும் பாடியும் இரவும் பகலும் என்னை இன்புறுத்தினர்.

**கவலையில் கௌதமர் :**

இத்தகைய இன்பவாழ்வு வாழ்ந்த பெருமகனார் தாம் ஒருநாள் உலகத்தின் துன்பங்களைக் கண்டு கண்டு கண்ணீர் பெருக்கினார். முதுமைத் துயர், பிணித் துயர், இறப்புக் கொடுமை இவை வட்டமிடும் உயிர்களின் வாழ்வைக் கண்டும் கேட்டும் நொந்தார். உயிர்கள் படும் துன்பத்தை ஒழித்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்து இளஞ் செல்வனையும், இனிய மனைவியையும் தம் இருபத்தொன்பதாம் அகவையில் பிரிந்து வெளியேறினார். உயிர்களின் துயரை ஒழிக்கப் பிறந்த அப்பெருமகனார் பட்ட துன்பங்கட்கு அளவில்லை. 'துன்பமே வா' என்று புன்முறுவலுடன் மலைபோல் நின்று எதிர் கொண்டு வரவேற்றார்.

**ஆறு ஆண்டுகள் :**

ஆறு ஆண்டுகள் அயராமல் அலைந்தார். காடு, மலை, வெயில், மழை, பனி, பசி எவற்றையும் பொருட்டாக எண்ணாமல் திரிந்தார்; வயிற்றில் விரலை வைத்தால் முதுகெலும்பும், முதுகில் விரலை வைத்தால் வயிற்றின் தோலும் தட்டக்கூடிய அளவுக்குப் பட்டினி கிடந்து மெலிந்தார்; ஒரு சமயம் நாற்பத்தொன்பது நாட்கள் உண்ணா நோன்பு கொண்டார்; எவராலும் வளைக்க இயலாது எனக் கருதப்பட்ட வில்லை எளிமையாக வளைத்து மன்னர் குமரர்கள் நாணித் தலை குனிய நிமிர்ந்து நின்ற வீரர் கௌதமர், இப்பொழுது பல இடங்களில் உணர்வின்றி மயங்கிக் கீழே வீழ்ந்தார்; தலையிலும், முகத்திலும் காடுபோல் வளர்ந்து கிடந்த மயிர்களைத் தம் கையாலேயே குருதி ஒழுகப் பிடுங்கித்

துன்புற்றார்; பிச்சை எடுத்துண்டு வாழ்ந்தார்; பார்க்கவர், ஆலார காலாமர், உருத்திரக ராமபுத்திரர், இப்படி எத்துணையோ துறவி களைத் தேடித் தேடி அவர்கள் துறவு நெறியைப் பின்பற்றிச் சென்று பயனற்று வெளியேறினார்; கடுந் துறவிகளும் பின் பற்றுதற்கு அரியது என்னும் வழிகளில் சென்றும் ஆராய்ந்து துயருற்றார்.

**ஓங்கிய உறுதி :**

"எவ்விதச் சிந்தனைக்கும் இடம் தராமல் உறுதிப் பாட்டுடன் ஐம்புலன்களையும் அடக்கினேன். இதனால் அமைதி ஏற்படவில்லை. பின்னர் வாயாலும், மூக்காலும் மூச்சு விடுவதை நிறுத்தினேன். அப்பொழுது கொல்லன் துருத்தியில் வெளியேறுவது போலச் செவியின் வழியே காற்று வெளிவந்தது. அதையும் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் உறுதியுடன் வாயையும், மூக்கையும், காதுகளையும் அடைத்து மூச்சைப் பிடித்தேன். என் தலையை வாரைக் கொண்டு இறுக்கிக் கட்டுவது போலவும், நெருப்பால் சுட்டெரிப்பது போலவும், என் உடலை ஈட்டியால் குத்துவது போலவும் நோவு உண்டாயிற்று. இதற்கும் என் உறுதிப்பாடு குறைந்து விடவில்லை" என்று புத்தரே தாம் கொண்ட கடு நோன்பைக் குறிப்பிடுகிறார்.

**புத்தரின் புனித ஆசை :**

நாடு நகரங்களையும் உற்றார் உறவினர்களையும் துறந்து சென்ற பேரருளாளர் கௌதமர். அவர், தன் நாட்டில் இரந்துண்டு திரிவதைக் கண்டு வருந்துகிறார். மகத நாட்டின் மன்னன் பிம்பிசாரன். கௌதமரை அழைத்துத் தன் நாட்டையே ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறான். அதனை ஏற்பாரா கௌதமர்? 'என் நாட்டில் இருக்கும் காலம் வரையாவது இரந்துண்டு வாழ்வதை விடுத்து என் விருந்தாளியாக இருத்தல் வேண்டும்' என்று வேண்டுகிறான். "உயிர்களின் உய்தற்குரிய வழியைக் காண விழைகிறேன்; அதனைக் காணும் வரை என் உறுதிப்பாட்டைக் கைவிடேன்" என்று மகத மன்னனுக்கு உரைத்து நடந்து விடுகிறார் கௌதமர். அவர் எதனைத் தேடி அலைந்தாரோ அதனை ஒருநாள் கண்டடைகிறார். தாம் பெற்ற இன்பத்தை உலகமும் பெறவேண்டும் என்று ஆவல் கொள்கின்றார். 'ஆசையே அல்லல்களுக்கெல்லாம் அடிப்படை' என்னும் தெளிவு கண்ட அருளாளர் புத்தர். அவருக்கும் ஆசை அற்றுப் போய் விடவில்லை. உயிர் அனைத்தும் அல்லல் அற்ற இன்ப வாழ்வு வாழவேண்டும் என்ற பேராசை

அவருக்கு இருந்தது. ஆம்! தன்னலம் அற்ற இடத்தில்தான் பொது நல வெள்ளம் பெருக்கெடுக்க முடியும்.

**அன்னமும் கன்னமும் :**

புத்தர் பேரருளாளர்; உலக அமைதிக்கு வழி கண்ட பெருந்தகை; இளம் பருவத்திலேயே மன்னவர் மைந்தர்கள் விளையாட்டாகக் கருதும் வேட்டையாடுதலைக் கொலைத் தொழிலாகக் கருதினார். அவ்விளம் பருவத்தில் தம் உறவினனான தேவதத்தன் ஏவிய அம்பின் தாக்குதலுக்கு ஆட்பட்டுக் கீழே வீழ்ந்த அன்னத்தை எடுத்துத் தன் கன்னத்தோடு அணைத்துப் பேரருள் காட்டினார். "என் அம்பு பட்டுக் கீழே வீழ்ந்தது; அது எனக்கே உரிமையானது" என்று தேவதத்தன் வழக்காடிய போது, "அதன் உயிர் நீங்கி இருக்குமானால் அம்பெய்த உனக்கு அஃது உரிமை; அதற்கு உயிர் உள்ளதால் அதனைக் காக்க விழையும் எனக்கே உரிமை" என்று பதில் உரைத்தார்; அன்னத்தின் ஆருயிரைக் காத்தார். அவ் வருள்நெறி பின்னர்ச் செய்த தொண்டு பெரிது.

**பழிமிக்க பலி :**

பிம்பிசார மன்னன் தெய்வத்தின் பெயரால் கொடுக்கும் உயிர்ப்பலியை ஒழிக்க முயன்றார் புத்தர்.

1 "வாழும் உயிரினை வாங்கிவிடல்-இந்த
மண்ணில் எவர்க்கும் எளிதாகும்
வீழும் உடலை எழுப்புதலோ-எந்த
வேந்தன் நினைக்கினும் ஆகாதையா?"

என்று அருளுரைத்துக் கொலை வேள்வியைத் தடுத்து நிறுத்தினார்.

கௌதமர் காடுகளில் அலைந்து திரிந்த வேளைகளில் அறியாத மக்களால் அல்லல் பல அடைந்தார். அவரைக் கிறுக்கர் என்று கருதிக் காறி உமிழ்ந்தனர்; மண்ணையும் கல்லையும் எடுத்து அவர்மேல் வீசினர்; சுடுகாட்டில் எலும்புக் குவியல்கள்மேல் அவர் படுத்திருந்த வேளையில், காதுத் துளைகளில் வைக்கோலைச் செலுத்திக் குடைந்தனர். இத்தகைய துயரங்களின் இடையேயும் அவர் காட்டிய பொறுமை கடலினும் பெரிது. அவர் சொல்கிறார்: "எனக்குத் துன்பம் செய்த அவர்கள் மேல் சிறிய அளவில்கூடத் தீய எண்ணம் உண்டாகியதாக எனக்கு நினைவில்லை!"

1. ஆசிய சோதி.

**பிச்சை வேண்டா :**

ஓர் இல்லறத்தான் புத்தரைத் திட்டினான்; நன்றாக அடிக்கவும் செய்தான். அவ்வேளையில் புத்தர் 'அன்ப! ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு வீட்டுக்காரன் உணவு படைக்கிறான். அந்த உணவைப் பிச்சைக்காரன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றான். அப்பொழுது அந்த உணவு எவரைச் சேரும்?" என்று வினாவினார். அவ் வில்லறத்தான், "பிச்சை வீட்டுக்காரனையே சேரும்" என்றான். "அவ்வாறானால் உன் வசையையும், வெறுப்பையும் நான் ஏற்றுக் கொள்ள மறுத்தால் அது உன்னையே வந்து சேரும் அல்லவா! ஆனால் நானே அரிய நண்பன் ஒருவனை இழந்து வறியவனாகப் போக வேண்டிய நிலைமை ஏற்படும்" என்றார்.

1 "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்பதை மெய்யாக்கினார் புத்தர்.

**காலடியில் கல் :**

புத்தர் ஒரு மலைப் பள்ளத்தாக்கில் நடந்து சென்றார். மலைமேல் இருந்து தேவதத்தன் ஒரு கல்லை உருட்டித் தள்ளினான். தலைக்கு வைத்த குறி காலில் பட்டு ஒரு விரலில் புண் உண்டாக்கியது. இக் கீழ்மைச் செயலைச் செய்த பின்னரும் நாணமின்றித் தேவதத்தன் புத்தர் முன்னர் வந்தான். அப்பொழுது, "என் உயிர் உன்கையில் இல்லை என்பதை நீ உணரவில்லை. இப்பொழுதாவது உண்மையை உணர்ந்து கொள்வாயாக" என்று கூறிப் புன்முறுவலுடன் சென்றார். தீமையை வெறுத்தாலும், தீமை செய்தவனை வெறுக்காத திருவுள்ளம் படைத்தவர் புத்தர் என்பதற்கு வேறு சான்று வேண்டுமா?

**அமைதிப்போர் ஆற்றல் :**

அங்குலி மாலன் என்பவன் மிக்க கொடியவன். கண்டவர் களின் கைவிரல்களையெல்லாம் வெட்டி மாலையாகத் தொடுத்துக் கழுத்தில் அணிந்து கொள்ளும் அளவுக்குக் கொடியவன் அவன். அத்தகையவனைக் கொன் றொழிக்க வேண்டும் என்று எண்ணிய கோசலை மன்னன் வீரர்கள் பலரை அனுப்பி வைத்தான். இதனை அறிந்தார் புத்தர் பெருமான். அக் கொடியவன் மேலும் அருள்

1. திருக்குறள் : 151.

கொண்டார். தாமே அங்குலி மாலனைத் தேடிச் சென்றார். புத்தர் மேல் பாய்ந்து தாக்கி விரலை வெட்டுவதற்கு வாளை ஓங்கினான். அருள் வழியும் புத்தர் திருமுகத்தைக் கண்டு தன்னை மறந்து மயங்கினான். அவர் அருள் மொழிகளைக் கேட்டான், தூய துறவியாக மாற்றப் பெற்றான். கொன்றொழிக்க வீரரை ஏவிய கோசல மன்னனே அங்குலி மாலனைக் கண்டு அவன் திருவடி களை வணங்கிச் செல்கிறான். என்ன விந்தையான செயல்கள்! ஆயுதப் போரால் நடத்த முடியாத மாற்ற நிலை இது. இதனைச் சாதிக்க வல்லது அன்பும் அருளும் கலந்த அமைதிப் போரேயாம்.

**தண்ணீர்க்குச் செந்நீர் :**

உரோகிணி ஆற்று நீரைப் பயன்படுத்துவதன் தொடர்பாக எழுந்தது ஒரு தகராறு. அத் தகராறுக்கு ஆட்பட்டவர்கள் புத்தரின் தந்தை வழியினரான சாக்கியர்களும், தாய்வழியினரான கோலியர் களும் ஆவர், இதனைக் கேள்விப்பட்டார் உலக அமைதிக்கெனத் தோன்றிய பெருமான் ஓடோடியும் அவர்கள் முன்வந்து தோன்றினார்.

“ஒரு சிறிய ஆற்று நீரின் உரிமைக்காக இத்துணைப் பேர்கள் பலியிடப்பட வேண்டுமா? தண்ணீரின் உரிமையைக் காப்பதற்காகச் செந்நீரை ஆறாக ஓடவிடவேண்டுமா? ஆத்திரப் படாமல் அமைதி வழியைப் பேணுங்கள். இரண்டு பக்கங்களிலும் உள்ள பெரியவர்கள் பேசித் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள்” என்று வேண்டினார் புத்தர். போர் ஒழிந்தது; பகையும் அகன்றது.

**பிறர் பழி பேசேல் :**

புத்தர் தம்மைச் சேர்ந்தவர்களுள் எவரேனும் பிற மதத்தைப் பழிப்பதை ஏற்றார் அல்லர். அவ்வாறு பழிப்பதைத் தம் சமயத்திற்கு ஏற்பட்ட இழுக்கு என்று கருதினார். ‘ஒருவன் அண்ணாந்து வானத்தைப் பார்த்துக் காறித் துப்புவது போன்றது பிற சமயங் களைப் பழிப்பது; அந்த எச்சில் வானத்தைக் களங்கப்படுத்தாது. ஆனால் அது திரும்பிக் கீழே வந்து துப்பியவனையே கறைப் படுத்தும்” என்றார். இத்தகைய சமய அறநெறி செயலளவில் உலகில் நிலைபெற்றிருந்தால், எத்துணையோ போர்கள் தோன்றி யிரா என்பதை வரலாறறிந்தோர் உணர்வர்.

**சுந்தன் சோறு :**

*குசிநகர் என்னும் இடத்தில் தம் எண்பத்தோராம் வயதில் புத்தர் இயற்கை எய்தினார். இறுதியாக அவர் உண்டது சுந்தன் என்பவன் அளித்த உணவாகும். அவன் அளித்த உணவால் தமக்கு இறுதி எய்தியதாக அவன் வருந்தக் கூடாது என்னும் அருள் உணர்வு புத்தருக்கு அரும்பியது. ஆகவே, தம் முதன் மாணவர் ஆனந்தரிடம், "சுந்தன் அளித்த உணவுதான் எனக்கு இறுதியைத் தந்தது என்னும் வீண்பழி ஏற்பட்டு விடக்கூடாது. அவன் மிகவும் தூயன்; அவன் உள்ளம் அமைதி அடைவதாக! என்று நான் கூறியதாகக் கூற வேண்டும்" என்று வேண்டினார்.*

**கண்மூடுமுன் காண்க :**

*இறக்கும்போது அவர் காட்டிய ஒரு பெருந்தகைமை குறித்தற்குரியது. "ஆனந்த! யான் இன்றிரவிலே இயற்கை எய்துவேன். அதைக் கேட்டறிந்த இவ்வூர் மக்கள் 'நாம் புத்தரை உயிரோடு காண முடியவில்லையே' என்று வருந்தக் கூடும். அதற்கு இடம் ஏற்படாவண்ணம் இப்பொழுதே அனைவருக்கும் அறிவிப்புச் செய்துவிடுக" என்றார். புத்தராம் அருள் மலையில் தோன்றிய அமைதிச் சுனைகளை எண்ணுதல் அரிது! மிக அரிது! அவர் உரை மணிகள் சிலவற்றை அறிதல் நலந்தரும்.*

*[1] "என்னை நிந்தித்தான், அன்னை அடித்தான், என்னை வென்றான், என்னை கொள்ளையிட்டான்- இத்தகைய எண்ணங்கள் இல்லாதவர்களிடம் வெறுப்புணர்வு நில்லாது."(4)*

"எக்காலத்தும் பகைமை, பகைமையால் தணிவது இல்லை
பகைமை அன்பினாலேயே தணியும்." (5)

*'எந்தச் செயலைச் செய்தால் பின்னர் மனம் நோவடையுமோ, எதன் பயனை அழுதுகொண்டே அனுபவிக்க வேண்டியிருக்குமோ அது நற்செயல் ஆகாது." (67)*

"பிறரைத் துன்புறுத்துவோன் முனிவன் அல்லன்;
பிறரை இகழ்பவன் துறவி அல்லன்." (182)

*1. தம்மபதம்.*

*"வெற்றி வெறுப்பை வளர்க்கும்; தோல்வியுற்றார் துயரில் ஆழ்வர். வெற்றியும் தோல்வியும் விரும்பாதவர் நலமும் அமைதியும் பெறுவர்." (199)*

"ஆசைக்கு நிகரான அனல்வேறில்லை;
வெறுப்புக்கு நிகரான நோய்வேறில்லை." (200)

"வெகுளியை அறிவால் வெல்லவேண்டும்;
தீமையை நன்மையால் வெல்லவேண்டும்." (221)

"வன்முறையால் தன்செயலை முடிப்பவன்
நீதியாளர் ஆகமாட்டான்." (254)

*"முறையான துன்புறுத்தா நெறியால் மற்றவர்களுக்கு வழிகாட்டுவோனே அறத்தைக் காப்பவன், அறிஞன், நீதியாளன்." (255)*

*"எங்கெல்லாம் பிறருக்கு இன்னாசெய்யும் எண்ணம் அடக்கப்படுகிறதோ அங்கெல்லாம் துன்பம் தொலைந்து போகிறது." (388)*

*"தான் ஒருகுற்றமும் செய்யாதிருந்தும் தனக்குக் கிடைக்கும் வசைகளையும் அடிகளையும், சிறைத்தண்டனையையும் பொறுமையுடன் ஏற்றுப் பொறுமையையே தன் ஆற்றலாகவும், வலிமையையே படையாகவும் கொண்டவன் எவனோ அவனே அந்தணன்." (397)*

*"நிற்பனவும் திரிவனவும் ஆகிய எவ்வுயிரையும் துன்புறுத் தாமலும், அழிக்காமலும், அழிக்கத் துணை நிற்காமலும் எவன் இருக்கிறானோ அவனே அந்தணன்." (403)*

*புத்தர் வாழ்வு இணையற்றது. அவர் கூறியவை அனைத்தும் நடைமுறைக்கு ஏற்றவை. அவர், மாந்தர் பின்பற்றுதற்கு உரிய வற்றையே அமைதியாக எடுத்துரைத்தார். ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுமாறும் வேண்டினார். அவர் பிறந்த நாட்டைப் பார்க்கிலும் பிறநாடுகளில் அவர் கொள்கைகள் மிகப்பரவின. பெருஞ்சமயமாகவும் பிற நாடுகளில் இன்றும் திகழ்கின்றது. அதனை நாம் பெருமையாகக் கொள்ளலாம். அப்பெருந்தகையின் அமைதிச்சமய வழியில் நிற்பதாகக் கூறிக்கொள்ளும் நாடு அவர்*

*பிறந்து வளர்ந்து வாழ்ந்து அறவாழி உருட்டிய நாட்டையே எண்ணிப் பாராமல் ஈவு இரக்கம் இல்லாமல் தாக்கும் இழி நிலைக்கு இறங்குகின்றது என்றால் - பகை கொண்டு பழிச்செயல் செய்கின்றது என்றால் - அதனை என்னென்று கூறுவது!*

"புத்தர் சரணம் கச்சாமி! (புத்தரைச் சரணடைகின்றேன்)
தர்மம் சரணம் கச்சாமி! (தருமத்தைச் சரணடைகின்றேன்)
சங்கம் சரணம் கச்சாமி!" (சங்கத்தைச் சரணடைகின்றேன்)

*என்று சொல்லி அமைவோம்!*

# 7. சமயச் சான்றோர் - II

## இயேசு பெருமான்

***சிலுவைப்பாடு :***

*அறக்கடல்; அறிவுச்சுரங்கம்; அமைதிக் குன்றம்; அன்பு வெள்ளம்; அருள் தெய்வம்; நல்லனவே பொழியும் கொண்டல்; இன்னலம் வழங்கும் தென்றல்; ஆம்! அவர் தாம் இயேசு பெருமான்.*

*ஏழைகளுக்குத் தோழராகத் திகழ்ந்தார்; நோயாளருக்கு மருத்துவராக வாழ்ந்தார்; சீடர்களுக்குக் குருவாக விளங்கினார்; பொதுமக்கட்குப் போதகராக இலங்கினார்; மெய்யுணர்வாளருக்குத் தேவகுமாரராக நின்றார்; எதிர்த்து நின்றோர்க்குப் பொறுமை மலையாக இருந்தார். இத்துணை நயத்தக்க தன்மைகளும் ஒருங்கே பெற்றிருந்தமைக்காக அவர் பெற்ற பரிசு சிலுவைப் பாடு!*

***துயரச் சூழல் :***

*இயேசு பெருமான் பிறக்கும் போதே "உலகத்தார் துயர் துடைக்கப் பிறந்தவர் - உலகத்துக்காகப் படாத அல்லல் பாடுகள் அனைத்தும் படப்பிறந்தவர் - என்பதனை வெளிப்படுத்தத் தக்க சூழல் தொடங்கிவிட்டது.*

*உலகில் வாழும் மக்கள் தொகைக் கணக்கு எடுக்க வேண்டும் என்று உரோமாபுரியில் இருந்து ஓர் ஆணை பிறந்தது.* **செசார்** *என்னும் மன்னவன், "யூத மக்கள் அனைவரும் அவரவர் பரம்பரை ஊர்கட்குச் செல்லவேண்டும்; அங்கே பெயர்ப் பதிவு செய்து கொண்டு மீளவேண்டும்" என்று பறையறைந்தான். இவ்வாறு பறையறையப் பெற்றது நாசேரத்து என்னும் ஊரில். மன்னவன் ஆணையை மறுக்க முடியுமா? மக்கள் வெள்ளம் பரம்பரை ஊர்கட்குக் கிளம்பியது. அவ்வாறுபுறப்பட்டுப் 'பெத்லகேம்' என்னும் ஊருக்குப் போகின்றனர் கணவன் மனைவியர் ஆகிய இருவர். அவர்களே அன்னை மரியும், அருள் சூசையப்பரும் ஆவர்.*

**வழிநடை :**

*மழைக்காலம்; சேறும் வதியும் அமைந்த வழி! இடுக்கமான பாதை; குளிர்க்கொடுமை; மையிருட்டு - இவற்றின் இடையே பயணம் நடக்கின்றது. மரியன்னை நிறை கருப்பம் எய்தி யிருந்தார்; ஆதலால் அவர் ஒரு கழுதையின் மேல் இருந்து பயணம் செய்கிறார்! அதனை நடத்திக் கொண்டு செல்கிறார் சூசையப்பர்.*

*ஐந்து நாட்கள் நடந்து பெத்லகேம் நகரை அடைந்தனர். ஆனால் அவர்கள் தங்குவதற்கு ஓர் இடமும் கிடைக்கவில்லை. முன்னரே அங்கு வந்த செல்வர்கள் அனைவரும் வீடுகளை அமர்த்திக் கொண்டனர். தேடித்தேடி அலுத்ததை அல்லாமல் அவர்கட்கு வீடு கிடைக்கவில்லை. "நரிகளுக்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மனித குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" என்று இயேசுபெருமான் பின்னர்க் கூற இருப்பது மெய்யாயிற்று.*

**குகையில் குமரன் :**

*ஊருக்கு வெளியே இருந்த ஒரு மலைக் குகையே அவர்கள் இருப்பிடம் ஆயிற்று. அதன் உள்ளே நுழைந்தபோது தான் அதனை மாட்டுத் தொழுவமாகப் பயன்படுத்துகின்றனர் என்பதை அறிந்தனர். சுவரும், தளமும் ஈரக்கசிவு உடையவையாக இருந்தன. ஆங்குத் தான் உலகை உய்விக்க வந்த பெருமான் பிறந்தார்.*

**ஒரே ஓட்டம் :**

*பழந்துணியில் எடுத்து வைக்கோல் மேல் குழந்தையைப் படுக்கவைத்தனர் பெற்றோர். அங்கு நின்ற மாடுகளின் வெப்ப மூச்சுச் சற்றே குழந்தையின் குளிரைப் போக்கத் துணையாயிற்று. அங்கேயாவது சில நாட்கள் அமைதியாக இருக்க முடிந்ததா? எரோதன் என்னும் வேந்தன் இயேசுக் குழந்தையைக் கொல்வ தற்காக அந்நாட்டில் பிறந்திருக்கும் குழந்தைகள் அனைவரையுமே கொன்று தீர்த்தான் பாவி எரோதன்! ஏனெனில் இயேசு வெட்டப் படாமல் தப்பிவிடக் கூடாது அல்லவா!*

**தொண்டின் தொடக்கம் :**

*குழந்தை இயேசு ஊர்க் குழந்தைகளைக் கூட்டி வைத்துச் சொல்கிறார். "நான் ஏழையாக இருப்பதைப் பார்த்து உங்களுக்குள் ஏழைகளாக இருப்பவர்கள் ஆறுதல் அடைய மாட்டீர்களா? நல்ல*

நிலையில் இருப்பவர்கள் என்னைப் போலும் ஏழ்மை நிலையில் இருப்போர்க்கு உதவமாட்டீர்களா? யான் என் பெற்றோர்க்குப் பணிந்து நடப்பது போல் நீங்களும் உங்கள் பெற்றோர்க்குப் பணிந்து நடக்க மாட்டீர்களா? பெருமான் தம் பிறவித்தொண்டைத் தொடங்கிவிட்டார். சொல்லளவில் நிற்காமல் செயலில் நிலைத்தார்.

[1] "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

**முப்பதும் மூன்றும் :**

முப்பதாம் அகவை இயேசுவுக்கு எய்தியது. அதுவரை, தாம் செய்துவந்த தச்சு வேலையை விடுத்து உலகத் தொண்டிலே ஈடுபட்டார். இருந்த குடிசைக்கு முழுக்குப் போட்டுவிட்டுத் திறந்த வானத்தின் கீழே வந்துவிட்டார். முந்நூறு ஆண்டுகள் வாழ்ந் தாலும் முயன்று ஆற்ற முடியாத தொண்டுகளை மூன்றே ஆண்டு களில் செய்தார்.

**உண்ணா உணவு :**

தொண்டிலே இறங்குமுன் நாற்பது நாட்கள் உண்ணாமலும், பருகாமலும் இருந்தார். வெயில், மழை, காற்று, பசி அனைத்தையும் பொருட்படுத்தாத உரம் பெற்றார். உண்ண வேண்டும் என்று இயேசுவை அவர்கள் சீடர்கள் வேண்டு கின்றனர். அப்பொழுது "இறைவனுக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாகச் செய்வதே எனக்கு உணவாக இருக்கிறது" என்றார். இத்தகைய ஊற்றம் எங்கிருந்து வந்தது? தொண்டு செய்ய நினைவார் 'தொட்டாற் சுருங்கியாக' இருந்தால் என்ன பயன்?

**பெரும் பேறு :**

உயரிய தொண்டன் யோவான். இயேசு பெருமானுக்கு 'ஞான முழுக்கு' வழங்கியவன், அவன் இயேசுவின் தொண்டுக்கு வழி அமைத்துக் கொடுத்தவன் எனலாம். அவன் தலையைக் கொய்து கொண்டு வந்து ஒரு நாட்டியத்திற்குப் பரிசாக வழங்குகிறான் காவலன் என்னும் போர்வைக்குள் மறைத்திருந்த

1. திருக்குறள் : 664.

கயவன் எரோதன். 'உலகத் தொண்டில் இறங்கினால் உமக்கு விளையப்போவது இதுவே' என்பதைச் சொல்லிக் காட்டுவது போல் அமைந்த நிகழ்ச்சி இது. எனினும் உலக அமைதி நாடிவந்த பெருமான் இயேசுவின் உள்ளம் இதற்காக அசைந்து விடவில்லை, "நீதியின் நிமித்தமாகத் துன்பப்படுகிறவர்கள் பேறு பெற்றவர்கள், ஏனெனில் பேரின்ப உலகம் அவர்களுடையது" என்பது அவர்தம் திருவாய் மொழி.

**மருத்துவ மன்னர் :**

பிறர் துயர் துடைத்தற்காகவே பிறந்தவர் இயேசு. பிறரொருவர் எய்திய எத்துயர்களையும் போக்குதல் தம் கடன் எனக் கொண்டார். ஆண்டவன் பெயராலேயே அவற்றை நீக்கினார்; திமிர்வாதம் பிடித்தவர். தொழுநோயாளர், குருடர், முடவர் ஆகிய எத்துணையோ பேர்களின் நோய்களை நீக்கினார். அவரைத் தேடிக்கொண்டு மக்கள் திரள் திரளாக வந்தனர். ஒதுக்கப்பட்டவர், ஒடுக்கப் பட்டவர் என்று பாராமல், செல்வர், ஏழை எண்ணாமல், தம் இனத்தார் வேற்றினத்தார் என்று கருதாமல் எல்லாருக்கும் அருள் மழை பொழிந்தார். கூட்டத்தைக் கடந்து வீட்டின் வாயில் வழியாக வரமுடியாமல் கூரையைப் பிரித்துக் கொண்டும்கூட நோயாளர்களைக் கொண்டு வந்து குணப்படுத்திச் சென்றார்கள். அவர் உடற்பிணி மருத்துவராக இருந்தமை, பலர் வாழ்வைப் பசுமையும், வளமும் உடையதாக மாற்றியது. பாலைவனத்தைச் சோலைவனமாகவும், கட்டாந்தரையைக் கழனியாகவும் மாற்றியது போல் இருந்தது. அன்றியும், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தால் கூட, கோடி கோடி மக்கட்குப் பற்றும் உயிர் நோய்க்கு மருந்து போன்ற அருள் மொழிகளை வழங்கிய திறம் இருக்கிறதே அஃது இணையற்றது.

**நன்மைக்கு நாளில்லை :**

'இயேசு பெருமான் பிறந்து வளர்ந்த நாளில் நாம் இருந்தோம் இல்லையே' என்று பின்னுள்ளோர் வருந்தும் அளவுக்கு அறவுரைகள் வழங்கினார். ஓய்வு ஒழிவு என்பதே இல்லாமல் உழைத்தார். ஓய்வு நாளிலும் நற்றொண்டு ஆற்றினார். அடியார் களில் சிலர்கூட அவர் ஓய்வு நாளில் செய்யும் தொண்டுகளை வெறுத்தனர். அதற்கு அந்தப் பொறுமைப் பிழம்பு "உங்களில் எந்த ஒருவனுக்காவது ஓர் ஆடு இருந்து அஃது ஓய்வு நாளில் குழியில் விழுந்துவிட்டால் அதைப் பிடித்துத் தூக்கிவிட மாட்டீர்களா?

ஆட்டைப் பார்க்கிலும் எத்துணையோ சிறந்தவர் மாந்தர். ஆகவே நான் ஓய்வு நாளில் நன்மை செய்வது முறையே" என்றார்.

**இளைப்பாற இங்கே வருக :**

தாழ்ந்தோர்களை உயர்த்த வந்த அருட்பெருமகனாரிடம் உயர்வு தாழ்வு பற்றிய உணர்வு உண்டா? மத்தேயுவின் வீட்டில் நடந்த ஒரு விருந்தில் தாழ்ந்தவர்கள் எனக்கருதப்பட்ட பலர் சூழ்ந்திருக்க விருந்துண்டார். அதனைக் கண்ட ஒருவன் இயேசுவின் சீடன் ஒருவனிடம் "இயேசு தாழ்ந்தவர்களோடும், பாவிகளோடும் உடன் இருந்து உண்பது என்ன?" என்று வினாவினான். அதனை அறிந்த இயேசு "பிணியாளர்களுக்கு மருத்துவன் உதவி வேண்டுமே ஒழிய நலத்துடன் இருப்பவனுக்கு வேண்டுவது இல்லை" என்றார். என்ன அருமையான விடை! "துன்பச்சுமை சுமப்பவர்களே! நீங்கள் அனைவரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு ஓய்வு தருவேன்" என்னும் அருளாளரிடம் இவ்விடையை அன்றி எதனை எதிர்நோக்க முடியும்?

**கண்ணீரால் கால்கழுவல் :**

இன்னொரு வீட்டிலே இயேசுவுக்கு விருந்து நடை பெற்றது. 'பாவி' என்று கருதப்பெற்ற பெண்ணொருத்தி அங்கு வந்து இயேசுவின் கால்களைத் தன் கண்ணீரால் கழுவினாள். தன் கூந்தலால் அவர் கால்களைத் துடைத்தாள். இவற்றை ஆங்கிருந்த செல்வச் செருக்குடைய வீட்டுக்காரன் கண்டு நகை செய்தான். அப்பொழுது இயேசு, "செல்வனே! உனக்கு ஒன்று சொல்கின்றேன். ஒரு செல்வனிடம் இரண்டு பேர்கள் கடன் பட்டிருக்கின்றனர். ஒருவன் 500 வெள்ளியும், மற்றொருவன் 50 வெள்ளியும் கொடுக்க வேண்டியிருந்தது. கொடுக்க இருவருக்கும் வகை இல்லை. இருவர் கடனைத் தள்ளப்பெற்ற இருவருள் எவன் செல்வனுக்கு மிக அன்புடையவனாக இருப்பான்?" என்றார். அப்பொழுது செல்வன் "500 வெள்ளியை மன்னிக்கப் பெற்றவனே மிக அன்புடையவனாக இருப்பான்" என்றான். "சரி! உன் வீட்டுக்கு நான் விருந்தாளியாக வந்தேன். ஆனால் நீ என் கால்களைத் தண்ணீரால் கழுவவில்லை, துணியால் துடைக்க வில்லை. இப்பெண்ணோ தன் கண்ணீரால் நனைத்துக் குளிப்பாட்டிக் கூந்தலால் துடைத்தாள். இத்தகைய அன்புடைய இவள் மேல் உன்னைப் பார்க்கிலும் யான் மிக அன்பு செலுத்துவது முறைமை அல்லவா!" என்றார் இயேசு. "இதயத்தின் நிறைவினால் வாய்பேசும்" என்பது அந்த அறவோர் வாக்கு. அது மெய்யாயிற்று.

இயேசுபெருமான் சென்ற சென்ற இடங்களில் எல்லாம் வழங்கிய **அருள் மழை**க்கு அளவில்லை. அம்மழையில் சிற்சில துளிகளையாவது நாம் அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும்.

"அமைதி உள்ளவர்கள்; பேறு பெற்றவர்கள்; அவர்கள் உலகம் முழுவதையும் உரிமையாகக் கொள்வார்கள்."

"அமைதி உண்டாக்குபவர்கள் பேறுபெற்றவர்கள். அவர்கள் கடவுளின் மக்கள் ஆவர்."

"கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்; என்று உரைக்கப் பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீமையை எதிர்த்து நிற்கவேண்டா."

"ஒருவன் உன்னை வலக்கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு."

"உன்னோடு வழக்காடி உன் உடையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பவனுக்கு உன் உடையோடு மேலாடையையும் கொடுத்துவிடு."

"நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கின்ற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்."

"உடலைக் கொல்லுபவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டா. உயிரைக் கொல்லுபவர்களுக்கே நீங்கள் அஞ்ச வேண்டும்."

"தனக்குத் தானே பிரிந்திருந்த எந்த நாடும் பாழ்படும்; தனக்குத் தானே பகைப்பட்டிருக்கிற எந்த நகரும், எந்த வீடும் நிலை நிற்கமாட்டா."

"உடன் உடன் பிறந்தவன் உனக்குப் பகையாகிக் குற்றம் செய்தால் அவனிடத்தில் போய் நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவி கொடுத்தால் உன் உடன் பிறந்தானை ஊதியம் ஆக்கிக் கொண்டவன் ஆவாய்; அவன் செவி கொடாமல் போனால் இரண்டு மூன்று சாட்சிகளை அழைத்துச் சென்று அவர்கள் சொல்லால் நிலைபெறச் செய். அவர்களுக்கும் செவி கொடாமல் போனால் அவையோர்க்குத் தெரியப்படுத்து. அதற்கும் செவி கொடுக்காதிருப்பான் ஆனால், அவன் விலக்கப்பட்டவனாக இருப்பானாக."

"ஒருவனை ஏழு தடவைகள் மட்டுமல்ல; ஏழெழுபது தடவைகள் மன்னிக்கவேண்டும்."

இத்தகைய **மணிமொழி**களை அவ்வள்ளல் வாரி வாரி வழங்கினார். ஆனால் அவருக்குப் பேரும் புகழும் வளரத் தொடங்கின.

**நல்லவர் இடையே பொல்லாதவன் :**

புகழ் வளருவதையும், தூய்மை பெருகுவதையும் மக்கள் மனந்திரும்புவதையும் கண்டு உள்ளம் வெதும்பி நல்லவர் இயேசுவை ஒழித்துக் கட்ட நாட்பார்த்துக் கொண்டிருந்தனர் பொல்லாத மாக்கள் சிலர். அவர்களிடம் சென்று "நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன்; நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?" என்று கேட்டான் இயேசு பெருமானின் பன்னிரு சீடர்களுள் ஒருவனாக இருந்து, அவர் செய்துவரும் நற்பணிகள் அனைத்தையும் உடன் இருந்து அறிந்த அந்தப் பொல்லாத யூதாசு!

**வருவ தறிதல் :**

"என் வேளை அண்மையில் இருக்கிறது." "என் உயிர் இறப்புக்கு ஏதுவான பெருந்துயர் கொண்டிருக்கிறது;" "மேய்ப்பன் வெட்டப் படுவான்; மந்தை ஆடுகள் சிதறும்;" "மனித குமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக் கொடுக்கப்படும் வேளை வந்துவிட்டது;" "இதோ என்னைக் காட்டிக் கொடுப்பவன் வந்து விட்டான்" என்று பின் வருவதையெல்லாம் நன்றாக உணர்ந்திருந்த அப்பெருமான் தமக்கு நேர இருக்கும் சிலுவைப்பாடு கருதிச் சிறிதும் துன்புற்றார் அல்லர்.

**பொறுமை மலை :**

இறைவனால் அனுப்பப் பெற்று, இறைவன் தொண்டொன்று கருதியே வாழ்ந்த இயேசு பெருமான்மேல் 'இறைவனை இகழ்ந்தார்' என்னும் குற்றம் சுமத்தப்படுகிறது. சிலுவையும் சுமத்தப்படுகிறது. அன்னை மரியும், அன்பர்களும் **நகராரும்** அழுது அரற்றுகின்றனர். பொறுமை மலையாக நடக்கின்றார் இயேசு பெருமான்.

பழி சூட்டியவர்களும், போர் வீரர்களும் கேலி செய்தனர்; முள்ளால் முடி செய்து தலையில் வைத்து அழுத்தினர். காறி உமிழ்ந்தனர்; காடியைக் குடிக்குமாறு ஏவினர்; குற்றவாளிகள் இருவர் இடையே வைத்து அவரைச் சிலுவையில் அறைந்தனர்.

அறையும் போதாவது அண்ணல் அலறினாரா? அடிப்பவரைப் பழித்தாரா? ஏவினோரை இழித்துரைத்தாரா?

இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் வேளையில் உடன் இருந்த ஒருவன் சினங்கொண்டு தலைமைக் குருவின் ஊழியன் காதை வெட்டி விடுகின்றான். அப்பொழுது ‘இம்மட்டில் நிறுத்து’ என்று தடுத்து அக் காதைச் சரிசெய்கிறார். அவ்வாறு பிறர் துயர் காணப் பொறாத அப்பேரருள் உள்ளம் தம்மைச் சிலுவையில் அறையுங்கால் பிறரைக் குறை கூறவும் விழைய வில்லை. “தந்தையே! இவர்களைப் பொறுத்தருளும்; தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்” என்று பரிந்து வேண்டுகிறார். மண் சுருங்க-விண் சுருங்க-வளர்ந்த அருள் இது!

**நம் வேண்டுதல் :**

இயேசு பெருமான் செய்த அமைதிப் பணி ஈடும் எடுப்பும் அற்றது. அதனை அக்கால உலகம் அறிந்து கொள்ளவில்லை. இக்கால உலகமும் அறியவில்லை. அறிந்தும் அறியாச் செவிடாகச் செல்லவும் தயங்கவில்லை. செவ்வையாக அறிந்து அவ் வழிச் செல்லும் அசைவற்ற எண்ணம் இருந்தால், ஒரு கையில் அவர் திருமறையை வைத்துக் கொண்டு மற்றொரு கையிலே அணுக் குண்டுகளையும், நீர்வளிக் குண்டுகளையும் வைத்துக் கொண்டு பேய்ச் சிரிப்புச் சிரிக்க வேண்டிய நிலைமை இருக்கவே இருக்காது. நாமும் இயேசு பெருமானிடம் “திருக்குமரனே! இவர்களைப் பொருத்தருளுமாறு தந்தையினிடம் வேண்டும்” என வேண்டலாம். ஆனால் உலகப் போர் என்னும் பேரிடி விழுந்தால் யார் ஒருவர் இவ்வாறு வேண்டுதற்காக இருக்கப் போகிறார்?

# 8. சமயச் சான்றோர் - III

## நபிகள் நாயகம்.

*பி*றர் துயரம் துடைத்தற்காகப் பிறந்த பெருமக்கள் வாழ்வில் துன்பம் பின்னிப் பிணைந்துதான் நிற்கும் போலும். இல்லையேல், நல்லனவே எண்ணி, நல்லனவே சொல்லி, நல்லனவே செய்த நபிகள் நாயகம் தம் வாழ்வில் சொல்லுதற்கு அரிய அல்லல்களை யெல்லாம் அடைந்திருக்க வேண்டியது இல்லை.

**தந்தை, தாய் :**

நபிகள் நாயகத்தின் இயற்பெயர் முகம்மது. அவர்கள் தந்தையார் பெயர் அப்துல்லா. அன்னையாரின் பெயர் அமீனா. முகம்மது பிறந்த போதே தந்தையில் முகத்தைக் காணக் கொடுத்து வைக்கவில்லை!

**இழப்பில் மேல் இழப்பு :**

வாணிகத்திற்காக மக்கமாநகரில் இருந்து சீரியாவிற்குச் சென்றிருந்தார் அப்துல்லா. ஆனால் அவர் மாநகர் திரும்பாமலே 'யத்ரிப்பு' என்னும் இடத்தில் நோயுற்று மாண்டார். அவர் மறைந்த இரண்டு திங்கள் கழித்தே முகம்மது பிறந்தார். ஆறு ஆண்டுகள் கடக்கவில்லை. அன்பு மிக்க அன்னை அமீனா அம்மையாரும் இயற்கை எய்தினார். மேலும், இரண்டாண்டுகள் தாம் நகர்ந்தன. பெரும்புகழுக்கும் பெருந்தன்மைக்கும் இருப்பி டமாக இலங்கியரும், முகம்மது அவர்கட்குத் தாயும் தந்தையுமாக இருந்து பேணி வந்தவருமான பாட்டனார் அப்துல் முத்தலீப் படுத்த படுக்கை ஆனார்! அந்நிலையில், முகம்மதின் பெரிய தந்தையார் அபூதாலிப் பொறுப்பிலே விடுத்துத் தம் விழிகளை மூடினார் பாட்டனார்.

அபூதாலிப் முகம்மதைக் கண்ணின் மணியெனக் காக்கத் தவறவில்லை. ஆனால் அவர் செய்துவந்த வாணிகத்தின் பேரிழப்பு ஏற்பட்டுவிட்டது. வறுமையும் நன்கு வட்டமிடத் தொடங்கியது.

வீட்டுத்தலைவர் கொண்ட வறுமை வீட்டைச் சூழாமல் விட்டு வைக்குமா? முகம்மது வறுமையையே இனிப்புப் பண்டமாகக் கொண்டு வாழ்ந்தார்!

**இளைஞர் இயக்கம் :**

இளைஞர் முகம்மது வாய்மைக்கு உறைவிடமாகவும், நேர்மைக்குப் புகலிடமாகவும் திகழ்ந்தார். இளமையிலேயே தொண்டுள்ளம் துலக்கமாக வெளியாயிற்று. ஏழைகளின் இன்னல் களை ஒழிக்கவும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவவும் கருதி ஓர் இளைஞர் இயக்கம் அந்நாளில் தொடங்கியது. அவ்வியக்கத்தின் உறுப்பினர் ஆனார் முகம்மது. பின்னர் அதன் உயிரோட்ட மாகவே திகழ்ந்தார்.

**கஃபா கல் :**

வெள்ளம் பெருக்கெடுத்து வந்து கஃபா என்னும் கோவில் சுவர்களை இடித்துத் தள்ளியது. அதனைக் கட்டும் பணியில் மக்கமா நகரார் ஈடுபட்டனர். ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு பணி செய்தனர். ஆனால், திடுமென ஒரு திருப்பம் உண்டாயிற்று. வேலையே தடைப்பட்டு நின்றுவிட்டது!

கோவில் சுவரில் மூலையில் இருந்தது புனிதமான ஒரு கல். அக்கல்லைத் தூக்கி வைக்கும் உரிமை யாருக்கு உரியது? என்பது ஒவ்வொருவரும் கேட்ட வினாவாக இருந்தது. 'இவர்' 'அவர்' என்றும் 'எமக்கு,' 'எமக்கு' என்றும் பலதிறப்பட்ட கூச்சல்கள் கிளம்பின. பெரும் தலைவர்கள் ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொண்டனர். பிரிந்து நின்று பிணங்கினர். பின்னர்ப் பொது வேலை நடைபெறுமா?

தெய்வச் செயலால் இதனைத் தீர்த்து வைக்கும் கடமை முகம்மது அவர்கட்கு ஏற்படுகின்றது. முகம்மது என்ன நீதி வழங்கினார்? அமைதி அறம் காக்கவே வந்த அண்ணல் முகம்மது செய்த முடிவு போற்றத் தக்கதாக இருந்தது. பகைத்து நின்றோரும் பாராட்ட அவர்தம் தீர்ப்பு இருந்தது.

**தெளிந்த தீர்ப்பு :**

தம் மேலாடையைக் கீழே விரித்தார். அப்புனிதக் கல்லை அவ்வாடைமேல் புரட்டினார். பற்பல குழுக்களின் தலைவர் களையும் அழைத்து நான்கு பக்கங்களிலும் நின்று ஆடையைத் தூக்கச் செய்தார். அக்கல்லைத் தம் கையால் எடுத்து உரிய

இடத்தில் பதித்தார். பிரிவு பட்டவர்கள் ஒன்றுபட்டுப் பணி செய்யத் தொடங்கினார்கள். நபிகளின் நற்செயல் நகரத்தை ஒன்று படுத்தியது. அப்பொழுது நபிகள் நாயகத்தின் அகவை இருபத்து மூன்றேயாம்.

**நல்லனவும் அல்லனவும் :**

விருந்தோம்பல் தன்மை, உரிமை வேட்கை, மானம், நாநயம் இவற்றில் சிறந்து விளங்கினார்கள் அந்நகர மக்கள். ஆனால் அவர்கள் சமுதாய வாழ்வில் குறைபாடுகள் பலப்பல ஊறிக் கிடந்தன.

பெண்கள் ஆண்களிலும் மிக மிக இழிவாக நடத்தப் பெற்றனர்; மக்கள் மதுக் குடியிலே பெரிதும் மயங்கி நின்றனர். சூதாட்டத்தைக் கவர்ச்சி மிக்க இன்பப் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். மாந்தர்களையும் விலங்குகளையும் ஈவு இரக்கம் இல்லாமல் கொன்று தொலைத்தனர்.

**கொடுமை ! பெருங்கொடுமை ! :**

ஒட்டகம் முதலிய விலங்குகளைக் கொல்லாமலே தசைப் பகுதியை மட்டும் அறுத்தெடுத்துக் கறி சமைத்து உண்டனர். பின்னர் வேண்டும் போதுகளில் அதில் இருந்து தசைப் பகுதியை அறுத்துக் கொண்டனர். இத்தகைய கொடுமைக்கு ஆட்பட்ட விலங்குகள் கண்ணராவிக் காட்சி வழங்கிக் கொண்டிருந்தன. எனினும் அவற்றின் துடிப்போ அவலமோ அவர்களுக்குச் சிறிதும் தோன்றுவதே இல்லை.

அடிமைகள் வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அடிமைகளை விலங்கினும் இழிவாக நடத்தினர். அடிமையைக் கசையினால் அடிக்கும் ஒருவன், "நான் அடிக்க முடியாத அளவில் சோர்வு அடைந்தமையால் அடிப்பதை நிறுத்தினேனே அல்லாமல் அடிமைமேல் இரக்கப்பட்டு நிறுத்தினேன் அல்லேன்" என்றான். என்ன பேரருள் மொழி இது!

**தெய்வம் பலப்பல :**

முன்னர் வாழ்ந்த நபிகள் காலத்தில் ஒரே தெய்வத்தை வணங்கி வந்த மக்கள் பல தெய்வங்களையும், உருவ வழி பாட்டையும் கொள்ளத் தொடங்கினர். மக்காவில் இருந்து கஃபாவில் மட்டும் முந்நூற்று அறுபது வழிபாட்டு உருவங்கள் வைத்து வழிபட்டனர். வீடுகளிலும் கடவுள் உருவங்கள் வைத்து வணங்கினர்.

**அறியாமை :**

*பெரிய உடலில் பெரிய உயிர் உள்ளதென்பதும், சிறிய உடலில் சிறிய உயிர் உள்ளதென்பதும், அவர்கள் கருத்தாக இருந்தது. பழிக்குப்பழி வாங்குவதில் தனிமுதல் தன்மை வாய்ந்தவர்களாக இருந்தனர்.*

*கல்வியிலே அவர்கட்குக் கருத்து இல்லை. தலைவன், சட்டம், ஆட்சி, அடங்கி நடத்தல் என்பவை எல்லாம் அவர்கள் அறியாதவை.*

*இத்தகைய சூழலிலே நபிகள் நாயகம் பிறந்து வளர்ந்தார். அவர் கண்ணையும், காதையும், கருத்தையும் இவை துயரூட்டின. இம்மக்கள் திருந்தி இனிய அமைதி வாழ்வு வாழ வகை செய்யவண்டும், வழிகாட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். இறைவன் எண்ணமும் அதுவாகவே இருந்தது. அளவிறந்த சீர்கேடு உண்டாகும் போது இறைவன் அதனை ஒழித்து நல்வழி காட்டுவதற்கு வகை செய்யத் தவறுவது இல்லையே!*

*வறுமையில் வாழ்ந்தார் நபிகள்; ஆனால் வறுமையைப் பொருட்டாக எண்ணாமல் வாழ்ந்தார். அவருக்குத் திருமணம் நடைபெற்றது; மனைவியார் மிகப்பெருஞ்செல்வர். ஆகவே, நபிகட்கு நற்பணி புரிதற்கு ஓர் அடிமையை அன்பளிப்பாக வழங்கினார் அவ்வம்மையார்.*

**முறைமிக்க முதற்பணி :**

*நபிகள் செய்த முதற்பணி என்ன? தம்மிடம் அடிமையாக வந்த எட்டு வயதுச் சிறுவரை உரிமையாகப்போகச் சொல்லி விட்டார். ஆனால், நபிகளின் நல்லன்புக்கு ஆட்பட்ட அவ்வடிமைச் சிறுவரோ நபிகளை விடுத்துச் செல்ல விரும்ப வில்லை. பின்னர் அச்சிறுவரின் தந்தையார் வந்து முயன்று அழைத்தார். அப்பொழுதும் நபிகளை விட்டு அகலவில்லை. அப்பொழுது மட்டுமென்ன? தம் வாழ்நாள் முழுமையும் நபிகளின் காலடியிலேயே வாழ்ந்தார். அவர்தம் அன்பார்ந்த தொண்டைப் பாராட்டுவதா? நபிகளாரின் அருளார்ந்த தகைமையைப் பாராட்டுவதா? "உணவு உடைகளிலே அடிமைக்கு வேறு தமக்கு வேறு என்று வேற்றுமைப் படுத்துவது பெரும் பாவம்" என்று நாடெங்கும் பறையறைந்த நபிகள் தம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற அடிமையை எப்படிப் பேணியிருப்பார் என்பதை நாம் எண்ண வேண்டும். அடிமைத் தொண்டரின் பெயர் 'சையது' என்பது.*

**குகையில் முகம்மது :**

உயிர்களுக்குத் தொண்டாற்றுவதற்குத் தம்மை முழுக்க ஒப்படைக்கு முன், உயிர்களைப் படைத்த இறைவன் அருள் ஒளியை எதிர்பார்த்தார் முகம்மது. ஒரு மலை மேல் ஏறி அங்கிருந்த குகை ஒன்றில் புகுந்து அருந்தவம் கிடந்தார். அத்தவம் ஆண்டுக் கணக்கிலும் நீண்டது. நாற்பது நாட்கள் நீர் பருகாமலும், உணவு கொள்ளாமலும், நோன்பு கொண்டார். இறைவன் அருளிய பேரொளி தமக்கு எய்தப்பெற்ற பின்னர் அவர் பணி பெரிதாயிற்று. தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் அடையவேண்டாவா?

**மோது பகை :**

'அல்லா ஒருவனே இறைவன்' என்றும், 'முகம்மது அவர்கள் அல்லாவின் திருத்தூதர் என்றும் முதற்கண் ஏற்றுக் கொண்டு முழுக்க முழுக்க அடியாராக அமைந்தவர் நபிகளின் மனைவியாரே ஆவர். அவரை அடுத்து ஏற்றுக் கொண்டவர்கள் அலி என்பவரும், சையதும் ஆவர். இவர்கள் மூவரும் ஏற்றுக் கொண்டது விந்தை தான்! ஏனெனில் பெரும்பாலும் வேற்றவர் மதிக்கவும், பெருமைப் படுத்தவும் தொடங்கிய பின்னரே தம்மவரும், உற்றார் உறவினரும் மதிக்கத்தலைப்படுவர். ஆனால் நபிகளுக்கோ அவர் தகவினை நன்கனம் அறிந்த பெருமக்கள் அடுத்திருந்தனர். அவர்கள் இறைவனது தூதர் என்று ஏற்றுக் கொண்டது முதல் வெற்றி யாகும். அடுத்து, அவர் மோதித் தீரவேண்டிய எதிர்ப்போ மலைபோல முன்னின்றது.

**தலை தப்பியது :**

ஒருநாள் நபிகள் கஃபாவிற்கு வருகின்றார். அவரைக் குறைசிகள் என்னும் வணிகர்கள் சூழ்ந்து கொள்கின்றனர். "நீர் தாமே எங்கள் முன்னோர் வழிபாட்டு முறைகளைப் பழித் துரைக்கின்றீர்" என்றனர். 'ஆம்' என்றார் அச்சம் அணுவளவும் கொள்ளாத அல்லாவின் தூதர்.

கூட்டத்தின் இருந்த வெறியர் மிகப்பலர். அவர்கள் சினந்து எழுந்தனர். ஒருவன் தன் துண்டை எடுத்து நபிகள் கழுத்திலே மாட்டி முடிந்த மட்டும் முறுக்கினான். நபிகளுக்கு மூச்சுத் திணறியது. மயக்கமும் உண்டாகியது. அந்நிலைமையில் நபிகளின் அன்பர் ஒருவர் உட்புகுந்து காப்பாற்றினார். ஆனால் அவர்பட்ட அல்லல் பெரிது. அவர் தாடியைப் பற்றிப் பிடுங்கி எறிந்தனர். இரத்தம் கொட்ட வலி தாழாமல் கீழே மயங்கி வீழ்ந்தார். அவர்

இறந்து போனார் என்னும் எண்ணத்தால்தான் கூட்டம் கலைந்தது! ஆனால் அவர் ஒருவாறு உயிர் பிழைத்தார்.

**ஏனையோர்க் கிரக்கம் :**

நபிகளைச் சூழ்ந்த துயரம், அவரைப் பின்பற்றிச் செல்ல முன்வந்தவர்களையும் சூழத் தவறவில்லை. நபிகளை, 'இறைவன் தூதர்' என ஏற்றுக்கொண்ட ஒரே ஒரு காரணத்திற்காக ஒருவனது இரண்டு கால்களிலும் இரண்டு ஒட்டகங்களைக் கட்டி எதிர் எதிராக ஓட்டினர். அவன் சுவடுகள் கிழிக்கப் பெற்றுக் கொடுமையாக மாண்டான். நபிகள் தமக்கு நேரிடும் அல்லல்களை அமைதியாகத் தாங்கினார். ஆனால் தம்மைப் பின்பற்றுவோர் படும் கொடுமையைக் காணப்பொறுக்க முடியாமல் கண்ணீர் வடித்துக் கலங்கினார். அவ்வேளையிலும் இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு உறுதிநிலையில் பிறழாது இருக்குமாறே வேண்டினார்; பதிலுக்குப் பதில் தாக்குவதைச் சற்றும் விரும்பினார் அல்லர்! தாம் உண்மையெனக் கண்டதை ஊரறியச் சொல்லு வதற்கு அவர் அஞ்சினாரும் அல்லர்!

**உறுதி பெரிது :**

ஒருநாள் நபிகளின் பெரிய தந்தையார் அபூதாலிப் வந்தார். அவர் "என்மேல் இரக்கம் கொண்டாவது இப்பணியை விடுவீராக; வாணிகர்கள் பகையோ மிக மிக வலுக்கிறது" என்று மன்றாடினார். ஆனால் அண்ணலார், "அல்லாவின் ஆணையாகச் சொல்லுகிறேன். வலக்கையில் ஞாயிற்றையும், இடக்கையில் திங்களையும வைத்து, என்பணியை விடுமாறு கட்டளையிட்டால் கூட அதனை விட்டொழிக்க மாட்டேன்" என்றார். உலகத்தை உய்யச்செய்யும் வண்ணம் வந்த பெருமக்களின் உறுதிப்பாடு-அம்மவோ! எவ்வளவு பெரிது!

நபிகளைக் கல்லால் அடித்துக் குருதி வரச் செய்தான் ஒருவன். அவனை அடித்துப் பெரிய புண்ணை உண்டாக்கி விட்டார் நபிகள் மேல் பேரன்பு கொண்ட ஒருவர். அவர் தம் வெற்றிக் களிப்பை அண்ணலாரிடம் ஓடி வந்து உரைத்தார். அப்பொழுது நபிகள், 'இசுலாத்தின் பகைவர்களைப் பழிதீர்க்க வேண்டும் என்பது என் வேட்கை அன்று. அவர்களுக்கு இன்னல் அளிப்பதை நான் துளியேனும் விரும்பவில்லை" என்றார்.

**ஒன்றுக்கு நூறு :**

இத்தகைய அத்தண்மையாளர் திருத்தலைக்கும் விலை வைக்கப்பட்டது. "முகம்மதின் தலையைக் கொண்டு வருபவனுக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசாக வழங்குவேன்" என்று ஒருவன் தான் வணங்கும் தெய்வ உருவின் முன் நின்று ஆணையிட்டான்.

உணர்ச்சி மிக்க ஒருவன் வாளுடன் ஓடினான் முகம்மதின் தலையைக் கொய்வதற்கு! பரிசு நூறு ஒட்டகங்கள் அல்லவா!

**திறமான திருப்பம் :**

வெறியின் ஓடும் வழியிலே, அவன் தங்கையும் அவள் கணவனும் நபிகளின் அடியார்களாகி விட்டனர் என்பதைக் கேள்விப்பட்டான். தன் வழியைத் திருப்பி "முகம்மதின் தலையைக் கொய்யுமுன் இவர்கள் இருவர் தலையையும் கொய்வேன் என்று கூறிக்கொண்டு அவர்கள் வீட்டுக்குள் புகுந்தான். மைத்துனனைத் தாக்கினான்; தங்கையை உதைத்தான். அல்லாவின் திருப்பெயரை உரைத்துக்கொண்டு அவர்கள் அஞ்சாமல் நின்ற துணிவு அவனை உலுக்கியது. வெட்டக் கொணர்ந்த வாளை வீசி எறிந்து விட்டுத் தானும் இசுலாத்தில் சேர்ந்து விட்டான்!

எவரெவர் நபிகளைக் கொல்லவும் துன்புறுத்தவும் வந்தார் களோ அவர்கள் அந்தப் பொறுமை மலையின் முன் நின்று அடிபணிந்து சென்றனர்! அண்ணலார் சொல் மழையிலும், முகவொளியிலும் மயங்கி நின்று மனம் திரும்பப் பெற்றனர். இவ்வாறு எதிர்த்து நின்றவர்களே இணைந்து போவது பகைவர்கள் உள்ளத்தில் மிகுந்த எரிச்சலை உண்டாக்கியது. ஆதலால் சொல்லொணாத் துயரங்களை விளைத்தனர்.

**விரும்பிய வெளியேற்றம் :**

நபிகள் தம்மைப் பின்பற்றுவோர் படும் துயரத்தைப் பொறுக்கமாட்டாமல் மக்கமா நகரில் இருந்து கப்பலில் ஏறி, அபிசீனியாவிற்குச் செல்ல அவர்களுக்கு ஆணையிட்டார். அவ்வாறு நாடு விட்டுச் செல்பவர்களுக்கும் வாணிகர்கள் உண்டாக்கிய துயரங்களுக்கு அளவில்லை. போகும் போதும் சரி, போயபின்னரும் சரி, ஒழிவில்லாத் துயர் உண்டாக்கிக் கொண்டே இருந்தனர். நபிகளும் ஒரு நாள் மக்காவை விட்டுக் கிளம்பி விட்டார். அவரை அபூபக்கர் என்பவர் நிழல் போல் தொடர்ந்தார். அவர்களைத் தொடர்ந்து பிடித்து விட அரும்பாடு பட்டனர் பகைக் கூட்டத்தார்.

நபிகளும், அபூபக்கரும் ஒரு மலைக் குகையுள் புகுந்தனர். எங்கும் தேடிய எதிரிகள் அம் மலைக்குகையையும் சூழ்ந்து நின்று தேடத் தொடங்கினர். ஆனால் குகையின் வாயிலில் இருந்த ஒரு சிலந்தி வலையைக் கண்ட ஒருவன், "இவ்வலை முகம்மது பிறக்கு முன்னரே பின்னப்பட்டதாக இருக்கும் போலும்" என்று கூறினான். நல்ல வேளையாக அவன் அறிவுரையைக் கேட்ட அருளாளர்கள் உட்புகாமல் தங்கள் ஊர் போய்ப் புகுந்தனர்!

நபிகள் மதீன மாநகரை அடைந்தார். அவரைப் பின்பற்று வோர் அனைவரும் ஒருவர் அறியாமல் ஒருவர் கிளம்பி அங்கு வந்து சேர்ந்தனர். அவ்வளவு தான். நபிகள் பகை, நாட்டுப் பகையாக வளர்ந்து விட்டது. மக்கமாநகரார் மதீனா நகர் மீது படை எடுத்தனர். அல்லாவின் பெயரால் நபிகளின் தலைமையில் இசுலாமியர் மக்கமா நகரைத் தாக்க முனைந்தனர்; வெற்றியும் எய்தினர்.

**நல்ல தண்டனை :**

போரிலே பலர் சிறைப் பிடிக்கப்பட்டனர். அவர்களைக் கொன்றொழிக்க வேண்டும் என்று சிலர் கருதினர். ஆனால் நபிகள் சிறைப்பட்டோர் நிலைமைக்கு ஏற்றவாறு தண்டனை வழங்கினார். அடி, உதை, வெட்டு, கொலை ஆகிய தண்டனை தர அருளாளராய அவர் இசையவில்லை. கல்வி அறிவுடைய கைதிக்கு என்ன தண்டனை தெரியுமா? அவன், கல்வியறி வில்லாத பத்துப் பேர் களுக்குக் கல்வி அறிவூட்ட வேண்டும்! அதுவே அவனுக்குள்ள தண்டனை!

நபிகள் மேல் வசைக்கவி பாடிய ஒரு கவிஞன் கைதியாக இருந்தான். அவன் பல்லை உடைத்துப் பாடம் புகட்ட வேண்டும் என்பது ஒருவர் வேண்டுதல். நபிகளோ, "இவரது எவ்வுறுப்பைச் சிதைத்தாலும் சரி, இறைவன் என்னுடைய உறுப்பையும் சிதைக்கத் தவறான்" என்று கூறி விடுதலை அருளினார். இவ்வாறே அவர் செய்த பிற போர்களில் அகப்பட்ட கைதிகள் மீதும் அருள் செய்தார். தம்மையும், கஃபாவையும் அடைக்கல மாக அடைந் தவர்களைப் பேரருளுடன் நடத்தினார். "பிறர்மீது அன்பும் இரக்கமும் காட்டாதவன் இறைவனுடைய அன்பையும் இரக்கத்தையும் பெறுதற்கு உரிமை யற்றவன்" என்பது அவர்தம் திருவாய் மொழி.

[1] *“பொறுத்திருங்கள்; உறுதியாக நான் பொறுமையோடு காத்திருப்பவர்களுடன் இருக்கிறேன்”.*

*“துன்பம் செய்யப்படுவதைப் பொறுத்துக் கொண்டு மன்னித்து விட்டால் அது பெருஞ் சிறப்பாகும்”.*

*“நன்மையும் தீமையும் ஒப்பாக இருக்க முடியா. எவரேனும் உங்கட்குத் தீமை செய்தால் அந்தத் தீமைக்குப் பதில் நன்மை செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு செய்வீர் களானால் எவருடன் உங்களுக்குப் பகை இருந்ததோ அவர் உங்களுடைய உண்மையான நண்பராகி விடுவதை நீங்கள் காண்பீர்கள். ஆனால், பொறுமையில் நிலையாக இருப்பவரே இதை அடைய முடியும். மேலான அருள் பெற்றார் அன்றிப் பிறர் எவரும் இந்த நிலைமையை எட்ட முடியாது.*

*“நீங்கள் பழி வாங்குவீர்களானால் எந்த அளவில் எந்த முறையில் உங்களுக்குத் தீங்கு செய்யப்பட்டதோ அந்த அளவில் கூடாமலும் குறையாமலும் பழிவாங்க வேண்டும். ஆனால் நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்துப் பழி வாங்காமல் இருந்து விட்டால், மன்னிப்போருக்கு மன்னிப்பினால் கிட்டும் நன்மை உண்டு.*

*“தீமையை எவர் மன்னித்து விட்டார்களோ, கேடு செய்யாமல் நலம் செய்துவிட்டார்களோ அவர்களுக்கு அவற்றுக்குரிய நன்மை அல்லாவினிடம் உண்டு.*

“நன்மையைப் போதிப்பாயாக!
தீமையை விலக்குவாயாக!”

*இத்தகைய **நன் மொழிகளை** மழைபோல் பொழிந்து தீமையை விலக்கினார் நபிகள். தமக்கென ஒரு சிறு பொருளையும் வைத்துக் கொள்ளாமல் பெருவள்ளலாக வாழ்ந்தார். தம் மனைவியார் சிறிய அளவில் வைத்திருந்த வெள்ளியையும் ஏழையர்க்கு வழங்கிவிட ஆணையிட்டார்! தம் பணிகளை இனிது நிறைவேற்றிய போது உலக வாழ்வில் இருந்து விடுதலை பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடங்கள் புனித இடங்களாகக் கருதப்பெற்று உலகோர் உள்ளங் களில் இடம்பெற்றுச் சிறப்படைந்துள்ளன!*

*1. குர் - ஆன்.*

**எவருக்குத் துணை?**

*"அமைதி வழியிலேயே எந்த ஒன்றையும் தீர்க்க வேண்டும்; தீமைக்கும் நன்மை செய்ய வேண்டும்; பிறருக்கு நாம் ஊறு செய்யும் போது இறைவன் நமக்கு ஊறு செய்வான்" என்பன போன்ற நன்மொழிகளைப் பரப்பிய நபிகளின் வழியிலே உண்மையாகச் செல்வதாக இருந்தால் செல்பவர்கள் எத்தகையராக இருத்தல் வேண்டும்? அவர்கள் வாழும் நாடு எத்தகையதாக இருக்க வேண்டும்? வன்முறையால் பிறநாட்டைத் தாக்க முற்படுமா? பொருந்தாப் பூசல்களை விளைத்துப் போருக்கு முந்துமா? முந்துமாயின் நபிகளின் நல்லருளும் அல்லாவின் துணையும் தாக்கப்பட்டோருக்கு உண்டேயன்றித்தாக்குவோருக்கு இருக்க முடியாது அல்லவா!*

# 9. அருட் பெரு மக்கள்

**சிறைக்கோட்டமே அறக்கோட்டம்!:**

**கோ**வலன் கொடுங் கொலைக்கு ஆட்படத் துறவு கொண்டனர் மாதவியும் மணிமேகலையும். துறவில் புகுந்த **மணிமேகலை** செய்த தொண்டுகள் அருமை வாய்ந்தன. இந்நாளில் வாழ்வாரும் போற்றித் தலைமேல் கொள்ளத்தக்கன

"கொடைகளில் எல்லாம் உயர்ந்தது உணவுக் கொடையே. ஏனெனில் உணவுக் கொடையே உயிர்க் கொடையாக இருக்கிறது" என்பதை உணர்ந்தார் மணிமேகலையார். ஆகவே தம் கையகத் திருந்த அமுதசுரபியில் இருந்து,

[1] "காணார் கேளார் கால்முடம் ஆனோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பிகள் பசிநோய் உற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூ றாயிரம் விலங்கின் தொகுதியும்
மன்னுயிர் அடங்கலும் வந்தொருங் கீண்டி"

அமுது பெற்றுய்யஉதவினார். சிறைக் கோட்டம் சென்று ஆங்கு அல்லல் உறுவோரைத் தேற்றி அமுது வழங்கினார். சோழ வேந்தனிடம் சென்று அறங்கள் பலவற்றை எடுத்துரைத்துச் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றி அமைத்தார். அப்பணியாலும், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் நயத்தாலும் சீரிளம் பருவத்திலேயே செந்தண்மையாளர்கள் அனைவரும் பாராட்டும் சீருற்றார்.

**அப்பர் அறப்பணி :**

அமைதிப் பணியில் தலைநின்ற அருட்பெரு மக்களுள் ஒருவர் அப்பர் என்னும் திருநாவுக்கரசர் பெருமான். அவர் தம் வாழ்வின் முழுநிறை நோக்கத்தை,

---
1. மணிமேகலை.

'என் கடன் பணி செய்து கிடப்பதே'

என்னும் அவர் திருவாக்கால் நன்கு அறியலாம்.

அடியார்கள் அனைவரும் திருக்கோயில் சென்று வழிபடுவதையே பத்தி நெறியாகக் கொண்டிருந்த நாளிலே, அதனைத் தொண்டு நெறியாகக் கொண்டவர் அப்பரடிகள். கோவிலைச் சுற்றியுள்ள குப்பை கூளங்களைக் கூட்டுதல், கோபுரங்களில் முளைத்த செடி கொடிகளை வெட்டுதல், கோவிலுக்குள் சென்று பெருக்கி மெழுகுதல், ஆய பணிகளைச் செய்தார். தம் தொண்டுக்குத் துணையாகும் உழவாரப் படையை உடன் கொண்டு சென்றார்.

கங்கை காவிரி ஆடுவதினும், வேத வேள்வி செய்வதினும், நோன்பு பட்டினி கொள்வதினும் அகங் குழைந்து அன்பராகி இறைவன் தொண்டு செய்தலே இன்பம் எனக் கூறினார் அத் தொண்டர் பெருமான்

"தொண்டலால் துணையும் இல்லை" என்றும்

"தொண்டர் அகமலால் கோவில் இல்லை"என்றும்

"விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றி யாகும்" என்றும்

தொண்டின் பெருமையை விளக்கினார்.

மாந்தர் இன்புற்று வாழவேண்டும் என்னும் மட்டற்ற விருப்புடைய அப்பர் பெருமான் "மாந்தர்களே! இங்கே வாருங்கள்; உங்களுக்கு இன்பம் பயக்கும் ஒன்றை உரைக்கின்றேன்; உங்களை அழைத்து அழைத்துக் கனி வழங்கினாலும் அக்கனியை உண்ண மாட்டீர்களோ? இறைவன் என்னும் இனிய கனி இக் கோவிற்கண் உள்ளது; சென்று அருந்துக" என்று வேண்டினார். இத்தகைய தொண்டர் பெருமான் அருள் தொண்டிலே அகங்குழைந்து ஒன்றினார் அப்பூதியடிகள். அவர் நாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அருந்தொண்டாற்றினார். தொண்டர் பெருமையைத் தொண்டரே அறிவார் அல்லவா!

**தாயுமானார் தண்ணெறி :**

**தாயுமானவ அடிகள்** பேரருளாளர்; உயிர்களின் அமைதிக்கு அரும்பாடுபட்டவர். உலகப் பொருள்கள் அனைத்தும் இறைவனே எனக்கருதிய பெருந்தகை அவர். பூவினைப் பறிப்பதுகூட அருளற்ற

செயலாக அவருக்குத் தோன்றியது. 'கொல்லா விரதம்' பற்றிய அவ்வடிகளின் தனி மொழிகள் தலைமேல் கொள்ளத்தக்கன. கடவுளைக் கருணாகரன் ஆகவும், இன்பக் கடலாகவும் கண்டார் அவர்.

'அன்பர் பணி செய்ய வேண்டும்' என்று தாயுமானவர் துடித்தார். பிறவியை வெறுத்த அப் பெருமான், 'அன்பர் பணி செய்வதற்காக ஆயிரம் பிறவி எடுத்தலும் வேண்டும்' என்று வேண்டினார். கொலைக் கொடுமையை ஒழிப்பவரே நல்லவர் என்று நயந்தார். அதனைச் செய்யாதவர் பெயரைச் சொல்லவும் நாணினார்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்றும்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்றும் விரும்பிக் கூறும் அன்னார் அமைதிப் பணிகள் நினைவு கூரத் தக்கன.

**வள்ளலார் வளர்நெறி :**

தாயுமானவ அடிகள் சொல்லறத்தை நல்லறமாக நாட்டிய பெருந்தகை **இராமலிங்க அடிகள்.** சமயப் பணியை அறப் பணியாக மாற்றியமைத்த பெருமைக் குரியவரும் இராமலிங்க அடிகளே ஆவர்.

அடிகளார் கண்டது சமயநெறி அன்று. அதனினும் உயர்ந்த சமயப் பொது நெறியாகும். அந் நெறியிலே சமயவெறி இல்லை; சாதிப் பிணக்கு இல்லை; இனக் காழ்ப்பு இல்லை, "கடலை அடையும் ஆறுகளைப்போல், கடவுளை அடைதற் குரிய பல வழிகளே சமயங்கள்" என்பது அவர் தெளிவு.

இராமலிங்க அடிகள் வடலூர் வள்ளல் என்று வழங்கப் பெறுவார். கையால் காசினைத் தொடுதலையும் விலக்கிய அப் பெருந்தகை, எவ்வாறு வள்ளல் ஆனார்? அவரைப்போல் அருளையும் அறத்தையும் அமைதியையும் வாரி வாரி வழங்கினோர் மிகச் சிலரே! ஆதலால் வள்ளல்களில் வள்ளல் அவர்.

உலகில் உயிர்கள் படும் வருத்தத்தை அவரால் ஒரு நொடியளவும் காணமுடியவில்லை; ஒரு நொடியளவும் கேட்கமுடியவில்லை. வாடிய பயிரைக் கண்டும் வருந்தினார்; வீடுதோறும் இரந்து திரியும் ஏழையரைக் கண்டு கசிந்து அழுதார்! வருந்தி நின்றதால் ஆவது என்ன? கண்ணீர் வடித்து நிற்பதால்தான் ஆவது என்ன?

அறச்சாலை நிறுவினார்; தண்ணீர்ப் பந்தல் அமைத்தார்; மருத்துவமனை கட்டினார்; பள்ளிச் சாலை உண்டாக்கினார். 'மண்கட்டியை உடைப்பதைக் கண்டுகூட அவர் மனம் மருகி நிற்பார்' எனில் உயிர்களின் துயரத்தைப் போக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை உரைப்பது அரிது.

அடிகள், தீயவர்களைத் திருத்துவதற்காக ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதில் அருள் வழிந்து ஒழுகுவதைக் காணலாம்.

"என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படி இருந்தாலும் அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன்; மிரட்டிச் சொல்லுவேன்; தெண்டன் விழுந்து சொல்லுவேன்; பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன்; அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன்; இப்படி எந்த விதத்திலேயாவது நல்வழிக்கு வரச் செய்துவிடுவேன்; நீங்கள் எல்லாரும் இப்படியே செய்தல் வேண்டும்."

**வேதநாயகர் வியன்நெறி :**

வடலூர் வள்ளல் சமரச சன்மார்க்கத் தந்தையாகத் திகழ்ந்தார். அவரைப் போலவே **குளத்தூர் வேத நாயகர்** அவர்களும் சர்வ சமயமும் சமரசம் எய்த வேண்டும் என்று பெரிதும் விழைந்தார். கிறித்தவ நெறியிலே நின்றவர் வேதநாயகர். உயிர்கள் அனைத்தும் இறைவன் இனிய கொடையே என்பதையும், எல்லா உயிர்க்கும் இன்பம் செய்தலே மாந்தர் கடமை என்பதையும் மறவாமல் போற்றினார்.

[1] "துன்பம் என்ப தெவர்க்கும் சுதந்திரமே - அதைத்
தொலைப்பதற் குண்டோ ஒருதந்திரமே
இன்பம் உற்றவர் எவர் நிரந்தரமே - பிறர்
இடிக்க வந்தாலும் - கட்டி
அடிக்க வந்தாலும் - பழி

1. சர்வ சமய சமரசக் கீர்த்தனை : 171.

முடிக்க வந்தாலும் - உயிர்
மடிக்க வந்தாலும் -நீ
ஒருவர் மேலும் குறைகூறாதே"
"மற்றவர் தாம் செய்யினும் பெருந்தீங்கு - அதை
மனத்திற் கொள்ளா திருப்பதே பாங்கு -
குற்றமாகிய வழிதனை நீங்கு"

*என்று தாம்பாடிய சர்வசமய சமரசக் கீர்த்தனையில் பாடுகின்றார்.*

*[2] "எப்பிழைக்காக நீ பிறரைச் சினந்தாயோ, அப்பிழையை நீ செய்த தில்லையா? உன்னைப் போல் அவர்கள் பிழை செய்தால் ஆகாதா?" என்று இடித்துக் கேட்டுப் பிழை செய்வார் மேல் பரிவு காட்டித் திருத்த வகை செய்கிறார் வேதநாயகர்.*

*வேதநாயகர் மயிலாடுதுறை என்னும் மாயூரத்தில் நடுவராக இருந்தபோது அங்குப் பெரும் பஞ்சம் நிலவிற்று. அதனை ஒழிப்பதற்குப் பெரும்பாடு பட்டார். தம் பெருவளத் தையும் அருளாளர் பேருளத்தையும் பயன்படுத்திப் பல்லாயிரம் பேர்களின் பசித்துயர் போக்கினார். சொல்லும் செயலும் ஒன்றுபட்டுத் தொண்டாற்றிய வேதநாயகர் ஊரார் புகழுக்கு உரியவர் ஆனார்.*

**ஆல்பிரட் சுவைட்சர் அன்புநெறி :**

*அனைத்துலகும் அறிந்த **ஆல்பிரைட் சுவைட்சரை** அறியார் எவர்? அவர் உலகோர் உள்ளத்தில் உறைவதற்குக் காரணம் என்ன? உயிர்கள் மாட்டு அவர் கொண்ட அருள் ஒன்றால், புகழ் விழையா அவரை உலகப் புகழ் சூழ்ந்து வளைக்கின்றது.*

*"மூச்சு விடுகின்ற எல்லா உயிர்களையும் இறைவன் காத்தருள் வானாக; அவை அமைதியுடன் உறங்கட்டும்" என்று இறைவனை வேண்டும் அவர்தம் பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில் அமைந்துள்ள அருட்பெருக்குத்தான் எத்தகையது!*

*நீக்ரோ மக்கள் நோயால் மாண்டு மடிகிறார்கள் என்று கேள்விப்பட்டார் சுவைட்சர். செர்மன் குடிமகனாராகப் பிறந்து, பிரேஞ்சு குடிமகனாராக வளர்ந்த சுவைட்சர் தம் மனைவியோடு ஆப்பிரிக்காவுக்குச் சென்றார். மருத்துவமனைகளைத் தம் கையாலேயே கட்டினார். அவர் மனைவியார் துணை நின்றார்.*

*2. நீதி நூல் : 31 : 1.*

அறுவை முதலிய மருத்துவப் பணிகளை அயராமல் இராப் பகலாகச் செய்தார் சுவைட்சர்; அதற்கும் அவர் மனைவியார் துணைபுரிந்தார். நாடு கடந்து சென்று எப்பயனையும் எதிர் பாராமல் தொண்டில் ஈடுபட்டவர் சுவைட்சர். அவர்மட்டுமோ ஈடுபட்டார்? தம் குடும்பத்தையே ஈடுபடுத்தி வாழ்நாள் முழுமையும் தொண்டு செய்தார். அவர்பணி வாழ்க! அவர் புகழ் பெருக!

**தமியான் தனிநெறி :**

பெல்சிய நாட்டிலே பிறந்தார் **தமியான்** அடிகள். அவர் கிறித்தவ சமயத்தைப் போதிப்பதற்காகவே ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். ஆனால் அறிவு மருத்துவராகப்போன அவர் விரைவில் உடல் மருத்துவராக மாறினார்.

காலும் கையும் விரலும் அழுகி ஒழுகும் தொழு நோயாளரைக் கண்டார்; உருகினார்; அவர்க்குத் தொண்டு செய்யவே தம்மை ஒப்படைத்தார். நினைக்கவே அருவருப்பு உண்டாக்கும் தொழுநோயாளரிடம் இன்புற உறவாடினார்; அளவளாவிப் பேசினார்; அவர்கள் புண்ணைக் கழுவினார்; மருந்து கட்டினார்!

பிறர் பிணி நீக்கிய பெருமான், அவர்கள் பிணி நீக்கும் பணியிலே தமக்கு அத்தொழுநோய் பற்றிக்கொண்டதைக் கூட அறியாமல், அறிந்த பின்னரும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் புன்முறுவலுடன் தொண்டு செய்தார். ஆயிரம் ஆயிரம் பேர்கள் பிணியைப் போக்கிய அப்பெருமான் நாற்பத்திரண்டாம் அகவையில் தம் வாழ்வை அமைதியாக முடித்துக் கொண்டார். பொன்னையும் பொருளையும் கொடுக்கலாம்! தன்னைக் கொடுப்பதன்றோ அரிய கொடை!

**நைட்டிங்கேல் நன்னெறி :**

ஒருநாள் செய்தித் தாள்களில் "அருள் உள்ளம் படைத்தோர் இலரா? பிணியால் மடிவோரைப் பேணுதற்குரிய பெண்மணிகள் இலரா?" என்னும் அறிக்கை வெளிவந்ததைக் கண்டார் ஓர் இளஞ்செல்வி. அப்பணிக்குத் தம்மை ஒப்படைத்தார். அவரே பிளாரன்சு நைட்டிங்கேல்.

போரால் இறந்து பட்டவர்களைப் பார்க்கிலும் தக்க மருத்துவ வாய்ப்பு இல்லமையால் 'ஸ்குட்டாரி' என்னும் இடத்தில் இறந்த வீரர் பலர். அங்குத் தொண்டு செய்தற்கே நைட்டிங் கேல்

புறப்பட்டார். அந்த இளஞ்செல்வி செய்த தொண்டு உலகம் போற்றும் தொண்டாயிற்று. பகலிலே அயராமல் பணியாற்றிய அவர் இரவில் விளக்கேந்திக்கொண்டு, கட்டில் கட்டிலாகச் சென்று பணியாற்றினார். நோயாளர்க்குப் பரிவூட்டிய அப் பெருமாட்டியை நோய் அணுக்கள் பற்றாமல் விட்டனவா! நல்லோர் அல்லோர் என அறியாமல் கேடு செய்யும் உயிர்கள் ஆயிற்றே அவை! நோயுடன் இங்கிலாந்துக்கு வந்தார் நைட்டிங்கேல்! வந்தும் ஓயாத் தொண்டாற்றினார். அத்தொண்டின் இடையே பேரமைதி கொண்டார் அச்செல்வப் பெருமாட்டி.

**சாவா உடம்பினார் :**

இவ்வாறு தம்மை அமைதிப் பணிக்குத் தந்த அருளாளர் பலர். அவர்கள் வரிசை நீளமானதும் கூட, அத்தகையவர்கள் வரிசை நீள நீளத்தான் உலகோர் அவலம் ஒழியும். மோது போர் களும், முட்டும் பகைகளும் தணியும். இடுக்கண்களும், இன்னாச் செயல்களும், பிணிநோயும் எளிதில் விலகும். உலகைக் கப்பிப் பிடித்துக்கொண்டு இருக்கும் பகைமூட்டமும் அகன்றோடும். பூசற் கொடுங்குழிகள் மூடப்பெறும்.

தன்னுயிர் கொண்டு மன்னுயிர் பேணி நிற்போரே இறைவனுக்கு இடையறாத் தொண்டு செய்தவர்கள் ஆவர். இறைவன் இன்னருளுக்கு உரியர்களும் ஆவர். அவர்களே என்றும் சாவாத எழில் உடம்பு பெற்றுத் திகழ்பவர்!

# 10. அரசியல் அறிஞர்கள்

அமைதிக்குப் பாடுபட்ட சங்கச் சான்றோர்களை அறிந்தோம்; சமயச் சான்றோர்களையும் அறிந்தோம். இனி அரசியல் அறிஞர்கள் சிலரைப் பற்றி அறிவோம்.

**உலகத் தேர் :**

அரசியல் அறிஞர்கள் உலகம் என்னும் தேரை இயக்கும் வலவன் போன்றவர்கள். அவர்கள் அமைதிப் பணியில் ஈடுபடுவது மிகச்சிறப்புடையதாகும். அவர்கள் பிறரைப்போல் அல்லாமல் நினைத்ததைத் தம் நாட்டளவில் செயல்படுத்த முடியும். கொண்ட கொள்கைகளைப் பிறநாடுகளில் பரப்புவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கவும் முடியும்.

**அசோகர் அரும்பணி :**

புத்தர் பெருமானின் கோட்பாடுகள் இந்திய நாடு கடந்தும் பிறநாடுகளில் பரவின. அதற்குக் காரணமாக இருந்தவர் எவர்? பேரரசர் **அசோகரே** ஆவர்! உழைக்கும் உண்மைத் தொண்டர்கள் ஒருநாட்டுக்கு வேண்டும். அவ்வாறு இருப்பினும் அவர்களுக்கு உதவுவாரும் வேண்டும். ஒரு போரின் வெற்றி படைவீரர்களை மட்டும் பொறுத்ததாகாது. படைத்தலைவர் களையும் பொறுத்த ஒன்றாகும். இந்நெறி அமைதிப்போரைப் பொறுத்த அளவில் மட்டும் விலக்காகிவிட முடியாதே!

கலிங்கப்போர் முடிந்ததும் அசோகர் கருத்து அருளில் திரும்பியது; புத்தசமயத்தைப் பின்பற்றினார்; இனிமேல் எக் காரணம் கொண்டும் எவருடனும் போர் செய்வதில்லை என்று உறுதி செய்தார். நாட்டுக்கு ஆணை பிறப்பித்தார்; "உயிர்க்கொலை செய்வது கொடுமை; வேட்டையாடுவது குற்றம்"! பல்லாயிரம் தொண்டர்கள் செய்யவேண்டிய பணியை நல்லதோர் அறிக்கை நடத்தி விட்டது. ஆகவே, அமைதிப் பணியிலே அரசியல் அறிஞர்கள் நாட்டம் செலுத்துவதே நானிலத்தின் நற்காலமாகும்.

**அண்ணல் ஆபிரகாம் :**

*“அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருந்தும் அவற்றை அறவழிக்கு அன்றிப் பிறவழிக்குப் பயன்படுத்தாத ஒரே ஓர் அறிஞன் இக்கல்லறையில் உறங்குகின்றான்” என்று* ***ஆபிரகாம் லிங்கன்*** *கல்லறையிலே எழுதவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றார் ஓர் அறிஞர். அத்தகைய அறவோராகத் திகழ்ந்தார் ஆபிரகாம்.*

**அடிமை ஒழிப்பு :**

*நியூ ஆர்லியன்சு ஏலச் சந்தை ஒன்றில் நீக்ரோ அடிமைகளை ஏலம் விடுவதை இளம் பருவத்தில் காணுகிறார் லிங்கன். அன்று அதனைக் கண்டு கண்ணீர் வடித்த இரக்கம் தான் அவரை அயராமல் பாடுபடச் செய்து அமெரிக்கத் தலைவர் ஆக்கியது; அடிமை முறையை ஒழித்துக் கட்டவும் முடிவு செய்தது. எத்துணை எத்துணை மக்களின் இன்ப உரிமை வாழ்வு, அந்த ஒருவர் திருக்கை யெழுத்தால் உண்டாகியது! அந்த அருட்கொடையைத் தான் என்னென்று உரைப்பது!*

*ஆபிரகாம் அடிமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வர இருப்பதை அறிந்தவுடன் பிரிகின்றது தென்னாடு; தனி உரிமைக் கொடியைத் தூக்கிப் பிடிக்கின்றது; போரும் தொடங்குகின்றது. போர் முழக்கத்தின் இடையே அடிமை ஒழிப்புக் கையெழுத்தைப் போட்டு முடிக்கின்றார் லிங்கன். அதுவரை அவரைத் தழுவி நின்றோர்கூட வழுவிச் சென்று எதிர்க்கின்றனர். எனினும் எண்ணியதைத் திண்ணிதாக நிறைவேற்றுகின்றார் அண்ணல் ஆபிரகாம்.*

**இரட்டை விடுதலை :**

*உரிமை வழங்கிய தலைவருக்காக உயிரை வழங்கிப் போரிடவும் துணிந்து வருகின்றனர் நீக்ரோவர். வெற்றி முழக்கம் விண்ணைப் பிளக்கின்றது! இந்த வெற்றியிலே லிங்கனுக்கு மகிழ்ச்சி இல்லை. தென்னாட்டுக் கைதிகளையெல்லாம் அழிக்க வேண்டும் என்னும் வெறியிலே நிற்கின்றனர் வீரர். ஆபிரகாம், தளபதி கிராண்ட்! நீக்ரோவருக்கு விடுதலை தந்து நான் செய்ய வேண்டிய பணியை முடித்தேன். உம் அடியைப் பணிந்து நிற்கும் தென்னாட்டு வீரர்க்கு எத்தகைய விதிப்பாடும் இல்லாமல் விடுதலை தரும் அருட்செயலை நீர் செய்தல் வேண்டும். அவ்வாய்ப்பை*

ஆண்டவன் உமக்கு அருளியிருக்கிறான்'' என்று வேண்டினார். எத்தகைய அருட்செயல் இது!

**எது பெரிது :**

சேற்றில் மூழ்கிக்கொண்டு இருக்கின்றது பன்றி ஒன்று. அவ்வழியே குதிரை வண்டியில் செல்கின்றார் லிங்கன். அடுத்த ஓர் ஊரில் உள்ள வழக்கு மன்றத்திற்குச் செல்லும் வழியில் கண்ட நிகழ்ச்சி இது. தம் துணியில் சேறு படிந்துவிடுமே என்று கருதி முதற்கண் சிறிது செல்கிறார். ஆனால் அவர் உள்மனம் விட வில்லை. "ஒன்றன் உயிர் போவது பெரிதா? உடுத்திய துணியில் அழுக்குப் படிவது பெரிதா?'' என்னும் வினாக்கள் எழும்பின. வண்டியை விட்டுக் கீழே இறங்கி ஆழ்ந்து போய்க்கொண்டிருக்கும் பன்றியைத் தூக்கி வெளியேற்றினார். அது துள்ளித் துடித்து அடித்த அடியில் உடை முழுவதும் சேறாகியது. உடையை நீரில் நனைத்து உலர்த்திக்கொண்டே வழக்கு மன்றத்திற்குச் சென்றார். எல்லா உயிர்களையும் தம்முயிராகக் காக்கும் அருளாளர்க் கன்றிப் பிறர்க்கு இக்குணம் வாராது.

ஏழை எளியவர்க்காகவும், நீக்ரோவர்க்காகவும் எத்தகைய பயனையும் எதிர்பாராமல் தாமே முன் வந்து வழக்காடினார். அடுத்த வேளை உணவுக்கு வழியற்ற போதும் முறையற்ற காசு ஒன்றையும் வாங்கினார் அல்லர். மாறாப்பகை கொண்டு நின்றவர் களையும் நண்பராக்கிப் பகை ஒழிக்கப் பாடுபட்டாரே அல்லாமல் சிறிய பகையையும் உண்டாக்கினார் அல்லர். அத்தகையவர்க்கும் சொல்லொணாத் துயரங்கள் சூழ்ந்தன. அவர் செய்த அடிமை ஒழிப்பே அவருக்குத் துப்பாக்கிக் குண்டுகளை நல்கியது. உலகில் என்று தான் விலங்கியல் ஒழியுமோ?

**அண்ணல் காந்தி :**

**காந்தியடிகளை** அரசியல் அறிஞர் என்பதா? சமயச் சான்றோர் என்பதா? அருட்பெரியார் என்பதா? இவ்வனைத்தும் கூடிய ஓர் உருவமே காந்தியடிகள். வாழ்ந்த காலமெல்லாம் அவர் பேச்சும் மூச்சும் அமைதி அமைதி என்றே இருந்தன. கொடியவன் குண்டுபட்டுக் கீழே வீழ்ந்தபோதும் 'அமைதி, அமைதி' என்றே ஒலித்தன!

காந்தியத்தின் அடியே அகிம்சை என்னும் இன்னா செய்யாமையேயாம். இன்னா செய்யாமை பற்றி இலக்கியங்களில் குறிப்புக்கள் உண்டு; காவியங்களில் செய்திகள் உண்டு; அறநூல் களிலும், சமய நூல்களிலும் சான்றுகள் உண்டு. ஆனால், அதனை அன்றாட வாழ்வுப்பணியாக்கி மக்களின் நேரிடை வாழ்வில் கலந்து கண் முன் வாழ்ந்து காட்டுபவர்கள் அருகியிருந்த காலச் சூழலில் காந்தியடிகள் தோன்றினார். தாம் கடைப்பிடித்த அகிம்சை நெறியில் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தனி ஒருவராய் விளங்கினார்.

**ஒரே நோக்கம் :**

“தனிவாழ்வின் நடைமுறை வேறு; பொது வாழ்வின் நடைமுறை வேறு” என்பதே பெரும்பாலோரின் வாழ்வு என்பதை ஆய்ந்தோர் நன்கறிவர். ஆனால் தனி வாழ்வு எவ்வாறு களங்க மற்றதாக அமைய வேண்டும் என்று கருதினாரோ அவ்வாறே பொதுவாழ்வும், தாம் புகுந்த அரசியல் வாழ்வும் களங்கமற்றதாக இருக்கவே விரும்பினார் அடிகள். அவ்வாறே வாழ்ந்தார். இன்னும் ஆழமாகப் பார்த்தால் “அடிகளார்க்கு அகநோக்கம், புறநோக்கம் என இரு நோக்கம் இருந்ததே இல்லை. அவருக்கு ஒரே நோக்கமாக இருந்தது. அந்நோக்கம் அறநோக்கம் என்பதே” என உறுதியாக உரைக்கலாம்.

**அடிகளார் படை மாட்சி :**

ஆற்றல் மிக்க அரசுகளையும் அடக்கி ஒடுக்கி வைத்திருந்த ஆங்கில அரசினால் அடிகளாரின் அறப்போருக்கு - அகிம்சைப் போருக்கு - ஈடுதர முடியவில்லை. நிற வெறியில் தலை நின்று கொடுமை செய்தற்கு அஞ்சாத ஸ்மட்ஸ், “தாக்குபவர்களைப் பதிலுக்குத் தாக்காமல் பொறுத்துக்கொண்டு தங்களைத் தாங்களே துன்பத்திற்கு உள்ளாக்கிக் கொள்பவர்களை எப்படி ஒடுக்கிவிட முடியும்?” என்று சோர்கிறார் என்றால் அடிகளார் கண்ட படைக் கருவியின் பெருமையே அது. ஆகவே தான் ஆங்கில அரசும் அவர் வழி நிற்க நேர்ந்தது.

**உலகத் தலைவர் :**

புகை வண்டியிலேயும், குதிரை வண்டியிலேயும், பெருந் தெருவிலேயும், வெள்ளையர் வீட்டு முற்றங்களிலேயும் காந்தியடிகள் பட்டிருக்கும் அல்லல்களுக்கு அளவுண்டா? எத்தனை

அடிகள்! உதைகள்! குருதி கொட்டக் கல்லாலும் கழியாலும் தாக்கப்பெற்ற கொடுமையை என்னென்பது! செருப்புக் காலால் ஏற்றப்பட்டபோது கூடச் சினங் கொள்ளவில்லையே அந்த அருட்கனி! கண்ணாரக் கண்டவர்கள் மேலும், காவல் துறையினர் 'இவரே குற்றவாளி' எனக் கொண்டு வந்து நிறுத்தியவர்கள் மேலும், நடுவர்களை 'இவர்கள் தண்டனைக்குரியவர்கள்' என்று கூறியவர்கள் மேலும், அருள் செலுத்தி வழக்குத் தொடுக்காத பெருந்தன்மை, தெய்வத் தன்மையே அன்றி மனிதத் தன்மை என்பது பொருந்தாது. அத் தன்மையே அவரை மகாத்மா ஆக்கி, உலகத் தலைவராகச் செய்தது.

மாந்தரின் நல்வாழ்வு மட்டுமோ மகாத்மாவின் கருத்தாக இருந்தது? கன்றுக்குப் பால் விடாமலும் பொய்க் கன்றுகளைக் காட்டியும், கறந்த கொடுமையைக் கண்டு அல்லவா மாட்டுப் பால் பருகுதலை அறவே விட்டார் அடிகள்!

**அருள் வெள்ளம் :**

கழுத்துப் புண் உடைய மாடு பூட்டப்பெற்ற வண்டியில் ஏறி வந்த பாவத்திற்காகக் கழுவாயாக, அந்த வண்டியை மாடு எவ்வளவு தொலைவு இழுத்து வந்ததோ அவ்வளவு தொலைவும் இழுத்துக் கொண்டு வந்த அடிகளின் செயல் எத்தகைய அருளின் பாற்பட்டது! அறியாமல் நிகழ்ந்த குற்றத்திற்காக, இது குற்றம் என்று குறிப்பிட்டு வழக்குத்தொடுக்க வாயில்லாத அந்த உயிருக்காகத் தண்டனையைத் தாமே வலிந்தேற்கும் ஒருவர் மனுச்சோழனுக்குப் பின் காந்தியடிகளாகத்தான் இருந்திருப்பார் போலும்!

இரவுப் பொழுதில் இலை தழைகளைப் பறித்து வருகிறார் இளைஞர் ஒருவர். அடிகள் அதனை அறிகிறார். அப்பொழுது "மரங்களும் நம்மைப் போல உயிர் உடையவையே யாம். அவை நம்மைப் போலவே வளர்கின்றன; முகர்கின்றன; உண்கின்றன; பருகுகின்றன; உறங்குகின்றன; அவை இரவில் ஓய்வு பெற்று உறங்கும்போது அவற்றின் தழைகளைப் பறித்தல் இழிதகைமை யாகும். என் மேல் தூவவும் என் கழுத்தில் மாலையாகச் சூட்டவும் மென்மையான மலர்களைப் பறிப்பது துன்ப மூட்டுகிறது. அஃறிணை உயிர்களிடத்தும் நாம் பரிவு காட்ட வேண்டும்" என்று இளைஞனிடம் கூறினார். இக் கூற்றிலே பொதிந்துள்ள அறம் நினைக்க நினைக்க நெஞ்சை நெகிழச் செய்கிறது.

நாடும் படையும் உடையவர்க்கும் ஆயிரக்கணக்கானோரே ஏவல் கேட்டனர்; ஆனால் நாடோ, படையோ, பதவியோ இல்லாத முழங்கால் வேட்டி முனிவர்க்குக் கோடி கோடி பேர்கள் ஏவல் கேட்கக் காத்துக் கிடந்தனரே ஏன்? அவர் காட்டிய அமைதி வழியும் அவர் செலுத்திய கரவற்ற வழி நடத்தலுமே காரணமாம்.

**பேரொளி நேரு :**

காந்தியடிகளின் வழியிலே சென்றவர் உலகப் பேரொளி **நேரு பெருமகனார்**. போர்க் குமுறல் தோன்றிய இடங்களுக் கெல்லாம் இளைக்காமல் சளைக்காமல் பறந்துசென்று அமைதிக்குப் பாடுபட்ட அந்தப் புறா உலகப் புகழை இந்தியாவிற்கு ஈட்டித்தந்தது!

"உலகை இன்று எதிர்நோக்கி இருக்கும் வினா போரை எவ்வாறு தவிர்ப்பது என்பதே"

"உலகப்போர் வந்தால் அதில் எவர் தோற்பார்? எவர் வெல்வார்? என்பது முதன்மையன்று. அந்தப் போரினால் முழு அழிவே ஏற்படும்"

"உலகப்போர் பற்றி நினைப்பதற்கே அச்சமாக இருக்கிறது. அந்தப் பேரழிவை நாம் எவ்வாறேனும் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும்"

இவ்வாறு பாரெங்கும் முழக்கிய அளவுடன் நில்லாமல் பஞ்சசீலக் கொள்கையையும் படைத்தார், பாரதத் தலைவர் நேரு. அக் கொள்கையைப் பல நாடுகள் வரவேற்றன; பாராட்டிப் பேசின; பாரத நாடு நேருவின் அமைதிப்பணி கருதிப் 'பாரத ரத்தினம்' என்னும் பட்டம் வழங்கி மகிழ்ந்தது.

**இலால் பகதூர் :**

"போரின் வெற்றிக்காக நாம் எவ்வளவு முழுமூச்சாகப் பாடுபட்டோமோ அதே முழுமூச்சுடன் அமைதிக்கும் பாடுபடு வோம்" என்று கூறி உருசிய நாட்டுக்குச் சென்று உருப்படியான பேச்சு நடத்தித் தம்மையே அமைதிப் பணிக்கு ஒப்படைத்தார் இளகிய உள்ளமும், எஃகனைய உறுதியும் வாய்ந்த **இலால் பகதூர் சாத்திரியார்!** சுருங்கிய ஆட்சிக் காலத்தில் அவர் ஆற்றிய பெருகிய தொண்டு நம்மை விட்டு அகலாது!

**நன்னயக் கென்னடி :**

அண்ணல் ஆபிரகாமின் மறு பிறப்போ என்று கருதத் தக்க வண்ணம் அமைந்தார் **தலைவர் கென்னடி**. நிறவெறியை ஒழிப்பதில் நெஞ்சம் நிமிர்ந்து நின்ற அவர் பணி உலக நலம் கருதும் ஒவ்வொருவர் உள்ளத்தும் இடம்பெறத் தவறாது.

"நாம் ஒன்றாக இப்புவியைக் காப்போம். அல்லது போர்த்தீயில் வீழ்ந்து அழிவோம். உலகைக் காப்பாற்ற நம்மால் முடியும். அதைக் காப்பது நமது கடமை. அப்போது மனித குலம் என்றென்றும் நமக்கு நன்றி பாராட்டும். அமைதி செய்வித்தோர் என்று நாம் கடவுளுடைய மாறாப் பேரருளுக்கு உரியவராவோம்" என்பது ஐக்கிய நாடுகளின் நிலையத்தில் ஒருமுறை கென்னடி வழங்கிய மணி மொழியாகும்.

**பெரும்புகழ் குருச்சேவ் :**

"சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த அமெரிக்கக் கவிஞர் லாங்பெல்லோ; அவர் தம் கவிதை ஒன்றில் எல்லா நாட்டு மக்களுக்கும் அழைப்பு விடுத்து:

'விற்களை மண்ணுக்குள் புதையுங்கள்
அமைதிச் சுங்கானைப் புகையுங்கள்'

என்கிறார். புகை குடிக்கும் பழக்கம் எனக்குக் கிடையாது. ஆயினும் எல்லா வல்லரசுகளின் தலைவர்களுடனும் சேர்ந்து அமைதிச் சுங்கானைப் புகைப்பதில் உண்மையாகவே பெருத்த இன்பம் அடைவேன்" என்று முழங்கினார் **உருசியத் தலைவர் குருச்சேவ்!**

**அறைத் தகராறு :**

இணைத்துக் கட்டப்பெற்ற இரட்டை வீடுகள் இருந்தன. அவற்றுள் ஒன்றில் மூன்று அறைகளும், மற்றொன்றில் நான்கு அறைகளும் இருந்தன. மூன்று அறை வீட்டில் நான்கு பேர்களும், நான்கு அறை வீட்டில் மூன்று பேர்களும் வாழ்ந்தனர். இஃது அறமற்றதாகத் தோன்றியது மூன்று அறை வீட்டார்க்கு.

நான்கு அறை வீட்டுக்காரர் ஒருநாள் குடும்பத்துடன் வெளியில் சென்றிருந்தார். அதற்குள் அவர்க்குரிய அறையொன்றின் சாளரத்தையும் கதவையும் பெயர்த்து வைத்துக் கட்டித் தம்முடைமையாக்கிக் கொண்டார் மூன்று அறை வீட்டுக்காரர்.

அறையைப் பறிகொடுத்தவர்க்கு இந்நிகழ்ச்சி எவ்வாறு இருந்திருக்கும்! பெருமூச்சுவிட்டார். முரடராய அவரை ஒன்றும் செய்ய இயலாதென்று உரிய நடவடிக்கை களில் இறங்கினார்.

பிறர் அறையைத் தம்மதாக்கிக் கொண்டவர் தம் குற்றத்திற்காக அறமன்றத்தின் குற்றக்கூட்டிலே நின்றார். அப்பொழுது நடுவரிடம் "இவருக்குரிய ஓர் அறையைக் கவர்ந்து கொண்டதற்காக என்னைக் குற்றக் கூண்டில் நிறுத்தி விட்டீர்கள்; ஆனால் ஒரு நாடு மற்றொரு நாட்டைக் கவர்ந்து கொள்ளும்போது உங்களால் தடுத்து நிறுத்த முடிகிறதா? அந்நாட்டைக் குற்றக் கூண்டில் ஏற்ற முடிகிறதா?" என்று வினாவினார். "வலியவருக்கு ஒரு நீதி; எளியவருக்கு ஒரு நீதியா? தனி வாழ்வுக்கு ஒரு நீதி; பொது வாழ்வுக்கு ஒரு நீதியா?" என்று மேலும் அடுக்கினார். நடுவரையும், நல்லவர்களையும் ஓர் அசைப்பு அசைத்தது அவர் வினா. அங்கு எழுப்பப் பெற்ற வினா பலவிடங்களிலும் எதிர் ஒலித்தது. அவ்வொலி வீணாகவில்லை. நல்ல தொண்டு செய்யத் துணையாயிற்று.

**உலக அமைப்புக்கள் :**

"எந்த வல்லரசும் இணைந்த முயற்சியால் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும். போரில் இறங்குதல் கூடாது. அமைதி முயற்சி வெற்றியளிக்காவிட்டால், அதனை ஒரு நடுநிலைக் குழுவின் முடிவுக்கு ஒப்படைத்துவிட வேண்டும்" என்னும் திட்டத்துடன் 1919இல் நிறுவப்பெற்றது **சர்வதேச சங்கம்.**

போராட்டம் எப்பொழுதும் ஒரு படிப்பினையைத் தரத் தவறுவது இல்லை. ஆனால் மனிதன் தான் தகவற்ற உணர்ச்சிகளால் அப் படிப்பினையை மறந்து போகின்றான். உள்ளம் மரத்தும் போகின்றான். சர்வதேச சங்கத்தைத் தோற்றுவித்த நாடே பங்கெடுக்கத் தவறியது. ஒப்பி நின்ற நாடுகளும் ஒவ்வொன்றாக விலகிக் கொண்டன. பெயரளவில் சங்கம் இருந்தது.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. மீண்டும் பெருந் தலைவர்களைச் சிந்திக்க வைத்தது. பிரிட்டனின் போர்க்கால முதல்வர் சர்ச்சிலும், அமெரிக்கத் தலைவர் பிராங்ளின் ரூசுவெல்ட்டும் அட்லாண்டிக் மாகடலில் கூடிப் பேசி ஓர் உரிமைப் பட்டயத்தை உருவாக்கினர். அதன் பின்னர் இருபத்தாறு நாடுகள் அதுபற்றிக் கூடிக் கலந்து பேசின; பல இடங்களில், மாநாடுகள் கூடின; பின்னர் நாற்பத்து இரண்டு நாடுகள் பங்கு கொண்டன.

*1945ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 25ஆம் நாள்* **ஐக்கிய நாடுகளின் நிலையம்** *உருவாகியது. அதன் பணி பெரிது! இன்னும் அது ஆற்ற வேண்டியுள்ள பணியோ மிகப் பெரிது!*

**அமைதி வாழ்க !**

*உலக அமைதிக்குப் பாடுபடும் அருட் பெரு மக்களுக்கு ஒரு பரிசிலை நிறுவியுள்ளார் ஒரு பெருமகனார். அவர் பெயர்* **ஆல்பிரட்டு நோபல்** *என்பது. அவரே வெடிமருந்து கண்டு பிடித்தவர். வெடிமருந்தாலேயே பொருள் ஈட்டியவர். வெடிமருந்து வாணிகர் அமைதிக்குப் பரிசு நிறுவியதும் அணு முதல் அழிப்புக் கருவிகளைக் கண்டவர் அமைதிப் பணியில் ஈடுபட்டதும் உலக நலத்திற்குரிய நல்ல அறிகுறிகள். இத்தகைய சூழ்நிலையை அருட்பெரு மக்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுது போரச்சம் அற்ற புத்துலகம் தோன்றும். அதனை வாழையடி வாழையாக வரவிருக்கும் மக்கள் புன்முறுவலுடன் வரவேற்பர்; வாழ்த்தும் கூறுவர். நாமும ‘வாழ்க’ என அமைதி உலகை வரவேற்று வாழ்த்துவோம்.*

# முன்னுரை

"உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்;
உள்ளம் சிறுத்தால் உறவும் பகையே"

*என்பது சிந்திக்கும் எவர்க்கும் சிறந்து விளங்கும் உண்மை! இஃது அறிவுத் தெளிவா? பட்டறிவா? சிந்தனை விளைவா? எல்லாம் கூடிய ஒருமுடிநிலை இது!*

*உள்ளம்விரிய, உலகம் உள்ளத்துள் வந்துவிடும்!*

*உள்ளத்துள் உலகம் அடங்குமா?*

*உள்ளத்துள் உலகம் அடங்க வில்லையானால்,*

"யாதானும் நாடாமால் ஊராமால்"

*என்னும் வள்ளுவம் பிறக்குமா?*

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

*என்னும் பூங்குன்றம் பிறக்குமா?*

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

*என்னும் தாயுமானம் தளிர்த்திருக்குமா?*

*உள்ள விரிவால் மராத்தியம் குசராத்தியம் இராசத் தானியம் என உலாவிரிவாயது! உலாவிரிவு எழுத்தாயது! எழுத்து வெளியீட்டுக்குரிய தொகை? உலாவுக்கான தொகையில் ஒரு கால்பங்குதானும் உலாவுக்கு அழைத்தவர் வாங்க மறுத்தால்........ அத்தொகை நூல்வெளியீட்டுத் தொகையாக - கொடையாகக் கொள்ளத்தடை என்ன? இவ்வகையில் இந்நூல் வெளியீட்டுக் கொடையர்*

"வேலாயுதனார் - கலைநிதியர்
சரவணர் அருள்மொழியர்"

*என என், நலனார்நன்றிப் பதிவுக்கு உரியராயினர்*

*வாழிய நலனே! வாழிய நிலனே.*

**இரா. இளங்குமரன்**

# ஓர் அன்பின் உறவு

"உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்"

1985 ஆம் ஆண்டு சனவரி திங்கள் பவானியில் இருந்த என்மகளார்திலகவதியைப் பார்க்கச் சென்றேன்.

மதுரையில் இருந்து பவானிக்குச் செல்லும் யான், ஈரோடு சென்று, வண்டிமாறிச் செல்ல வேண்டும்.

ஈரோட்டுப் பெருமகனார் வேலா அரசமாணிக்கனாரை முன்னரே குறளியம் இதழாலும் அஞ்சல்களாலும் தொடர்பு கொண்டுள்ளேன். அத்தொடர்பை ஏற்படுத்திய ஏந்தல் அவரே.

சேலத்தில் திருக்குறள் மாநாடு ஒன்றனை அரிமாப்புலவர் மி.மு.சின்னாண்டார் பெரிய அளவில் நடத்தினார். அவ்விழாவில் அரச மாணிக்கரைக் காணவும் கலந்துரையாடவும், கருத்தால் ஒன்றவும் வாய்த்தன. அப்போது, குறளாயத்திற்கு வாய்த்தபோது வரவும், குறளியத்திற்குக் கட்டுரை வரையவும் வேண்டினார். அவரை நேரில் காணும் வரை இருந்த அரும்பு நிலை முகையாய்த் திரண்டமையால், ஈரோட்டில் சென்று அரசமாணிக்கரைக் கண்டு செல்லும் திட்டம் கொண்டேன்; சென்றேன்; கண்டேன்.

அரசமாணிக்கனாருடன் பட்டுக்கோட்டை தங்கவேலனாரும் இருந்தார். என்னை முன்னரே கேள்விப்பட்டிருந்த அவர் "பல காலமாக ஏமாற்றினீர்கள் இன்று காண வாய்த்தீர்கள்" என்று கூறித் தழுவினார்.

புலவர் தங்கவேலர் பழுத்த புலமையர்; பாவன்மையர்; வெண்பாவில் புலி; குறளியம் குறளாயத்திற்கெனவே தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்; அவர்தம் சிவப்பழமாம் தோற்றப் பொலிவும் முதுமைக்கோலமும் உயரிய நேய உளமும் பளிச்சிட்டன. அவர் என்னை அழைத்துக் கொண்டு வேலாவினிடம் சென்றார். அறிமுகப்படுத்தினார்.

பூத்த மலராகத் தோன்றிய வேலா வரவேற்றார் எடுத்த எடுப்பிலேயே, "என்னைப் பார்க்க வந்தீர்களா? என்றார்! யானோ ஆம் எனக் கூறாமல், 'என்மகளார் பவானியில் உள்ளார்: அவரைப் பார்க்க வேண்டி வந்தேன்; வழியில் உங்கள் நினைவால் இங்கே வந்தேன்" என்றேன்.

நான் அவரைப் பார்க்க வந்ததாகச் சொல்லுதலால் உவகை மிகும் எனினும், உண்மையாகாமையால் அவ்வாறு சொல்லாமையை, வெல்லும் சொல்லால் வேலா வென்றார்.

"ஈரோட்டிலும் உங்கள் மகளார் ஒருவர் உள்ளார் என்று இங்கு வரும்போதெல்லாம் வரவேண்டும்" என்றார்.

என்ன பேருள்ளம் வேலா உள்ளம்!

முகமனுக்காக, இட்டுக்கட்டிக் கூறும் நடிப்புரையா இது? உண்மை நெஞ்சின் உரிமை உரை என்பதைப் பின்னே, முழுவதாக அறிய முடிந்தது.

வேலா வாழும் வரையும் வளர்மதியாய் இணைந்து குறளியப் பணியிலும் நிலவுக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பங்கு கொண்டமை, ஒரு பிறவிக்கு வாய்த்தல் அரிதினும் அரிதாம். அவ்வரிய தொடர்பால் வாய்த்தது பெரிய பேரன்புத் தோன்றல் புதுவை வேலாயுதனார் கலைநிதியர் (இணையர்) தொடர்பாகும்.

புதுவையில் ஒரு விழா! விழாநிறைவில் உணவு - வகை வகையாய் அமைந்த உணவு! விழா ஏற்பாட்டாளர் - முன்னின்றோர் - எவர்? தம் குடும்ப விழா வென ஊணாக்கி உறவாக்கி வழங்கிய பெருமையர் வேலாயுதர். கலைநிதியர்! அவர்களே புதுவைக் குறளாய அமைப்பாளர். கொள்கையால் ஒன்றியவர்! அவர் நிகழ்த்திய குறளாய இரண்டாம் மாநாடே அது. இருவரும் ஆசிரியப்பணியர்: இயற்கை ஈடுபாட்டாளர். "முப்பால் கொள்கை அன்றி, அப்பால் கொள்கை இல்லை" என்பதை இயக்கமாக்கிக் கொண்டவர். இளைய தொண்டர் பலர்க்குக் கொள்கை வழிகாட்டி. அவர்களை அவ்விழாவின் போதில் கண்ட காட்சி வாழ்வதாக.

பின்னே, எத்தனை விழாக்கள்! எத்தனை கூட்டங்கள்! எத்தனை தொடர் பொழிவுகள்! எத்தனை எத்தனை குடும்ப நிகழ்வுகள்! எத்தனை எத்தனை பள்ளிகள்! எளியேனைத் தம் குடும்பத்துள் ஒருவனாகக் கொண்டுவிட்ட குறிக்கோள் வாழ்வுக்கு மூல முதலாக இருந்தது, அன்று கண்டதும் கொண்டதுமாம் அருமைத் தொடர்பேயாம்.

வேலாயுதனார் கலைநிதியர் மகவாகப் பிறக்கும் பேறு வாய்த்தவர் அருள்மொழியார். அவர் பயில்வது பயின்று பொறியியல் பட்டந்தாங்கிப் படைத்துறைப் பணியும் வாய்க்கப் பெற்றார். கூர்த்தஅறிவும் சீர்த்த திறமும் செயல்வீறும் உயர்பண்பும் உடைய அவர்க்குப் பெற்றோர் 'குலப்பிரிவு மறுப்புத் திருமணமே புரிய வேண்டும்' எனக் கொண்டனர்

ஒருவர் ஒருவரை விரும்பிக், குலப்பிரிவு மறுப்பு மணமாய் நிகழ்தல் காணக்கூடியது. ஆனால் பெற்றோரே, தம் குடிவழி உரிமையர் விரும்பியிருந்தும், அதனை அறவே மறுத்தும் வெறுத்தும், "குலப்பிரிவு மறுப்புத் திருமணமே எம்மகளார்க்குப் புரிவேம்" என்னும் உறுதிப்பாட்டில் நின்றனர் என்றால், அவ் வுறுதிப்பாடே தம் உறுதிப்பாடுமாம் என நின்றவர் அருள் மொழியார்!

வாழ் நாளை, வாழ்நாளாக்கும் திருமணம், எண்ணியபடி எளிதில் வாய்க்குமா? எளிதில் வாய்ப்பன எனினும் ஏற்புடையனவா? பெற்றோர் கடமை பிள்ளைகளைத் தம்மை விட்டுத் தள்ளி விடும் செயலா திருமண வாழ்வு?

உரிய தகவும் உயர்ந்த நோக்கும் உடைய படைமேல்நர் சரவணர் என்பார் உள்ளம் ஒருப்பட்டு மணத்திற்கு இசைந்தார்!

சரவணர் கிருட்டிண கிரியினர்; பொறியியல் பட்டம் தாங்கியவர்; பெருமைமிக்க பெற்றோரையும் உற்றார் உறவினரையும் உடையவர். எல்லாவற்றின் மேலும், பணியாலும் பதவியாலும் ஒன்றுபட்ட சீர்மையர்!

வேலாயுதர் கலைநிதியர் போல், சரவணர் பெற்றோர் களும் உறவினர்களும் மணத்திற்கு ஒத்திசைந்து நிற்க வேண்டும்!

சரவணர் தந்தையார் சுப்பிரமணியனார்: நில அளவைத் துறையின் அலுவலர்: அன்னையார் சரோசினியார்; மாமா உறவினராம் திரு. வேலுச்சாமி, கல்லூரி நூலகப் பொறுப்பாளர். அறிவறிந்த குடும்பத்தவர். ஆதலால், அவர்கள் ஒன்றிநின்று குலப்பிரிவு மறுப்புத் திருமணத்தை ஏற்று நடத்தினர். நடத்தியது மட்டுமன்று: வேலாயுதர் கலைநிதியர் கொள்கை என்பதும் தம் கொள்கையே எனத் தம் குடும்பவாழ்வில் நிலைப்படுத்தி வருபவர் ஆயினர்!

சரவணர் அருள்மொழியராம் இவர்கள் திருமணம் எங்கே நிகழ்ந்தது?

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அல்லூர் திருவள்ளுவர் தவச் சாலையில் நிகழ்ந்தது. குறளாய முறையில், திருமணம் என்னால் நிகழ்த்தப்பட்டது. உரிமை உறவினர் வேலாயுதர்க்கு எவர்? கொள்கையர் எவரும் உறவர்; உறவினர் மட்டுமா மணவிழா அவையர்? முப்பால் கொள்கையர் எப்பால் இருப்பினும் அவரெல்லாம் ஒன்றுபட்டு வந்து நிற்க நிகழ்த்தப்பட்ட மணவிழா சேரலத்துத் தட்டாம்படிச் சிவானந்தர் மணவிழாவுக்கெனவே வந்திருந்தார். வாழ்த்தினார்! கல்வாக்கத்தார் புதுவையார் தமிழகத்தார் என அமைந்த கொள்கை உறவரும் குடும்ப உறவரும் கூடிநிற்க எளிமையாய் இயற்கையொடும் இயைந்து நடந்த திருமணவிழா அது.

தவச்சாலை மணத்திற்கெனச் சில கொள்கைகள் உண்டு. அவை.

1. குலப்பிரிவு மறுப்புத் திருமணம்.
2. பெற்றோர் ஒத்துக் கொண்டு முன்னின்று நடத்தும் திருமணம்
3. பெண்கொடை மாப்பிள்ளைக் கொடை எனப் பேசாத் திருமணம்.
4. குறளாய முறையில் திருக்குறளை ஓதி நடத்தப் பெறும் திருமணம்.

இந்நான்கும் அமைந்து தவச் சாலையில் செய்யப்பட்ட முதன் முதலாம் திருமணம் இதுவேயாம்.

படைத்துறைப் பதவியராம் மணமக்கள் வெங்காலூர் புனே, கோல்கத்தா, சம்மு, நாசிக்கு எனப் பல்வேறு இடங்களில் பணி யாற்றிப் பதவியுயர்வும் பெற்று விளங்குகின்றனர். இரு குடும்ப இணைவாகவே இத்திருமணம் அமைந்து விட்ட பேற்றால் பெற்றோரும் உறவரும் முழுமையாகவும் அவ்வப்போதும் உடனாகி வாழ்கின்றனர்.

சரவணர் அருள் மொழியர் அன்பு வாழ்வில் முகிழ்த்த அருமைச் செல்வங்கள் இருவர். அவர்கள் இயற்கைவான் கொடைப் பேறாம் சாரல், அருவி என்னும் பெயரினர். இதுகால் பத்தும், மூன்றும் ஆம் அகவையர் (2009).

சரவணரும் அருள் மொழியரும், வேலாயுதர் கலைநிதியர், கொண்ட பழங்கெழுமை போற்றும் திறத்தராகத் திகழ்தலால்,

தாம் மாறி மாறிப் பணி செய்யும் இடங்களுக்கெல்லாம் என்னை அழைத்தலும், விருந்தினனாக்கலும், சுற்றுலாக் கொண்டு மகிழ்வித்தலும் ஆகிய நோக்கில் தவறாது அழைக்கின்றனர்; தொடர்கின்றனர். மும்முறை இவ்வகையால் சுற்றுச் செல்ல வாய்த்தது.

முதற் செலவு கோல்கத்தா (கோனார்க்கு, போல்பூர், சாந்திநிகேதன் முதலியன) இரண்டாம் செலவு, சம்மு (காசுமீரம், பனிமலை, தில்லி, ஆக்ரா, தேராதூன். இரிசிகேசம் முதலியன) மூன்றாம் செலவு நாசிக்கு (அசந்தா, எல்லோரா, ஆமதாபாத்து, சபர்மதிநிலையம், உதயபூர், சோத்பூர், செய்சல்மர் முதலியன).

முதல் உலா, சில கட்டுரைகள் ஆயின

இரண்டாம் உலா, பார்க்கும் இடமெல்லாம் பல்கலைக்கழகம் என நூலாயிற்று.

மூன்றாம் உலாவின் நூலாக்கம் இஃதாம்.

அழைப்பார் கொண்டுள்ள வாய்ப்புகள் என்ன செய்கின்றன?

அழைக்கப்படுவார் வாய்ப்புகளாக விளங்குகின்றன.

அழைப்பார் வீட்டில் தங்கலாம்; விருந்துண்ணலாம்; அவர்கள் ஊர்தியில் அவ்வூரைச் சுற்றலாம்! அவர்கள் பணிக்கு நெருக்கடி இல்லாமல் உடனாகி இருக்கலாம்!

ஆனால், அழைக்கப்பட்டவர் மாநிலம் மாறி மாநிலம் சென்று பார்க்கும் திட்டத்தினராய் இருக்க அவர்களே ஏற்பாடு செய்வர் எனின், எத்தகைய திட்டத்தெளிவும், ஏந்துகளும், முன்னேற்பாடுகளும் வேண்டியிருக்கும். நான்காயிரம் ஆயிரம் (கி.மீ) இன்னுந்தில் மும்மாநிலங்கள் (மராத்தியம், குசராத்து, இராசத்தானம்) சென்று - தங்கி - கண்டு - வரவேண்டும் எனின் எப்பெரிய பாடு?

அப்பாடுகளையெல்லாம் ஒரு முறைக்கு மும்முறை ஏற்று முழுநிறைவாக ஒவ்வொன்றையும் முடித்துத் தர எத்தனை பேரால் இயலும்! அவ்வன்பின் உறவுக்கு அளவு கோல் ஏது? "அன்பெனும் பிடியுள் அகப்படும்மலை அன்பெனும் குடில் புகும் அரசு!" என்பது வள்ளலால் வாய்மொழி.

# சுற்றுலா

உலகமே சுற்றுலாக் காட்சியும் மாட்சியும் உடைய இயற்கை இயங்கியலே! உலா, உலாவுதல்- சுற்றுதல்! சுழலும் இயற்கை! உலகம் சுழலுதல் தெரியாமல் சுழன்று கொண்டே இருக்கும்! சுழன்று கொண்டே சுழலாமல் இருக்கும் விந்தை பெருவிந்தையே அல்லவோ!

ஊரும் சுற்றுலா, நாடும் சுற்றுலா, உலகும் சுற்றுலா, வியனுலகும் சுற்றுலா!

அது சிறிதானால் என்ன? பெரிதானால் என்ன?

“சந்தனக் கோல் குறுகினால் பிரப்பங்கோல் ஆகிவிடுமா?” என்பது குறுமை நெடுமை எழுத்துகளுக்கு இலக்கணர் காட்டும் உவமை!

சுற்றுலா சிறிதானாலும் பெரிதானாலும் அதன் பயன்பாடு பயன்படுத்துவாரைப் பொறுத்ததேயாம்!

தொடர் வண்டியேறிச் செல்பவர் போனவுடன் பார்க்கத்தக்க பகற்பொழுதிலேயே படுக்கையராகி விட்டால் பயன்?

அவர் அமைதியாக வீட்டிலேயே படுத்திருக்கலாமே! செலவாவது மீதமாமே! பார்க்க வேண்டும் எக்காட்சிபற்றியும் கவலைப்படாமல் சீட்டுக்கட்டு எடுத்து அதனைப் பிரித்துப் போட்டு அரட்டையடிப்பார்க்கு அவரவர் ஊரில் மடங்களா இல்லை! வேறு இடங்களா இல்லை!

ஓயாப்பேச்சு - ஒழியாப் பேச்சு - பேசியே பொழுதைத் தீர்ப்பார், செல்லும் செலவு வழியே என்ன காண்பார்?

‘நான் படிக்கிறேன்’ என்று புத்தகத்திலேயே புதைந்து விடுவார், சுற்றுலா வந்த பயனை எய்துவரா?

சுற்றுலாப்பயன் காணும் காட்சி, கருதும் கருத்து, கேட்டறியும் கேள்வி, ஆங்காங்குக் கிடைக்கும் விளக்கம், சான்று - பொருள்

சேகரம், ஒருமித்த வாழ்வியல் ஊடகப் பொதுமை என்பவற்றைத் திரட்டிக் கொள்வதைக் பொறுத்து அல்லவோ!

கண்டும் கேட்டும் எண்ணியும் மறந்தால் பயன் என்ன?

அவ்வவ்விடத்தே அவ்வப்போதே குறித்து வைக்காத காட்சியும் செய்தியும் கனவெனவும் கானல் நீரெனவும் கைநழுவிப் போகவே செய்யும். சுற்றுலா, பொழுதுச் செலவுமட்டுமா? பொருட்செலவு, வேலை விடுத்தல், செய்வனவற்றைத் தள்ளி வைத்தல் என்பன வெல்லாம் உடையது அல்லவோ!

சுற்றுலா வகைகள் தாம் ஒன்றா இரண்டா?

தனித்தனி நோக்குக்கு ஏற்ப முன்னேற்பாடு செய்ய வேண்டும் அல்லவோ! நோக்க மில்லாச் செலவு (செல்லுதல்), ஆக்கக் கேட்டின் அடிமணை!

வழிபாட்டு நோக்கமா, வரலாற்று நோக்கமா, இடங்காணல் நோக்கமா, வணிகம் - தொழில் நோக்கமா, வாழ்வியல் தெளிவு நோக்கமா, புதுமை காண் நோக்கமா, பொருள் தேடு நோக்கமா - இந்நோக்கங்களை முனவைத்து, அவற்றுக்கு வெற்றியாம் வகையில் செலவு மேற்கொள்ளல் சுற்றுலாப் பயனைப் பெருக்கும்!

என் சுற்றுலா நோக்கு, காணாதன காணல் நோக்கா? இவற்றைத் திரைப்படம் தொலைக் காட்சிகள் காட்டாக் காட்சி களாய் எவையும் எஞ்சுமா? கலைக்களஞ்சியங்கள், காட்சிப் படங்கள். சுற்றுலா மைய வெளியீடுகள் முற்படக் கண்டு அக் காட்சிகளைப் பதிவு செய்தோர் நூல்கள் நாட்டு வரலாறு, கலை வரலாறு என்பவை தேடுவார்க்குக் கிட்டாதனவா?

அடுக்கடுக்கான பருகு வகை - ஊண்வகை - சுவைவகை - காட்சி நிலையில் இருக்கக் காண்பதால் நிறைவு ஏற்பட்டு விடுமா?

கோடைக்கானல், உதகை, குற்றாலம் இன்னவை படிப்பால் - காட்சிப் படப் பார்வையால் - நிறைவாகி விடுமா?

'தேன்' என்று சொன்ன மட்டில் - எழுதிப்படித்த மட்டில் சுவையேறி விடுமா?

மலரின் மலர்ச்சி - கொடியின் தழுவல் - அருவியின் தூவானம், அதன் முழக்கு - புகுந்தாடும் இன்பம், படிப்பு இன்பத்தால் நிறைவாகிவிடுமா?

*கண்டு பிடிப்பு (Discovery) என ஒரு காட்சிப் பகுதியே தொலைக் காட்சியில் காணவாய்க்கின்றது: அவர்கள் செயல் - படப்பிடிப்பு நாம் எளிதில் காண இயலா அரியவையே! ஆயினும், அவ்வளவில் இல்லை எனினும் நாமே நேரில்கண்டு திளைக்கும் தன்னை மறந்த இன்பப் பேறு வாய்க்குமா?*

**என்நோக்கு முதலும் முதலின் முதலும், முடிபும் முடிபின் முடிபும் எல்லாம் வாழ்வியல் நோக்கே! இலக்கியமா, இலக்கணமா, வரலாறா, கதையா, காட்சியா, பொழிவா எழுத்தா எல்லாம் எல்லாம் வாழ்வியல் நோக்கே! அந்நோக் கொன்று கொண்டே என் சுற்றுலாச் செலவு மேற்கொள்ளப் பட்டதாம்.**

*என்னால் தூக்கும் அளவு எவ்வளவு, அவ்வளவு அல்லாமல் வெளிநாடுகளுக்குச் சென்ற போதும் பொருள்களைக் கொண்டு பேயதில்லை. வழக்கமாக மதுரை, சென்னை, நெய்வேலி, புதுவை, சேலம், கோவை, தஞ்சை என ஊர்களுக்குக் கொண்டு போகும் சுமையொடு, உடைமட்டும் இரண்டு மூன்று சுவடிகள் கூடிய அளவு அல்லாமல் கொண்டு போவதில்லை. அவ்வழக்கப்படியே தோள்பை ஒன்று; தூக்குப் பை ஒன்று இரண்டொடு அணிய மானேன். மற்றொன்று: போய்ச் சேர்ந்தால் அவ்விடம் நம்வீடாம் அருள்மொழி சரவணர் வீடு அல்லவா! மாற்றுடை என்ன மறு நாளே அணியமாக இருக்குமே!*

*22.02.2009 ஞாயிறு யானும், புதுவை அன்பர் வேலாயுதரும் தவச்சாலையில் இருந்து புறப்படுவதாகத் திட்டப் படுத்தியிருந்தோம். வேலாயுதரே, போக்கு வரவு பார்க்குமிடம் நாள் என்பவற்றையெல்லாம் துணைவியாருடனும் மகள் மருகர் ஆகியோரிடமும் கலந்து பேசித் தொடர்வண்டிச் சீட்டும் வாங்கி யிருந்தார். கல்யாண்சந்திப்பு நிலையத்தில் இருந்து நாசிக்குச் சந்திப்பு நிலையம் அளவுமட்டுமே முற்பதிவு வாய்க்கவில்லை. போய்ப்பார்த்துக் கொள்ளலாம் என்னும் திட்டம் கொண் டிருந்தார். அன்று விடியலில் புதுவையில் இருந்து வேலாயுதர் புறப்பட்டுத் தவச் சாலைக்கு நண்பகல் எய்தினார்.*

*திருச்சிராப்பள்ளியில் அன்பர் புலவர் செல்வராசனார் குடும்பத் திருமணம் ஒன்று அன்று காலை நடத்துவிக்க யான் இசைந்திருந்தேன். அருமையாக மங்கலவிழா நிகழ்ந்தது. அதனை நிறைவித்துத் தவச் சாலைக்கு எய்தினேன். வேலாயுதனார் முன்னரே*

வந்திருந்தமையால் அவரை உண்பித்து ஓய்வு கொண்டு பிற்பகல் இரண்டு மணியளவில் இருவரும் கோவைச் செலவு மேற் கொண்டோம். கருவூர் - கோவை - சென்று அன்று இரவு, காந்திபுரத்தில் இருந்த வழக்கறிஞர் என் பேரனார் குகனொடு தங்கினோம். விடியலில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கோவைத் தொடர்வண்டிச் சந்திப்பை அடைந்தோம். யாங்கள் புறப்பட இருந்த வண்டி காலை 8 மணிக்குப் புறப்படுவது. ஆதலால் உணவை வண்டியிலேயே முடிப்பது நலமென ஏறினோம்.

அவ்வண்டி ஈரோடு, சேலம், தருமபுரி, வெங்காலூர் எனச் சென்று ஆங்கிருந்து மும்பைத்தடத்தில் செல்வது. இவையெல்லாம் புதிய இடங்கள் அல்லவே!

வண்டி ஈரோட்டுச் சந்திப்பை அடைந்த போது, எங்கள் வரவை எதிர்நோக்கி, வரவணரின் மாமனார் திரு. வேலுசாமி அவர்கள் அம்மையாருடன் பரிய பைகளொடும் இருந்தார். இயல்பாகவே வேலாயுதர் சுமை பெரிது! அதே அளவு மேலும் சுமை! ஆனால், உடலால் இல்லையானாலும் எப்பொழுதும் அன்பு நண்புச் சுமை தாங்கி: உற்றார் உறவுச் சுமைதாங்கி: அவர் நினைத்தாலும் அவர் சுமைதாங்கியாக இல்லாமல் இருக்க முடியாத அளவு பழகிப்போன சுமைதாங்கி வேலாயுதனார்!

"இந்த அரிசி, இந்தப் பருப்பு, இந்த பண்டம் வேண்டுமா ஏன் இவ்வளவு சுமை" என்றால், இவை நாசிக்கில் கிடையா: அன்றியும் நம்மண்ணில் நம் உழைப்பில் விளைந்தது: அதைப் பயன்படுத்துவது தனி இன்பம் இல்லையா? தொடர் வண்டி வரை தானே சுமை; பிறகு நாமா சுமக்கப் போகிறோம்" என்பார் அவர் இயற்கைக் காதலர்! மண்ணை மறவா மாண்பர்! மற்றவர் அடையும் இன்பத்தைத் தம் இன்பமாகக் கண்டும் கொண்டும் வாழ்பவர்! அதுவே வாழ்வாகிப் போனவர்: அப்படித்தானே இருக்க முடியும்?

வேலுவும் வேலாவும் தொடரி ஊதி - ஓட்டமெடுக்கும் அளவும் அளவளாவி உரையாடினர்: அனைவரும் வணங்கி விடை பெற்றோம்! தொடர்ந்தது செலவு தொடரியில்: சேலம் தருமபுரி செல்லும் போதே வெயில் வாட்டியது! ஓடும் வண்டியிலேயே அவ்வெயில் வாட்டல் என்றால், நேர் வெயிலில் - கல்லில் - கரட்டில் - காட்டில் உழைக்கும் மக்கள்! மிதியடியா, குடையா? மிதியடியும் குடையும் காட்டு வேலைக்கு ஆகுமா? உழவினார் கைம்மடங்கின் உய்வார் யார்? உலகுய்ய வாழ்வாரே அவர்

அல்லரோ! சுடு பாறைக்கல் மேல் நிற்க எப்படி இருக்கும்; அங்கே ஆடுமேய்ப்பு! பாறைக்கல் மேல் பரண்! எங்கும் அனல் காட்சி என்றால் அங்கே தொடங்கிய எரிவூட்டு படலம் எங்குமா தொடர வேண்டும்? தொடர் வண்டியின் பக்கங்களில் மட்டுமல்ல. எட்டும் தொலைவுக்குக் கோடை வெப்பொடு கொடுவெப்பும் கூட்டினால் போல் எரிப்பு - புகை மண்டல் - கரிக்காடு - மழைவருமுன் எரித்து விட்டால் மழையில் புல் தழைக்குமாம்! ஆடுமாடு இனிதே தின்ன வாய்க்குமாம்! நாடெல்லாமா இந்த எண்ணம்? புவிவெப்புக் கூடுகிறது என்று வெப்பைக் கூட்டிக் கொண்டிருப்பவரே ஓலமிடுகின்றனர்! ‘புவியாவது வெப்பமாவது, நம்பாடு நமக்கு” எனத் துணிந்த கட்டைகளாக மக்களாகிவிட்ட போது, மரம் கரிக் கட்டையாகாமல் இருக்க முடியுமா?

காலமல்லாக் காலத்துப் புறப்பட்டு விட்டோமோ என எண்ணினால், இக்காலம் போகவில்லையானால் குளிர்வாட்டலில் என்ன ஆகும்? ‘வெப்புக் கொடியது’ என்றால், பனிக்கொடுமை கொடியதில் கொடியது ஆயிற்றே!

‘பனிக்காலம் நன்று’ என்றார் ஒரு பெரும் புலவர்!

‘பனிக்காலம் நல்லதா? கொடும் நடுக்கலில்லையா?’

“ஆம், நானும் அதனைத் தான் சொல்கிறேன்” பனிக்கு ஆலம் நன்று: ஆலம் நஞ்சு இல்லையா? நஞ்சினும் கொடிது பனிக்காலம் என்று விளக்கினார்.

அற்சிர பாக்கம் என்னும் ஊர், மருவத்தூர் பக்கம் உள்ளதே. சூழல் எல்லாம் மலையாதலால் பனிமிகுதி கருதி அற்சிர (பனி) பாக்கம் என்றனர். இரவுப் பொழுதில் கொட்டும் பனி, மீன் குத்திப் பறவை குத்துவது போல் குருத்தெலும்பைக் குத்த வல்லதாம். ‘அல் சிரல் பாக்கம்’ (அற்சிரபாக்கம்) என்பது என்ன ஆயிற்று? அச்சிறு பாக்கம்ஆயிற்று! சிரல் - சிச்சிலி, மீன்கொத்தி. அச்சு இறுதல்: அச்சு ஒடிதல்.

முப்புரங்களை அழிக்க முக்கணான் கிளர்ந்த போது தேரின் அச்சு முரிந்ததாம்! அதனை மூத்தபிள்ளையார் கையால் முட்டுக் கொடுத்துத் தாங்கினாராம்! நமக்குத் தான் கதைவிடல் கேட்க வேண்டுமா? ஊரூர்க்குப் புனைந்துள்ள கதைகள் திரட்டப்பட்டால் எத்தனை எத்தனை வண்டிகளோ!

வெங்காலூர் (பெங்களூரு) நகர் சென்ற வண்டி, மீண்டும் பெங்களூரு கிழக்குவரை வந்து புனே தடத்திற்கு மாறுகிறது!

தொடரியில் இருந்து கொண்டு இருபாலும் இயற்கையை நோக்குகிறேன்: மேற்கு மலையின் கிழக்குப் பகுதிச் செலவு அது. கருநாடகம் ஆந்திரம் மராத்தியம் எனச் செல்கிறது.

அண்மையில் மழை இல்லை, மலை காடுகளிலும் பசுமை இல்லை; மலைவடிவு இடங்களிலும் நீர் இல்லை. மேடு, பள்ளம், கருமை, செம்மை, நெடும்பாறை, வெடிப்பு எனத் தோன்றுகின்றன.

மாந்தர் முயற்சியின் ஏற்ம் ஆங்காங்கே பசுமைக் கோலம் காட்டுகின்றது! நெல்வயல் - தோட்டப் பயிர் - கோதுமைப்பரப்பு எல்லாம் ஊடே ஊடே தோன்றி உழைப்பின் மாண்பை உரைக்கின்றன.

பார்க்கும் பார்வை கலையொடு கலந்தால் பட்ட மரமென்ன பசுமை மர மென்ன?

மன்னனாக வந்தவன் தானா நடிப்பால் கொள்ளை கொள்வான்?

இரவலனாகக் கையேந்தி நிற்பவனும் நடிப்போடு ஒன்றி விடுதலால் நம்மோடு ஒன்றிக் கைதட்ட வைத்து விடுகிறானே?

இலை உதிர்ந்த மரம் தான் அழகில்லையா? வற்றல் மரம் வள்ளுவர்க்கு எக்காட்சியாயது! அணிலின் துள்ளலும் ஓட்டமும் ஒலியும் நம்மைக் கவராமல் இல்லையே!

செல்லச் செல்லச், சொல்லி வைத்தவர் எவர்?

“மரங்களே நெட்டையாகாதீர்கள்! குட்டையே எழில்! நெட்டை வீழ்ந்தாலும் நீர்வீழமாட்டீர்” என்று வளராமல் தடுத்து வைப்பது எது?

பெருநெடும் பரப்பில் நெடி துயர்ந்து பரந்து படர்ந்த பாரிய மரங்களைப் பார்க்க முடியவில்லையே!

மண்ணுக்குத் தகவே மரம்! கண்ணுக்குத் தகவே காட்சி!

பகலில் காணும் கண், இரவும் காணமுடிந்தால்?

‘பளிச்சு பளிச்சு’ ‘மினுக்கு மினுக்கு’ என ஒளியைக் காணலாம்! வேறென்ன காணமுடியும்?

இருபத்து நான்கு மணிநேரமும் - பகலும் இரவும் பார்த்துக் கொண்டே இருந்தால் கண், புண்ணாகாமல் என்ன செய்யும்! மண்ணையும் மரத்தையும் மலையையும் மாநகரையும் மூடிவிடுவேன்: நீங்கள் கண்ணை மூடுங்கள்: உங்கள் நலத்துக்கே ஒளிப்பகலும் இருள் இரவும்! எனக்கு எவரும் கட்டளை இடும் அளவுக்கு - கண்டித்துக் கூறும் அளவுக்கு - தண்டிக்கும் அளவுக்கு நடந்து கொள்ளவே மாட்டேன்! எந்த அளவு ஏற்றதோ அந்த அளவு கோல், என் இயற்கை அளவு கோல் என்றாலும், அறிவுடையேம் என்னும் மக்கள் கடைப்பிடிப்பார்களா? மாட்டார்கள் என்று தானே இயற்கை தன் ஒளி இயக்கத்தால் மட்டுப்படுத்தி - கட்டுப்படுத்தி - இரவு - பகல் எனக் காலம் காட்டிக் காலமெல்லாம் உயிர்களைக் காத்துவருகிறது. இந்த அருமையை என்ன சொல்வது? எப்படி வியப்பது?

23.02.2009 பகல், இரவு கழிய, 24.02.09 விடிகாலைக்கதிர் வருமுன்னே வழக்கம் போல் விழித்துக் கொள்கிறோம்!

எனக்குப் பகலில் அங்கும் இங்கும் பார்ப்பது குறிப்பு எழுதுவது வேலை!

வேலாயுதனார், என்னைக் குழந்தை, தாய், தந்தை, வழிகாட்டி என எல்ா நிலைகளுமாக ஏற்றுக் கொண்ட ஏந்தல்! என்னை அவர்பேணத்தவறார் நான் அவரைப் பேணத் தூண்டுவேன்: தூண்டினாலும், அவர்போல் மாறும் பேறு எனக்கு வாய்க்க விடார்! உதவி புரிதலில் பங்குதராக் கருமி அவர்! என்ன செய்வேன்? ஆதலால், எழுதுகிறேன் எதுவும் செய்யாமல்!

சுற்றில் நான்பேச்சைக் குறைத்தல், பழகிப் போன நடைமுறை! அவர், வாய்த்தால் - அவர் பக்கம் இருப்பவர் தமிழர் என்று கண்டு கொண்டால், கண்டு கொண்ட அளவில் தொண்டைத் தொடர்வார்.

எங்கிருந்து எங்கே, ஊர்பேர், தொழில் குடும்பம் எனப் படிப்படியே கேட்பார்! அவர் தம்மைக் கேட்டாலும் கேளா விட்டாலும் தம்மைப் பற்றிய எளிய அறிமுகம் செய்வார்! அதிலும், என்னை முன்வைத்துப் பேச்சைத் தொடங்குவார். ஆர்வமுடையவர் காது கொடுத்துக் கேட்பார் என்றால், தக்க பல செய்திகளை - தமிழ் - தமிழர் - தமிழினச் செய்திகளை எடுத்து ரைப்பார். இயற்கையைக் காத்தல் - பொது நலம் போற்றல் - திருக்குறளை வாழ்வியலாக்கல் - தமிழர் ஒன்றுபடுதல் என

விரிவார்! நான்முழுதுறக்கேட்பேன்; அவர் என்னை இழுக்காமலே பேசுவார்! கேட்பவரிடம் மொழி - இன - பண்பாடு - உலகநலம் பற்றிய உயரிய விதைகளை விதைப்பார் வேலாயுதர்!

எங்கும் எப்பொழுதும் அவர் செய்யும் இப்பணி, சுற்றுலாவிலும் தொடர்தல் யான் முன்னைச் சுற்றுலாக்களின் போதும் அறிந்ததே! எதிர்பாரா நல்ல விளைவுகளை அது ஏற்படுத்துதலும் உண்டு! கேட்டவர் கேள்வியராக மட்டுமிருந்து பொழுது போக்காகப் பேசினாலும் தம் கடமையைத் தக்கவாறு செய்ததாக வேலாயுதர் மகிழ்வாரே அன்றி, அது வெற்றுரை எனக் கொள்ளார்! இவரே போன்ற இன்னொரு தொண்டர் நெய்வேலி அனல்மின் பொறிஞராக இருந்து ஓய்வு பெற்றுச் சேலத்தில் வாழ்ந்து வரும் அறவாழியார்! இருவரும்கூடி விட்டால் நல்ல செய்திகள்! நயமான வழிகாட்டுதல்! கேட்பவர்க்குக் கிட்டும்! கிட்டவில்லையா? இருவருமே கவலைப்படார்! 'எம் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது பழகிப் போன திருத்தொண்டர் கூட்டத்தார்.

வேலாயுதரோடு மூன்று நான்கு மணிப் பொழுது உரையாட வாய்த்தவர், தமிழரெனினும், வழி தவறி வழிபாட்டு நெறிதவறி, வழிபாட்டில் மயக்குவார் மயக்கில் மயங்கி அவர் அடித் தொண்டராகி, அவர் பெயரால் நிறுவனம் நடத்தி வருபவர்! புட்டபர்த்தி போகின்றவர் அவர்! வள்ளுவரும் வள்ளலாரும் தேவார மூவரும் வாசகரும் ஆழ்வாராதிகளும் காட்டாத வழிகளா, தமிழர்க்கு?

'சில நூல்களைத் தந்தார்' 'குறிப்புகள் தந்தார்' சிந்திக்கத் தூண்டினார்! ஆரிய மாயை ஒன்று; திராவிடமாயை மற்றொன்று: இரண்டன் மாயையும் நீங்கிய தமிழரை - தமிழ் உலகரைக் காணவேண்டுமானால் அறவாழியார், வேலாயுதனார் போலும் உரையாடி அளவளாவி உணர்த்தும் தொண்டர்கள் ஊர் ஊர்க்கு வேண்டும்!

கரட்டு நிலத்தில் கார் நெல் விதைத்து விளைவுகாண இயலுமா?

கழனியாக்குதல், முதல் கடமை அல்லவா!

விடியல் ஒளி வெளிப்பட்டது: செங்கதிர் கிளர்ந்தது, அது, பட்ட இடமெல்லாம் 'பட்டொளி' யாயிற்று.

படுக்கும் போதுக்கு முன்னரே தொடங்கிய ஆந்திர மாநிலத்தின் எல்லை இன்னும் முடியவில்லை! தொடர்ந்து செல்கிறது! விரிந்த நெடிய பரப்புப் புலப்பட்டது.

வண்டியேறி இருபத்திரண்டு மணிப் பொழுது கடந்து விட்டது. என்கால்கள் வண்டியை விட்டு இறங்கவில்லை. இளங்கோவடிகள் மொழியின்படி என் அடியை மண்மகள் அறிந்திலள்! இன்னும் கீழே இறங்க வேண்டிய 'கலியாண்' சந்திப்பை அடையப் பத்து மணிப் பொழுதுகள் உள்ளன. ஓரிரு முறை எழுந்து நடக்க இயற்கை ஏவியதை நிறைவேற்றினேன்!

இச்செலவுத் தொலைவும் மணிப் பொழுதும் பெரிதாகத் தோன்றவில்லை, நியூயார்க்குச் செலவுக்குத் தொடர்ந்து பத்தொன்பது மணிநேரம் வானூர்தி மூன்றிருக்கையின் இடை யிருக்கையில் இருந்ததை நினையும் போது ஒரு பொருட்டாகத் தோன்றிற்றில்லை. முன்னே சம்முவுக்குச் சென்ற தொடரிச் செலவு அறுபது மணியின் மேலும் சென்றதை எண்ணின் ஒன்றும் பெரிதில்லை. ஆனால், ஒன்று இயல்பாகப் பெரிதாகின்றதே!

அகவை நம் கட்டுக்குள்ளாகவா உள்ளது? உள்ளத்தில் என்ன இளமை உணர்வு கொண்டாலும் உடல் முதுமை தலைகாட்டத் தவறாதே!

மற்றம் முன்னே மும்முறை இடுப்பு எலும்பில் ஏற்பட்ட அடி, 'வளையில் இருந்து, நண்டின் பிள்ளை வெளியே தலை காட்டுவது போல, இடை இடை தலை காட்டவே செய்தது! வலிக்கிறது என ஏறிப்படுத்தால், பக்கம் பார்க்க இயலாதே! வலி வருவது வலிமையே எனத் தாங்கித் தடவிக் கொள்ள வேண்டியது தான்!

உரிய பொழுதில் ஓடும் வண்டியிலேயே பருகவும் உண்ணவும் வாய்ப்பு இருப்பதால் மட்டுமன்று இடை இடை நிலையங்களில் இறங்கிப் பழவகை வாங்கி வழங்கும் வேலாயுதர் உள்ளாரே! பிறகு என்ன?

பார்க்க இருபாலும் புதுப்புது மண்; புதுப்புதுப்பயிர்; குடியிருப்பு; தொலைவிடத் தோற்றம்: மக்கள் வேலை; போக்கு வரவு; விற்பவர் வாங்குபவர் - பொழுது போய்விடாதா! உரிய பொழுதில் கல்யாண் நிலையம் எய்தியது. ஆங்கிருந்து. நாசிக்கிற்கு வண்டிமாறவேண்டும்! பதிவோ இல்லை! ஆனால் நடைசீட்டு

இருந்தது. துணிவே துணை என்று நடை மாடியில் ஏறி இறங்கி உரிய தடத்தில் புறப்பட இருந்த தில்லி வண்டியில் ஏறிவிட்டோம்!

வேலாயுதர்க்கு இருந்த நம்பிக்கையும் துணிவும் எனக்கில்லை. எனக்கிருந்தது வண்டியில் பதிவுப் பெட்டியுள் பதிவின்றி ஏறி விட்டோம்! பதிவுக் கட்டணம் கேட்கலாம்! அல்லது பதிவிலார் செல்லும் பெட்டிக்குச் செல்லச் சொல்லலாம்! எப்படியும் நின்று கொண்டேனும் இரண்டு மணிப்பொழுதைக் கடத்திவிட்டால் நாசிக்குச் சேர்ந்து விடலாம் என்பது.

ஏறிய பெட்டியில் பதிவினர் எண்மரும் இருந்தனர். ஆனால் பகல் பொழுது! எவரும் படுக்கவில்லை என்றால் இருக்க இடம் இராது. இருவர் படுக்கையராய் உச்சியில் இருந்தனர். "நீங்கள் உயரே இருப்பது கீழே இருக்கும் எங்களுக்கு மிக மிக நலமானது! மேலானது! மேலேயே உறங்கினாலும் உறங்கா விட்டாலும் மேலிருந்து இறங்காதீர்கள்' என்று மனத்தால் தாலாட்டிக் கொண்டிருந்தேன்!

வந்துவிட்டார், வருவாரா, வருவாரா (ஏதாவது சிக்கல் இருந்தால் இப்படித் தானே) என்று எதிர் பார்த்த சீட்டு ஆய்வர்! வேலாயுதர் சீட்டை நீட்டினார்! அவர் தாளில் பதிவு இராதே! கோவை தொட்டு வருபவர்கள், இரண்டு மணிப் பொழுதில் நாசிக்கில் இறங்கிவிடுபவர்கள்; படுக்கை போடமாட்டார்கள்! படுக்கைப் பதிவர்க்கு இடைஞ்சலாக இரார் என எங்கள் உள்ளமே அவருள்ளமாகி விட்டது போல, சீட்டிலே ஒரு பொற்கோடு போட்டுவிட்டு ஒன்றும் சொல்லாது போய்விட்டார்! இனி என்ன? தொடரவண்டி அமைச்சர் 'யாத'வுக்கு ஒரு கும்பிடு! சீட்டு ஆய்வர்க்கு ஒரு கும்பிடு! நின்மதியாயிற்று, நெட்டுயிர்ப்பு நீங்கி! இறங்கு என்றால் நம்ஊரா, நம் நண்பரா? நம் ஊர் என்றால் எப்படி யாயிருக்கும் என்பதை என்னால் தெளிவாகச் சொல்ல முடிய வில்லை! காசுக்கு முன்னால் அண்ணன் என்ன? தம்பி என்ன?

சரியாக யாங்கள் இருந்த பெட்டியருகே படைத்துறைச் சீருடையொடு அருள்மொழியார் நின்றார்! ஆம்! தவச்சாலை நாசிக்குக்கு வந்து விட்டதா? அல்லது புதுவை வேலாயுதனார் இல்லத்திற்கே வந்து விட்டோமா!

அழைத்தவர் எவரோ, அவர் அழைக்க வண்டியோடு வந்துள்ளார்! மடையெடுக்கும் வெள்ள அன்பில், படை உடை

என்ன தடையா? அச்சமா? அயர்வெல்லாம் அமைதிப் புறாப் பறப்பது போலவும் விண்ணேறிப்பாய்வது போலவும் உள்ளம் கிளர்ந்தது!

வண்டியேறிச் சீட்டு ஆய்வாளர் பார்த்துத் தலையசைத்த வரையிலும் இருந்த பதைப்பு என்ன? இப்பொழுது தாவி எழும்பும் மகிழ்வு என்ன?

அருமைப்பேர்த்தி அருள், சுமை ஆளைத் தேடாமல் தாமே சுமை ஆளாக மாறினார். அப்பா சுமக்க முடியா மூட்டையையும் என்சுமை ஒன்றையும் இயல்பாக எடுத்துக் கொண்டு மேல் பாலப் படிக் கட்டில் நடையிட்டார்! அவர்க்கோர் இன்பம். சுமை ஆளில்லாமலா சுமையை எடுத்தார்! பகுத்துச்சுமப்பது பகுத்து உண்பது போலும் இன்பம் அல்லவா!

நிலையத்தில் இருந்து செல்லும் வழியில் அருள், சரவணர் அலுவலகங்கள் இருந்தாலும், பணிமுடிந்துவிட்ட படியால் ஒரு முக்கால் மணிப் பொழுதில் குடியிருப்பை அடைந்தோம்! பின்னென்ன எங்கள் உள்ளம், குற்றாலத்துப் பொங்குமா கடலாயிற்று!

சரவணர் அன்னையார் சரோசினியார்,

அருளார் அன்னையார் கலை நிதியார்,

அருளின்தங்கை அன்பு; அருளின் மக்கள் சாரல்,

அருவி எனக் கண்டால், பொங்குமா கடல் என்பது

பொருத்தத்தில் பொருத்த மல்லவா! சாரலும் அருவியும்

குற்றாலப் பொங்குமா கடல் சார்ந்தவை தாமே!

அருள்மொழி சரவணர் மனை, விரிவானதே. புறச்சூழல் தோட்டம் சாலை முன்னரே குழந்தையர் விளையாட்டிடம் என அமைவு பெற்றதே. எனினும் நானும் வேலாயுதரும் தங்குதற்குத் தம் மனையை அடுத்தே அமைந்த விருந்தினர் இல்லத்தை ஏற்பாடு செய்திருந்தனர். வெளிநாட்டார் குறிப்பாக உருசிய நாட்டுப் பொறிஞர்கள் தங்குதற்கென அமைக்கப்பட்ட வான் படைத்துறை மாளிகை! இனி அதனைப் பற்றிச் சொல்ல வேண்டியதென்ன?

24.02.2009 இரவு அயர்வு தீர வெந்நீராடி வெய்துண்டு விருந்தினர் மாளிகையில் ஏந்தாகத் தங்கினோம்! வேலாயுதரும்

என்னொடு சேர்ந்ததால் விருந்தாளர் ஆனார்! வீட்டாளர் அல்லவா? நானும் வீட்டாளன் தானே! ஆம் என்பதை இருபாலும் ஒப்புக் கொள்வோம் என்றாலும் எனக்கு என் விருப்பம் போல் படிக்க - எழுத - ஓய்ந்திருக்க - தனி அமைவு வேண்டும் என்பதை நெடியகாலமாக உணர்ந்து போற்றி வருபவர்கள் ஆதலால், அம்முறையே செம்முறை எனக் கொண்டனர்!

உணவுக்குரிய - வேண்டத் தக்க - தொன்று உணர்வு அல்லவோ! அது கருதி உணவை அவர்களே வழங்கினர், அடுத்த மனைதானே விருந்தினர் மாளிகை!

தொடர்வண்டியில் வந்ததால் ஊர்களை - பக்கங்களை - நகரங்களை வாய்த்த அளவில் அறியலாம்! இறங்கிப் போய்ப் பார்க்கத் தானே முடியாது!

அவ்வவ்வூரைப் பற்றிய எண்ணங்கள் அவற்றைப் பற்றிய வரலாறு, அவ்வூர்ப் பெயர் அறிந்த அளவில் தோன்றாமல் இருக்க முடியாதே!

**விசயவாடா:**

விசயை (வெற்றி) யம்மையின் திருக்கோயிலைக் கொண்ட அழகிய பெரிய நகரம் விசயவாடா. கனகதுர்க்கா என வழங்கப் படும் அவ்வம்மையே காவல் தெய்வமாகவும் கொள்ளப்படுகிறார். பெசவாடா என்பதும் விசயவாடாவின் பெயர். ஆந்திரமாநிலம் கிருட்டிணை ஆற்றுப்படுகையில் அமைந்துள்ளது. முப்பக்கமும் மலைகளால் சூழப்பட்ட இவ்வெழில் நகரின் தென்பால் கிருட்டிணை ஆறு செல்கின்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க வணிகப் பெருநகரம் இஃதாம்.

**ஐதராபாத்து:**

இவ்வூரைக் கண்டதும் - பெயர்ப் பலகையில் தான் - இரண்டு பாரிய நினைவுகள் எழுந்தன.

ஒன்று தஞ்சை கரந்தைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய உமா

மகேசுவரனார் பொழிவு நினைவு.

மற்றொன்று செந்தமிழ் அரிமா சி. இலக்குவனார்

பணியாற்றிய நினைவு.

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு நெல்லையில் நிகழ்ந்தது (1934). அம்மாநாட்டுத் தலைமை ஏற்ற புரவலர் த.வே. உமாமகேசுவரனார் உசுமானியாப் பல்கலைக் கழகப் பேரவையில் அப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் நவாபு மாடியார் சங்கு பகதூர் 8.02.1934 இல் நிகழ்த்திய பேருரையைத் தமிழ் நாட்டுத் தலைவர்கள் பல்காலும் படித்துத் தெளிய வேண்டும் என வலியுறுத்தினார்.

"எங்கள் மொழித்திறனில் முழு நம்பிக்கை வைத்தோம்". புதுக் கலைகளின் கருத்தை உணர்த்த அயல்நாட்டு மொழியே இன்றியமையாத கருவி என்றும் தாய்மொழி இதற்கு ஏலாத கருவி என்றும் கொண்டிருந்த பழங்கொள்கையால் இந்தியர்கள் பழிக்கு ஆளானதும் அன்றிக் கீழ்நிலையும் எய்தினர் எனக்கண்டோம்.

வேற்று மொழியைக் கற்றுப் புலமை பெறவும் அதன் வாயிலாய்க் கலையறிவு பெறவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளால் இக்கொள்கைக்கு அடிமையாகிறோம் என்பதை உணர்ந்தோம். வேற்று மொழியால் அன்றிக் கலையறிவும் உயர்நிலையும் எய்த ஒண்ணாது என்ற அடிமை எண்ணத்தினால் நுண்மதி மழுங்கி ஆயும் திறன் அழிந்து பாடப் புத்தகங்களை உருவேற்றி ஒப்புவிக்கும் கருவிகளாயினோம் எனத் தெளிந்தோம்.

தாய்மொழி தாழ்ந்த தரத்தது. கலைக்கருத்துக்களைத் தன்னகப் படுத்தவோ பிறர் உணருமாறு கூறவோ முடியாதது என்ற எண்ணங்கள் மனிதனின் ஆய்புலத்தையும் தன் முயற்சியையும் மழுங்கச் செய்யும் மனநிலையை விளைத்து விட்டன. தாய்மொழி இழிதகவுடைய தெனும் கொள்கையை மறுக்கத் துணிந்தவர் சென்ற ஒரு நூற்றாண்டாக வெளி வரவில்லை.

இந்திய மக்கள் கல்வியில் தேர்ச்சியடைவதற்கு ஆங்கிலமே ஏற்ற கருவியென மெக்காலே துரைமகனார் அறிக்கைவிடுத்த காலம் தொட்டு அனைவர்க்கும் தாய்மொழியின் நம்பிக்கை ஒழிந்துவிட்டது. எமது தாய் மொழியில் கல்வி வழங்குவம் எனப் பல்கலைக்கழகம் கூறிய ஞான்று பல்வகைத்தான எதிர்ப்புகள் இங்குத்தோன்றின. சிசுக்கொலை புரிவோர் சிலர் கழகத்தின் கழுத்தை உடனே முரித்துவிட எண்ணினர். சிலர் சொல்வளம் நிரம்பாத இந்துத்தானி மொழி புதுக்கருத்துகளைக் கூறமுடியாது

தடுமாற்ற முறு மெனவும், அம்மொழியைக் கருவியாகக் கொண்டு கற்பிக்க முயலும் கலைக்கழகம் உருப்படாது மாய்ந்தொழியும் எனவும் கூறினர்.

மற்றும் சிலர் ஆங்கில நாட்டிலுள்ள கலைக்கழகங்களின் நன்மதிப்பைப் பெற மாட்டாதென நினைத்தனர். யானோ இக் கலைக் கழகத்தாரின் புதுக் கொள்கையில் முழுநம்பிக்கை வைத்தேன். கழகம் தொடங்கியவர்களின் மதி நுட்பத்தை மிகவும் மெச்சினேன். துணிவுடன் செயல்புரிந்ததை மகிழ்வுடன் பாராட்டினேன்.

தாய்மொழிப் பயிற்சியில் தமக்குள்ளகுறையினை உன்னிச் சொல்லாற்றல் இல்லையே எனக்கணக்காயர் முதலில் மயங்கினர். இப்போது கழகம் தொடங்கிப் பத்தாண்டுகள் ஆயின. இந்துத் தானி மொழி புதுத்தேவைகளுக்கு ஏற்றாவறு விளங்கு வதையும் கலை நூற் பொருள்களை எளிதே கூறுதற்கு ஏற்ற கருவியாய் இருப்பதையும் உள்க் கருத்துகளை முட்டின்றி மொழிவதற்குத் தம் சொல்வளம் பெருகியதையும் அக்கணக் காயரே கண்டு இன் புறுகின்றனர்.

இலக்கியங்களும் கணிதமாகிய கலைகளும் இயல்பிலே வந்து தாய் மொழியில் இசைவுடன் அமைந்துவிட்டன. சுருங்கக் கூறின், கழகம் தோன்றிய காலத்தே பலர் உள்ளத்தும விளைந்த ஐயப்பாடுகள் யாவும் அகன்றொழிந்தன. புதுக் கலைகள் எல்லாம் மிக எளிதில் தாய் மொழியிலே கற்பிக்கப்படுகின்றன. இக்கழகத்தே தேர்ச்சி பெறுபவர் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள கலைக் கழகங்களின் தேர்வுகட்கு எவ்வாற்றானும் தாழவில்லை என மதிக்கப் பெறுகின்றனர். நீதிக்கலை, மருத்துவக்கலை, சிற்பக்கலை, உழவிக்கலை தொழிற்கலைக் கல்லூரிகளும் சீரிய முறையிலே வளர்க்கப் பெறுகின்றன" என்கிறார்.

இதனை எடுத்துக் கூறும் உமாமகேசுவரர், செயற்கரிய கருமமெனத் தமிழர் கருதும் செயல்களை உசுமானியக் கலைக்கழகத்தினர் பத்தாண்டுகளில் மிக எளிதில் இயற்றியதன் பொருட்டென்னை?

உண்மையான மொழிப்பற்றும் தன்னம்பிக்கையும் எண்ணிய கருத்தை எவ்வாற்றானும் இயற்றுவேம் என்னும் மனத் திண்மையும் அல்லவா!

தமிழன்பர் என மகுடமிட்டுக் கொள்பவரிடத்து இத்தகைய பெற்றிமைகள் காணப்படுகின்றனவா? இவர் மாட்டுத் தன்னம்பிக்கை இல்லை. தாய்மொழியின் எழில் நலங்களையும் சொற்சுவை பொருட்சுவைகளையும் காண்பதற்குரிய தமிழறி வில்லை. ஆதலால் புதுக் கருத்துக்களைப் பேசுதற்குச் சொல்லில்லை எனவும் எழுதுதற்கு எழுத்தில்லை எனவும் பழிதூற்றி அயல் மொழிகட்கு அடிமைகளாய் இருக்கின்றனர் என்று வருந்திக் கூறினார் (செ.செ.12:1933-1934).

2009 ஆகிய இவ்வாண்டுவரை பயிற்றுமொழி தமிழே என அமையப் பெற்றதா? உள்ளதிலும் கேடாய்த் தர்ய வயிற்றில் கருக் கொண்ட போதே அயல் மொழிக்கு அடைமானம் வைக்கப்பட்ட பிறவி பிறக்கப் போகின்றது எனப் பட்டம் தாங்கிப் பெற்றோர் அயல் மொழிப் பள்ளியில் முற்பதிவு செய்து அங்கொரு மகப்பேறு இருப்பது போலக் காத்திருக்கும் இழிவரவு இத்தமிழகம் போல எங்கேனும் உண்டா?

தமிழால் ஆட்சி பிடித்து - தமிழுக்கே எங்கள் வளமும்
வாழ்வும் ஊனும் உயிரும்என்று பறையறைந்தவர் -
அறைகின்றவர் ஆட்சிநிலை இஃது என்றால், தமிழ்ப்
பிறவிபிறந்தும் அயற் பிறவியாக அழகுமுகம்
காட்டுவதே வாழ்வாகிப் போனவர்களும், தமிழை
எந்நிலையிலும் ஒழித்துக் கட்டலே எம் பிறப்புரிமை
எனக்கொண்டு நன்றியும் நாணும் அற்றுத்திரியும்
அயன்மையரும் தாமா உமாமகேசுவரர் கூறிய
கடமைவீறுடையவராக இருப்பர்?

அதே ஐதராபாது உசுமானியாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் திணைக்களம் ஒன்று உண்டு. அக்களத்திற்கு வேண்டா வகையில் - இடர்மிக்க உடலும் நோயும் நலிக்கும் நிலையில் - செந்தமிழ் அரிமா சி. இலக்குவனார் அமர்த்தப்பட்டார்.

‘தமிழே பயிற்றுமொழி’ என்று நடைத்திட்டம் தொடங்கி - நடக்கத் தொடங்கு முன்னரே சென்னை மாகாணமாகவே இருக்க வேண்டும் என்று பிடியாய் பிடி பிடித்திருந்த அரசு வேலையைப் பறித்து வேலூர்ச் சிறைக்குள் அடைத்து அவலம் புரிந்தது. அவ்வரசைத் தமிழெழுச்சியே மூட்டையைக்கட்டி வீட்டுக்கு

*விடுத்த பின்பு ஆட்சிக் கட்டில் ஏறிய அறிஞர் அண்ணா, வேலை இழந்த பேராசியர்க்கு அவர் மகனார்க்கு வழங்கும் திருமணப் பரிசாக வேலைவழங்கினார்!*

*தமிழகத் தலை நகரில் சிறந்தோங்கு மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராக அமர்த்தப் பெற்றார். ஆனால் அந்நாள் கல்வி அமைச்சர் ஆங்கிலக் காவலராக இருப்பதை இலக்குவர் சுட்டிக் காட்டியது பொறுக்காமல், ஓராண்டொடு வேலையை முடித்து ஐதராபாத்து உசுமானியாவிற்குப் போகச் செய்தார்! அயன் மொழியூடு ஆளும் துணையற்ற பதவிக்கு விடுத்த பெருந்தகைகளின் செயல்கள் உள்ளனவே! இவை எவ்வளவு மொழிப் பற்றாளர்க்குக் குளுமை செய்வன! ஆனால், மந்தையாட்டு நிலைத் தமிழர் மனத்தில் உறைத்ததா?*

*இப்பொழுது இவண் சுட்டப்பட்ட நால்வரும் இல்லை. ஆனால், நம்முள் அவ்வெண்ணம் புகுந்து வெதுப்புவதுவிட்ட பாடில்லை!*

*என்னே, தமிழ்த் தாயின் போலிமை மக்கள் நிலை!*

*ஒவ்வொரு பெருநகரையும் சந்திப்பையும் கடக்கும்போது நம்முள் எழும் அதன் வரலாறு ஓடத்தான் செய்கின்றது! ஆனால் நேர்காணலுக்கு வாய்த்தனவற்றை எழுதுவதே சாலும் என அமையலாம்!*

*சுற்றுலாவைத் திட்டமிடும் போது, நாசிக்குப் போய்ச் சேர்ந்த பின்னர் ஒரு நாள் ஓய்வு கொண்டு சுற்றிப் பார்க்க வேண்டும் என்பது ஆகும். ஆனால் நாள் நீட்டிப்புக்கு இயலாது என்னும் நிலையில் மறுநாள் (25.02.2009) விடியல் பொழுதே மகிழ்வுந்தில் புறப்பட்டோம்! விடியல் 5-00 மணிக்குள்.*

*வேலாயுதனார், கலைநிதியார், சரோசினியார், யான் - நாங்கள் நால்வரும் சென்ற செலவு முதற்கண் அசந்தா குடைவரைகள்!*

*அவுரங்கா பாத்து என்னும் பெருநகருக்கு 104 அயிரம் (கி.மீ.) தொலைவில் உள்ள இடம் அசந்தா! நாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து இருநூறு ஆயிரத்திற்குமேல் வரவேண்டும். நாங்கள் அசந்தாவை அடுத்த போது பகல் பத்துமணியைத் தாண்டி விட்டது. ஆங்கிருந்து அவுரங்கா பாத்துக்கு நூறு அயிரம் சென்று மேலே எல்லோராவை எட்ட வேண்டும்.*

அசந்தா குடைவரை ஏறப் படிக்கட்டுகள் உள்ளன. தட்டையான பாறை ஏறி மேலே படிக்கட்டுகளில் செல்லுதல் அந்த வெயிலில் அயர்வாகவே இருந்தது.

நாம் சென்ற மகிழ்வுந்து நான்கு கல்களுக்கு அப்பாலேயே காடு கரடுமலை எனத் தொடங்குமிடத்திற்கு முன்னரே நிறுத்தப் பட்டு விடுகிறது. அரசுப் பேருந்து வழிதான் செல்ல வேண்டும். நடப்பாரும் நடக்கலாம். குளிரூட்டப்பட்ட பேருந்தில் இருந்து இறங்கி ஏற வெயிலில் படிக்கட்டில் ஏறுதல் கடினமே எனினும் உள்ளூற ஓங்கிய ஆர்வக் குளிரும் காட்சிக் கவினுமாய் ஈர்க்க ஏறினோம். முதற் குகையுள் புகுந்தோம்!

வெப்பம் அகன்றது; அயர்வு அகன்றது; ஆர்வம் பொங்கித் ததும்பியது. பருகுவன் அன்ன ஆர்வத்தராய்ச் சிலைமுன் சிலையானோம்! நிலையாய் நாமும் நின்று விட நேரம்- காலம் என்பனவெல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றனவே! விரைந்து ஓட்டுகின்றனவே!

உலகவாழ்வைப் புத்தர் துறப்பதற்குக் காரணமாகச் சொல்லப்படும் காட்சிகள் முதல் குகையிலேயே இடம் பெற்று விடுகின்றன. ஒரே ஒருதலை மாமனுக்கு: நான்கு உடல்கள்! இடம்மாறிப்பார்க்கப் பார்க்க மான்தலை ஒவ்வோர் உடலுக்குத் தக அமைக்கப்பட்டுள்ள காட்சி சிற்பியின் கற்பனை, கலைத்திறம் செய்நேர்த்தி என்பவற்றை எல்லாம் ஒரு சேரப் புலப்படுத்துகின்றன.

இங்குள்ள அவலோகிதர் (புத்தர்) சிலை, உள்ள சிலைகளில் எல்லாம் கொள்ளை கொள்ளும் வனப்பினது. இச்சிலையைக் கண்டே அசந்தா சிலைகளுக்கு உலகப்புகழ் வாய்த்திருக்கும் என்று பாராட்டுரைக்கும் வனப்பினது. மற்றைக் காட்சிகள் இல்லாமல் இல்லை. செம்பியன் என்பான் சோழன்! செம்பியன் ‘சிபி’ என வடவரால் வழங்கப்பட்டான்! அவன் புறாவைக் காப்பதற்குத் தன்னுடலை அரிந்து வைத்த அரிய வள்ளல் என்னும் பெருமையன் அல்லனோ! அவனும் அவன் மடியில் புறாவும், அருகே துலைக் கோலும் இடம் பெற்றுள்ளன.

வனப்புறு கலைகள் வாய்ந்த ஆறுதூண்கள், பாரிய அரங்கம் என்பவற்றையும் உள்ளடக்கியது இக்குடைவரை. அழுந்திய வண்ணங்கள், அடுத்தே வெளிர் வண்ணங்கள் - பார்ப்பவர் பார்வையில் உருவும் நிழலுமாம் காட்சியை வரச் செய்கின்றன.

சிற்பியரைப் போலவே வண்ண ஓவியரும்நம் எண்ணத்துள் புகுந்து கொள்கின்றனர்.

சிற்பம் ஓவியம் எனக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகப் படைக்க வல்ல கலைவல்லாரைப் பண்டையோர் கண்ணுள் வினைஞர் என்றனர். காண்பவர் கண்ணிடத்தே தம் கலைத்திறனைப் பதியச் செய்து விடுவோர்க்கு இப்பெயர் தகும்தானே!

அசந்தா குடைவரை சிற்பம், ஓவியம், இரண்டன் பிரிவிலாக் கலைமாண் நிலையம் எனப் பதிவாகின்றது!

பிறை நிலா ஒன்றை நினைவு கூருங்கள்! படியேறும் இடத்தில் இருந்து தொடங்கி நீண்டு விரிந்து வளைந்து வலக்கைப் பக்கம் மேல் பக்கம் இடக்கைப் பக்கம் என விரிந்து செல்லும் குடை வரைகள் எண்ணிக்கை முப்பத்திரண்டு!

கீழ்தளம் ஓங்கி நிற்கும் பகுதியில் மட்டும் ஒரு குடைவரை: கீழ்தளம் தாழ அமைத்திருந்தால் மேலே ஒரு குடைவரை முக்கால் வட்ட வடிவம் கிட்டுமாறு அமைந்த மலை அமைப்பை அவ்வாறே குடைவரை ஆக்கிய அருமை 'பறவைப் பார்வை'யாகப் பார்க்கும் போது, இன்பப்பூவை எடுத்துச் சொரிகின்றது, சுட்டெரிக்கும் பட்டப் பகலிலும் என்றால், முழுநிலவில் அருவிஒழுக்கும் ஆற்றுச் சலசலப்பும் கூடிய மழைக்காலப் பொழுதில் காண எத்தகு இன்பச் சுரப்பாம்! அருவியும் ஆறும் வறண்டல்லவோ கிடந்தன.

வீறுமிக்க வீரன் ஒருவன்! அவன் காலடியில் வீழ்ந்து கிடந்து அருள் செய்ய வேண்டும் ஒரு நங்கை; அவள் உணர்வு வெளிப்பாடு: மாசுற்ற நிலையிலும் என்னைப்பார் என ஈர்க்கிறது ஓர் ஓவியம்; இரண்டாம் குகையில் உள்ளது இது.

நான்காம் குகை மிகப்பெரியது; 28 தூண்களைக் கொண்டது: அடியார் கூட்டம் வழிபாடு செய்யும் காட்சி; ஓர்அணிலொடு பெருமான் உள்ளம் ஒன்றி நிற்கும் அருமை! அணிற்பிள்ளை என்று நாம் கொஞ்சுவோம் அல்லவா!

மேய்ப்பன் ஒருவன், ஓடும் ஆடுகளின் பின்னே அவன் ஓடுகிறான்: ஆடுசுமந்து இளைத்ததால் அல்லவோ அவர் அந்தணராம் அறவோராக செந்தண்மையராகச் சிறந்தார்! வழிகாட்டிகளாக விளங்கியவர்களைப் பொதுவில் 'மேய்ப்பர்' என்பதுஉலகளாவிய பார்வை! நம் திருமூலரை - ஆனாயரைத் தாம் நினைவோமே!

*பதினாறாம் குகையே படிக்கட்டுகளெல்லாம் கட்டுமுன்னர் அருவி ஆறு வழியே வந்து குகைகளுக்கு ஏறும் படிக்கட்டு களுடன் விளங்கியிருக்கும் போலும்! நுழைவாயிலின் இரண்டு பக்கங்களிலும் யானைச்சிற்பங்கள்! ஆற்றுக்கு இறங்கும் படிகள்! இப்படிகளின் பழமையைக் காட்டுவது போல் சில எஞ்சியுள்ளன. இக்குகையில் எண்கோணத் தூண்களும் சதுரப்பலகணிகளும் உள.*

*ஏர்ஓட்டும் போட்டியைப் புத்தர் பெருமான் நேர் பெறக் காணலும் உழவரும் ஏர்க்காளைகளும் படும் துயரம் துடிப்பு களைக் கண்டு அவர் துடிப்பதாகவும் காட்டப்படுவது எவரையும் ஈர்க்கும் காட்சிகள். மேலும், 'இறக்கும் இளவரசி'யின் ஓவியம் ஒன்று! அவ்விளவரசியின் கண்கள் சொருகும் நிலை துவளும் விரல்கள் ஆயவை அவலநிலையை அப்படியே கண்முன் நிறுத்துவன.*

*இதனினும் மேம்பட்ட ஓவியங்கள் இருக்கலாம். ஆனால் உணர்வை இப்படி மெய்யுற உணர்த்தும் ஓவியம் இருக்கவே முடியாது என்று 'ஐகிரிபந்து' என்பார் மதிப்பிட்டுள்ளார்! துய்ப்பாளியாம் அளவு கோல் தானே, துய்ப்புப் பொருளின் அளவுகோல்!*

*பதினாறாம் குகையை ஒப்பதே பதினேழாம் குகையும். ஆனால், அக்குகையில் உள் சிதைபாடு இக்குகையில் இல்லை என்பது மகிழ்வுக் குரியதாம்.*

*தாக்கவரும் யானை; அதனைக் கையமர்த்தும் புத்தர்; அடங்கி ஒடுங்கிப் பணியும் யானை!*

*அகப்பாடலில் ஒன்று; தினைக் கொல்லையை அழிக்கவரும் யானையைப் பரண்மீது ஏறி இருந்து நீராடிய கூந்தலை உலர்த்தும், குறிஞ்சிப்பெண், குறிஞ்சிப் பண்பாட மூடாக் கண்ணையும் மூடி உறங்கிய யானையைக் காட்டுவதை நினைவூட்டுகிறது! (அகம்.102)*

*மேலும், வீணையை இசைத்துக் கொண்டு உதயணன் வீதியில் செல்ல ஊரழிவு செய்த யானை ஆணையிடும் ஆசிரியனுக்குக் கட்டுப்படும் மாணவன் போல் பணிந்தது என்னும் பெருங்கதைக் காட்சியையும் நினைவுறுத்தும்!*

*ஓவியக் கலையும் காவியக்கலையும் ஒன்றை ஒன்று சார்ந்து ஒன்றில் ஒன்று உயர்ந்து விளங்குபவை தாமே!*

இருபத்தாறாம் குகையில் புத்தர்பரிநிர்வாணச் சிற்பம் மனத்தைக் கவ்வுகிறது. அகத்தின் நிறைவு - முழுவாழ்வின் நிறைவு - முகம் காட்டும் வகையில் சிற்பி வடித்துள்ள திறம்தான் என்ன? அவர்தம் தொண்டர்களின் அவலத்தோற்றம் என்ன! மெய்ப் பாட்டை எடுத்துக்காட்டவே பிறந்த பிறவிச் சிற்பியன் போலும் அதனை வடித்தவன்!

ஓவியம் உயர்ந்ததே! மரத்தில் இழைத்தல் அதனினும் அருமையே! செப்பில் பொன்னில் வார்த்தல் மேலும் அருமையே! ஆனால் கல்லைக் கனியாக்கிக் காட்டுகிறானே சிற்பி!

முப்பது நாற்பதடிப் புத்தர் சிலையில் - எச் சிலை என்றால் என்ன - ஒரு விரலில் சிதைவு ஏற்பட்டு விட்டால்கூட அத்தனை அருமையையும் அழித்துவிடுமே! எவ்வளவு நுண்ணிய நோக்கும் தண்ணிய நெஞ்சும் கலைக்கே வாழும் வாழ்வும் உடையானாய் ஒருவன் இருந்தால் அன்றி, அவனுக்கு அவ்வடிப்புக்கலைக் கருத்தை அன்றி - வேறுவழியில் கருத்துச் செல்லா வகையில் எல்லா நிறைவும் செய்வார் இருந்தால் அன்றி - இவை உருவாக்கம் பெற்றிருக்க இயலுமா?

கலைவல்லான் ஆகிய சிற்பி ஒருவன், கண்முன்னர் அக் கலையைத் தலையும் காலும் கையும் தனித்தனி உடைக்கும் கொலைப்பிறவியன் வெறி எப்படித் தோன்றும்! தான் பெறுவதற்கு அரிதாய்ப் பெற்ற பிள்ளையைக் காலும் தலையும் சிதைத்தெறியும் கொலை வெறியனுக்கு ஒப்பாக அல்லாமல் வேறு தோற்றம் தாரானே!

அசந்தாக் குகைகள் உள்ள மலையில் பெயர் சயாத்திரி!

கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. 650 வரை உருவாக்கப் பட்டவையாம் இக்குகைகள்! அனைத்தும் பௌத்தம் சார்ந்தவை. பௌத்தத்துறவிகள் வாழிடமாகவும் சமயப் பரப்பிடமாகவும் இருந்தவை. அடர்ந்த காடும் நெடிய காலம் மக்கள் போய்வரும் வழக்கில்லாமையும் அக்குகைகள் பற்றி உலகம் அறிந்து கொள்ளாவாறு செய்தன. கி.பி.1819 ஆம் ஆண்டில் தான் இக்குகைகளின் இருப்புக் கண்டு பிடிக்கப்பட்டதாம்.

ஒரு சிலை - நின்றநிலை - முப்பதடி உயரம்! அது முகப்பில் இல்லை! குகையின் குடைவின் இறுதியில் இருக்கிறது! ஏறத்தாழ

நூறடி - நூற்றிருபதடிகளுக்கு அப்பால்! அச்சிலையின் இருபால் சுவர்ப் பக்கங்களிலும் சிற்பங்கள்! வண்ண ஓவியங்கள்! நீள அளவு போல் அகலம்!

வெடிவைத்துத் தகர்க்க முடியுமா? மின்னாற்றலால் துளைத் தெடுக்க அந்நாளில் வாய்ப்பு இருந்ததா? எப்படி இக்குடை வரை களை உண்டாக்கினர்! சிலையின் உயரத்திற்கு மேல் வரை குடைந்தெடுக்க வேண்டுமே! தூண்களையெல்லாம் விடுபடச் செய்து துளைக்க வேண்டுமே! தூண்களில் சிற்பங்கள் வார்க்க வேண்டுமே! முகடுகள் என்ன வண்ணமோ வார்ப்போ இல்லாமலா உள்ளன?

எத்தனை மன்னர்கள் ஆட்சிக் காலமோ? எத்தனை உழைப்பாளர் உழைப்புத் திறமோ? எத்தனை எத்தனை சிற்பர்களின் வண்ண ஓவியர்களின் தவவாழ்வோ!

எல்லோராவைக் கண்டு பின்னே பார்க்கலாம்!

அசந்தாவை முடித்து ஔரங்காபாத்து சென்று, மேலும் 18கல் தொலைவில் எல்லோராவை அடைந்தோம்! வெயில் என்றால், அவ்வளவு வெயில்! பொழுது இருக்கும் போதே பார்த்தும் விட வேண்டும்!

பௌத்தசமயத்திற்கே உரியது அசந்தா என்பது கண்டோம்! எல்லோராக் குடைவரைகளும் ஏறத்தாழ அதே காலத்தில்தான் தோற்ற முற்றிருக்க வேண்டும்! கி.பி. ஐந்து, ஆறு முதலாம் நூற்றாண்டு, இந்தியப் பரப்பில் உள்ள குடைவரைகள் எல்லாம் ஒப்பிட்டுப்பார்க்க ஓர் ஊடகம் நன்கு வெளிப்படுகிறது. சிறிய சிறிய வேறுபாடுகளை அன்றி, மாமல்லைக் கலைக்கோட்டம், மும்பை யானைக் குடைவரை, கோனார்க்கு கதிரவக் கோட்டம், எல்லோரா அசந்தா எல்லாம் ஒருதாய்பெற்ற சேய்களைப் போலவே உள்ளன. கோனார்க்கில் ஒரு வழிகாட்டி, 'நரேந்திர மகாராசா' செய்தது என்று முற்செலவொன்றில் கூறியது பசுமையாக உள்ளது.

34 குடைவரைகளையுடையது எல்லோரா?

முக்கடல் கூடல் போல் பௌத்தமும், சைவ

வைணவமும், சமணமும் அமைந்தவை.

*முதல் பன்னிரண்டு குடைவரைகள் பௌத்தம் சார்ந்தவை. பின் முப்பது வரை சிவனிய மாலிய (சைவ வைணவ) சமயம் சார்ந்தவை.*

*முப்பத்தொன்று முதல் முப்பத்து நான்கு வரை சமணம் சார்ந்தவை.*

*மலைச்சரிவில் தெற்கு வடக்காக இரண்டுகல் தொலைவில்*

*இவை அமைந்துள்ளன. முப்பகுதிகளுக்கும் இரண்டு*

*இடைவெளிகள் அமைய அமைக்கப்பட்டுள்ளன.*

*ஏறத்தாழ ஏற்ற மில்லாமல் அடித்தளம் தொட்டே குடை வரைகள் இருத்தலாலும் அடிவாரத்தில் மரங்கள் அமர்விடங்கள் விற்பனைப் பொருள்கள் அடுத்தே விடுதிகள் என இருத்தலால் அசந்தாவைப் போல் எல்லோரா தனிமைப்படுத்தப் பட்டுவிட வில்லை என்பதை உணரமுடிகிறது. அடிவாரம் வரை வண்டிகள் வந்து நிற்க வாய்ப்புள்ளது.*

*அசந்தாச் சிற்பங்கள் ஓவியங்கள் அமைப்புகள் அன்னவையே எல்லோராப் பௌத்தக் குடைவரைகள்!*

*சிவனிய மாலிய சமயக் குடைவரைகளில் தனிப் பெருஞ் சிறப்புடையது கயிலாச நாதர் குடைவரையாகும்! குகை எண்ணிக்கையில் பதினாறாவது அது.*

*எல்லோராவில் பெரியதும் சிறந்ததும் ஆகிய குடைவரை மட்டுமன்று, இந்தியாவிலேயே உயர்ந்த அகழ்வரையாகவும் அமைந்துள்ளதாம்.*

*இராட்டிர, கூடமன்னன் தந்திவர்மன் (735-757) முதலாம் கிருட்டிணா (கி.பி.760) முதலியோரால் சமைக்கப் பட்டதாம். அவ்வேந்தனே தொடங்கி அவனே முடித்தவனாக இருக்க முடியாது. ஏனெனில் ஒரு நூற்றாண்டு அவ்வகழ்வுப் பணி நிகழ்ந்துள்ளது. 30,00,000 சதுர அடியளவு மலையைப் பிளந்து அடிமுதல் முடிவரை கோட்டையாக்கி, கோட்டையின் உள் நடைவழியாக்கிக் கொள்ளப்பட்ட வரை அகழ்வு அஃது, பத்துத்தலைமுறை வேலை: 200 ஆண்டு முயற்சி.*

*உள்ளே அகழ்ந்து அகழ்ந்து தூண்கள் கோயில்கள் கோபுரங்கள் ஒவ்வொன்றிலும் சிற்பங்கள் என ஒவ்வொன்றாய்*

வெளிப் பரப்பில் கல் கொண்டு கட்டியது போலவும் சிற்பங் களைச் செய்து நிறுத்தியது போலவும் அமைத்து மற்றைப் பகுதிகளை அகழவேண்டும் அல்லவோ!

கொடித்தூண், பலிபீடம், காளையூர்தி, மண்டபங்கள் என எல்லாமும் அமைக்கவும். கோயில் கோபுரம் முழுவதும் சிற்பங்கள் விளங்கவும் செய்ய வேண்டுமானால் எப்படி அகழ்ந்தும் செதுக்கியும் குடைந்தும் எத்தனை ஆயிரம்பேர்கள் பணி செய்திருக்க வேண்டும்!

"இக்கோயில் 276 அடி நீளமும் 154 அடி அகலமும் 107 அடி உயரமும் கொண்டது. இக்கோயிலில் கருவறை மேற்குப் புறவாயில் நந்தி மண்டபம் திருச்சற்று ஆகியவை உள்ளன. சிவன்கோயிலாக இருந்தாலும் திருமாலின் அவதாரங்கள் இங்குச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.

"இக்கோயிலின் கொடிக்கம்பம் 45 அடி உயரமுடையது. இதன்மேல் சிவனின் சூலம் உள்ளது. இலக்குமி பத்மாசனத்தில் அமர்ந்துள்ளாள்.

இங்குச் சிவன் காலபைரவர் வடிவத்தில் உள்ளார். பார்வைக்கு அச்சம் தரும் இச்சிற்பத்தின் கீழ் சப்த மாதர்களின் சிற்பங்கள் உள்ளன. அருகில்சிவன் யோகிவடிவில் காட்சி தர முனிவர்கள் தேவர்கள் ஆகியோர் அருகில் உள்ளனர். இதையடுத்து மகாபாரதம் இராமாயணக் கதைகள் செதுக்கப்பட்டுள்ளன. இதற்குக் கீழ் விலங்குள் படுத்திருக்கும் காட்சி, பாலூட்டும் காட்சி போன்றவை மிக நுணுக்கமாகச் செதுக்கப் பட்டுள்ளன. இக்கோயிலின் தெற்குப் பகுதி 12 பெரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் பெரிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அன்னபூரணி, வராகி, திருமால், வாமன அவதாரம், நரசிம்மன், அ;ரத்த நாரீசுவார் ஆகிய சிற்பங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்". எல்லோராக் கயிலாசக் குடை வரையின் ஒரு பகுதியை வாழ்வியற் களஞ்சியம் வழங்கி யுள்ளது. மரம் இரும்பு கலவை தனிக்கல் செங்கல் என எவையும் இல்லாமல் மலையில் உச்சியில் இருந்து வைத்து வைத்து வெண்ணெயை வழித்தெடுப்பது போலக் கல்லை ஒதுக்கி வடிப்பது எளிய முயற்சியா? எளிய வேலையா? எளிய முடிப்பா?

தென்னகக் கோயில் சிலைகளைக் கண்டு திளைத்தது மட்டுமன்றி எழுத்தில் படித்த பேறும் எனக்குண்டு! மதுரைக் கம்பத் தடிமண்டபம்எத்தனை எழில் மாட்சியது! எத்தனை முறை

*பார்ப்பினும் ஈர்த்து நிறுத்துவது! அவ் வேலையொடும் ஒப்பிடும் சிற்பச் சீர்மையா, அசந்தா எல்லோராச் சிற்பங்கள் எனக் கணித்து விட முடியாமல் இருப்பதற்கு ஒரே ஒரு சிறப்பென்ன? அனைத்தும் குடைவரைச் சிற்பங்களும்: வண்ணங்களும் ஓரரசன் காலப் பணி அன்றி வழிவழித் தொடர்ந்த பணியால் அன்றி முடியாச் சிறப்பினது என்பதே.*

*ஔரங்கா பாத்தும் குடைவரைச் சிற்பங்களை உடையதே! ஔரங்கசீப் மனைவி நினைவில் எழுந்த பீபிகா மால் தாசுமாலின் தோற்றத்தை அப்படியே படியெடுத்து வைத்தாற் போன்ற அமைப்பும் எழிலும் கொண்டதுவே! பாரித்த இடப்பரப்பில் புல்வெளி பூங்கா அடுக்குதளம் எனச் சிறப்புகள் பல கொண்டதுவே! ஔரங்காபாத்தின் பழம் பெயர் 'கிட்கி'* (Khidki).

*எல்லோராவைப் பார்த்து ஔரங்கா பாத்தையும் பார்த்து மேலே நாசிக்கும் சேர இரவு பத்து மணியாயிற்று! முந்நூறும் முந்நூறும் ஆக அறு நூறுகல் தொலைவாயிற்றே!*

*விடியல் தொடங்கிய செலவு - இடைவிடாச் சுற்று - அயர்வின் உச்சம் - ஆனால் பழகிப் போன எண்ண ஓட்டம் இரவில் கண்ணுறக் கத்தைக் கடியவே செய்தது.*

*கண்ட காட்சிகள் படக் காட்சி போல் சுழல்கின்றன! அச்சுழற்சிப்பதிவு எழுத்தாகின்றது.*

*காந்தத்துக்கு உயிர் இல்லை, உணர்வும் இல்லை!*

*எனினும் ஈர்ப்பாற்றல் உடையதாய் வடதிசையே காட்டும்!*

*அதன் திசைகாட்டல் அறிந்தே திசைதவறுவார் திசையை நேராக்கிக் கொள்ளவும் திசையில் தவறாது செல்வார் தெளிவுடன் தொடரவும் உதவும்.*

> *அறிவுடையானுக்கும் அவ்வறிவிலாக்கருவி அறிவுறுத்தும் பேறு பெற்றுவிடுகிறது. அதனைப் பாராட்டும் நாம், அக்கருவி இயக்கத்தைக் கண்டு உலகுக்குத் தந்தானே அவனை மறக்க முடியுமா? அவன் இல்லையேல் அக்கருவியின் வரவு ஏது? தரவு தான் ஏது? குறி ஒன்று வேண்டும். அக்குறி தெளிவின தாகவும் திட்டமானதாகவும் இருக்க வேண்டும். அக்குறியோ தெளிவு திறங்களோ அடையும் பயன் என்ன? பெருமை என்ன?*

குறிக்கொண்டு வாழும் மாந்தர் அக்குறியைப் பற்றிக் கொண்டு வாழும் போதே - பிறர்க்கு வழிகாட்டும் போதே - குறியும் குறிக்கோளும் பெருமையடைகின்றன.

குறிக்கோள் வாழ்வினைக் கொண்டவர்கள் ‘தாம் குறிக்கோள் வாழ்வினர்’ எனக் கூறினார் அல்லர்! செருக்குற்றார் அல்லர்! அவர் குறிக்கோள் வாழ்வினர் என அக் குறிக்கோள் பற்றுமையுடைய வரால் கண்டு கொள்ளப்பட்டனர். அதனைப் பரப்புதல் தம் கடன் என்றும் கொண்டனர், தத்தம் திறவகையால் பரப்பாளர் ஆயினர். குறிக்கோள் வாழ்வரைப் பரப்புதலைத் தம் குறிக்கோளாகக் கொண்டனர். அக்குறிக்கோளை ஏற்றுப் போற்றி நலம் பெறுவார் பெறும் நலமே தாம் பெறும் நலம் எனவும் கொண்டனர். அன்றிப் புகழ், பொருள், போற்றல் என்னும் நாட்டத்தராய் இருந்தார் அல்லர்! அவர் புகழ் பொருள் போற்றல் எல்லாமும் அக்குறிக்கோள் வாழ்வர்க்குப் படையலாக்கத் தம்மை முழுதுறு ஒப்படைப்புச் செய்தவராகவே இருந்தனர்.

குறிக்கோளர் விரும்பாத போற்றுதல், குறிக்கோள் பரப்பாளர் விரும்பாப் பயன் எதிர் நோக்கு இன்மை என்பன பலப்பலரை ஊக்கின, கிளரச் செய்தன; கருத்துவகையால் பரப்புதல் தொண்டு மேற்கொண்டனர்; அவருள் பாவிகர் சிற்பர்ஓவியர் இசைஞர் எனச் சிலர் விளங்கினர். அவரவர் திறம்வாய்ப்பு சூழல் ஆயவற்றுக்கு ஏற்ற வகையில் உலகம் காலமெல்லாம் கூட்டுண்ணத் தக்க அரும் பெறல் படைப்புகளை ஆங்காங்கே உருவாக்கினர்.

உருவாக்கும் வல்லார்க்கும் ஊணே, உடையே, உதவியே. உறைவே எனத் தேவைகள் உண்டே! இயற்கைத் தேவையாம் பசிப்பிணியோடு தானே எவ்வெவ்வுயிர்ப்பிறப்பும்பிறக்கின்ற. அத்தேவை இறுதிமூச்சு உள்ளவரை உண்டே! அதற்கென அவர்கள் தம்பொழுதைச் செலவிடின், உலகுக்குக்கிட்ட வேண்டும் நலப்பேறு குறையக் கூடுமே என்று எண்ணிய நிறைமனத்தர், தூய தொண்டர் குழாமாக முகிழ்த்தனர். அவர்கள் தம்மை அவ்வல்லார்க்கு உதவுதலே பிறவிப் பேறு எனத் தீர்மானித்துத் தம்மையே ஒப்படைத்தவர் ஆவர்.

குறிக்கோள் வாழ்வர்க்கு பரப்பு நர் வாய்த்தால் போல்,

பரப்புநர்க்குப் புரப்புநராய்த் தொண்டர் அமைந்தனர். இந்நிலையில் குறிக்கோள் வாழ்வர், பரப்புநர், தொண்டர் என்னும் பெருநலத்தர் முப்பால் ஆயினர்.

இம்மூவகையரும் முக்காலியின் கால்களை அனையர்! அவ்வவ்வகையால் அவர்கள் சிறப்பினர். எனினும் குறிக்கோளராம் முன்னவரே மூவர்தம் மூச்சாகவும் பேச்சாகவும் இருந்தனர். ஆனால் அவரவர் கடமையே கண்ணானவர். பின்னிருவகையாருள் எவரும் "வருக, உதவுக, பயில்க, புரிக" என அழைக்கப்பட்டுத் தேடிக் கொண்டவர் அல்லர். தாமே ஒருவரைஒருவர் தேடிக் கண்டு கொண்டு ஒன்றியவர்.

இம்முக்கூட்டுப் படைப்பே பெரும் பெரும் கலைக் கூடங்களாய் - அமைப்புகளாய் நிறுவனங்களாய் - காலமெல்லாம் உலகைக் கைகாட்டி அழைத்துக் கண்டு திளைக்க வைக்கின்றன! இல்லையேல் 'புத்தர் அருகர்' முதலோர்க்கும், நமக்கும் உள்ள ஊடகம் இல்லாமல் போயிருக்கும் அல்லவோ! அசந்தா எல்லோரா குடைவரை சிற்ப ஓவியங்கள் கூவாமல் கூவி அழைத்து, கூறாமல் கூறி நிற்கும் குறிப்புகள் இவையாம்.

மராத்திய மண்ணை உலகப் பார்வைக்கு ஆக்கும் கலங்கரை விளக்கங்கள் அசந்தா எல்லோரா என்பதை ஒவ்வொரு நாளும் வந்து குவிந்து காணும் உலகரைக் கண்ட அளவானே புலப்படும்! இப்புலப்பாட்டில் புன்முறுவல் பூப்பவர் குறிக்கோளார் பரப்புநர் பஷபுரப்புநர் என்பர் மூவராம்! மனனர்என்ன, மக்கள் என்ன அவரெல்லாம் இல்லாமல் இப்பேறுவாய்த்திருக்குமா? வாய்திராது என்பது மெய்யே! அவர் எதனால் ஈடுபட்டுக் கடனாற்றினார்? குறிக்கோளர் பரப்புநர் இல்லாக்கால் அவர் அறிதற்கு வாய்ப்பு ஏது? உதவும் பேறு ஏது? புரப்பநராம் வேந்தரும் மக்களும் மேம்பட்ட கடப்பாட்டினரே எனினும் குறிக்கோளர், பரப்புநர் என்பாரைச் சார்ந்த பேறு வாய்த்தவரே ஆவர், முக்காலியின் எக்காலாய் இருந்தால் என்ன?

புத்தர் அருகர் வாழ்ந்த நாளில் அவர்களைக் காண்பார் கண்டனர்: வாய்த்தார் உரையாடினர்: ஒன்றினார் உடனாகினர்: புத்தர் அருகர் உரையை - வாழ்வை - அணுக்கர் வரைந்தனர். அதனைப் பரப்பினர்: கூட்டம் கிளர்ந்தது: புத்தர்அறம் வழிபடு பொருள் ஆயது!

புத்தம்கரணம் கச்சாமி!

சங்கம் சரணம் கச்சாமி!

தன்மம் சரணம் கச்சாமி!

*புத்தத்தை வழிபடுகிறேன்: சங்கத்தை வழிபடுகிறேன்; தருமத்தை வழிபடுகிறேன்! இவற்றைக் கொண்டவர் ‘கோலம்’ ‘கொடி’ ‘கொள்கை’ எனக் கொண்டனர்! அவர்கள் ஒரு கூட்டம் எனத் தொடக்கத்தில் இருந்தனர். அவர்களின்ல பழையது புதியது எனப் பிளந்தது! பழைய பாணி வேறு! புதுப் பாணி வேறு! கிறித்தவத்தில் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இரண்டு இல்லையா, அப்படியே ஆயிற்று!*

*கொள்கையைப் பற்றிக் கவலைப்படாமல் கூட்டத்தைப் பெருக்கலே குறியான பின்னர்க் கொள்கை கொள்ளை போய்விடும்! கொண்டு நிற்பாரைக்கண்டு பிடிக்க நுண்பெருக்காடி தேவைப் படலாம் - விண்மீனைக் கண்டு கொள்ளவல்லாரும் காணாப் பொருளாகக் கொள்கை போய்விடும்!*

*அந்நிலையிலும் எந்நிலையிலும் கற்றாரும் கல்லாரும் உள்ளாரும் இல்லாரும் எல்லாரும் பழஞ் செய்தியையும் பழையர் வடிவங்களையும் கண்டு நினைவு கூர, உதவும் அரிய கலை சிற்பமும் ஓவமுமாம்!*

*என்னதான் கொடுஞ்செய்கையர் சிதைத்தாலும் அச் சிதைவுக்கும் ஈடு கொடுத்தும், காலக் கழிவும் பருவ மாற்றமும் ஏற்பட்டாலும் அவற்றுக்கு ஈடு கொடுத்தும் இன்றும் தாம் உள்ள மண்ணுக்குப் பெருமை சேர்ப்பதாய் உள்ளவை குடைவரைகளும் வண்ண ஓவியங்களும் சிற்பங்களும் ஆம். இவற்றை மீட்டெடுத் தோரும் காத்துவருவாரும் நினைவு வரத் தக்கவராம்!*

*மற்றைச் சுற்றுலா இடங்களைப் போலவே கையேந்தல், மறித்து மறித்து வணிகம், உணவு, வழிகாட்டி எனத் தலையிடல் உள்ளனவே! இந்திய மண்ணை விட்டு இவ்விழிவரல் ஒழியாமல் சுற்றுலாக் காட்சி என்னவாகவே இருந்தாலும் இறுதியில் இவ் விழிமையே எஞ்சுகின்றதாம்! உலக நோயாகத் தோன்ற வில்லை! தமிழக நோயாக மட்டுமில்லை! இந்திய நோய் எனவே நீக்கமறக் காண்கிறது!*

**26.02.2009**

*எந்நேரம் படுத்தாலும், எழும்பும் நேரம் 5 மணி என்பது தெளிவாகப் பழகிப்போனது. அப்பழக்கம் வழக்கமாய் ஒழுக்கமாய்ப் போய நிலையில் மாறுமா?*

ஐந்துமணிக்கே எழுந்து செய்யும்கடன்களையாற்றி அன்றைத் திட்டம் மேற்கொள்ளல் வேண்டும். இன்று 'கங்கை கோதாவரி' தோன்றுமிடம் காணப் போகிறோம் என்றும் காலையில் 10 மணிக்குப் புறப்படல் வேண்டும் என்றும் முதல் நாளே திட்டப் படுத்தியிருந்தனர். அசந்தா, எல்லோரா சென்ற நால்வரே இச்செலவும் மேற்கொள்ளத் திட்டமிட்டும் கலை நிதி வேலாயுதர் தம் கடமை அழுத்தத்தால் வரக் கூடவில்லை. மூவராகவே சென்றோம். மகிழ்வுந்து ஓட்டுநர், அருள் சரவணர் மாட்டுப் பேரன்பர். வழிவகை நன்கு தெரிந்தவர்; பண்பு மிக்கார்; அவரைப் போலவே அவர் மகனார்; புகைக்குடியும் இல்லாப் பெருமை, புன்முறுவலை அன்றி முகம் சுண்டா அமைதி வாய்க்கப் பெற்றவர். காணவேண்டும் காட்சிகளைக் காட்டலில் பேரார்வம் உடையவர். அவர் எங்களை அழைத்துக் கொண்டு 'தேவலாலி' சென்றார். எங்களுடன் வந்த அருள்மொழியார் அவர் அலுவலகத்தில் இறங்கிக் கொண்டார். அங்கிருந்து 'வால்தேவி' என்னும் ஊர்வழியாகக் கங்கை கோதாவரி தோன்றுமிடம் நோக்கிச் சென்றோம்!

சூழலெல்லாம் மலை; அடிவாரம் கோயில்; பிற சூழலெல்லாம் குடியிருப்பு; அங்காடி; தெப்பம் தேர்; சிறுகோயில் பெருங்கோயில் தங்கல் விடுதிகள்; ஊணகங்கள்; சுற்றுலா வளாகத்திற்குரிய அனைத்தும் கொண்டது அது.

கோயிலை அடுத்த தெப்பக்குளம் தான் கங்கை கோதாவரி தோன்றுமிடமாம்! அதனைக் காணும் வரை என் எண்ணத்தின் பதிவு வேறு!

குற்றால அருவி, பாபநாச அருவி, சுருளி, கும்பக்கரை, வையை வளநாடு, செய்பகத் தோப்பு, கொல்லி புளியஞ்சோலை என எண்ணிய எண்ணம் ஒரு தெப்பக் குளத்துள் அடங்கி விட்டது! மழைக்காலத்தில் மலையருவி உண்டு என்பது புலப்பட்டது, ஆறும் காணமுடிந்தது. பழைய கோயில் சிறிய அளவினது; சுற்றுச் சிறு கோயில்களும் உண்டு. புதிய கோயில் வளாகம் பெரிது; ஓட்டுநர்பார்த்து வரக் கூறி வழிகாட்டினார். அடுக்கடுக்கான தடுப்புகள் நான்கு வரிசை ஒவ்வொரு வரிசையிலும் ஒருநூற்றுவர்க்குக் குறையாமல்! ஏறத்தாழ இரண்டு மணி நேரம் நின்றோம், சரோசினியார் விருப்பம் கருதி எந்நேரமானாலும் பார்த்துச் செல்வது எனநின்றோம் 'சிவலிங்கம்'! முன் 'ஏறு'

ஊர்தி! உள்ளே தனித்தனிச் சடங்கு நடத்துவோர்! பழனிவரிசை, திருப்பதி வரிசை! நிற்க விடாமல் விரைந்தோட்டும வீரத் தொண்டர்! வெளியேயோ சுடு நெருப்பாக வெயில்! வெளிவாயில் பக்கம் ஒரு கடை! இயற்கையைப் பேணிக்காக்கும்நோக்கில் அமைந்த பொருள் விற்பனைக்கூடம்! கலைப்பொருள்! அமைந்து கண்டு வேண்டுவ கொண்டார் வேலாயுதர்! சரோசினியாரும் பங்கு கொண்டார்! பொழுது இரண்டைத் தொட்டது! வழியில் தேடிப்பிடித்து ஒருமரத் தடியில் வண்டியை நிறுத்தி உணவு கொண்டோம்!

வண்டி ஓட்டுநர் ஓர் அம்மையார் நிற்பதைச் சுட்டிக் காட்டினார்! தோட்ட வேலை செய்பவர் என எண்ணினோம். ஆனால் அசைவு இல்லை! நகர்வு இல்லை! காற்றிலும் ஆடை அலையவில்லை! ஓட்டுநர் கூறினார்! அத்தோட்டக்காரர் செய்தமைத்துள்ள சிலை என்று! அவர் சொல்லாமல் இயல்பாகப் பார்த்துச் சென்றால் தோட்டத் தொழிலரோ, உரிமையரோ ஆகிய அம்மையார் எனவே முடிவு செய்ய நேரிடும்! அத்தகைய இயற்கை!

கங்கை கோதாவரி தோன்று நிலையைக் கண்டு திரும்பிய போது, பழையநினைவு ஒன்று ததும்பியது!

முன்னை வடநாட்டுச் செலவின் போது கோதாவரி இருகரை தொட்டு வெள்ளமாய்ப் பெருகிச் செல்லும் தோற்றம் கண்டு கம்பர் பாடல் மலைமேல் விளக்காய் ஒளி செய்தது. சங்கச் சான்றோர் பாடல்களைக் கம்பர் எத்தகைய தோய்வில் பயின் றுள்ளார்; எத்தகைய அரிய மதிப்பீடு செய்துள்ளார் என்பது புலப்பட்டது. "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" என்பது அது. சான்றோர் எனின் அந்நாளில் சங்கச் சான்றோரேயாவர்.

"புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் பொருந்திச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

என்பது அப்பாடல் (ஆரணிய சூர்ப்ப.1).

இராம இலக்குவ சீதையர் கோதாவரியைக் காணவிட்டு விட்டுக் கம்பர் சங்கச் சான்றோர் தமிழ்க்கொடை வெள்ளப் பெருக்கில் உள்ளம் செலுத்திய பெருமையது இது.

*இவ்வளக் கோதாவரி தோன்றுமிடம் இது என்னும் போது நம்பத்தான் வேண்டும்! ஆனால், கால - பருவ - மக்கள் - அரசு - இயற்கையழிப்பு என்பவற்றை எண்ணுதற்கு ஏவாமல் இல்லை!*

*எங்கே போகிறார் ஓட்டுநர்!*

*பொழுதோ போகி விட்டது!*

*அருளார் காத்துக் கொண்டிருப்பார்!*

*வினாக்களின் மேல், வினா!*

*வண்டியை ஓர் எழில் வளாகத்தின் முன்னர் நிறுத்துகிறார் ஓட்டுநர்! அமைதி என்றால் அமைதி! ஆளே இல்லையா? தேடி வருவார் இல்லையா! கோயிலில் வட்டம் - இடிபாடு - காத்துக் கிடக்கை! திகைப்போடு நோக்கினால் கனிமவள அறிவியல் காட்சியகம் அது! ஐம்பது உருபா நுழைவுச் சீட்டு! நுழைந்த அளவில் முகப்பு வளாகத்தில் கண்ட காட்சிப் பொருள்கள், இதனைக் காண நுழையாதிருந்திருந்தால் ஒரு பெரிய காட்சிவள இழப்பை அடைந்ததாக ஆகியிருக்கும் என்னும் எண்ணத்தை எழுப்பியது. ஏறத்தாழ ஒன்றரை மணிப் பொழுது சுற்றி வெளியேறும் வரை ஒவ்வோரிடத்தும் அவ்வெண்ணமே முல்லை முகிழ்ப்பாக முறுவலித்து நின்றது.*

*அப்படி என்ன அரிய காட்சி!*

*மண்ணின் கொடைவளம் எந்தக் கணக்காளியினாலும்*

*மதிப்பிட்டுக் கூற முடியாது என்பதே!*

*ஒருவிரல் - இருவிரல (அங்குல) நீள அகலப்பளிங்குக் கற்கள் பத்தாயிரம் பதினைந்தாயிரம் விலை! விற்பனைப் பிரிவில் கண்டது இது காட்சிப் பகுதியில் பன்னூறு பேழைகளில் அதனைப் போலப் பன்னூறு பல்லாயிர மடங்குப் பெரிய பளிங்குப் படிவங்கள்!*

*நிலவின் திரட்டுருண்டையா?*

*வெண்ணெய்ப் படிவமா, பாறையா?*

*கதிரவனைப் பிட்டுப்பிட்டு வைத்த கவினா?*

*எல்லாம் மண்ணுள் தோண்டி எடுத்த மாண்விலைக் கற்கள்!*

*ஓரிடத்துக் கல்லா?*

*உலகத்தின் பரப்பில் கிடைத்த கற்களையெல்லாம்*

*ஒருங்கு திரட்டி உரிய இயற்கை மாறாச் செயற்கைச்*

*செழுமையில் வைக்கப்பட்டுள்ள வையக வளங்கள்!*
*வை - வையம் - வைப்பு - வைப்பகம் - வைப்புழி என்று*
*மண்ணுக்குப் பெயர் சூட்டிய தமிழ்த் தொல்லோர் அறிவும்*
*திறமும் அப்பளிங்கு உருவாகவே தோன்றுவனவாம்!*
*அங்குள்ள மண் கனிமங்கள் விலையே மதிப்பிடற்*
*இயலாதவை என்னின் உலகத்துள்ளவை யெல்லாம்*
*எவ்வாறு அளவில் அடங்கும்?*
*மண்ணின் கல் மட்டுமன்று விண்ணின் கல்லும் (திங்களில்*
*இருந்து கொண்டு வந்தது: சிறியதே எனினும்: எத்தகைய*
*அரிய முயற்சியில் கொணர்ந்தது அது) காட்சியில் உண்டு.*

*பலப்பல சிற்றறைகள் - அரங்குகள் - மாடிப்பகுதி எல்லாம் கனிம வளம்! ஊடுவெளியரங்கிலும் கண் கொள்ளாக்காட்சி!*

*விற்பனைப் பகுதியும் உள்ளது! வேலாயுதனாரும் சரோசினி யாரும் விரும்புவ வாங்கினர். நாசிக்கின் ஒருபகுதியில் ஞாலவளம் குவிந்து கிடக்கும் பகுதியொன்றும் உண்டு என்பதை அறிய வாய்த்தது.*

*இவ்வரிய கனிமங்களைத் தொகுத்து வைத்த தோன்றல்கள் எவர் என்றறியும் அவா உண்டாதல் இயற்கை! போற்றத் தக்க அப்புகழாளர்கள் இருவர். ஒருவர் எசு. பி. பாண்டே! மற்றொருவர் ஆர். சி. பாட்டாக்கு!*

*இருவரும் கனிமவளப் பொறிஞர்!*

*“தோன்றிற் புகழொடு தோன்றுக’ என்பதைத் தாம் தோன்றிய துறை வகையால்மெய்ப்பித்த அவர்கள் அக் காட்சியைக் கண்டு மகிழ்வார் உள்ளங்களில் புகுந்து கொள்கிறார்கள். கலைகளில் ஓர் அரிய கலை தொகுப்புக் கலை! பணம் தொகுத்தல் தான் மக்கள் பார்வையில் பெருவரவாகவும் புகழுக்கு உரியதாகவும் தோன்றுகின்றது. தொகுப்புகளில் எளிதாக எவரும் செய்யக் கூடியது பணத்தொகுப்பு. தேவையானது கட்டாயமானது என்றாலும் அத்தொகுப்பு பெரிதும் அறத்தின் வழியோ அருளின் வழியோ முழுதுறு உழைப்பின் வழியோ ஈட்டப்படுவதன்று. கரவு வழி - கலப்பட வழி - பிறரை வாட்டி வதைத்தல் வழி எனப் பரியாம் வழிகளால் பொருள் தொகுப்பு நிகழ்வது தெளிவு! ஆனால் பாடாக்கு, பாண்டே போலக் கலை நல, உலகநல, அறிவு நலத் தொகுப்புகளின் சிறப்பு, மாணச் சிறப்பினதாம்.*

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு'

என்னும் அரசுக் குரிய நால்வகைக் கடமைகளையும் தம் தலைமேல்அள்ளிப் போட்டுக கொண்டு உலகநலம் என்னும் ஒன்றே கருதி நாளெல்லாம் தொய்வு இடையீடு என்பவை இன்றிக் கடமை புரிந்த பெருமக்களாலேயே காலமெல்லாம் உலகம் கண்டுகளிக்கும் காட்சிச் சாலைகள் உருவாக்கப் பட்டுள்ளன!

வீட்டு நலம் கருதிய பொருள் தொகுப்பினும் நாட்டு நலம் உலகநலம் கருதிய கனிம வளத்தொகுப்பு அன்ன தொகுப்புச் செய்து, அதனை முறைப்படுத்திக் காத்துவரும்சீர்மை இல்லாக் கால் உலகம் எத்தனை எத்தனையோ தனக்குரிய வளங்களை அறியக் கூடாமல் மறந்தும் துறந்தும் போயிருக்கும்! இத்தகைய தொகுப்புகள், தொகுப்பு உணர்வாளர்களை மேலும் தூண்டித் துலக்க வல்லன.

தொகுப்புணர்வு என்னும் ஒன்று மாந்தனுக்கு இல்லையேல் சங்கத் தொகை நூல் என ஒரு பொற்பேழை நாம் காணக் கூடியதாக இன்றும் இருக்கின்ற தென்றால் அன்று தொகுத்து வைத்த தொகையாளன் கொடை எனப் போற்றி மேலும் பாதுகாத்துப் பொலிவூட்ட வேண்டும்!

ஓலைச் சுவடி, நூற்சுவடி, ஓவியம், நாணயம், கவின்கலைப் பொருள்கள், மண்வளப் பொருள், பெருமக்கள் பயன்படுத்திய வரலாற்றுச் சிறப்புடைய பொருள்கள், அரும் பொருள்கள், இயற்கைக் கொடைகள் எனத் தொகுத்துக் காட்சிக்கு வைத்தோர் உலகுக்காக வாழ்ந்தோர் என்னும் பேற்றுக்கு உரியர் என நாடு அறியும் போது தான் நம் பழஞ்செல்வங்கள் பாதுகாக்கப்படும்.

பழஞ்செல்வங்களை எவர் மதிப்பார்? அதன் அருமையும் பயனும் உணர்ந்தவர் மதிப்பார்! மற்றையாரும் அழிவினை யாளரும் பதினெட்டாம் பெருக்கிலும் அவியிலும் போட்டு அழிப்பர்; குப்பை கூளம் எனப் 'போகி' நாள் என்னும் போலி நாளில் கழிப்பர்! கனிமவளக் காட்சியகம் கண்டாரைக் கட்டாயம் சிந்திக்க வைக்கும். தொகுத்துக் காக்கும் ஆர்வத்தைத் தூண்டும்! அடுத்த நாள் மறந்து போகும் தேரோட்டத் தெருக்காட்சி அமைப்பன்று அஃதாம்! மேலே காணும் காட்சியகங்களுக்கும் இச்சிந்தனை பொருந்தும்!

அருள்மொழியாரை அவர் அலுவலகம் சென்று அழைத்துக் கொண்டு இல்லம் சேர்ந்தோம்! இன்றை இரவு 11 மணிக்கு மகிழ்வுந்தில் ஆமதாபாத்து செல்ல வேண்டும்! பகல் நல்ல சுற்று! இரவும் உறங்காச் செலவு உண்டு!

ஓட்டுநர் (பெரியவரின்) மகனார் எய்தினார்! மொழியறி யார்க்கு மொழியறியார் பேசும் பேச்சு முகப் பேச்சு! முறுவல் பேச்சு! அப்பேச்சு எங்கெங்கெனினும் எவ்வெம் மொழியர் எனினும் இனிதேற்கும் பேச்சு!

பேச்சை - கருத்தை - அறிந்து கொள்ள வேலாயுதர் உள்ளார். கலைநிதியார் வந்திருப்பின் இந்தி, உருது, ஆங்கிலம் என எப்பேச்சையும் ஏற்று ஏற்ற மறுமொழி தருவார்! வேலாயுதர் ஆங்கிலம் வல்லார்! இந்தியும் சற்றே புரிவார் என்பதை வழிச் செலவில் யான் புரிந்து கொண்டேன்! ஆனால் ‘சாரல்’ எங்களோடு வரும் திட்டம் வாய்த்தது! ஓட்டுநர்க்கு நல்ல பேச்சுத்துணை! பயிலும் மொழி, பழகும் மொழி சாரலுக்கு இந்தியாக இருந்ததால், அவரே எங்கள் வழிகாட்டியானார்! ஓட்டுநர்க்கு மிக ஓட்டுநரும் ஆனார்!

அருளாரும் சரவணரும் மிக எண்ணித் தயக்கத் தோடே தான் மகிழ்வுந்து ஏற்பாடு செய்தனர். ஏனெனில் போக வர 4000 அயிரம் (கி.மீ.) ஆகுமே! அவ்வளவு சுற்றை என் உடல் நிலை தாங்குமா என்பது? தொடர்வண்டிப் பதிவும் இருந்தது. ஆனால், சாலை வழியே செல்லுதல் அன்றி இறங்கிக்காண வாயாதே! ஆதலால் அதனை மாற்றி மகிழ்வுந்து ஏற்பாடு செய்ய எல்லாரும் முடிவெடுத்தோம்!

இச்சுற்றில் வேலாயுதர் சாரல் யான் மூவரே! எண்மர் மிக இயல்பாக இருந்து செல்லும் மூடுந்து அது. அதனால் பின்னிருக்கைப் பகுதியை ஊடு அடைப்பாக்கிப்படுக்கையும் ஆக்கிவிட்டனர். மாறிமாறிப் படுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் திட்டம் செய்து வண்டி எய்தியது!

புறப்பட்டது முதலே படைத்துறை ஊர்தி எனப் பளிச்சிட அச்சிட்ட முகப்புடன் வண்டி காட்சி அளித்தது! அவ்வச்சிட்ட அட்டையின் பயனை எத்தனை எத்தனை இடங்களில் போற்றி மதிக்க வாய்க்கும் என்பதைப் புறப்படும் போது உணரக்கூட வில்லை. ஆனால் அது உணர்த்திய அளவுக்கு எல்லையே இல்லை!

செல்லும் சாலையெல்லாம்'சுங்கம்'! தணிக்கை! நுழைவுக் கட்டணம்! படைத்துறைத் தங்கல் வளாகக் கண்காணிப்பு! அந்த முகப்பைக் கண்டு தாமே வழிவிட, காண இடத்துக் காட்டிமேலே செல்ல ஒரு நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் உதவிய பேறு சரவணரும் அருள் மொழியரும் எங்கள் உடன்வரும் உணர்வையே உண்டாக்கிக் கொண்டிருந்தது! படைத்துறை விருந்தில்லங்களில் தானே தங்கவும் உணவு கொள்ளவும் ஏற்பாடு முந்துறச் செய்திருந்தனர்.

புறப்பட்டது இரவு 11 மணி: யான் ஒட்டுநருடன் முழு விழிப்பன்! தாத்தாவும் பேரரும் அவ்வப்போது படுக்க - விழிக்க - ஆயினர். விடிகாலை 5 மணி அளவில் ஓரிடத்தில் நிறுத்தி ஓட்டுநர் தேநீர் பருகினார்! ஆமதா பாத்துக்குப் பகல் 1 மணி ஆயிற்று! தூய மரக்கறி யுணவுக்கடை எனச்சாலை வழிக் கடைகள் பலப்பல உள. அவற்றுள் ஒன்றில் பகல் 10 மணியளவில்சிற்றுண்டி கொண்டோம்! சாலைக் கடைகள் 10 மணிக்கு மேல் தான் விழிக்கும் போலும்! பத்துக்குத்தான் வயிறு இருப்பது நினைவுக்கு வரவேண்டும் போலும்!

புறப்பட்டு ஒருமணிநேரம் வண்டி யோடியபின் வந்தது ஏற்றம் இறக்கம் மேடு மலைச் சரிவு ஆறு ஓடை முதலாயின! நருமதை ஆறும் தாண்டி அகமதாபாத்தை அடைந்தோம்.

குசராத்து மாநிலத்தின் தலைநகர் அகமதாபாத்து. சபர்மதி ஆற்றின் மேல்கரையில் அமைந்துள்ளது. மும்பைநகருக்கு வடக்கே 451 கி.மீ. தொலைவு. இதன் பழம்பெயர் கருணாவதி.

குசராத்தை ஆட்சி புரிந்த சுல்தான் முதலாம் அகமதுசா (கி.பி.1411) என்பவரால் அமைக்கப்பட்டதால் அகமது நகர் ஆயது.

பஞ்சாலையால் பெருமையுற்ற அகமதாபாத்து மசூதி களாலும் பெயர் பெற்றது. இங்கே உள்ள சும்மா மசூதி பெரிய மசூதியாம். அகமது நகருக்கும் இந்திய விடுதலைக்கும் உள்ள தொடர்பு சபர்மதி என்னும் காந்திய நிறுவனத்தால் விளங்கும். ஆற்றங்கரையில்அந்நிறுவனம் அமைந்ததால் ஆற்றின் பெயரையே கொண்டது. சபர்மதி நிலையம், 25.05.1915 இல் தொடங்கி 17.06.1917 இல் கட்டடப்பணி நிறைவாகியுள்ளது.

காந்தியடிகள் கத்தூரிபாவுடன் 25.05.1915 முதல் 12.03.1930 வரை இங்கே தங்கியுள்ளார்.

*கத்தூரிபா தங்கிய இடம் சமையல் கூடம் பொருள் வைப்பறை என மிக எளிய அமைவான இடங்கள்*

*ஐன்சுதீன், "இப்படி ஒருவர் வாழ்ந்தார் எனின் உலகம் நம்பாது" என்று காந்தியடிகளைப் பற்றிக் கூறிய உயர்வு மூலம் இவ்வெளிமை என்பது புலப்படச் செய்வது. உடைமாற்றத்தின் முன்பும் பின்புமான தோற்றம் மணிவாசகர் அமைச்சுக் கோலமும் துறவுக்கோலமும் ஆவுடையார் கோயில் சிற்பமாகக் காட்சி வழங்குவது போல் வழங்குகின்றது.*

*மதன் நிவாசு என்பது மதன்லால் என்பார் வாழ்ந்த இடம். அவர் தென்னாப்பிரிக்கத் தொண்டராக இருந்தவர். சபர்மதி நிலையப் பொறுப்பாளராக இருந்தவர். அவர் மறைவு காந்தியடி களை அசைத்தது உருக்கியது (1928) ஆதலால் தம் தனிமை இரங்கலைப் புலப்படுத்தும் நிலை நம்மை நம் தொல்காப்பியத்திற்கு இழுத்துச் செல்கின்றது.*

*மனைவியை இழந்தார் நோன்பு வாழ்வு 'தபுதாரம்'*

*கணவனை இழந்தார் நோன்பு வாழ்வு 'தாபதம்'*

*காந்தி, மதன்லால் இழப்பை,*

"His death has widowed Me"

*என்கிறார். விநோபா பாவேயும் இங்கே தங்கியுள்ளார். தண்டிச் செலவு (12.03.1930) இங்கிருந்து தொடங்கப்பட்டுள்ளது. காந்தியடிகள் 1918 முதல் 1930 வரை "இருதய கஞ்ச்' என்னும் பெயரிய மனையில் வாழ்ந்துளார்.*

*"என் வாழ்வே உலகுக்குச் செய்தி"*

(My life is my message)

*என்று எழுதிய காந்தியடிகள் குசராத்தி, ஆங்கிலம், இந்தி, உருது, தமிழ் எனத்தம் கையெழுத்தை இட்டுள்ளார். 11 மொழிகளில் கையொப்பம் இட்ட இடிகள் ஐந்தாம் இடத்தில் மோ.க.காந்தி என்று பொறித்துள்ளார்.*

*விநோபா தம் செய்தியாக,*

"Throghout my life all my Activities have been motivated by the single Glycetive of uniting hearts"

என்று கூறியதை, "எனது வாழ்வின் எல்லாக் கார்யமும் இதயத்தை இணைக்கும் என்று ஒரே உத்தேசத்தினால் பிரேரணை ஆனது"

என்று தமிழில் பெயர்த்துள்ளனர்.

முழுவதும் சீராகப் பேணப்படுதல் இல்லையெனினும் ஓரளவு கேடின்றிப் பாதுகாக்கப்படுகிறது. அடிகள் பயன்படுத்திய பொருள்கள் காட்சியில் உள்ளன. அவர் வரலாற்று விளக்கப் படங்கள் வழக்கம் போல் இடம் பெற்றுள!

உள்ளே ஊண் கொள்ள ஏந்துகள் இல்லை எனினும் நிலையத்தின் முன்புறம் சற்றுலாத் துறை விடுதி ஒன்று நன்முறையில் உணவு வழங்குகிறது.

பெட்டி இராட்டை ஒன்றனை அதன் உருவாக்க இடத்திலேயே வேலாயுதர் வாங்கினார். பேரர்கள் சாரல், அருவியர்க்காக! பயின்று நூற்க வேண்டும் எனக் காத்திருக்க முடியா இளமை! ஓடும் வண்டியிலேயே உருட்ட விரும்புகிறது! உறைவிடத்தில் கேட்க வேண்டுமா?

அகமதாபாத்தில் இருந்து உதயபூர் சென்று தங்குவதாக எங்கள் ஏற்பாடு! போகிறது, போகிறது, சாலை போகாமல்என்ன செய்யும்! உந்தும்போகிறது 250 கி.மீ! இரவு 10.30 க்கு உரிய இடம் சேர்தல்!

படைத்துறை வளாக விருந்தினர்விடுதிதான்! இரவுப்பொழுது ஆனாலும் தட்டாமல் உணவு கிடைத்தது! காலைச் சிற்றுண்டியும் அங்கே முடித்துக் கொண்டு நகரைச் சுற்றத் தொடங்கினோம்.

**28.02.2009**

வரலாற்றுச் சிறப்புமிக்க உதயபூர், இராசத்தானத்துப் பெருநகர்களுள் ஒன்று. மேவார் அரசின் தலைநகராக இருந்தது.

சபர்மதிக் கரையில் அகமதாபாத்து அமைந்தது போல இல்லை எனினும் கடலென்ன விரிந்த பிச்சோலா ஏரிக்கரை யில்அமைந்துள்ளது.

இங்குள்ள இராணாவின் அரண்மனை விரிவுமிக்கது; அழகியது; பலப்பல பகுதிகளையுடையது.

கடலின் இடையே நிற்கும் பாரிய கலங்களைப் போல சகமந்திரத்தீவில் குல்மகால் கட்டடமும். பேரேரியில் சகநிவாசம்

என்னும் கட்டடமும் உள்ளன. இராசபுத்திர மன்னர்களின் கட்டக்கலை வண்ண ஓவியக் கலை ஆயவற்றுக்கு எடுத்துக் காட்டாக அமைந்தவை இவை.

மணிக்கலா என்பதொரு பூங்கா! மலையடிவாரம் - ஏரிநீர்ப் பரப்பு - இடையே திட்டையில் அமைந்த பூங்கா! விரிவுடையது; ஏற்றம் இறக்கம் உடையது.

மலை மேல் மாளிகைகள் உள்ளன. இயற்கை அரணங் களைக் கொண்டவை. சச்சன் மாளிகை என்பது ஒன்று.

பட்டுப்போன ஒரு மரம்! அதன் இயற்கையோடு இயைந்த செயற்கை பூங்காவுக்கு வருவாரை வரவேற்கும் வரவேற்பாளிப் பெருமையை அடைகின்றது!

பறவைகள் தங்குவதற்குத் தக்க தாங்கிகள் தீனிவைக்கும் தட்டங்கள் நீர்த் தொட்டிகள் உள்ளமை ஓர் ஆன்ம நேயன் செயற்பாட்டை உலகுக்கு அறிவிப்பவையாக உள்ளன.

“ஒயிட் சிற்றி”

“சின் சிற்றி”

சண்டர் சிற்றி

லேக் சிற்றி

முதலியனவும் உதயபூர்க்குரிய பெயர்களாம்!

கலைவளம்கொழிக்கும் ஊரில் கலைத் தொழிற் கூடங்களும், கலைப்பொருள் விற்பனைக் கூடங்களும் மல்கிக் கிடக்கும் அல்லவோ! எங்கு நோக்கினும் கலைத் தொழிலகங் களும், கலைக் கூடங்களுமே தோன்றுகின்றன. வழிக்கடைகள், வாயிற்கடைகள் என்பவை மிகப்பல.

வழிகாட்டுகிறேன் என வந்து மறிப்பார், தடுப்பார், முன்னிழுப்பார் இத்தொழில் கலை வளத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

பொருட்காட்சி; சிற்பக் காட்சி; காட்சிச்சாலை எனப் பெயர்கள் இருக்கும், மற்றை இடங்களைப் போல அரசு அமைத்த காட்சியகங்களை இவை என எண்ணிப் புகுந்தால் அவையெல்லாம் வணிக நிலையங்கள்! வழிகாட்டிகளுக்கு விற்பனைப் பங்களிப்புடைய நிலையங்கள்!

கண்ட பின்னர்த்தானே வணிக உத்தியும் நமக்குப் புலப்படு கின்றன.

மெய்யாகவே அரசின் காட்சிக் கூடம் சிற்பக் கூடம் கோட்டைக்குள் விரிவு விரிவுப் பகுதிகளோடு உள்ளன. ஆனால் அவற்றின் முகப்பின் வாயிலாகத் தோன்றுமாறு அமைத்த தனியார் வணிகக் காட்சிக் கலைக்கூடங்கள் உண்டு! அங்கே உள்ள கூட்டம், அரசுக் கலைக் கூடப்பகுதியில் இல்லை! ஏன் வழிமறிக்கும் வழிகாட்டி வலையில் தப்பினால்தானே!

அரசின் அரிய கூடத்தில் ஆளரவம் இல்லாமல் அமைவாகப் பார்க்க முடிந்தது. வழக்கம் போல் ஆட்சிபுரிந்தவர், புத்தர் அருகர் சிலைகள், அரியபொருள்கள்! அங்கிருந்து ஏரிக்குள் அமைந்த மாளிகைகளைக் காண அவ்வளவு எழிலாகின்றது. இராணா சச்சன் ஆட்சிக் காலத்தில் போர்மூட்டம் கப்பிக் கொண்ட சூழலில் ஆயா பன்னா என்பாளிடம் தன்மகன் உதயசிங்கை ஒப்படைக்க அவள் வளர்ந்துவந்தாள். ஆனால் அரசகுமரன் அவள் வளர்ப்பில் இருப்பதாக அறிந்து பகைவர்கள் அவளைச் சூழ அவள் தன்குமரனையே அரச குமரன் எனக் கூறித் தப்புவித்தான் என்னும் வரலாறு காணப்படுகின்றது.

மற்றவர் பிள்ளையைக் காக்கத் தான் பெற்ற பிள்ளையைப் பலியாக்கும் தாய்மை அரிதில் அரிதாம்! அவ்வருமை, நாடு காத்தல் என்னும் நல்லெண்ணத்தில் முகிழ்க்கும் வீறுமிக்கதாம்! களமனுப்பிய மூதில்மகளிர் காட்சி என்ன, இந்நாள் ஈழத்தாய்மார் தம் இறையாண்மைகாக்கக் களமேக ஏவும் விடுதலை வீறு என்ன குறைவுடையதா! ஒருபன்னாவைப் போல் பல்லாயிரம் தாய்மார் அல்லவோ ஈழமண்ணுக்காக இன்னுயிர் மக்களை ஈகம் புரிகின்றனர்.

காட்சியகத்தே ஒருபடம்! குதிரை பன்றி யானை புலி என இடமாறி நின்று பார்க்கப் பார்க்கத் தோன்றும் தோற்றம்!

பொருட்காட்சியைக் கண்டு வெளியே வரும் போது குதிரை கட்டு மிடம் இருந்தது. அங்கே எடுப்பு மிக்க குதிரைகள் ஐந்தாறு கட்டப்பட்டிருந்தன. அவை காலைத் தட்டித் தாளம் போட்டன. ஏன் என நோக்கினோம்!

அவற்றின் தட்டு முடிந்ததும் உணவு தரப்படுகின்றது; ஒரு மொத்தமாக இல்லை! சிறிது சிறிதாக!

காலைத் தட்டித் தட்டிக் கேட்டால் தான் உணவு கிடைக்கும் என்னும் வழக்கத்தில் அவை உள்ளமை புலப்பட்டது.

அமெரிக்காவில் சுறா மீன் நீர்வளாகத்தில் பயிற்சியாளர் கையசைவு உடலசைவுக்குத்தக அவை நீருள்ளும் நீர்மேலேயும் நீர்க்கரையிலும் ஆடி ஓடிப் புரண்டு துள்ளி எழுந்த நிலையும் உணவு வழங்கிய நிலையும் போல் இருந்தது.

உணவின் தேட்டமும் சுவையும் அடிமைப்படுத்தி வைக்கும் இயற்கையை எண்ண வைத்தது. மக்கள் நிலையரிலும் அத்தகையர் இல்லாமல் இல்லையே!

உதயபூரில் இருந்து நாங்கள் சோத்பூர் சென்று தங்குதல் வேண்டும். பக்கம் பக்கமா உதயபூரும் சோத்பூரும்? குறைந்தது ஆறு மணிப் பொழுது வேண்டும்!

செல்லும் போது சாலை சார் விடுதி ஒன்றில் 2 மணியளவில் புகுந்தோம். எல்லாம் தேநீர் - மாச்சில் தீனர்கள் - இளைஞர்கள்! பொழுதும் கடக்கிறது, ஏதாவது உண்டாக வேண்டும்! உணவு கேட்டோம் சரி என்றவர் இலையோ தட்டோ வைத்திலர். அரிசியை ஒருவர் எடுத்தது கண்டேன்! ஆ! ஆ! ஆக்கி வடிக்கும் வரை காத்துக் கிடக்க வேண்டியது தான் என எண்ணினேன்.

ஆக்கித்தான் உணவு வரும் என்றேன்! இல்லை! உணவில்லாமல் இராது என்றார் வேலாயுதர்! எண்ணியபடியே வெந்தும் வேகாத நிலையில் அரைமணிப்பொழுதின் பின் உணவு வந்தது! காத்திருத்தல் தோன்றாதிருக்கத்துணைப் பொருள்கள் ஊடே வந்து தலை காட்டின!

எனக்கு உணவைப் பார்க்கிலும் தனிப்பாடல் ஒன்றன் சுவை ஏறி நின்றது.

நாகப்பட்டினத்தில் ஒருசத்திரம்; அதற்குரியவன் பெயர் காத்தான்! வருபவர்காக்காமல் உண்ண முடியுமா?

பெருங்குடல் சிறுகுடலைத் தின்ன ஒருபுலவன் காத்தான் சத்திரத்திற்கு வந்தான்! பாவாணர் சொல்வது போல் ஈரத்துணியை இடுப்பில் சுற்றிக் கொள்ளப் பழகாதவன் போலுள்ளான் பாவலன்! அவன் பசியை மீறி அவனுக்கு ஒரு பாட்டுக் கிளம்பியது!

‘கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்’’

என்பது அப்பாட்டு!

பாடியவனோ வசைபாடக் காளமேகம் என இசைபெற வாழ்ந்தவன்! அவன் பாட்டைக் கேட்ட காத்தான் என்ன நேருமோ அறம் பாடிவிட்டானே என நொந்தான்! அவனை மகிழச் செய்யும் வகையில் பொருள் கூறினானாம் காளமேகம்! பொழுது மறைய அரிசிவரும்; குத்தி உலையில் அரிசியைப் போட ஊரடங்கு பொழுதாகி விடும்! ஓரகப்பை சோறு இலையில் போட விடிவெள்ளி தோன்றும் என்று கூறிய பாடலை; உலை ஏற்றினால் ஊர் முழுமைக்கும் நிறைவாக இருக்கும்! இலையில் இட்ட சோறோ விடிவெள்ளி நிறம் போலப் பளிச்சிட்டுத்தோன்றும் என்று பொருள் கூறினானாம்; புலமையாளிக்கு இத்தகைய மினுக்கு வேலை செய்தல் எளிது என்பதைக் காட்டும் நிகழ்வுகள் வேறு சிலவும் உள.

வேகாத அரிசிச் சோற்றை விலக்கி விட்டு ஏதோ உண்டு புறப்பட்டோம்! வேலாயுதர்க்கும் சாரலுக்கும் தயிரும் இனிப்பும் இருந்தால் போதும்! இருக்கவே இருக்கிறது நொறுக்குத் தீன்க் பழவகைகள்! ஒருகையும் வாயும் பார்த்துக் கொள்ளலாம்!

கொண்டைக் கடலைச் செடியைக் கண்ட வேலாயுதர் ஓட்டுநரிடம் பத்து உருபா கொடுத்து வாங்கிவரச் சொன்னார்! என்ன இப்படியொரு குழைக்கட்டு - ஆட்டுக்கா - மாட்டுக்கா என்று நோக்கும் அளவில் ஓட்டுநர் கட்டாக வேலாயுதரிடம் வழங்கினார்.

கொண்டைக் கடலைக்காய் செடியோடு பச்சையாய்ப் பறிக்கப்பட்டு விற்பனைக்கு வந்தது! இயற்கைக் காதலர் விட்டு வைப்பாரா? இது கிடைக்குமா? என்றார் நாங்கள் இருவரும் மேய்ந்தோம்! எனக்கும் அவர் காதலில் ஓரளவு காதல் உண்டு!

சாரலுக்குச் சுவைநீர்ப்புட்டி, இன்தயிர்! ஓட்டுநர்க்குக் காயைப்பறித்து உரிக்கவும் தின்னவும் இயலுவதில்லையே!

சோத்பூருக்குச் சுற்றில்லா ஒரு வழி இருப்பதை நாங்கள் இரவு தங்குதற்கு ஏற்பாடு செய்த தமிழன்பர் தாமாதரனார்

கூறினார். அவ்வழி தலைமைச் சாலையை விடுத்து ஒரு குறுக்குச் சாலை வழியே வந்து மீண்டொரு சாலையை விடுத்து ஒரு குறுக்குச் சாலை வழியே வந்து மீண்டொரு தலைமைச் சாலையில் சேரும் வழி காடு செடி எனப் பரந்து விரிந்த பகுதி. அங்கே வரும் போது வேலாயுதர் இறங்கினார். ஓட்டுநரும் உடன் இறங்கினார்.

"நம் ஊரில் காணமுடியாத கள்ளிவகை இது" என்று கொடிக்கள்ளி ஒன்றன் கிளைகளைப் பறித்துக் கொண்டுவந்தார் வேலாயுதர். அரிய செடி கொடி மரவகை கிடைத்தாலும் அவற்றைத் தெரிந்து தம் தமிழ் நெறிப் பண்ணையில் உருவாக்க விரும்புபவர். அவ்விருப்புத் தலைதூக்க அடுத்தடுத்த ஊர்களில் கிடைப்பது போல எடுத்துக் கொண்டார்! முன்னரே எடுக்க நினைத்தாராம்! அவ்வாறு அரிய வித்துவகை சில எடுத்தும் வளர்க்கிறார். நம்மவர் பெரிதும் அழிய விட்டுள்ள தினை, வரகு, சாமை குதிரைவாலி, காடைக் கண்ணி, கல்லுப் பயறு, மின்னிப்பயறு முதலியவற்றை மீட்டெடுக்கும் முயற்சியில் ஊன்றியவர் அவர்.

அவர் கள்ளிக் கொத்து பறித்து ஆங்கிருந்த ஒருவரிடம் உரையாடி வரும் வரை யான் கொண்டைக் கடலையை உரித்துப் பயறாக்கிச் சாரலுக்கு வழங்கினேன். மறுக்காமல் வாங்கி உண்டான்! ஒன்று புரிந்தது காய் பிரிக்க, தோல் உரிக்க மனம் இல்லை என்பது புலப்பட்டது. இருவரும் பேசத் தொடங்கினோம்.

இந்த மரம் செடி கொடிகளுக்கு உயிருண்டா என்றேன். உயிர் இருக்கிறது என எண்ணிப் பார்த்துச் சொன்னான். நமக்கும் உயிர் இருக்கிறது: இதற்கும் உயிர் இருக்கிறது: நம்மைப் போல் பேச வில்லையே ஏன் என்றேன்.

வாயில்லை என்றான். நீரையும் காற்றையும் உறிஞ்ச வாய் இல்லாமல் முடியாது! ஆதலால் வேரிலும் இலையிலும் காற்று வெயில் நீர் உரம் உள்வாங்கும் வாய் உண்டு என்பது புலப்படுகிறது அல்லவா என்றேன். அவற்றுக்கு மொழி இல்லை என்றான்!

ஆம் மொழி இல்லை. அது மெய்யறிவு என்னும் முதலறிவு மட்டுமே உடைய உயிர். நாம் ஆறறிவு உயிர்! மெய்யறிவு வாயறிவு கண்ணறிவு மூக்கறிவு செவியறிவு என்னும் ஐந்தறிவொடு சிந்திக்கும் அறிவாம் மன அறிவும் உடையவர்

நாம் இந்த அறிவுகள் இயற்கையாக ஒன்றில் இருந்து ஒன்றாக விரிந்து வந்தவை. அவற்றின் முதற்படியில் நிற்கும் இவ்வுயிர் நிலைத்திணை வகையின.

இதனை மூவாயிரம் ஆண்டுகளின் முன்வாழ்ந்து இலக்கணம் செய்த தொல்காப்பியர் தெளிவாகக் கூறுகிறார். இப்பொழுது அறிவியல் வல்லார் அவ்வுண்மையைக் கண்டு நிலை நாட்டியிருக் கின்றனர். அத்தகையருள் முதல்வர் சகதீசந்திரபோசு என்பார்.

அவர் உலகப் புகழ் பெற்றது போல், தொல்காப்பியரும் முற்படவே உலகப் புகழ் பெற்றிருக்க வேண்டும். அச்செய்தியை நாம் உலகுக்குத் தரவில்லை: நம்மவர்கள் கண்டு பிடித்த அரிய அறிவியல்களை யெல்லாம் பின்பற்றி ஆய்வு செய்யவும் உலகப் பரப்புதல் செய்யவும் வேண்டியது நம்மவர் கடமை என்றேன்! கூர்ந்து கேட்டான்! நல்ல அறிவாளி! வழிகேட்கவா உணவு விடுதியில்உசாவவா, தங்கல் விடுதியைக் கேட்டு வழிகாட்டவா எல்லாவற்றிலும் முற்பட நின்று உதவுபவன் அவன்! அவனுக்குத் தான் மொழிச் சிக்கல் இல்லையே! பத்துவயது! ஐந்தாம் வகுப்புப் படிப்பவன்!

வேலாயுதரும் ஒட்டுநரும் எய்தினர்! வண்டி ஓடியது! சோத்பூர் 8 மணியளவில் சேரவாய்க்கும் எனச் சென்றால் மணி ஒன்பதையும் தாண்டிவிட்டது. தாமோதரனார் நாங்கள் வருதல் பற்றியும் இடம் புற்றியும் அறிந்து கொண்டு இருத்தலால் அவர் சொல்லிய இடத்தில் வண்டியை நிறுத்தியும் நிறுத்தாமலும் உள்ள போதே அவர்கண்டு கையைக் காட்டி அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். 9.30 -க்கு மேல் ஆயிற்று.

தாமோதரனார் பெயரைக் கேட்ட அளவில் என் அகக் கண்ணில், அரிய பதிப்புகள் செய்த அறங்கூறவைய நடுவர் சி.வை. தாமோதரனார் நின்றார்! அவரைப் பரிதிமால் கலைஞர் பாடிய அரிய பாடல்களும் நினைவில் எழுந்தன. திரு.வி.க. பாராட்டிய பாராட்டும் நிமிர்ந்தது! அவர் துணையைப் பற்றி அருள், ‘அங்கே ஓர் அருள் பேத்தி இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள் அவ்வளவு அன்பினர்; உடன்பிறப்புப் போன்ற பாசத்தர்” என்றார்!

நேரில் அவரைப் கண்டதும் அதனை அப்படியே மெய்ப்பிப்பார் போலச் சாரலைத் தம்மகனைப் போலவே தழுவி அணைத்துக் கொண்டதும், அளவளாவியதும் கண்டு மகிழ்ந்தேன்! அவரைப் போலவே இனியர்! ஓராணும் ஒரு பெண்ணுமென

இரண்டு மக்களையுடையவர். மக்கள் இருவரும் மேனிலைக் கல்வியர்! தமிழகத்து வேலூர்ப்பகுதியர். அருள் சரவணர் சம்முவில் பணிசெய்தபோது ஆங்குப் பணியாற்றியவர்; மேல் பதவியர்: மேம்பட்ட அன்பர்!

இரவு, சிற்றுண்டியை முடித்துக் கொண்டு தங்கள் விடுதியில் சேர்த்தனர். எட்டாத் தொலைவில் ஏற்படும் தமிழ் உறவு எத்தகைய நிறைவாகிறது என்பதை வெளிநாடுகளில் அன்றி, வெளிமாநிலத்தில் வேற்றுமொழியர் சூழலிலும் நன்றாகவே உணரமுடியும்! காலை உணவும் வீட்டிலேயே முடித்துக் கொண்டு அவர்களும் உடனாக ஊர் சுற்றுவதென முடிவுசெய்தோம்.

**1.03.2009**

சோத்பூர் அரண்மனை - கோட்டை - கோயில் என்பவை ஓரிடத்திலமைந்த பெரிய வளாகமாகும். உயரமான பாறையும் மலையும் ஆகிய வளாகம். கீழே எப்பாலும் பள்ளத்தாக்குப் போல் உள்ள பகுதிகள் 'சோக்' அரசர் பெயராகும்.

சிரியா நாத்து என்பார் ஒருவர் முனிவராம் - சோக் அரசர் கட்டடம் கட்டும் போது சுவர் நில்லாமல் விழுந்து விழுந்து போயினதாம்.

முனிவரைப் போய் அரசர் கேட்க ஒரு பூதத்தின் செயலென்றும் மெகர் இனத்து ஆள் ஒருவரைப் பலிதந்தால் இடையூறு இல்லாமல் முடியுமென்றும் முனிவர் கூறினாராம். அரசர் ஒருவரைப் பலிதரல் பற்றித்திகைப்புற மெகர் இனத்து ஒருவர் வந்து தாமே பலியூட்டுக்கு இசைவதாகக் கூறி, இக் கோட்டையின் பெயர் 'மெகரங்கோட்டை' என வழங்கப்பட வேண்டும் என்றாராம். அதனால் இக்கோட்டை மெகரங்கோட்டை எனவழங்கப்படுகிறது என்றார் தாமோதரர். அம்முனிவரே இக்கோட்டை அடுத்துள்ள குடியிருப்புகள் எல்லாமும் நீலவண்ணத்தில் இருக்க வேண்டும் என்றாராம்! ஆம், பார்த்த பக்க மெல்லாம் நீலவண்ணமே தெரிந்தது.

அதனைப் பார்த்த போது 'வெள்ளக்கோயில்' நினைவுக்கு வந்தது. வெள்ளத்திற்கு ஆட்படும் இடத்தில் அமைந்த கோயில் 'வெள்ளைக் கோயிலாய்' வேறு வண்ணம் சாமிக்குப் பிடிக்காது என்று பெரிதும் வெள்ளை வண்ணத்து வீடுகளே உள்ளமை போன்ற நம்பிக்கையது என நினைத்தேன்.

கோட்டை அடிவார வீடுகளுக்கு ஒருதனிச்சிறப்பு: வீட்டு மனை வாங்கலாம்: வீடுகட்டலாம்: குடியிருக்கலாம்: விலைப்பதிவு இல்லை: வீட்டை எவருக்கும் மாற்றி விற்கவும் முடியாது! ஆனாலும் அவ்விடத்தில் கட்டடங்களுக்குக் குறைவு இல்லை: விலைதரு தலிலும் குறைவில்லை! இருபது முப்பது இலக்கங்கள் ஒவ்வொரு வீடும்!

கோட்டை அரண்மனை அரசு என்று இருந்ததால் அவ்வளவு விரிவு உயரம் உடையதாக உள்ளது. உச்சிவரை இராசபுத்தானத்துக் கென்ற சிறப்புடைய சிவப்புக்கல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. இயல்பான எளிய வீடுகளும் சுற்றுச் சுவரும் கூட அக்கற்களால் கட்டப்பட்டவையே! அக்கல் இங்கே வந்து விட்டால் யானை விலை! குதிரை விலை!

நடைபாதை, படிக்கட்டு - பெரிய ஏற்றம் இறக்கம் இல்லாமல் உயர் தளமாகிச் செல்கிறது! அரண்மனை அலுவலகங்கள் காவலர் குடியிருப்புகள் அங்காடிகள் கோயில்கள் என்பன நிரம்ப உள்ளன. தொல்காப்பியம் கூறும் ஏவரணம் ஏறுதளங்களில் உள்ளன. கீழே வருவாரை அம்பேவித்தாக்கலாம். அவர்க்கோ எதிர்த்தாக்குதல் தாக்க இயலாது. வீரர் இருந்து நேரேயும் பக்கவாட்டிலும் அம்பு தொடுக்கத் தக்கவாறு துளைகள் உள்ளன.

"ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்"

என்பதும் சிலப்பதிகாரத்து வரும் கோட்டை வகுப்பும் நினைவில் எழுந்தன.

கீழே ஏரி ஒன்று விரிந்து கிடப்பதில் படகுகள் உலாவுகின்றன. படகுத்துறையாக உள்ளது.

கோட்டையில் புதுமணம் ஒன்று நிகழ்ந்து மணமக்கள், உறவு சூழ வருகின்றனர்! மணமகன் எடுத்தவாள் கையோடு நடையிடுகிறான்! மனைவி தூக்குக் குவளையுடன் தொடர்கிறாள்! சீர்வரிசை ஊர்வலம் எங்கும் இல்லாமல் இல்லை!

அங்கங்கே பேரியங்கிகள் அவற்றைத் தாங்கிய உருளை வண்டிகள்! கோயிலில் அவரவர் வழிபடலாம்! பூ, நீர்படைக்கலாம்! தமிழ்நாட்டில் தானே தன்னலப் பெருவாயால், பொதுநலம் பெரிது விழுங்கப்பட்டு, வள்ளுவர் சொன்னது போல்,

"அண்ணாத்தல் செய்யாமல்"

கிடக்கின்றது!

சோத்பூர் பல்கலைக் கழகம் சிறப்புமிக்கது சுற்றுலா மையங்கள் என்றால் காட்சிக் வடம் விற்பனைக் கூடம் குறையுமா?

நண்பகல் உணவுக்குப் போனோம்! தாமோதரனார் இராசபுத்தான உணவு வகையைச் சாப்பிட வேண்டும் என்பதற்காகத் தேர்ந்தெடுத்த விடுதிக்கு அழைத்துச் சென்றார்!

தட்டம் போட்டனர்; பெரிய தட்டு அதைச்சுற்றிலும் சிறுதட்டுகள் ஒரேகையில் கொண்டு வந்து வைத்து விடுதல் பெரும் பெரும் விடுதி வழக்கம் இல்லையா?

அங்கே நாங்கள் கண்ட - உண்ட - விடுதியின் முறையே வேறாக இருந்தது; மொத்தமாகக் குவியாமல் மொத்தமாகக் கொண்டு வராமல் ஒன்று ஒன்றாகச் சிறுகச் சிறுக வேண்டுவ வேண்டுவ வேண்டுமளவு உண்ண வைத்த அருமை பாராட்டுக்கு உரியது. அறியாமலே சுவைத்துச சுவைத்து உண்ணவும் அளவு பெருகவும் வாய்த்து விடுகின்றது.

சோறு தொடுகறிவகை சப்பாத்தி எனவே கண்ட நாம், இனிப்பு காரம் சுடச்சுடக் கேட்டுப் படைப்பது தனிச் சுவையாகிறது. நிறைவில் பழவகை - குளிர்பொருள் என வழங்கல்!

கைகழுவப் போக வேண்டிய தில்லை என்றார் தாமோதரர். கரண்டி முள் கொண்டு உண்ண வில்லையே! கையைக் கழுவாமல்......

நீர்க்கெண்டி தட்டத்தோடு வழங்குநர் வருகிறார். கையை தட்டத்தின் மேல் வைக்கச் சொல்லி நீர் விடுகிறார்! துடைக்கக் துணியோடு நிற்கிறார்! அவ்வூர்ச் சிறப்பு அஃதாம்!

ஓர் உணவுக்கு எவ்வளவு என்று தாமோதரிடம் கேட்டேன். அவர் பற்றுச் சீட்டைப் பார்த்து உருபா நூற்று முப்பது என்றார். உணவு வகைகளை ஓரளவால் எண்ணினேன் முப்பது வகைகளைத் தாண்டின!

வள்ளல் அழகப்பர் மகளார் திருமணத்தின் விருந்தில் அறுபத்து நான்கு வகைப் பொருள்களாம்! அதில்எவ்விலைக்கும் ஒன்றும் குறையாமல் எண்ணுதற்கு ஆள்களாம்! ஊண்சுவை உலகாட்சி கொள்ளத் தவறவில்லையே!

"என் வாழ்நாளிலேயே இத்தனை வகைகளை ஒருவேளை உணவில் உண்டது இல்லை என்று வியந்து வியந்து பூரித்தார்" ஒரு பெருமகனார்! என்ன ஆனால் என்ன?

"உணலினும் உண்டது அறல் இனிது"

என்பதற்கு அல்லவா தலை வணங்கி வாழ வேண்டியுள்ளது! ஓயாச்சிக்கலர் ஒருவர்தாம் - தட்டிமுட்டிக் கொட்டி அரும்பாடு படுபவர்தாம் - கழிச்சல் மருந்தும் பயன்படாமல் போனவர்தாம் "உணலினும் உண்டது அறல் இனிது" என்பதை உணர்ந்து பயனில்லை! எவ்வெவரும் உணர்ந்து போற்றலே நலவாழ்வில் நல வாழ்வாம்!

சுருங்கியே போய்விட்ட என்குடல் ஏற்கும் அளவு தானே ஏற்கும்! திணிக்க முடியுமா? திணறிப் போகவா தின்ன முடியும்?

உண்டபின் கட்டாயம் அன்று கட்டையைச் சார்த்தி
ஓய்வெடுக்க வேண்டும் என்பது எல்லார் எண்ணமும்
ஆயிற்று. அங்காடிகளையும் வீதிகளையும்
பூங்காக்களையும் போகும் போக்கில் பார்த்துக் கொண்டே

தங்கல் விடுதி சென்றோம். மூன்று மணிமுதல் ஐந்து மணி வரை ஓய்வு! மாலையில் அங்காடிக்குப் போகத் தாமோதரர் திட்டம்!

அதனைச் சுற்ற - கோட்டையைச் சுற்றிய பொழுது ஆயிற்று! இனிவேறு சுற்று வேண்டா என்று படைஞர் நினைவுச் சின்னப் பகுதியைக் காண அழைத்துச் சென்றார்.

முதற்போர்க் காலம் தொட்டு விடுதலைக்குப் பின்னரும் அமரராகியவர் நினைவுச் சின்னம் நெடுந் தொலை கடந்து கடந்து காண நேர்ந்தது. அவ்வளாகத்திலே வேறுமோர் வியப்பான சூழ்நிலை உண்டாக்கப் பட்டுள்ளது.

குரல், துத்தம், கைக்கிளை, இளி, உழை, விளரி, தாரம் என ஏழிசை உண்டு அல்லவா நமக்கு!

அவ்விசைக்கு அடையாளம் தானும் அறியாமல் போய் விட்டது தமிழகம்! "ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ" இவ்வேழ் எழுத்துகளே ஏழிசை அடையாளங்கள்! திவாகர நிகண்டைப் பார்த்தால் எவருக்கும் தெளிவாம்! ஆனால் தெளியவே - தெரியவே - மாட்டேன் என்பாரை என்ன செய்ய முடியும்?

*ஏழிசை நரம்புகள் யாழுக்கு உண்டல்லவோ!*

*ஒவ்வோர் இசையும் மற்றோர் இசைக்கு இசைவாக இருந்து*

*சுவையூட்டுவது! ஒன்றற்கு ஒன்று மாறு இல்லை!*

*பொங்கல் சுவை போன்றது அது!*

*மதம் என்றும், சமயம் என்றும், மார்க்கம் என்றும் தன்னோடு தான் மோதலும். பிறிதோடு மோதலும் பெருகிப் பெருகி உலக அமைதிக்குக் கேடாய்ப் போய்ப் பேயாட்டம் போடும் இந்நாளிலே சமணம், புத்தம், கிறித்தவம், இசுலாமியம், வேதியம், சீக்கியம், பார்சியம் என்னும் சமயங்கள் எல்லா வற்றுக்கும் வழிபாட்டு இடங்கள் அவ்வளாகத்திலே அமைக்கப் பட்டுள்ளது என்பது.*

*அங்கே அமரநிலை எய்தியவர் ஒருசமயத்தரா? ஒரு*

*மொழியரா? இந்திய ஈகியர் அனைவரும் தாமே! அவரவர்*

*வழிபட - ஒரு வளாகத்திலேயே - வழிபட*

*வாய்ப்பு இருப்பது நல்லது அல்லவோ!*

*ஆனால் இந் நல்லதிலும் நமக்கொரு நெருடல்! ஈகத்தில் ஒன்றுபட்டு உயிரும் ஈந்த இப்பெருமக்கள், 'உள்ள ஒருமை' ஒன்றே அல்லவோ! நாட்டு நலம் என்னும் ஒன்று தானே அது! அந்நினைவைப் போற்றும் வகையில் இவ்வெழுவகைச் சமயத்தரும் ஓரிடத்து ஒன்றுபட்ட உள்ளத்தராய் வழிபடக் கூடாதா? ஓரிடத்தே இருந்தாலும் அங்கேயும் தனித்தனியே தானே அவ்வச்சமயம் கோலோச்சும்!*

*வள்ளலார் கண்ட 'சன்மார்க்கம்': ஆன்மநேய ஒருமைப் பாடு ஏற்படக் கூடாதா என்பதே அது!*

*"ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்"*

*என்பது உலகவர் கொள்கையாய் ஆகாமல், வன்கொடும் அறிவியல் பேய்மை உலகம் உய்யுமா? எண்ணும் உரிமை எழுதும் உரிமை நமக்கு உண்டல்லவா!*

*பௌத்தனாக, சமணனாக, வேதியனாகவா உயிரைத் தந்தான்! இந்தியனாகத் தானே தந்தான்? இன்னும் சொன்னால் மாந்தப் பிறப்பாக - மாந்தப் பிறப்பைக் காக்கத் தானே உயிரைத் தந்தான்!*

*தாமோதரர் தோழமை அருளார் சரவணர்க்கு வாய்த்திலது என்றால், எங்களுக்கு இச்சிந்தனை வரும் வளாகம் காண வாய்க்காமல் போயிருக்கவும் கூடுமல்லவா!*

*இரவு, சிற்றுண்டி தாமோதரனார் மனையிலேயே முடித்துக் கொண்டு விருந்தினர் விடுதியில் தங்கினோம்!*

*படைத்துறை வளாகத் தங்கலில் பல நன்மைகள்: 1. அமைந்த சூழல் 2. நல்ல உணவு 3. காலக் கடைப்பிடி. 4. இன்று சலவைக்குப் போட்டது இன்று மாலையே சலவை செய்து தேய்ப்புடன் வந்து விடுதல் என்பன. மேலும் ஒன்று விடுதிக் கட்டணம் உணவுச் செலவு குறைவு.*

*இரவு தங்கிக் காலையில் புறப்படும் திட்டம்*

**2.3.2009**

*விடியலில் எழுந்து கடமைகளை முடித்துச் சுற்றுலாவைத் தொடங்கினோம். சாரல் தாமோதரனார் இல்லத்தில் இருந்தார். அவரை அழைத்துக் கொண்டு தாமோதரனார் குடும்பத்தில் சொல்லி விடைபெற்றுக் கொண்டு அவர் வழிகாட்டுதல் படி புறப்பட்டோம்.*

*நாங்கள் அனைவரும் முதல் நாள் மாலையில் பேரங்காடி சென்ற போதே அருளுக்குச் சில நூல்களை வேலாயுதனார் வாங்கினார். தாமோதரனார் இராசத்தான ஆடவர் மகளிர் சிலைகள் வாங்கினார். அச்சிலைகளை எனக்கு ஓர் இணையும், வேலாயுதர்க்கு ஓர் இணையும் தாமோதரர் குடும்பத்தவர் நினைவுப் பொருளாக வழங்கினர். நாங்கள் அவர்களுக்கு நினைவுப் பொருளாக வாழ்வியல் உரை, பார்க்குமிடமெல்லாம் பல்கலைக் கழகம், திருக்குறள் போற்றி என்பவற்றை வழங்கினோம்! நெஞ்சநினைவு உயர்ந்ததே எனினும் சில பொருள் நினைவுகளும் உலகியலில் வேண்டத் தக்க தாகவே உள்ளன.*

*தாமோதரர் இல்லத்தார் வழங்கிய பொம்மைகள் அச் செலவை யன்றியும் பார்க்கும் போதெல்லாம் தாமோதரனார் குடும்பத்தை நினைவூட்டுகின்றது. பின்னர் அதனைக் காண்பார்க்கு அச்செலவையும் அவர்கள் கொடையையும் நினைவூட்டுவதாகவே அமைந்து விடுகின்றது அல்லவா!*

*செய்சல்மர் நோக்கி வண்டிஓடியது.*

*இராசத்தான் சோத்பூர் பார்மல் பலோதி முதலிய நகரங்களுடன் சாலையால் இணைந்தது. பெரிய சந்தைநகர் எனப்பெயர் பெற்றது. இங்குள்ள கால் நடைச்சந்தை தனிச் சிறப்பினது. இராசபுதனத்தை ஆட்சி செய்த செய்சால் என்பார் (1156) நிறுவியமையால் அப்பெயர் பெற்றது.*

*ஒரு தொடர்மலை; அதன் முற்பகுதியோ பெருநகர் விரிவு; மலைமேல் உள்ள கோட்டை கண்கவர் மாண்பினது: மலையும் கோட்டையும் நகரைக் காணவருவாரை மிகத் தொலைவிலேயே வருக வருக என வரவேற்பது போல் அமைந்துள்ளது. இம் மாவட்டத்திலே தான் தார்ப்பாலைவனம் உள்ளது. காக்னி என்றோர் ஆறும் இங்கு உண்டு.*

*சிறிது தொலைவு வண்டி ஓடியபின்னர்ச் சாலையின் ஓரங்களில் சிலர் புல்கட்டு, இலைதழைக்கட்டு வைத்திருக்கக் காண முடிந்தது. ஓரிடத்து இல்லை! சாலை இருபாலும் பலப்பல இடங்களில்! அவற்றை விற்பாரை அடுத்தே பசுவும் காளைகளும் நலிந்து கொண்டிருந்தன, ஏன்?*

*புல், இலை, தழை முதலியவற்றைச் சாலையில் செல்வார் விலைக்கு வாங்கி மாடுகளுக்குப் போடுவது அறம் (புண்ணியம்) என்பது கொள்கையாம்! அதற்காகவே, அவற்றைவிற்பாரும் தின்னும் மாடுகள் நிற்பதுமாம் என்பதை அறிந்தோம். மேலும் ஓர் உண்மை பெரும்பாலும் புல் இலை தழை விற்பவரின் மாடுகளாகவே அவை இருக்குமாம்!*

*இரண்டு நினைவுகள் பளிச்சிட்டன. பருந்துக்கு ஊன் போடல் உயரறம்; கருடவழிபாடு எனக் கொண்டவர் ஊர். நெல்லை ஆற்றோர சாலையோர ஊன்கடைக்குச் சென்று அவரிடம் காசு கொடுத்து விட்டால் அவரே அவ்விலைக்குத் தக்க ஊனைப் பருந்துக்கு இட்டு, புண்ணியப் பேற்றைக் காசு தந்தவர்க்கு வழங்கும் இடைத்தரகராக விளங்கி விடுவார்! ஊன் உண்ணாக் கடைப்பிடியரும் ஊன் வழங்கித் தெய்வப் பேரருள் ஊனால் பெறும் உத்தி இஃதாம். இதில் சிவனியரும் விடுபடுவதில்லை! ஆனால் பருந்து அவர்கள் வளர்க்கும் பறவை இல்லை என்பதே ஒரு வேறுபாடு!*

*சங்கச் சான்றோர் பாடலிலே ஓரடி*

"அறவிலை வணிகன் ஆயலன்"

என்பது! மோசி கீரனார் பாடிய பாடல் தொடர்!

"மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று"

என்பது வள்ளுவம்! மனித நோக்கு எப்படியாவது தெய்வ அருளுக்கு இலக்காகி விட வேண்டும்! வழுவாய்களுக்குக் கழுவாய் தேடிவிட வேண்டும் என்பது!

பாலைவனப் பகுதி வரவரப் பெருகிறது! குறுமுள்மரம், கள்ளி, கற்றாளை, வன்னி, வேல மரங்கள் என்பவையும், மணல் திரடுகளும் ஒட்டகம் சாலையோரச் சிறு சிறு குடியிருப்புகள் என்பவையுமே காணப்பட்டன.

இராசபுத்தானத்தாரில் ஆடவர் தலையெல்லாம் ஒரு கூடை போலத் தலைப்பாகை இருப்பது ஏன் என்பது காலை 9 மணி அளவிலேயே புலப்பட்டது. இரவோ வாட்டும் குளிர்! பகலோ விடிந்து கதிர் வெளிப்பட்டது தொட்டே வதைக்கும் சூடு! உச்சிக்கு ஏற ஏறச் சுட்டெரிக்கும் அனல்! வியர்வை கொட்டல் அறியாரும் குளித்தார் போல நீரராகக் காட்சி தராமல் முடியாது! செந்தணப்பில் இருந்தார் கட்டாயம் செந்தீயில் விழுந்த புழுவென ஆவார்!

வள்ளுவர் கூறுவாரே என்பு இலதனை வெயில் சுடுவதை! இங்கோ என்பு உளதையே சுட்டெரிக்கும் வெப்பம்! தமிழகம் பெற்ற பேறு இவ்வெப்பும் அறியாது! இக்குளிர் நடுக்கும் அறியாது! இப்பாலையும் அறியாது! செயற்கைப் பாலையை அன்றிக் காலமாறல் பாலையை அன்றி இயற்கைப் பாலை இல்லாமையால் தான்,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

எனச் சிலம்பு கூறியது.

சாலையோரம் காணப்பட்டவர், தொழிலில் ஈடுபட்டவர், வீடுகடைகளில் இருந்தவர் ஆகிய அனைத்து ஆடவர் தலைகளும் இப்பெருவட்டுச் சுமை அமைத்துக் கொள்ள நேர்ந்தது வெயில் என்னும் இயற்கையை (ஊழ்) மக்கள் கற்றுக் கொண்டு கடைப் பிடித்த பாதுகாப்பு வளையம் என்பது புலப்பட்டது.

*இரண்டுபேர், மூன்று பேர்: இருக்கும் இடமே சமையல் கட்டு; சற்றே மாபிசைதல்; எரிமூட்டல்; இருப்புச்சட்டி வைத்தல்; தட்டிய மாவைப் பிசைந்து வாட்டல்: எண்ணெய் விட்டும் விடாமலும் வேக வைத்து எடுத்தல்: ஏதோ தொட்டுக் கொள்ளல்! எளிதாக முடிகின்றது! எல்லாரும் சமையல்! எல்லாரும் உண்ணல்!*

*சிறிய விடுதிகளின் முன்னர் கட்டில் - ஆம்! கயிற்றுக் கட்டில்! ஒன்றிரண்டு அல்ல; பல; பலப்பல! கடையினர்க்கு வீட்டினர்க்கு அல்ல! வழியே செல்லும் ஊர்தியர் உந்து ஓட்டுநர் வர சப்பாத்தி பூரி என வாங்கி உண்ண ஓய்ந்து படுத்திருந்து செல்ல வேண்டிய ஏற்பாடு இஃது! கடைகளின் முன்னெல்லாம் கயிற்றுக் கட்டில் இருப்பதன் பொருள் அறியமுடிந்தது!*

*உணவாக்கம் - உண்ணல் - என்பவற்றில் எந்தத் தடுப்பும் எந்த மறைப்பும் இல்லை! இளையர் முதியர் என வயது வேறுபாடு இல்லை! ஆளுக் கொரு வேலை. அறு சுவை எல்லாம் என்ன? குடல் தீயை அணைக்க வேண்டியது ஏதாவது தீனி!*

*பக்க மெல்லாம் ஒட்டகம் - குட்டி - கூட்டம் கூட்டமாக! அவற்றுக்கு உணவு, வேண்டு மட்டும் கிடைக்க வகை என்ன? இயற்கை முள்மரம் முட்செடிகளை வழங்கியுள்ளது. ஒட்டகம் உயரம் என்பதை எவர் அறியார்? அவ்வொட்டகம் உச்சிக்கிளை மேலும் வாயை வைத்துமுள்ளொடும் உள்ள இலையைப் பறித்து உண்ணுமாறு வளர்த்தி இல்லாத குறுமரங்கள்! இயற்கைப் படைப்பாளி எத்தகைய அறிவன்! எப்பேர்ப்பட்ட அருளன்! எத்தகைய துய்ப்பாளி!*

*சிலச்சில சந்தைகள்! பாலைவனப் பொருளாகக் கிடைப்பன விற்கமட்டுமா? பாலைவன வாழ்வர்க்கு வேண்டும் உணவு உடை முதலாம் பொருள்கள் வேண்டுமல்லவோ! அவையெல்லாம் வெளியில் இருந்து வந்து தானே ஆக வேண்டும்? ஆதலால் கடைகளை அல்லாமல், ஊடே ஊடே சந்தைகளையும் காண வாய்க்கின்றது.*

*பெருநகரங்களில் திருவிழா நிகழும். திருவிழாவை ஒட்டித் தேரோட்டம் உண்டு. அங்கே மாட்டுச் சந்தை கூடுவதும்உண்டு. இப்பாலும் அப்பாலும் முளையடித்து ஊடே கயிற்றைக் கட்டி, மாடுகளை வரிசையாகக் கட்டி வைத்தலால் தாம் பணி (தாவணி) எனப்படுகின்றது. தாம்பு - கயிறு. அணி - வரிசை.*

*நம் ஊரில் நிகழும் மாட்டுத்தாவணி, ஆட்டுச்சந்தைபோல இராசத்தானில் ஒட்டகச் சந்தை கூடுகின்றது. கண்ணைவிட்டு அகலாக் காட்சி அது!*

*ஒரு சேர வேந்தன் நாட்டைச் சங்கப் புலவன் உன்மலையில் உள்ள பெண் யானைகள் ஒரு சூலுக்குப் பத்துக் கன்றுகளை ஈனுமோ! இல்லையானால் கற்களிடையே திரியும் ஆனினங்களைப் போல இத்தனை யானைகளைக் காணமுடியுமோ என்றான்! அப்படி ஒட்டகம் ஒரு சூலுக்குப் பத்துக் குட்டிகளைப் போடுமோ என எண்ண வைக்கும் கூட்டம் அது! அது மட்டுமா, கண்ணுக்குத் தெரிந்த பரப்பெல்லாம் உலாவிய ஒட்டகங்கள் துள்ளித் துள்ளி ஓடும் குட்டிகள்! (புறம்:130)*

*ஒட்டகம் தொல்காப்பியர் காலத்தேயே சுட்டப்படும் விலங்கு. அதன் அருமையான பெயரிலேயே அதன் அடிப்படை உண்மை நிலை புலப்பட்டுவிடுகின்றது!*

*ஒட்டு அகம், ஒட்டிக்கிடக்க வல்ல வயிறு! எத்தனை நாள் பட்டுணி! எவ்வளவு நீர் வேட்கை! தாங்கத்தக்க உடலைப் பெற்றது என்பதைக் காட்டும் பெயரீடு அது.*

*எங்கள் வயிறு ஒட்டும் போல் இருந்தது! ஏதாவது உண்ண வேண்டுமே, பருக வேண்டுமே! ஒட்டகம் போல் கிடக்கவல்ல வயிறு நமக்கு இல்லையே!*

*ஒரு தோட்ட விடுதி இருந்தது! அதன் அமைப்பே உள்ளே வராதே என்பது போல் விரிந்து பரந்து கிடந்தது. போய்த் தான் பார்ப்போமே என்றால் ஒரு தேநீர் உருபா 50. உணவு வேண்டு மென்றால் சொல்லி ஆக்கி வரும்! விலை உருபா 250.*

*!சுற்றிப்பார்த்து விட்டு வந்தோம்! வேலாயுதனார் என்போல் சிறுகுடியர் அல்லர்! சாரலும் ஓட்டுநரும் குடிப்பு (தேநீர் குளம்பு) விருப்பு உடையவர் அல்லர்! பிறகு ஏன் காத்திருக்க வேண்டும்! இன்னும் இருப்பில் மாச்சில், பழம், பருகு நீர் வேண்டுமளவு உள்ளது! மேலே பார்த்துக் கொள்ளலாம் என்று வண்டியேறினோம்,*

*மரமோ முள்; உயரமோ குள்ளம்; இனி இலை! சிறிதிலும் சிறிது - ஏன்? வேருக்கு நீர் வரவு குறைவு; அதைக் கொண்டுதான் சிக்கன இயற்கைக் கல்வி வல்ல மரம் செடி கொடி தன் வாழ்வை அமைத்துக கொள்ள வேண்டும்; தாமரை தேக்கு என்பவை போல அகல் இலையாக இருந்தால் உள்ள நீரெல்லாம் நொடிப் போதில்*

காய்ந்து உலர்ந்து போகுமே! மரம் படாமல் என்ன செய்யும்? சிறிய இலை 'வறுமையில் செம்மை'யை, 'சிறுகக் கட்டிப் பெருக வாழும்' வாழ்வைக் காலம் காலமாக மக்களுக்குக் கற்பித்துக் கொண்டு இருக்கின்றது, கற்றுக் கொள்ள வேண்டும் மாந்தர் கருதிப் பார்க்க வேண்டுமே!

வழக்கம் போல் வானூர்திப் படைத்துறை வளாக விருந்தினர் இல்லம் தான் தங்குதல்! அதற்குள் படைத்துறை வண்டி எனினும் காலக்கருத்து உண்டு! அதனால் விரைந்து செல்லுதல் வேண்டும்! ஓட்டுநர் திறம் வாய்ந்தவர்; சுறு சுறுப்பு மிக்கவர்; உரிய பொழுதில் சேர்ந்து விடலாம்.

தாமோதரர் வழியனுப்பும் போது, போகும் வழியில் புகழ்வாய்ந்த 'இராம் தேவ்ரா ஒடுக்கம்' ஒன்றுள்ளது! அதன் விழா நாளில் நூற்றுக் கணக்கான கல் தொலைவுக்கு மக்கள் இடமறச் செல்வார்கள். அந்த இடம் செல்லும் சாலையை அடுத்துச் சிலகல் தொலைவில் இருப்பதால் பார்த்துச் செல்லலாம் என்றார். அதனை நினைவு கூர்ந்த ஓட்டுநர் சாலையை விட்டுப் பிரிவுச் சாலையில் சென்றார்! ஒரு குறுமலை முகட்டில் தேவ்ரா ஒடுக்கம் இருந்தது. கீழே இருந்து படிக்கட்டு; கடைவரிசை; கோயில் சூழல்!

உயிர்ஒடுக்கம் என்பது 'வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை' என்று கண்டவர், 'பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகை' என்று தெளிந்தவர், வீடும் வேண்டா விறலின் விளக்கமாக உண்ணாது பருகாது தானே உயிர் ஒடுங்கிப் போக உடற்சட்டையை விட்டு உயிர்ப்பறவை பறந்து போக அமைந்தவர் இடமே ஒடுக்கமாம்! அவர் ஒடுங்கிய இடத்தில் இலங்கம் அமைத்து வழிபாடு செய்தலும் கோயில், சுற்று, கோபுரம், கோட்டை, விழா, தேரோட்டம் என விரிதலும் தொல்பழஞ்செய்தியேயாம்! 'இராம் தேவ்ரா' வைணவம் சார்ந்த வழிபாட்டிடம் எனினும் பொதுமை மணம் கமழவே செய்கின்றது. பொதுமக்கள் பார்வை எப்பொழுதும் விரிந்தது; பேர், வடிவு என்பவை எல்லாம் கடந்து சிறுதெய்வம் பெருந்தெய்வம் என்பது பாராட்டாமல் தம் துயரைத் தாமே உருகிநின்று உரைத்து ஆறுதல் பெறுதலே வழிபாடாம்! அதற்குப் பழனியாண்டவரா, முகைதீன் ஆண்டவரா வேறுபாடு இல்லை! மாரியம்மையா மரியம்மையா வேறுபாடு இல்லை! எங்கும் பொதுமக்கள் பொறாமை போட்டி இல்லாப் பொதுமையரே ஆவர்! அவர்களிடம் நூல் இல்லை! தருக்கம் இல்லை! எம்துயர்தீர்த்தார் - தீர்ப்பார் - என்னும்

ஒப்படைப்பே அவர்கள் வழிபாடு, ஆதலால், பிணக்கிலா இணக்க முடையவராய் வாழ்ந்தனர்! வாழவும் செய்கின்றனர்! சமயத்தை முழுதுறக் கற்ற மெய்யறிவாளர் எச்சமயத்தர் எனினும் அப் பொதுமக்கள் பொதுமைச் சால்பையே கொண்டு விட்டவர். கடவுள் இல்லை என்பாரையும் வெறுக்காத சால்பராகி விட்டவர். சிக்கல் - சிறுமை - சீற்றம் - சிதைப்பு ஆகியவை அரைகுறை ஆட்டம் போடும் அல்லல் பிறவிகளாக வாய்த்து உலகியலைக் கெடுப்பவர் இவ்விருவர்க்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள கடைப்பட்டாரே என்பதை எவரும் உணர முடியும்!

செய்சல்மரை நான்கு மணியளவில் அடைந்தோம்! அதன் மேலே நாற்பதுகல் தொலைவு சென்றால் தார்ப் பாலைவனம்! பொழுதுள்ள போதே பார்த்து விட நேரே சென்றோம்!

இராமேசவரம் திருச்செந்தூர் கன்னியாகுமரிப் பகுதிகள் கடற்கரை சார்ந்தவை. மணல் மலை மலையாகக் குவிந்து கிடக்கக் காணலாம். பனை உச்சி வரை முதல்நாள் மூடிக் கிடந்த மணல் மறுநாள் காலை அடிமரம் வரை காணக் காற்றால் அள்ளிக் கொண்டு போக மணலாடை இழந்து நிற்கக் காணலாம்! நீரருகே சார்ந்த மணற்குவடுகள் அவை! இதுவோ நெருப்பழல் மணல் மேடு - குவியல் - கானல் நீர்ப்பரப்பு! ஆனால் சுற்றுலாவாக வரும் கூட்டத்திற்குக் குறைவு இல்லை.

ஓடும் வண்டியை இடைமறித்து ஒட்டக ஏற்றத்திற்கு அழைப்பார் தடை என்றால் பெருந்தடை! ஆங்காங்கு ஐந்தாறு ஒட்டகம்! அதில் ஏறிச் செல்ல அழைப்பார் மறிப்பு! இவற்றைக் கடந்து வண்டிசெல்லும் இறுதி இடம் வரை சென்றோம்!

ஒட்டகம் ஏறாமல் இருக்க ‘சாரலுக்கு’ முடியுமா? அவருக்கு ஒத்திசையும் ஓட்டுநர் ஒதுங்கவா செய்வார்? பாலைவனம் வந்து ஒட்டகம் ஏறாமல் போனால் வந்த அடையாளம் தான் என்ன என்பது வேலாயுதர் வினாவொடு கூடிய வேட்கை!

எளியேன் என்ன செய்வேன்? எருமையின் மேல் கூட இதுவரை ஏறி அறியாதவன்! இளமை யிலேயே - சிற்றூர் வாழ்விலேயே அறியாதவன் யான்! சிறுவர்கள் மாடு மேய்க்கிறார்கள் என்றால் - குளத்தில் நீராட்டுகிறார்கள் என்றால் - கொண்டாட்டம் எருமை மேல் ஏறுதல் தானே!

*எருமையைப் பார்க்கிறான் ஒருவன்; அதன் திமிர்ந்து வளைந்து பருத்த கொம்புகளைப் பார்க்கிறான்; ஆண் ஒருவன் பெண் ஒருத்தி வேடம் போட்டுக் கொண்டு கையை வளைத்து ஆடுவது போல் உள்ள தாகக் கருதுகிறான். அதன்மேல் சிறுவன் ஒருவன் ஏறி இருப்பதை நோக்ககிறான். மலைமேல் இருக்கும் மந்தி உவமையாகிவிடுகிறது அவனுக்கு.*

"பேடிப் பெண் கொண்டு ஆடுகை கடுப்ப\
நகுவரப் பணைத்த திரிமருப்பு எருமை
மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்
சிறுதொழில் மகாஅர் ஏறிச் சேணோர்க்குத்
துறுகல் மந்தியில் தோன்றும்"

*என்கிறான். ஒட்டக ஏற்றம் என்னை ஒட்டிக் கொள்ள முன்வந்த அகநானூற்றுக் காட்சி (206) இது.*

*வேண்டா! வேண்டா! நீங்கள் செல்லுங்கள்! வண்டி, ஈர்த்து இன்புறும் காலம்! ஏறி இன்புறும் காலம்! பார்த்து இன்புறும் காலம் என முந்தையோர் கண்டுகாட்டிய முறையுண்டு! எனக்குப் பார்த்து இன்புறும் காலம் என்றேன்! வேலாயுதர்க்குத் தாம் ஏறியாவது மட்டு மன்று, என்னையும் ஒட்டகத்தில் ஏற்றியாக வேண்டும் என்பது முடிந்த முடிவாக இருந்தது. என்ன செய்வேன்; ஏறாத இடந்தனில் ஏறியது போல ஒட்டகத்தில் ஏறினேன். படுத்த படுக்கையில் ஒட்டகம் கிடக்க பரப்பிய விரிப்பில் அமர்ந்து இருபாலும் காலைத் தொங்கவிட்டுச் செயற்கைக் கொம்பு ஆக்கி வைத்தது போன்ற உச்சி முளையை நன்றாகப் பற்றிக் கொண்டு அமர்ந்தேன்! ஒட்டகம் எழும் போதே அசைத்த அசை இடுப்பு எலும்பைத் தடவ வைத்தது. நடந்தது மணற்பரப்பில் - பள்ளத்தில் இறங்கியது; மணல் மேட்டியல் ஏறியது! உங்கள்கால் எட்டு - என் கால் எட்டா - ஒட்டகக் கால் எட்டு! நெடும் பொழுது. என்னால் ஏறிச்செல்ல இயலவில்லை! நீங்கள் செல்லுங்கள் எனக் கட்டாயமாக இறங்கினேன். வேலாயுதனார் முகம் வாடியது; வலியுறுத்தி ஏற்றியிருக்க வேண்டாமோ என்பது அவர் வாட்டம்! அவர்க்கு வாட்டம் உண்டாக்கி இருக்க வேண்டாமோ என்பது என் உருக்ப் பரிவு! என்ன செய்வது? என் இடுப்பு ஒன்று நான்கு முறை அடிபட்டுத் துயரூட்டியது எனக்குத் தானே தெரியும்! வேலாயுதரும் மேலே செல்லாமல் அமர்ந்தார்!*

சாரலும் ஓட்டுநரும் ஒட்டக நடை, ஓட்டம் எல்லாம் இன்பியல் செலவாகச் செல்லும் தொலைவரை சென்று மீண்டனர். அவர்கள் வரும் வரை ஓர் அரிய ஆடல் பாடல் காட்சியை நாங்கள் ஏற்பாடு செய்யாமலே, எண்ணிப் பாராமலே வாய்க்கக் கண்டு களித்தோம்.

இராசசுத்தானிய ஆண் பெண் குழந்தை கூடிய ஒரு கூட்டம். அயல் நாட்டவர் இரண்டு மூன்று பேர் அமர்ந்திருந்தனர். எங்களுக்கும் அவர்களுக்கும் இடைவெளி ஏறத்தாழ இருபது அடிகளே!

அவர்களின் முன்னர் ஓர் ஓரமாக ஒரு விரிப்பு - அதில் குழல் ஊதல் கொட்டு முழக்கல் - ஆடல் - பாடல்! இசையரங்கம் உடனே கிளம்பிவிட்டது! எத்தனை காலம் - எவ்வளவு பொருள் செலவு - என்ன விளம்பரம் - கூத்து - நாடகம் - இசை அரங்குகள் அமைக்க! “ஆச்சி மசாலா” என்பதுபோல உடனடி அரங்கம்! ஆடல் பாடல் ஆகிவிட்டது! படமும் பிடித்து விட்டார்கள்! பணமும் கொடுத்து விட்டார்கள்! தாம் செல்லும் இடங்களில் செல்வர்களை அழைத்து வைத்து அரங்கேற்றிப் பணமும் தேடிக் கொள்வார்கள்! அறிவியல் கலையியல் வளர்ச்சி கொடிகட்டிப் பறக்கும் காலம் அல்லவா!

அவர்கள் மங்கலப்பாட்டு! இழப்பு அவலம்! திருவிழாக் கோலம் உலகறியச் செய்வதிலே ஓர் உள்ளார்ந்த உவப்பு; குதிரை காலைத் தட்டி தட்டி உணவு பெற்றது கண்டோமே. இவர்கள் கொட்டி, தட்டி, இசை கூத்தால் பிழைப்புக் கொள்கின்றனர்!

ஒட்டகம் பற்றிப் படித்த ஒன்று என்னை அவ்வொட்டகம் ஒவ்வொன்றைப் பார்க்கும் போதும் உருக்கிக் கொண்டே இருந்தது!

பாலைவனக் கப்பல் என்னும் அவ்வொட்டகம் எத்தகு பயன் உயிர்! என்ன சுமை! சுமை கமட்டுமா? சுமை ஏற்றுபவனையும் சுமப்பது அல்லவோ! அவன் ஏற்றும் சுமைக்கு எல்லை என்ன? அவன் ஆசைக்கு அளவில்லாதது போல!

தண்ணீர்பல நாள் காணாத் தகைப்பு! இனித்தாங்க முடியாது என்னும் நிலைமை ஏற்பட்டால், ஒட்டகத்தின் திமிலை உடைத்து அதில் தேக்கிவைக்கப்பட்டுள்ள நீரைக் குடித்து உயிர்பிழைப்பான் என்பது ஒன்று!

ஒட்டக ஊனைச் சாப்பிடுவார் அதன் தொடைப்பகுதியில் வேண்டும் அளவு எடுத்து அன்று சமைப்பார்களாம்! அவ்வாறே அதனை விட்டு அடுத்த நாள் வேண்டு மளவு எடுத்துக் கொள்வார்களாம்! எழுதும் கையே நடுங்குகிறது! எப்படித்தான் இப்படி இரும்பாய் - கல்லாய் - வெடி தகர்ப்புக்கும் தகராக் கிட்டமாய் மாந்தன் உள்ளம் கெட்டிப்பட்டு விட்டதோ? இதனை நோக்க அல்ல எண்ணும் போதே அவனவன் அவனவனாக இருக்கிறானே அன்றி, அவனை இப்படி ஒருவன் படைத்தான் என்பதை உள்ளம் உடைய எவரும் ஒப்பமுடியுமா? அப்படியும் படைத்தது உண்டு என்று ஒப்புக் கொண்டால், அது உயிரியக்கத்தின் ஒரு துளியைத் தானும் உடையதாக இருக்குமா? அதுவா படைப்புப் பெருமையும் வீடருளும் பெருமையும் உடையது?

மீளும் போது மணி ஏழினைத்தாண்டி விட்டது! கோட்டை யுள்ளும் கோட்டையைச் சுற்றிலும் தெருக்கள் அங்காடிகள் குடியிருப்புகள் எனப் பல்கியுள்ளன. பெரும் பாலும் சுற்றுலாவை நம்பிய வாழ்வாகத் தோற்றம் தருகிறது. இரவு உணவு தங்கல் இடத்தின் பொழுது முடித்து விட்டதால் ‘இரா’ உணவு ஆகவே ஆகிவிடும் நிலை! ஆனால் விடுதியர் ஒருவரும் ஓட்டுநரும் போய் உணவு தேடிக்கொண்டு வந்தனர்! விடியலில் நாசிக்கு நோக்கும் திட்டத்தொடு படுத்தோம். அதற்கு மேல் சுற்றுவதற்குத் திரும்பு திட்டம் உதவியாக இல்லை 8.3.2009 ஆம் நாள் திருச்சிராப்பள்ளி ஊரகம் வேதையனார் குடும்பத் திருமணம் நடத்தவும். நன்னியூர்க் கம்பனார் புதிதமைத்த மனையின் திறப்புவிழா நிகழ்த்தவும் முன்னரே இசைந்து விட்டமை எச்சரிக்கை செய்து கொண்டே இருந்தன!

**3.3.2009**

காலையில் புறப்படு முன்னரே சிற்றுண்டி தக்கவகையில் வந்துவிட்டது! அன்று நாசிக்கு அடைந்துவிடலாம் என்பது என் எண்ணம். ஓட்டுநரும் போய்விடலாம் என்றார்! எண்ணத்தின் விரைவுக்குக் கல் கணக்கும் மணிக் கணக்கும் ஒத்துவருமா?

வேலாயுதனார் இன்றே போய்விட இயலாது. அறுநூறு ஆயிரத்திற்கு மேல் உள்ளது. ஓட்டுநர் சொல்லலாம் முடியும் என்று! ஆனால் அயர்வும் உறக்கமும் அவர்க்கும் உண்டுதானே. இன்று அகமதாபாத்தில் இரவு தங்கி மறுநாள் தான் நாசிக்கிற்குச் செல்லலாம்! தங்கும் ஏற்பாடு செய்துவிட்டார்கள் என்றார்.

பட்டறிவு பேசும் போது படாமலேஅறியும் பேறு கொள்ளலே சால்பு என ஏற்றுப் புறப்பட்டோம்!

நாங்கள் திரும்பிய சாலை வழியில் எங்கோ எப்பொழுதோ ஒருவண்டி எதிரிடும், பாரிய சாலை; நெடிய சாலை; மக்கள் பெருக்கம் குறைவு. செல்வார் பெரிதும் சுற்றுலா வருவாரே! அதனால் ஒரு சீராகத் தடையற வண்டி வந்தது! தடையற என்ற போதே ஒரு தடை இல்லாமல் இல்லை! தடையில்லாத நடை உலகில் உண்டா? நாலுகல் செலவிலேயே தடை ஏற்படல் என்ன, நாலடிச் செலவிலேயே கூட தடை ஏற்படலாமே!

உருளின் காற்றுப் போகிவிட்டது! வெடிக்கவில்லை. வண்டி யோட்டத்திலேயே கண்டு கொண்டார் ஓட்டுநர்! பொறி என்றாலும் இயங்குவது அல்லவோ! அதுவும் நாலாயிரம் அயிரம் ஓடும் ஓட்டத்தில் ஏதாவது தடை ஏற்படாமல் போகுமா? சேம உருள் செவ்வையாக இருந்ததால் ஓட்டம் அரைமணிப் பொழுது நிற்க, உருள் மாற்றப்பட்டது. அடுத்துச் சில கல்தொலைவில் இருந்த தொழிலகத்தில் காற்றுப் போகிய உருள் ஒட்டி, காற்றும் அடைக்கப்பட்டது! நண்பகல் போது ஆதலால், உணவும் தக்காங்கு முடித்தோம்!

காசுக்குக் கையேந்தினார் ஒருவர்; வேலாயுதர் காசு தாரார்! எனக்கும் உடன்பாடு இல்லாதது; இரவலரை உருவாக்கும் புரவலர் வேண்டா; இரப்பாரை இல்லாமல் உழைப்பாரை ஊக்கும் ஈகப்புரவலரே வேண்டும் என்னும் கொள்கை என்னை ஆட் படுத்தியது ஆகும்.

ஓட்டுநரிடம் உணவு வாங்கித் தரப்பணம் தந்தார் வேலாயுதர் பசித்துக கிடந்த குழந்தை உணவைத் தாவிவாங்கி உண்டதை வேலாயுதர்கண்டார்! எண்ணினேன் மூவரை; ஒருவர் வள்ளலார்; மற்றொருவர் பாவேந்தர்; இன்னொருவர் வள்ளுவர்.

"பசித்தோர் முகம்பார்"

என்பது வள்ளலாரியம்

"புசித்தோர் முகம்பார்"

என்பது பவேந்தரியம்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

என்பது வள்ளுவம்.

வழியில் இந்திய ஒருமைப்பாட்டின் ஓர் எழில் எங்கும் பரவிக்கிடந்தது. தென்னங்குமரி தொட்டது அது. தென்னங் குமரித் தென்னையோ பனையோ காவிரி நெல்லோ வாழையோ கரும்போ காணமுடியாத இடத்தும் அவ்வொருமைப் பாட்டு விளக்கம் எங்கும் தோன்றவே விளங்கியது! அது வேலிக் கருவேல்!

விண்ணில் இருந்து தூவப்பட்ட வெளிநாட்டு வித்து இந்த நாட்டு மண்ணிலே என்ன போடு போடுகிறது! நிலத்தைக் கெடுக்க - பயிர் வளத்தைக் கெடுக்க விதைக்கிறோம் என்பது இல்லாமல் வேளாண் தொழிலுக்கே கரியூட்டப்பட்டது அது! பாலைவனத்தும் வளர்கிறது! தஞ்சை வயலிலும் வளர்கிறது! ஐந்தாற்றுப் படுகை களிலும் பச்சிட்டு நிற்கிறது! அதற்கு விலக்கு - இந்திய ஒப்புரவுக்கு மாறான ஒரு மாநிலம் கேரளம் என்றார் வேலாயுதனார்! ஆம்! அரசே அச்செடியை வளர்க்க அறவே தடுத்து நிறுத்தி விட்டது!

ஆற்றுவளங்களையெல்லாம் 'ஆ' வென உரிய அளவு விடாமல் கொடாமல் கடலுக்குள் போனாலும் போக விடுவோம் - எங்களுக்கு அரிசியும் காயும் ஆடும் மாடும் தந்து காலமெல்லாம் காக்கும் தமிழகத்திற்குக் கையில் ஒட்டிய நீரும் விடேம் என்பார், எவ்வளவு கட்டுத்திட்டத் தோடு தங்கள் மண்ணை நச்சில் இருந்து காத்துளர் என்பதை எண்ண, இப்படிப்பட்டவை எல்லாம் இந்தத் தமிழ்மர மண்டைகளில் ஏறாது போலும்! ஏற ஒருவர் வந்தாலும்.

"தாம் வளர்த்த முள்மரமாயினும்" வெட்ட ஒருப்படார் கூடித் தடுப்பார் போலும்! ஏனெனில் விறகும் கரியும் தரும் கொடை மரம் அல்வோ அது! கள் இறக்கக் கூடாது என்றால், இறக்கியே ஆக வேண்டும் என்று போராட்டம் இல்லையா? ஏன் பதனீர் என்ன, வெல்லம் என்ன, பனையின் தொழில் 'கள்ளில் மட்டுமா உள்ளது'! கள்ளுண்ணாமை என்று அறம் முழங்கிய நாடு இது! அவ்வறவர் பிறந்த மண்ணும் அதுதானாம்!

ஊர் ஊர்ப் பகுதிச் சாலைகளில் ஒன்றிரண்டு பொலி காளைகளைக் காணமுடிந்தது. குசராத்துப பகுதியில் ஒரு பெருநகர் நாற்சந்திப்பு வட்டத்தின் ஊடு இருபது முப்பது பொலிகாளைகள்

*ஒரு மொத்தமாகப்படுத்தும், நின்றும், உலாவியும் இருக்கக் கண்டோம்!*

*கோயிலுக்கெனப் பொதுநலங்கருதி விடப்பட்ட காளைகள், கோயில் காளையாய், கட்டற்று மேய்ந்து கொழுத்துப் பொலி காளைகளாய் ஊர்க்கு உதவும் நிலை தமிழகத்தில் இருந்தது. இதுகால் அக்காளைகள் என்ன ஆயின? ஆகின்றன புரியவில்லை! ஒருவகையில் பொது நல அழிப்பில் ஒன்றாகி விட்டதல்லவா அது?*

*கால்நடைவளர்ச்சித்துறை இயற்கை - செயற்கைக் கருத்தரிப்புகளை உண்டாக்கி வருகின்றது எனினும் பண்பாட்டுச் சிதைவுதானே அது!*

*பொழுது மிகப் போகிவிட்டது. வேலாயுதர் கூறியபடி அகமதாபாத்தில் தங்குவதற்கு வானூர்திப் படைத்துறை வளாகத் தலைமைப் பொறியர் இசைவில் தங்க வேண்டும்! அவ்விடம் கண்டுபிடிக்க அரிதாகியது.*

*தானி ஓட்டுநர் ஒருவர் தாம் தேடிக் காட்டுவதாகக் கூறி அங்கு இங்கெனத் தேடி இடத்தைக் கண்டுபிடித்துச் சேர்த்து விட்டே சென்றார்! உரிய காசு பெற்ற அளவின் பின்னரும், உடன் இருந்து உறுதி செய்தே சென்ற அவர் கடமை உணர்வு மதிப்பு மிக்கது! தொழில் - தொகை - என்பவை எங்கும் உள்ளநிலை! தொகையைப் பெறுபவர் தொண்டாகவும் அத்தொழிலைக் கருதிச் செய்தல் எத்தகைய நலம்! எங்கும் எத்தொழில் செய்வாரிலும் தொழிலொடு தொண்டும் உடனாகக் கடமையாற்றுவார் இருக்கின்றனர். வேண்டுமானால் அவர்கள் எண்ணிக்கை குறைந்த அளவில் இருக்கலாம்!*

*நேரம் கடந்தும் கூட விருந்தில்த்தார் விரும்பும் உணவு வழங்கினர். இரவு அமைந்து தங்கி, விடியலில் கடமைகளை முடித்துக் காலையுடன் நாசிக்கு நோக்கினோம்.*

**4.3.2009**

*இனி இறங்கிப் பார்க்க வேண்டிய திட்டம் இல்லை. சாலை வழியில் காணும் காட்சிகளே காட்சிகள்!*

*3400 கல் தொலைவு கடந்தாயிற்று. ஏறத்தாழ 600 கல் தொலைவு சென்றால் நாசிக்கை அடையலாம். முதலாவதாக*

அகமதாபாத்துக்கு வந்த வழியை விடுத்து வேறு வழியில் வண்டியை ஓட்டினார் ஓட்டுநர்! புதியவை காண்பதைப் புரிந்து கொண்டு செய்த செயல் அது!

மலை காடு வயல் ஊர் என்பன எனினும் புதியவை நோக்க வைக்கும் அல்லவா! ஏர்க்காடு கோடைக் கானல் செலவு போலப் பெரிதும் மலைவழியாக இருந்தது! ஓரிடத்துப பெருந்திரளான மக்கள்! திருவிழா - கோயில் வளாகம்! ஒளிவெள்ளம்! நீர்வள மிக்க தெப்பம்! ஓடுவழியில் பார்த்துக் கொண்டேவந்தோம்.

காலை 8.30 க்குப் புறப்பட்ட செலவு நாசிக்கை அடைய இரவு 9 ஆகியது. அறுநூறு கல் வந்தாக வேண்டுமே! மகிழ்வுந்தும் புதுவது! ஓட்டுநர் திறமானவர்! அவரைநாங்களும் எங்களை அவரும் புரிந்து கொண்டு செயல்பட்டதால், புறப்பட்ட போது கொண்ட மகிழ்விலும் குறையாமல் மகிழ்வொடு அவரைவிடுக்கும் நிறைவு ஏற்பட்டது!

"யான் கண்டனையர் என் இளையரும்"

என்னும் பிசிராந்தையார் மொழி நினைவில் நின்றது!

இரவு வழக்கம் போல் வீட்டில் உணவு கொண்டு, விருந்தினர் இல்லத்தில் தங்கினோம்!

5.3.2009 ஓய்வு கொள்வது என்று முடிவு செய்தோம்! என் படிப்பு எழுத்துக்குப் பயன்பட்டது.

6.3.2009 விடியல் 4 மணிக்குப் புறப்பட்டோம் 5.30 க்கு நாசிக்கில் இருந்து புறப்பட்டு மேல் கடல் கழி முக வழி கோவா பாலக்காடு சோரனூர் செல்வது; குருவாயூர் வரை செல்லும். நாங்கள் சோரனூரில் இறங்கிக் கோவையை அடைந்து ஈரோட்டுக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் செல்லும் முடிவு!

வேலாயுதர் சரோசினியார் யான் மூவரும் மீளும் வகையில் சீட்டு எடுக்கப்பட்டிருந்தது. அவற்றை உணவு எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இல்லாமல் கையயமாகவே கொண்டு செல்லும் ஏற்பாடு களைச் செய்துவிட்டனர்.

பகலெல்லாம் பார்க்க வாய்த்தது! மேல்கடல் கழிமுகம் முன்னர்ப் பார்த்தது இல்லை. கோவாவைப் பார்க்க எண்ணியும் காலம் இல்லாமையால் தொடர்வண்டியில் இருந்து கொண்டே பார்க்கத்தான் முடிந்தது.

கோவாவின் வடக்கு எல்லை மராத்திய மாநிலம்; தெற்கிலும் கிழக்கிலும் கருநாடக மாநிலம்; மேற்கே அரபிக்கடல்; மேற்குத் தொடர்ச்சி மலையால் இப்பகுதி பெரிதும் மலைவளம் நீர்வளம் உடையதாக உள்ளது. குறுக்கும்மறுக்கும் ஓடும் ஆறுகளால், ஊடுநிலம் உண்டாகித் துவுகள் பலவற்றைக் கொண்டதாக உள்ளது. நெல்லும் தென்னையும் பரக்கக் காண்பன! அழகொடு பின்னிப் பிணைந்ததும் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததும் ஆகியது கோவா!

கருநாடகப் பகுதியைக் கடந்து கேரளம் பாலக்காடு சென்று சோரனூரை அடைந்தோம்! சோரனூரில் வண்டி மாறிக் கோவைக்கு வந்தோம். யான் மறு நாள் காலை புதுமனை விழா நிகழ்த்தவும் ஒரு திருமண விழா நிகழ்த்தவும் இசைந்திருந்தமையால் கோவையில் இருந்து நேரே திருச்சிராப்பள்ளி எய்தினேன். வேலாயுதரும் சரோசினியாரும் ஈரோட்டுக்குச் சென்றனர்.

23.02.2009 இல் புறப்பட்ட வடநாட்டுச் செலவு

07.03.2009 இல் நிறைவடைந்தது.

ஒரு மொத்தமாக எம் வட புலச் செலவை எண்ணிப் பார்த்தால் ஒரோ ஓர் ஊடகமே ஒளி செய்கின்றது அஃது உயிர்நிலை ஊடகம்! ‘உயிர்நிலை ஊடகம்’ எது? எனின், அது ‘அன்பு’ என்பதாம்! “அன்பின் வழியது உயிர்நிலை” என்பது வள்ளுவம் அல்லவோ! அவ்வூடகம் அழைத்தது: விருந்தோம்பியது; பொருளைப் பொருளாக எண்ணாமல் போக்குவரவு புரிய உதவியது; நேயம் நெஞ்சத் துணையாய் நின்று நிலவியது! இத்தகு சுற்றுலாவில் இது மூன்றாவது. அன்பாம் உயிர்நிலை ‘ஊடகம்’ ஆக வேண்டுமானால் அதற்கு ஒருபக்க இணைவு மட்டும் போதாது இருபக்க இணைவு வேண்டும். இணைவு என்பதிலேயே இரண்டு உண்டு அல்லவா! இருபக்கங்களும் இசைந்து இயல வேண்டும்! அன்பு ஒற்றை வழிப்பாதை இல்லை, இரட்டை வழிப்பாதை என்பது தானே உலகெலாம் உணர்ந்த பெருநெறிவிளக்கம்.

உலகம் இரட்டை வழிச்சாலையை, நால்வழிச் சாலை எண்வழிச் சாலை என ஆக்கி வரும் புறச் சாலைகளைக் கண்டுநாம் வியக்கிறோம்! எத்தனை வழிச் சாலைகளில் இயங்கினால் என்ன? பொறி ஊர்திகளைப் பொறுத்த வழிகள் தாமே அவை. ஆனால்

*ஐம் பொறியாம் உறுப்புப் பொறிகளும் மனமாம் உணர்வுப் பொறியும் ஆகிய ஆறு அகப் பொறிகளும் போக்கு வரவு புரிய அன்பாம் உயிர்நிலை ஊடகம் இருபாலும் இயைந்திருத்தல் வேண்டும் அல்லவோ! எண்ண வழியது அது!*

*எண்ணம் விரிந்தால் முதலாழ்வார் மூவராகலாம்! முதலாழ்வார் மூவரைப் பற்றியது என்ன? பொய்கையார் படுத்திருக்கிறார் - அடை மழை - இரவுப் பொழுது! பூதத்தார் வருகிறார்; பொய்கை படுத்திருக்கும் 'துச்சில்' கதவைத் தட்டுகிறார்! மழைக்குத் தலைமறைக்க இடமுண்டோ? எனவினாவுகிறார்!*

*உள்ளே இருந்து குரல்வருகிறது ஒருவர் படுக்கலாம்! இருவர் இருக்கலாம்! உள்ளே போன பூதத்தார் பொய்கை யாரோடு இருந்து கொண்டார்! இன்னும் ஒருவர் கதவைத் தட்டுதல் கேட்டது அவர்பேயார்! அடைமழை கொட்டுகிறது! தலைமறைக்க இடம் உண்டோ? இருவர் இருக்கலாம் மூவர் நிற்கலாம் என உள்ளிருந்து ஒலி வருகின்றது பேயார் புகுகின்றார்! மூவரும் நிற்கின்றனர்! நின்ற போது முதலில் இயல்பாக மூவரும் நின்றனர்! அதன்பின் நிற்க நெருக்கடியாயிற்று! நாலாமவர் ஒருவர், தாமே புகுந்து கொண்டார்! அவர் நெடுமாலாம்! இச்செய்தி உணர்த்துவது என்ன? உள்ளம் விரிந்தால் உதவிவிரியும் உறவு விரியும்! உலக அளவு விரியும்! விரிய விரிய மாந்தர் இறைநிலை எய்துவார்! நாம் உணரும் பிழிவு என்ன?*

*உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்;*

*உள்ளம் சிறுத்தால் உறவும் பகையே!*

*என்பது! உள்ளம் விரியட்டும்! உறவு விரியட்டும்! உலகமாகச் சிறக்கட்டும் என நிறைவு செய்வோம்!*

# நூல் விவர பட்டியல்


1 **தொகுதி - 1**

1. வழக்குச் சொல் அகராதி

2. வட்டார வழக்குச் சொல் அகராதி

2 **தொகுதி - 2**

1. இணைச் சொல் அகராதி

2. இலக்கிய வகை அகராதி

3 **தொகுதி - 3**

1. சொற் பொருள் நுண்மை விளக்கம்

4 **தொகுதி - 4**

1, இலக்கண அகராதி (ஐந்திலக்கணம்)

**புறநானூற் று கதைகள்**

5 **தொகுதி - 5**

1.. புறநானூற் றுக் கதை 1

2. புறநானூற் றுக் கதை 2

3. புறநானூற் றுக் கதை 3

4. புறநானூற் றுக் கதை 4

5. புறநானூற் றுக் கதை 5

6. புறநானூற் றுக் கதை 6

7. புறநானூற் றுக் கதை 7

8. புறநானூற் றுக் கதை 8

9. புறநானூற் றுக் கதை 9

10. புறநானூற் றுக் கதை 10

11. அந்த உணர்வு எங்கே

12. பண்டைட் தமிழ் மன் றங்கள்

13. பெரும்புலவர் மூவர்

6 **தொகுதி** – 6

**திருக்குறள் ஆராய்ச்சி** – 1

1. வள்ளுவர் வழியில் நல்ல மாணவராக

2. வள்ளுவர் வழியில் நல்ல ஆசிரியராக

3. வள்ளுவர் வழியில் நல்ல கணவனாக

4. வள்ளுவர் வழியில் நல்ல மனைவியாக

5. வள்ளுவர் வழியில் நல்ல பெற் றோராக

6. வள்ளுவர் வழியில் நல்ல மக்களாக

7. வள்ளுவர் வழியில் நல்ல இல்லறட் தராக

8.வள்ளுவர் வழியில் நல்ல துறவராக

9. வள்ளுவர் வழியில் நல்ல ஊழ்

10. வள்ளுவர் வழியில் குறளாயட் திருமண முறையும் விளக்கமும்

11. வள்ளுவர் வழியில் நல்ல தோழராக

12. வள்ளுவர் வழியில் நல்ல தொழிலராக

13. வள்ளுவர் வழியில் நல்ல ஆட்சியாராக

7 **தொகுதி** – 7

**திருக்குறள் ஆராய்ச்சி** – 2

14. வள்ளுவர் வழியில் நல்ல அலுவலராக

15. வள்ளுவர் வழியில் நல்ல செல்வராக

16. வள்ளுவர் வழியில் நல்ல சான் றோராக

17. வள்ளுவர் வழியில் வினை

18. வள்ளுவர் வழியில் பிறப்பு

19. வள்ளுவர் வழியில் வறுமையும் வளமையே

20. வள்ளுவர் வழியில் தவம்

21. மங்கல மனையறம்

22. ஒரு குறள் ஒரு நூல் 1

23. ஒரு குறள் ஒரு நூல் 2

24. ஒரு குறள் ஒரு நூல் 3

25. ஒரு குறள் ஒரு நூல் 4

26. நினைக்கும் நெ'சம்

8 **தொகுதி** - 8

1. திருக்குறள் கதைகள் 10

9 **தொகுதி** - 9

1. திருக்குறள் கட்டுரைகள் 10

**தனி நூல்கள்**

10 **தொகுதி** - 10

1. காக்கைப் பாடினியம்

11 **தொகுதி** - 11

1. களவியற் காரிகை

12 **தொகுதி** - 12

1. தகடூர் யாட்திரை

13 **தொகுதி** - 13

1. யாப்பருங்கலம் (பழைய விருட்தியுடன் )

14 **தொகுதி** - 14

1, தமிழ்க் கா.சு. கலைக்கள'சியம்

15 **தொகுதி** - 15

1. தமிழ் வளம் சொல்

16 **தொகுதி** - 16

1. தமிழ் வளம் - பொருள்

**17** **தொகுதி** - 17

1. புறட்திரட்டு

**18** **தொகுதி** - 18

1. வாழ்வியல் வளம்

**19** **தொகுதி** - 19

1. தமிழர் வாழ்வியல் இலக்கணம்

**20** **தொகுதி** - 20

1.கல்விச் செல்வம் 2.இருசொல் அழகு 3.தனிப்பாடல் கனிச்சுவை 4.பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி

**குறிப்புகள்**

குறிப்புகள்